# காசி காண்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
காசிவிசுவநாதர் துணை

அதிவீரராமபாண்டியரால் பாடப்பட்ட

# காசி காண்டம்

உரைநடை

**பண்டிதர் தீ. பொன்னம்பலவாணர்**

வெளியீடு

**சுழிபுரம் சைவ நன்நெறிக்கழகம்**

அச்சுப்பதிப்பு
கணாதிபன் அச்சகம்
மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## நல்லை ஆதீன முதல்வரின்

# "அருளாசிச் செய்தி"

சைவப்பெருமக்களே!

பண்டிதர் திரு பொன்னம்பலவாணர் அவர்களால் 'காசி காண்டம்' என்னும் நூல் எழுதி வெளிவருவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம். சிவத்தலங்களுக்கெல்லாம் பெருமையும் சிறப்பும் தருவதாக அமைந்துள்ளது காசித்திருத்தலம் ஞானிகளாலும் சித்தர்களாலும் பெரியோர்களாலும் வழிபட்டு பெருமை சேர்ந்த ஆலயமாகும். இறக்க முத்தியான திருத்தலம் காசியாகும். கங்கா தீர்த்தத்தை தன்னகத்தேகொண்டு விளங்குவது காசித்திருத்தலமாகும். அப்படிப்பட்ட திருத்தலத்தினுடைய புகழை புராணமாகப்பாடி வெளியிடும் சிவபூஷா துரந்தரர் அடக்கமும் அறிவும் அனுபவமும் வாய்ந்தவருமான சைவக்குருமார் பாரம்பரியத்தில் வந்த பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்கள் எழுதி வெளியிடுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய விடயமாகும். இந்நூல் வெளியீட்டு முயற்சியில் முழுமையாகச் செயற்பட்ட சுழிபுரம் சைவ நன்நெறிக் கழகத்தையும் மனமார வாழ்த்துகின்றோம்.

காசித்திருத்தலத்துக்குச் சென்று வழிபட முடியாத அடியார்களுக்கு இந்த நூலை வாங்கி படிப்பது தரிசித்த பலனை தரக்கூடியதாக அமையும். எல்லோருக்கும் இறைவனுடைய ஆசிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

குருமஹாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச்செல்வி

## தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களின்

# அணிந்துரை

காசி என்று சொல்லும் பொழுது எமது சிந்தையிலும் செவியிலும் பக்திஊற்று ஒன்று சொட்டிக்கொண்டே இருக்கிறது. சைவமக்களுக்கு மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு தலமாக இது விளங்குவதை அனைவரும் அறிவர். 'காசியிலே இறக்கமுத்தி' என்பது எமது பள்ளிப்பருவத்திலேயே சமயபாட ஆசிரியர்கள் சொல்லித் தந்த ஒரு இனிய வாசகமாகும். இவ்வாசகம் எனது உள்ளத்தையும் உயிரையும் தொட்டு நனைத்துக் கொண்டே இருந்தது. அங்கு சென்று கங்கையில் நீராடி காசித் திருதலத்தைத் தரிசிக்கும் வாய்ப்பை எதிர்பார்த்தபடியே இருந்தேன். 1982 ம் ஆண்டு பங்குனி மாதம் இந்தப் புண்ணியம் எனக்குக் கிடைத்தது. எங்கள் தேவஸ்தானத்து மூலமூர்த்தியாக நின்று பேரருள் பெற்று விளங்குகின்ற அன்னை துர்க்கா தேவியின் வருகை காசியிலிருந்தே எழுந்தருளியது என்ற செய்தி எமது சிந்தைக்குப் பேருவகையை ஊட்டுவதாகும். இது முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்தியாகும். இவை அனைத்தையும் நோக்கும் பொழுது இன்று எனக்குக் கிடைத்த மற்றொரு புண்ணியத்தைப் பற்றி வியந்து போற்றுகிறேன். அதுவே பண்டிதர் பொன்னம்பலவாணர் எமக்குத்தந்த அருட்கடமை ஆகும்.

காசி காண்டத்தை வசனநடையில் நல்லபடி ஆக்கி சைவ மக்கள் படித்துப் பெரும்பேறடையக் கூடியதாக இவரது முயற்சி நிறைவேறியிருக்கிறது. எனவே இந்நூலைப் போற்றிப்பாராட்ட வேண்டிய கடமை எமக்கெல்லாம் உண்டு. சுழிபுரத்தைச் சார்ந்த அன்பர் திரு. தர்மலிங்கம் அவர்களுடைய அன்புத் தூண்டுதலின் பெயரில் சுழிபுரம் சைவ நன்னெறிக் கழக வெளியீடாக இந்நூல் வசனமாக வெளிவருகிறது. இது ஒரு திருவருள் முயற்சியாகும். காசிகாண்டத்தின் வரலாறே மகாமுனிவராகிய சூதர் அவர்களால் நைமிசாரணியம் என்ற வனத்திலிருந்து உபதேசிக்கப்பட்டது. இது பதினெண் புராணங்களில் ஒன்றாகிய காந்த புராணத்தில் அமைந்த ஒரு காண்டமாகும். ஆரம்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் விந்த மலையின் உயர்வினால் சூரியனது பிரயாணம் தடைப்பட்டமையும் அதனால் கலக்கம் ஏற்பட்டமையும் தேவர்கள் அனைவரும் அச்சமடைந்து பிரமதேவரைத் துதித்து அவர் மூலம் தர்ம காரியங்கள் பலவற்றைக் கேட்டு மனத்தெளிவு பெற்றமையும் கூறப்படுகிறது. ஆனால் விந்த மலையின் பகை உணர்வைப் போக்கவல்லவர் அகத்தியமகாமுனிவரே என்பதைக் கூறி பிரமதேவர் மறைந்தருளினார்.

புனிதத்தலமாகிய காசியில் எழுந்தருளி இருக்கும் அகத்திய முனிவரைச் சந்திப்பதற்காகத் தேவர்கள் அங்கு சென்று அருள் அநுபவம் பெற்ற வரலாறுகள் மிகவும் அற்புதமாகக் கூறப்படுகிறது. ஆனால் காசித்தலத்தின் பெருமை பற்றி அகத்தியர் தமது மனைவி லோபாமுத்திரைக்கு எடுத்துக் கூறிய கருத்துக்கள் எமது சிந்தைக்கு என்றும் விருந்தாக அமைந்து சுவைப்பன. இவ்வாறு காசி விசுவநாதப் பெருமானின் தரிசனமும் அம்பிகை, தண்டபாணி, துண்டிவிநாயகர், ஆசாரவிநாயகர், அபர்த்திய விநாயகர், துர்க்காதேவி ஆகிய காசியில் உள்ள மூர்த்திகளின் பெருமையும் எமக்குப் பக்தி உணர்வை ஊட்டுவனவாக அமகின்றன.

'காசி காண்டம்' என்றபுனிதநாமத்தைக்கொண்ட இந்நூல் வெளிவருவது குறித்து அகம்மிக மகிழ்கின்றேன். இதனை எத்தனை தரம் படித்தாலும் அத்தனை அருள் ஊற்றுக்களும் எமது சிந்தையை நனைவிப்பனவாகவும் அதே நேரத்தில் உள்ளத்து மாசுகளை அகற்றி உயிருக்கு ஊ திபம் வழங்கவல்லதாயும் அமைந்துள்ளன என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை.

ஆகவே பண்டிதர் பொன்னம்பலவாணருடைய அருள் முயற்சியாக வெளிவரும் இந்நூலையும், நூலாசிரியரையும் வாழ்த்திப் போற்றி அமைவது எம் போன்றோர் கடனாகும்

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்

துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காசிநாதர் திருக்கருணை

ஈழவள நாட்டின் யாழ்ப்பாணம் வலிமேற்கில் தொல் புரப்பகுதியில் அமைந்துள்ளது வழக்கம்பரை முத்துமாரியம் மன் ஆலயம். இவ்வாலயத்தை வேதாரணிய சைவக்குருமார்கள் பரிபாலித்துள்ளனர். அவர்கள் பொது மக்களுடன் சேர்ந்து இவ் வாலய நித்திய நைமித்திய பூசைகளைத்திருவருள் பொலிய நடாத்துவதுடன் நாயன்மார் குருபூசை திருமுறை, திருவாசகம் முற்றுமோதல் என்பவற்றையும் நடாத்துவர். அத்தோடு இற் றைக்கு ஐம்பது ஆண்டுகளாக இப்பகுதியில் வாழ்ந்த சைவப் பெரியார் மலாயன் பென்சனர் திரு. கார்திகேசு அவர்கள் காசி சேத்திரத்திலும் அக்கிகாசி சேத்திரத்தை அருளால் நிரப் பும் காசிவிஸ்வநாத விசாலாட்சி சமேதரில் கொண்ட பேரன் பினாலும் அதிவீரராமபாண்டியரால் பாடப்பெற்ற காசிகாண்ட புராணத்தைப் படனம் செய்யும் ஒழுங்கு முறையை ஆரம்பித்து வைத்தனர். அவர் வழிவந்த மகன் காசிவிசுவநாதரும் அவர் மகன் செல்வகுமாரனும் (கனடா) இன்று வரை விடாது நடாத்தி வருவது பெருமைக்குரியது.

காசிகாண்ட புராணபடனம் வருடந்தோறும் கார்த்திகை மாதம் முதல் நாள் தொடங்கி மாத இறுதி வரை நடை பெறும், இம்மாதத்தில் வரும். சோமவாரங்களில் தனிப்பட்ட உபயகாரர்களால் விசேட அபிஷேக ஆராதனைகள் செய்து சிறப்பிக்கப்படும். இப்புராணபடனத்தில் பயன் சொல்வோராக அமரர் யோகிகாத்தியேசு அவர்களும் அவரைத்தொடர்ந்து அமரர் சண்முகநாதனும் பங்கு கொண்டனர் தற்போது சைவப் பெருந்தகை திரு. மருதபிள்ளை ஆசிரியர் அவர்கள் சிறப்பாக உரைசெய்து வருகிறார்கள்.

காசிகாண்ட புராணபடனத்தில் பங்கு கொண்ட அநே கருக்கு இச்செய்யுள் நூல் வசன ரூபமாக அமைந்தால் சிறந்த தென்ற ஆசை தோன்றியது. இவ்வாசையை இப்பகுதி சைவ நெறிக்கழக செயலாளர் திரு. வ. தருமலிங்கம் அவர்கள் தன் நிருவாகத்துடன் கலந்து பல பெரியாரின் உதவியுடன் நிறை வேற்ற முன்வந்தமை நாம் முன் செய்த புண்ணியமே இதனை வசனரூபத்திலமைப்பதில் ஆறுமுக நாவலர் வழிவந்த கந்தபுராண பரம்பரையை அடியொற்றி வாழ்பவரும் ஆசாரசீலரும் நல்ல சைவபரம்பரையினரும் பண்டிதருமாகிய திரு. தியாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலவாணரவர்கள் உகந்தவர் எனக்கண்டு அவரிடம் ஒப்படைத்தார்கள். எனக்கு கனவில் வந்தகாட்சியும் அதே பொன்னம்பலவாணர் அதைப்பொறுப் பேற்றலும் காசிநாதர் திருக்கருணையே என என்உடலெல்லாம் புளகாங்கிதம் அடைகிறது. அவர்கள் அதை ஏற்று இலகுதமிழில் இனிய நடையில் யாத்துத்தந்தனர்.

இப்பொழுது நூல் வடிவில் அச்சுவாகனமேறி நமது கைக்கு வரப்பெற்றுள்ளது. இதனைப்படித்து எல்லா நலன்களையும் அடைந்து மூத்திப் பேற்றையும் அடைவோமாக.

ஓம் சாந்தி.

இப்படிக்கு

**சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள்**

அம்பாள் தேவஸ்தானம்
வழக்கம்பரை
தொல்புரம்
சுழிபுரம்

* இந்நூலை வைத்திருப்பவர் வருடந்தோறும் தமக்கு வாய்ப்பான சிலதினங்களிலோ அல்லது கார்த்திகை மாதத்திலோ பாராயண முறையில் இதைப்படித்து வழிபாடாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தென்னாடுடைய சிவனுக்கு விசேட ஆலயம் சிதம்பரம் அப்பரம்பொருளுக்கு வடநாட்டில் சிறந்தது காசி விசுவநாதர் ஆலயம் சைவராகப் பிறந்தார் எல்லாரும் தரிசிக்க இயலாத தரிசிக்க வேண்டியமூர்த்தி, தலம், தீர்த்தத்தால் மிக மிகச் சிறந்தது காசி. காசியைத் தரிசிக்க பிராப்த மில்லாதவரும் ஓரளவிற்றானும் காசிவிசுவநாதரின் பேரருளைப் பெறச் சிறந்த வழியொன்றைச் செய்து வைத்துப் போயினர் பாண்டிய நாட்டின் அரசராகவும் பேரருள் புலவராகவும் இருந்த அதிவீரராம பாண்டியனார் அவருடைய காசிகாண்டம் என்னும் நூல் காசியின் பெருமையைத் தெளிவாக்குவதோடு ஒவ்வொரு குடும்பமும் அனுட்டிக்கவேண்டிய தருமநெறி முறைகளையும் காசி விசுவநாதர் விசாலாட்சியை மறவாதிருப்பதால் வருந் முத்திப் பேற்றையும் இனிதாகக் கூறிச் செல்லும்

இது வசனரூபமாக அமைந்தது நாமனைவரும் செய்த பெரும் புண்ணியமே புராணபடனத்தில் பங்குபற்றியோர் தவிர மற்றையோரால் செய்யுள் வடிவில் பெறமுடியாத பெரும்பயனை வசனரூபத்தில் நாம்பெறக் கிடைத்ததும் காசிவிசுவநாதரின் பேரருளே.

புராணபடனத்தின்போது இனிமையாகச் செய்யுளை வாசிப்பவரும் எம் சைவநெறிக் கழகத்தின் செயலாளருமாகிய திரு வ. தர்மலிங்கம் அவர்களே இவ்வமைப்பின் முன்னோடி இவரது அயராத முயற்சி நன்கொடையாளர்களைத் தேடிப்பிடித்தது.

எந்தநேரமும் அவதியிலிருக்கும் எங்கள் இனத்தாரிடம் தேடித்தேடி நிதியைப் பெற்ற அவரின் முயற்சி மறக்கமுடியாதது. பெருமை மிக்கதும் பேரருளை தருவதுமாகிய காசிகாண்ட வசனத்தை அமைத்தவர் யாரென்பதைச் சிறிது காண்போம் இன்று யாழ்ப்பாணத்தில் உரைவகுக்கக் கூடியவர்கள் மிகச் சிலரே உள்ளனர். அவர்களில் சிறந்த பேரருளாளர் திரு. இ.' பொன்னம்பலவாணர் என்னும் பெரியார் இவர் ஒரு பண்டிதர் புராணபடனகாரர் இன்றைக்கு நாவலர் வழியில் வாழும் எடுத்துக் காட்டாளர். கேட்போர் மனம் நோவடையாது இரகசியங்களை இனிதாகச் தொட்டுச் சொல்பவர் இவர் புராணபடனம் செய்யும் போதுசொல் பொருள் ஓசை என்பன இனிய நடைபோடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து இந்தக் காவியப்படைப்புக்கு உதவிய அன்பர்கள் அனைவரும் தங்கள் வாழ்வின் இறுதியில் விசுவநாதரின் மடியில் கிடந்து விசாலாட்சி அம்மையால் விசிறப்பட்டு சிவசாயுச்சியபதவியைப் பெறுவார்களாக எனக் காசிவிசுவநாதர் விசாலாட்சி அம்மையை வேண்டுவோமாக.

வணக்கம்

இப்படிக்கு
**சி. கந்தையா**
முன்னாள் அதிபர்
ஆலோசகர் சைவநெறிக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முகவுரை

காசிகாண்டத்துக்கு ஒரு சுருக்கவுரை எழுத நேர்ந்தது பெரும் அதிசயமேயாகும். அதை எழுதும் போதே அச்சாகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கவில்லை அப்படியொரு புண்ணியத்தில் ஈடுபடும் போது பல நாட்களாக விரும்பிய காசியாத்திரை கை கூடும் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது. யாத்திரை நிறைவேறியது என்முயற்சியும் நம்பிக்கையும் சரியானவையே என்பதை நிரூபித்துள்ளன.

நம் சைவசமுதாயத்தின் புண்ணியவசத்தால் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களில் கார்த்திகை மாதத்தில் காசி காண்ட படனம் நடைபெற்றிருக்கிறது. இப்படன விளைவாக காசித்தலம் - விசுவநாதமூர்த்தி - கங்காதீர்த்தம் என்பவற்றின் மகிமைகளையும் பிறஅரிய செய்திகளையும் நம் முன்னோர் அறிந்து பயன்பெற்றிருக்கிறார்கள். இந்த வகையில் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடை பெற்று வந்த காசிகாண்ட படனம் நிகழ்ந்து வருகின்றது. இதில் பங்கு பற்றும் சிவத்திருவாளர் மருதபிள்ளையால் நாமெல்லாம் மகிமை பெற்றுவருகின்றோம்.

இவ்வாலய காசிகாண்ட படனத்தில் பங்குபற்றியதன் விளைவாக அன்பர் தர்மலிங்கம் அவர்கள் காசிகாண்டத்தை வசனமாக எழுதி வெளியிடுத்தல் நல்லது என்று தெரிவித்தார். செய்யுள் நூலை வசனமாக்கிய பெரியோர்களின் தொடர்பு இன்மையாலும் சொந்த அனுபவக்குறைவாலும் வசனமாக்கும் முயற்சியை விரைவில் நிறைவேற்ற வேண்டும். என்னும் ஆவலாலும் சிலபகுதிகள் அழகாக அமையவில்லை எனக் கருதுகிறேன். ஆனாலும் விடயங்களை அறியப்போதுமான வசன அமைப்போ என்று நம்புகிறேன்.

நானும் என்னைப் போன்ற பலரும் தமிழறிவைப் பெற்றுச்சிறக்கவும் பண்டிதர்களாகவும்காரணராய் விளங்குகின்றவரும் சிறந்த இயற்றமிழ்ப் போதனாசிரியருமாகிய நீர்வேலிப்பண்டிதர் செ. துரைசிங்கம் அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

இவ் வெளியீட்டு முயற்சிக்கு ஆதாரமான சுழிபுரம் சைவ நெறிக்கழகத்திற்கும் இக்கழகத்தின் சார்பில் இவ் வெளியீட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான ஆதரவையும் பொருளையும் திரட்டும்-முயற்சியில் மனம் தளராது ஈடுபட்ட திரு. தர்மலிங்கம் அவர்களுக்கும் பொருளா தார நெருக்கடிகளும் - புண்ணிய சிந்தைக்குச் சவால்களும் நிறைந்த இக்காலப்பகுதியில் பொருளுதவி புரிந்த தனமும் மனமும் படைத்த பெரியோருக்கும் நான் நன்றியுணர்வுடைய வனாயிருக்கின்றேன்.

சுழிபுரம் சைவநெறிக் கழகத்தின் தலைவராக விளங்கு பவர் ஓய்வுபெற்ற சுங்கத்திணைக்கள அதிகாரியும் பண்பாளரு மாகிய திரு. அழகரத்தினம் அவர்கள் இவர்களது பெருந்தன் மையும் ஊக்கமுமே இந்த நூல் வெளியீட்டுக்கும் காரணம் என்பதால் இச்சந்தர்ப்பத்தில் அவரைப் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசியுரை வழங்கிய நல்லையாதீனத்தவருக்கும் அணிந் துரை வழங்கிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் என்பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அணிந்துரையில் என்னை மிகவும் பெருமைப்படுத்தி யுள்ளமை என் தகுதிபற்றியதன்று எனவும் சிவத்தமிழ்ச்செல்வி யின் தாயுள்ளமும் காசியின் மகிமையும் பற்றியதென்றே நம்பு கிறேன்.

வழக்கம்பரை அம்பாள் தேவஸ்தான குருக்களான சிவஸ்ரீ சு. சுந்தரராஜக்குருக்கள் அவர்களும் சுழிபுரம் சைவ நெறிக் கழக ஆலோசகர் ஆசிரியர் சி. கந்தையா அவர்களும் அன்பான அணிந்துரைகள் வழங்கியுள்ளனர். வழக்கம்பரை பஜனைச் சபையின் கௌரவ செயலாளர் திரு. க. வாமதேவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். இவர்களது அன்புள்ளத்துக் கும் பேராதரவிற்கும் நன்றியுடையவனாயுள்ளேன்.

அழகான முறையில் இந்நூலை அச்சிடப் பொறுப்புட னும் ஊக்கத்துடனும் செயற்பட்ட கரணவாய் கணாதிபன் அச்சகத்தாருக்கும் என் நன்றியறிதலை இவ்விடத்தில் பகிரங்கப் படுத்துகின்றேன்.

அன்பன்

பொன்னாலை. தி. பொன்னம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

நூல் வெளியீட்டாளர்களை வாழ்த்துவோம், போற்றுவோம். வழக்கம்பரை அம்பாளின் ஆலயத்தில் காசிகாண்டப் புராணப் படிப்பு பல்நெடும் காலமாக வருடம்தோறும் தவறாது தமிழ் கார்த்திகை மாதம்பூராவும் படிக்கப்பட்டு பயன் கூறப்பட்டு பக்தி செய்யப்பட்டு வருகின்றது.

இப்படிப்பில் கலந்து படித்து இன்புறுபவர்களில் சுழிபுரம் திரு. வ. தருமலிங்கம் ஒருவராவர். இவர் சோதிடக்கலையிலும் புராணபடன வாசிப்புக்களிலும் திறமையுடையவர் திருமுறைப் பாடல்களை இனிமையாகப்பாடி வருபவருமாவர்.

இவரது உள்ளத்தில் எழுந்த அவா காசிகாண்டபுராண படன நூல் எல்லோருடைய கைகளிலும் இருக்கவேண்டும் நாம் காசிக்கு போகாதுவிட்டாலும், நாம்யாவரும் காசியின் பெருமையை சிறப்பை எல்லாம் அறிந்து இருக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர். பல்வகைக் கடினமுயற்சியோடு காசிகாண்ட புராணபடன வசனநடை நூலை அச்சிட்டு இன்று எங்கள் கைகளில் இருக்க வைத்துள்ளார்.

இந்நூலை ஆக்கிக் கொடுத்ததில் ஆற்றல் மிக்கவராக விளங்குபவர் பண்டிதர். தி. பொன்னம்பலவாணர் அவர்கள் காசிகாண்டபுராண படன செய்யுள்கள் யாவற்றையும் படித்து யாவரும் இலகுவாக விளங்கச்செய்யும் வகையில் இப்புராண நூலை ஆக்கியுள்ளார். பண்டிதரின் உரைநடை வாசிப்பவர்களுக்கு கதையைக் கூறுவதாகவுள்ளது. இப்பணியில் ஈடுபாடு கொண்ட சுழிபுரம் சைவ நன்னெறிக் கழகத்தினரும் பண்டிதர் தி. பொன்னம்பலவாணரும் சைவ உலகுக்கு ஓர் நல்லபணியைச் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமய நூல்கள் யாவும் தட்டுப்பாடு இன்றி யாவரும் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்குடன் சில நூல்கள் எம்மால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதை யாவரும் அறிவர். நல்ல சமயப் பணிகளைச் செய்பவர்கள் தொண்டுக்கு பஜனைச் சபையார் பக்கபலமாகவே இருந்துவருகின்றனர். தொண்டர் திரு. வ. தருமலிங்கம் முன்னின்று எடுத்த இப்பணிக்கு நாம் கைகொடுத்து உதவுவது கடமையாகும். இவர்களது செய்கையை நாம் பாராட்டிப் போற்றுகின்றோம். அம்பாள் எல்லா நலன்களையும் இவர்களுக்கு வழங்கி அருள்பாலிக்க நாம் வேண்டுகின்றோம்.

நல்லபணிக்கு நாம் யாவரும் ஆதரவு வழங்க வேண்டும் என வேண்டுகின்றோம். ஒவ்வொருவரும் காசிகாண்ட புராண படன நூலை வாங்கி ஆதரவு நல்குவீர்களாக.

''மேன்மை கொள் சைவநீதி''

இங்ஙனம்

வழக்கம்பரை, பஜனைச் சபையார் சார்பில்

சுழிபுரம். **க. வாமதேவன்**

18-10-97 கௌரவ செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிகாண்டக் கருப்பொருள்கள் சில

திருஞானசம்பந்த சுவாமிகள் வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் திருப்பாசுரப் பதிகத்தில் "வேதமுதல்வன் முதலாக விளங்கி வையம் ஏதப்படாமை உலகத்தவரேத்தல் செய்ய சூதனொலிமாலையென்றே கலிக்கோவை சொல்லே" என்றருளியுள்ளார். மக்கள் குற்றமற்ற வாழ்வை வாழவும் சிவபெருமானையே உலகிற்குக் கருத்தா என உணர்ந்து வணங்கவும் உதவவல்லன புராணங்கள் என்பது சம்பந்தப் பெருமான் திருவுள்ளமாகும் ஆனால்;

இன்றுபலர் புராணங்கள் புனைந்துரைகள் என்றும் பாமரர்க்காகக் கூறப்பட்டன என்றும் நாகரீகமடைந்தவர்கள் பகவத்கீதை முதலிய அறிவு நூல்களைக் கற்றலே தகுதி என நம்பியும் பிரசாரம் செய்தும் வருகின்றனர். இது பெருந்தீங்காய் முடிந்துள்ளது!

வியாச முனிவரின் மாணாக்கருக்குள் புராணங்களை விளங்கிக் கொள்ளவும் தகுதி நோக்கி புராணங்கள் கூறும் தலைமையும் சூதமுனிவரிடமே இருந்தது என்றும் புராணம் சொல்லுவதற்கும் கேட்டற்கும் மேலான தகுதி தேவை என்றும் பண்டிதமணி சி. க. அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.

சூதரிடம் புராணங்கேட்டவர் நைமிசாரண்ய முனிவர்களே ஆவர். இவர்கள் வேதவேதாந்தங்களில் வல்லவராய் மனித இயல்புக்குரிய ஆசைகளைப் பூர்த்திசெய்து வென்றபின் வானப்பிரஸ்தர்களாய் விளங்கியவர்கள். இவர்களைப் பாமரர்கள் என்று கருதுவது விவேகமின்மையேயாகும்.

வேதங்களை ஓதியும் தவங்கள் புரிந்தும் அறியமாட்டாத அரியதத்துவங்களை அறிந்து உய்யும் நோக்குடன் தாம் செய்த யாகத்தின் பயனாக இம்முனிவர்கள் சூதரிடம் கேட்டவையே புராணங்களாகும். சிவபுராணங்கள் பத்தில் மட்டுமன்றி ஏனையவற்றிலும் சிவபரமான பகுதிகள் உள்ளன. ஆதலால் தான் திருஞானசம்பந்தர் சூதனொலி மாலை என்று பொதுவாக எல்லாப் புராணங்களையுமே குறிப்பிட்டு இவற்றின் அவசியத்தை வலியுறுத்தி அருளியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரியின்போது நித்திரை விழிப்பதன் முதன்மையை வலியுறுத்தும் புராணத்தைக் கேட்கும் பலர் எப்படியாவது நித்திரை விழித்தால் போதும் என்ற தவறான முடிவுக்கு வந்து விடுகின்றனர். சிவராத்திரியின் பெருமையை — தேவையை உணர்ந்த பண்பாளன் ஒருவன் நித்திரை விழிப்பதன் அவசியத்தைப் புராண வாயிலாக நன்குணர்ந்ததும் எப்படி நடந்து கொள்வார் என்பதைச் சிந்திக்கின்ற தகுதிமிக்கவர்க்கே புராணங்கள் உரியன என்பது தெளிவாகும்.

காசிகாண்டத்தில் உள்ள கதைகள் மட்டுமன்றி கதைகளின் ஓரொரு அம்சவாயிலாகவும் அரிய உண்மைகள் உணர்த்தப்பட்டுள்ளன. அப்படியான நுட்பங்கள் எல்லாவற்றையும் கண்டு தெளிவாக்கும் ஆற்றல் இல்லை என்று அறிந்திருந்தும் பிறருக்கு மயக்கத்தை உண்டுபண்ண வல்லன என்று கருதத் தக்கனவும் எனக்கு தெளிவானவையுமான சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

நாரதர் விந்தியமலையைக் காண்கிறார் அதன் அகந்தையையும் அது விரைவில் நீக்கப்படவேண்டுமென்றும் உணர்கிறார். உடனே அதன் அகந்தை வெளிப்படத்தக்கதாகச் செயற்படுகின்றார் அகத்தியரால் விந்தியத்தின் அகந்தை நீங்குகின்றது இதில் நாரதரின் பெருமையும் நன்கு உணரப்படவேண்டும்.

தேவர்கள் விந்தியத்தின் செயலால் உண்டான தீமையைச் சொல்ல பிரமதேவரிடம் செல்கின்றனர். பிரமதேவர் அகத்தியரிடம் தேவர்களை அனுப்புகிறார்.

உலக நியதியை முறைப்படுத்தும் உரிமை பூண்ட தேவர்கள் தமக்கு இடையூறு வரும்போது பிரம்மதேவரிடம் செல்வது முறை. பிரம்மதேவர்தான் அவ்விடையூறுகளைக் களையலாம் அல்லது அகத்தியர் போன்றோரிடம் அனுப்பலாம் அல்லது தானும் சேர்ந்து திருமாலிடமோ சிவபிரானிடமோ சென்று தீர்வை உண்டுபண்ணலாம். இந்த தெய்வீக ஒழுங்கில் பிரமதேவருக்கு உரிய முதன்மையைப் புலப்படுத்தவே பிரமதேவர் துதி காசிகாண்டத்தில் விளங்குகின்றது.

அகத்தியரைக் காணத் தேவர்கள் காசிக்குச் செல்லும் வாய்ப்பு உண்டானதையிட்டு மிக மகிழ்கிறார்கள். இது; தாம் விரும்பினாலும் விரும்பும் போதெல்லாம் காசிக்குச் செல்லும் சுதந்திரமற்றவர்கள் தேவர்களென்பதும் தேவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் மகிமை காசிக்கு உண்டென்பதும் இங்கே அறியக் கூடியதாயுள்ளது. ஒரு புண்ணிய தலத்திற்கு ஏதாவது ஒரு நோக்கமாகச் செல்பவர் கூட முதலில் புண்ணிய தலத்தில் செய்யத்தக்க வழிபாடுகள் தானதருமங்களைப் புரியவேண்டும் என்பதை அகத்தியரிடம் சென்ற தேவர்களின் செயற்பாடு உணர்த்துகின்றது. அதுமட்டுமன்றி அப்படிச் செயற்பட்டதால் தான் அகத்தியர் காசியிலேயே இருக்கவேண்டும் என்ற தன் விருப்பத்தை ஒதுக்கிவைத்துவிட்டு தேவர்கள் வேண்டுதலை பெற்று நிறைவேற்றும் நிலையும் உருவாகியதுபோலும்

அகத்திய ஆசிரமத்தை அடைந்த தேவர்கள் லோபா முத்திரையின் கற்பின் பெருமையை வியந்து வணங்குவது; தேவர்களும் வணங்கும் பெருமை கற்புமிக்க பெண்மைக்கு உண் டென்பதையும் அகத்திய முனிவரின் பெருமைக்கு அவரது மனைவியின் கற்பும் காரணமாயிருக்கிறது என்பதையும் உணர்த் துகின்றது.

தேவகாரியத்துக்காக காசியைவிட்டு நீங்கவேண்டியிருக் கிறதே என்று அகத்தியர் விசனப்படுவதும் தம்மால் இயன்ற காரியத்தை என்மூலம் நிறைவேற்றத் தேவர்கள் பணிகின் றனரே எனத் தாழ்மையாம் தன்மையுடன் அகத்தியர் ஆலோ சிப்பதும் மிக இனிய விடயங்களாகும். காசியின் மகிமையும் எவரும் காசியை அடையவும் அங்கு தங்கவும் முயலவேண்டும் என்பதையும் பணியுமாம் என்றும் பெருமை என்னும் தமிழ் வேத நுட்பத்தையும் இங்குநன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

மனித வாழ்வினும் மேலான வாழ்க்கை இயல்புகள் உள்ளன என்பதும் அவற்றிலும் பார்க்க முத்திப்பேறே சிறப் பானது என்னும் உண்மையையும் சிவசன்மாவின் வாழ்வினைக் கூறும் முகமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு புராணங்களிலும் குறிப்பாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தப் படும் உண்மைதான் - ஆனால் இந்நூலில் இவ்வுண்மைகள் தெளிவாகவும் உறுதியாகவும் வற்புறுத்தப்பட்டுள்ளமை உளம் கொள்ள வேண்டியதாகும்.

தூய்மையின்றிச் சிவபூசை முதலியன செய்வதன் தீமை யும் தானம் செய்துவிட்டு அதனால் பொருளை இழந்தோமே என வருந்துபவரின் தவறையும் நன்கு உணர்த்தியே உலகம் என ஒன்று கூறப்பட்டுள்ளது. இவை உண்மையா என்று ஆரா யவோ திர்மானிக்கவோ எமக்குக் கிடைத்துள்ள பௌதீக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களும் எமது பலவீனமானதே மன ஆற்றலும் போதாது என்று அறிவதெமக்கு ஒரு தகுதியாகும்.

இயமதர்ம ராசனைப் பற்றிக்குறிப்பிடும் பகுதியில் இவன் புண்ணியவான்களுக்கு அன்புருவுடனும் பாவிகளுக்கு அச்சம் தரும் தோற்றத்துடன் காட்சியளிப்பான் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் யமன் மட்டுமன்றி ஒவ்வொருவருமே இவ்வாறு இருவிதமான தோற்றத்துடன் காட்சியளிப்பதை நம் விவேகத்தாலும் அநுபவத்தாலும் கண்டு கொள்ளலாம்.

பயங்கரமான முகத்தை உடைய காளிதேவியின் தரிசனம் பற்றி இராமகிருஷ்ணரிடம் ஒரு அன்பர் கேட்டபோது ''தீமை கொடுமை மிக்கவர் விடயத்தில் காளியின் தோற்றம் அச்சத்தை உண்டு பண்ணுவதாய் உள்ளதேதவிர அன்பர் விடயத்தில் இன்ப மயமாகவே காளியின் முகம் விளங்கும். '' என்று கூறியிருப்பது இவ்வுண்மைக்கு நல்ல சாட்சியாகும்.

சிவசன்மா சூரிய உலகங்கண்ட அத்தியாயத்தில் சூரிய வழிபாட்டுக்கு ஞாயிற்றுக்கிழமையும் பூச, மூல, அத்த, உத்தர நட்சத்திரங்களுடன் வரும் ஞாயிற்றுக்கிழமைகளும் விசேடமான வையாகச் சொல்லப்பட்டுள்ளன. இவ்வாறு ஒவ்வொரு புராணத்திலும் வேறுவேறான சிறப்புநாள்கள் சொல்லப்பட்டிருப்பது இக்காலத்தில் பலருக்கு சந்தேகத்தையும் விபரீதசிந்தனையையும் உண்டுபண்ணும். எங்கள் அறிவு பிரமாணம் சம்பிரதாயம் என்பவற்றினுள் எல்லா உண்மைகளும் அடங்கும் என்ற தவறான கருத்தே புதுஉண்மைகளைக் காணும் போது சந்தேக விபரீதங்களை உண்டாக்குவது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ் வகையில் இந்நூலில் பல இடங்களில் புதுமையான பல விரதங்களும் நாம் சிறிதும் கேள்விப்படாத புண்ணிய காலங்களும் கூறப்பட்டுள்ளன.

நம் அறிவிற்கு அப்பாற்பட்ட பலவகையான நூதனங்கள் சிறப்புக்கள் நம் கற்பனைக்கும் அப்பாற்பட்டு உள்ளன. நுணுக்கமான உண்மைகள் இரகசியங்கள் உலகில் உண்டு எனக்கண்டு எம்அறிவையும் ஆற்றலையும் பணிவுடன் விளங்கச் செய்வதும் இப்புராணங்களின் குறிக்கோள் என்பதை நூதனமான செய்திகள் மூலம் உறுதிசெய்ய வேண்டும்.

நமக்கு உண்டாகும் நன்மை தீமைகள் நாம் செய்த புண்ணிய பாவங்களின் காரணமாகவே அமைகின்றன. இதுமட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றி இறைவனின் திருவருள் காரணமாகவும் இன்பதுன்பங்கள் வருவதுண்டு என்பதை அக்கினிதேவ பதவியை அடையுமுன் சிவ பெருமானே துன்பத்தைக் கொடுத்து அதை இன்பமாக்கிய செய்தி உணர்த்துகின்றது.

சிவபுண்ணியச் செயல்களான பூசை செபம் தியானம் என் பவற்றை இயல்பாகவும் எளிதாகவும் பேற் கொள்ள இயலாத சூழ்நிலையில் உள்ளவர் பிறர்க்கு உதவுதல், சிவபுண்ணியங்க ளைச் செய்பவர்க்கு உதவுதல் என்பவற்றாலேயே மேன்மைய டையலாம் என்ற உண்மையை வெகு அழகாக பிங்கலாக்கன் நிருதி உலகிற்குத் தலைமை பெற்ற வரலாறு உணர்த்துகின்றது இடைவிடாது சிவபத்தியிலோ சிவயோகத்திலோ நிலைத் திருப்பவரின் தேவைகளை லோகபாலகர் முதலிய தேவரனை வரும் தாமே நிறைவேற்றி வைப்பர் என்ற உண்மையைக் கருத்தமப்பிரசாபதி என்னும் சிவயோகி பற்றிய செய்தி தெரி விக்கிறது.

புராணங்கள் ஒவ்வொன்றிலும் கொடுந்தீவினை செய்த ஒருவன் சந்தர்ப்பவசத்தால் பெரும் புண்ணியத் தொடர்பைப் பெற்று ஈற்றில் எல்லா நலன்களையும் அடைந்ததாக கொடு வினைகளின் பிடியிலிருந்து விடுபட்டதாக வரலாறு இடம் பெற் றிருக்கும். இவ்வகையில் காசிகாண்டத்தில் பல செய்திகள் உண்டு. எல்லாப்பாவங்களுக்கும் இருப்பிடமான அந்தணன் ஒரு வன் பசிமிகுதியால் சிவராத்திரியன்று சுவாமிக்கு வைத்த நிவே தனத்தைக் களவெடுக்கலாம் என்று காத்திருந்து விளக்கைத் தூண்டிக் களவெடுக்கிறான். அப்படி விளக்கைத் தூண்டிய புண் ணியத்தால் கடைசியில் குபேரனாகிறான் என்று சொல்லப்பட் டுள்ளது.

இப்படியான வரலாற்றைக் கொண்டு பலர் நாம் எத்த கைய தீவினைகளைச் செய்தாலும் சந்தர்ப்பவசத்தால் ஈடேற முடியும் என நம்புவது பெருந்தவறாகும்.

ஆவணத்தின் கெடுதி மாயையின் தீமை என்பவற்றை நன்குணர்ந்ததனால் நீண்ட தூயசாதனைகளை மேற்கொண்ட வர்க்கு அவரை அறியாமல் உண்டானதடையால் தீயவரான வர் பின் இப்படியான சந்தர்ப்பத்தால் ஈடேறும் வாய்ப்பு வரு மேயன்றி ஆணவத்தின் திமிரும் மாயையின் மயக்கமும் மிக்க வாழ்வில்அமிழ்ந்திருப்பவர்க்கு இப்படியானசந்தர்ப்பம்வருவதே யில்லைஎன்பதும் இப்படியான வரலாறுகளின் பின்னணியாக உள்ள புராண இரகசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழ பகவானின் மனைவியைக் கவர்ந்த சந்திரனைத் தேவர்கள் பகைத்தபோது சிவபெருமான் சந்திரனுக்கு உதவினார் என்ற செய்தி சந்திரனின் சிவபக்திச்சிறப்பையும் சிவபெருமான் பக்தர்களின் குற்றங்களைப் பொருட்படுத்தாது அருள்பவர் என்ற உண்மையையும் உணர்த்துவதோடன்றி தூய்மைமிக்க பக்குவான்மாக்கருள்வது போன்றமுத்தி நிலையை சிவபெருமான் சந்திரனுக்கு அருளவில்லை.

காசியில் இறப்பவர்க்கு உடனேமுத்தி காசியைத் தரிசித்தபின் வேறிடத்தில் இறப்பவர் காசியைத் தரிசித்த புண்ணியத்தால் வேறு பிறவியில் காசியில் இறக்கும் வாய்ப்பைப் பெற்று முத்தி அடைவது நிட்சயமே என்பதை சிவசன்மா முத்தியடையுமுன்னரே அவன் முத்தியடையும் முறைகூறப் பெற்றதால் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியான விடயத்தில் இவ்வரலாறுகள் உருவகம் என்று நம்புவதிலும் பார்க்க உண்மை நிகழ்ச்சிகளே என்று கடைப்பிடிப்பதால் எளிதாக உய்தி கிடைக்கும்

1895ல் தா. குப்புசாமி நாயக்கரவர்கள் விருப்பத்தின்படி ஈக்காடு அரங்கசாமி முதலியார் குமாரரும் சென்னை கிறிஸ்ரியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய இரத்தினவேலு முதலியார் பிரமாண சகிதம்நூதனமாகச் செய்த பொழிப்புரையுடன் கூடிய காசிகாண்டப் பதிப்பில் பின்வரும் பதிப்பு ஒன்று இடம்பெற்றிருப்பது கவனிக்கவேண்டியதாம்:- ''காசி மகாத்மியம் கூறப்புகுக்க நூலாசிரியர் சிவசன்மாவின் சரிதமெனச் சுமார் 530 செய்யுள்களைக் கூறியிருப்பதால் நூற் குற்றங்கள் பத்தில் மற்றொன்றுவிரித்தல் எனவும் அவ்வாறு இடையே வருவித்த சரிதையையும் சுருக்கிக் கூறாது விரித்ததால் மிகைபடக் கூறல் எனவும் கூறக்கூடிய இருவகைக் குற்றங்களை இக்காசிகாண்டம் பெற்றுள்ளதெனக் கூறாமல் சிவசன்மாவின் சரிதை முழுவதும் காசியின் சிறப்பேயாயமைந்ததைக் நுணுகி ஆராய்ந்தால் தெளிவாகும்''

இந்நூலில் குறிப்பிட்ட அத்தியாயங்களைப் பாராயணம் செய்பவர் இப்படியான புண்ணியத்தை அடைவர் என ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. இப்படியான கருத்துக்களைச் சந்தேகிப்பது மட்டுமன்றி பரிகாசம் பண்ணித் திருப்தியுறுபவர் பலர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகிப்பது பரிகாசிப்பது என்பதற்குமுன் இக்கருத்துக் களைக் கூறியவர் யார் என்று சிந்திக்க வேண்டும். இக்கருத் துக்களுக்கு உரியவர்கள் மகிமை பெற்ற முனிவர்களாவர்.

பல சந்தர்ப்பங்களில் நாம் இக்கதைகளைச் சிரத்தையின்றி யும் செவியாற் செய்யும் வழிபாடு என்ற முறையின்றியும் கேட் கிறோம் படிக்கிறோம் இது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் கேட்கும்போது பரவசப்படும் பண்புள்ளவர்களும் கூட கேட்டு முடிந்தபின் உலகவிடயங்களில் ஈடுபடத் தொடங்கியதும் அக் கதை உணர்த்திய உண்மைகளைப் புறக்கணித்து அதாவது அப்படியான கதைகளைக்கேட்டு நல்லறிவு பெற்றதை மறுத்து மறந்து வாழ்கிறோம். இப்படியான தவறுகளை நம்வாழ்வில் நீக்கி திரும்பத்திரும்பப் பாராயணப் செய்தல் அவற்றின் உப தேசங்களை மனத்திருத்தினால் - கற்றபடி நிற்றல் சொல்லப் பட்ட புண்ணியப் பயன்களை - நற்பேறுகளை அடைவது இயல்பேயாகும்.

வயிரவக்கடவுள் தோன்றிய சந்தர்ப்பம் வயிரவக்கடவுள் வேறு சிவன்வேறல்ல என்று வலியுறுத்தியுள்ள முறை என்பன வும் பூவுலகு முதல் வைகுண்ட உலகு ஈறான சகஉலகங்களிலும் இல்லாத புனிதம் - சிவத்தன்மை காசிக்கு உண்டு என்பதை உணர்த்தும் முறையில் வயிரவக்கடவுள் காசியை அடைந்ததும் அவரது கையிலிருந்து பிரமகபாலம் விலகிய நிகழ்ச்சி என்பன மிக நுட்பமான - அருமையான உண்மைகளாம்.

மனித வாழ்வின் பௌதீகத் தேவை - அடிப்படை- அவ சியம் என்பவற்றை நிறைவு செய்வதால் முழுவாழ்வு வாழ்ந்து விடமுடியாது என்பதை உணர்த்தும் வகையில் இந்நூலில் இல் லொழுக்கம் கூறிய அத்தியாயம் - பிரமச்சரியம் கூறிய அத்தி யாயம் மகளிரிலக்கணம் கூறிய அத்தியாயம் ஆசாரம் கூறிய அத்தியாயம் முதலியன விளங்குகின்றன. உடலின் தேவைக்கு வேறான உயிரின் தேவை நிறைவேற்றப்படவேண்டும். அதுவும் உடலை வாயிலாக்கொண்டு நிறைவேற்றவேண்டும் என்ப வற்றை இந்நூல் வழியாகவும் இதுபோன்ற நூல்கள் வழியா கவும் நம்சமுதாயம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நூற்றாண்டில் கூடப்பலர் தம்வாழ்வின் முடிவாக மரண காலத்தை நிட்சயித்து நிதானமாகத் தர்ம நெறிதவறாது வாழ்ந்து அமைதியாக உடலை விட்டுச் சென்றிருக்கின்றனர். அப்படியான தன்மையை அனைவரும் பெறவும் மரணம் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்துக்கும் துன்பத்துக்கும் உரியதல்ல. உயிரின் பிரயாணத்தில் ஒரு சந்திப்பே மனிதப்பிறவி என்பதை அறியவும் அறிவின் வழியில் வாழ்ந்து நிறைவடையவும் உதவும் பகுதியாக காலமறிவது உரைத்த அத்தியாயம் அமைந்துள்ளது.

திலோதானன் செய்தி மிகவும் நூதனமானது காசியின் பெருமைக்கும் ஒரு மனிதனின் பற்றற்ற உள்ளத்துக்கும், தவத்தின் சிறப்புக்கும் இனிய இலக்கியமாயுள்ளது. பதவியிலும் போகத்திலும் சிறிதும் பற்றற்ற நிலையில் அவன் காசியை விலகத் தேவர் சம்மதித்தால் மட்டுமே அரசை ஏற்பேன் என நிபந்தனை விதிக்கின்றான். காசியில் வசிக்கும் பலத்தால் தேவர்கள் அனைவரும் எதிர்க்கும் போதும் சூழ்ச்சி செய்யும் போதும் வெல்கின்றான். காசியின் மகிமையால் தேவர்களை எதிர்த்த அசுரர்களின் சிறுமையடையாமலே சிவத்துவத்தை திலோதானன் அடைவது அழகாகக் காண்பிக்கப்படுகின்றது.

திலோதானனை அரச நீதியில் தவறச் செய்யும் நோக்கில் தேவர்கள் செயற்படுவதாகக் கூறப்பட்டதற்கு ஒரு தத்துவம் உண்டு. தேவர்கள் வஞ்சனை சூழ்ச்சி என்பன உடைய அற்பர்கள் என்பதல்ல இதன் உண்மை. திலோதானனின் தகுதியை உறுதிப்படுத்த வைக்கும் பரீட்சையை இந்தமாதிரியாக அவர்கள் மேற்கொள்கின்றனர் என்பதே பொருளாகும். அற்பத்தனத்துடன் செயற்படுபவர்களானால் அவன் வெற்றிபெறும்போது அவர்கள் மகிழ ஏற்றுக்கொள்ள இயலாத நிலையன்றோ காணப்படும் இதேபோல,

காசியைப் பிரிந்ததால் சிவபெருமான் துன்பப்பட்டார் என்ற செய்தியும் தூய இடத்தை இழந்ததால் ஏற்பட்ட பிரிவுத் துன்பமன்று. காசியில் சிவபெருமான் இருப்பதால் எல்லா உயிர்கட்கும் எல்லா உலகங்கட்கும் மங்களம் உண்டாகும் என்பதே உண்மையாகும். இப்படியான உண்மையைத் தன்தனிப் பெருங்கருணையால் விரும்பும் சிவபெருமான் காசியைப் பிரிதலால் வருந்துவது என்பது அவருக்குச் சிறுமையை உண்டாக்காது.

காசிகாண்ட படனபலன் இந்நூலில் மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. தமிழராயும் சைவசமயியாயும் உள்ளவர் நியமத்துடனும் ஊக்கத்துடனும் இந்நூலைப் பூசித்து பாராயணம் செய்தும் பூர்த்தியில் சிவபூசை சிவனடியார் பூசை அன்னதானம் என்பவைகளை தம் இயல்புக்குத்தகச் செய்தும் பாராயண பலனை அநுபவபூர்வமாக உணரலாம் மனப்பக்குவத்தையும் அரிய தத்துவ நுணுக்கங்களையும் அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமமான சிவஞானதானத்திற்கு உதவும் முறையில்
## இக்காசிகாண்ட நூல்வெளியீட்டிற்குப்
# பண உதவி செய்த பெருமக்கள்

வழக்கம்பரை சுழிபுரம்

திருவாளர்கள்

சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி
சுப்பிரமணியம் சுந்தரராஜக்குருக்கள்

தொல்புரம்

திருவாளர்கள் கந்தையா கைலாயநாதன்

நடேசன் சிவசண்முகமூர்த்தி விக்ரமன் கோபால்
தம்பிமுத்து சிறிகரன் சிற்றம்பலம் வெங்கடாசலபதி

திருமதிகள்

இரா இராசநாயகம் சிவக்கொழுந்து திருநாவுக்கரசு

சித்தங்கேணி

திருவாளர்கள்

சிவசம்பு திருச்செல்வம் கந்தக் கோட்டம்

சங்கானை

சின்னையா நடராசா - பொற்பவளம்

சங்கரத்தை

திருவாளர்கள் கார்த்திகேசு சிதம்பரநாதன், சற்குணானந்தன்

மூளாய்

திருவாளர்கள் அரியகுட்டி சுப்பிரமணியம்

சின்னத்தம்பி பிரகலாதன் கந்தையா கிருஷ்ணமூர்த்தி

பொன்னாலை

திருவாளர்கள் சுப்பையா கணபதிப்பிள்ளை

கார்த்திகேசு சந்திரராசா கார்த்திகேசு சந்திரபாலா

சுழிபுரம் மேற்கு

திருவாளர்கள் சீவரத்திரனம் சிவஞானம்

சிற்றம்பலம் அப்புத்துரை க. முத்தையா
சிற்றம்பலம் சுப்பிரமணியம்
பொன்னம்பலம் சண்முகலிங்கம் கார்த்திகேசு அரிச்சந்திரா
கனகசபை கோடீஸ்வரன் சந்திரசேகரம் தவராசா
வேலாயுதம் நாகராசா பு இரத்தினராசா
நடராசா பாலநாதன் கா. நாகலிங்கம்

திருமதி தில்லையாட்சி கதிரவேலு

சுழிபுரம் மத்தி

திருவாளர்கள் கார்த்திகேசு கதிர்காமநாதர்

சின்னத்துரை குலசூரி வயிரமுத்து இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதர் இரத்தினசபாபதி நல்லையா ஏரம்பமூர்த்தி
இராமலிங்கம் கந்தசாமி
தர்மரத்தினம் பாலசுப்பிரமணியம்
இலட்சுமணர் சின்னத்தம்பி கிருஸ்ணர் பூபாலசிங்கம்
தி. மனோகரன் தம்பு கந்தவனம்
அருணாசலம் இரத்தினகோபால்
வேலாயுதம் உதயகுமார் நாகரத்தினம் தனபாலசிங்கம்
சி. சுப்பிரமணியம் வன்னித்தம்பி வீரசிங்கம்
செல்வராசா சிறிமோகன் ஆசைப்பிள்ளை அருட்துரை
இளையதம்பி பரமானந்தன் மார்க்கண்டு குணானன்
கந்தையா கனகநாயகம் மு. சுப்பிரமணியம்
க. கனகசபாபதி கந்தையா வீமதேவன்
சிதம்பரப்பிள்ளை பாலகிருஸ்ணன் சுந்தரம் முருகையா
இரத்தினவடிவேல் ஆனந்தகுமார்

திருமதிகள் கந்தையா இரத்தினேஸ்வரி
இலட்சுமி சிதம்பரப்பிள்ளை பரமேஸ்வரி நவரத்தினம்
இராசேஸ்வரி வயித்திலிங்கம் நாகேஸ்வரி தர்மலிங்கம்
மங்கையர்க்கரசி சிவலிங்கம்

சுழிபுரம் கிழக்கு

திருவாளர்கள் நாகரத்தினம் சிவரஞ்சன்
கதிரவேலு கிருஷ்ணர் சுப்பையா சண்முகம்
கிருஸ்ணர் இராசையா நா. ஆசைமுத்து
துரைசிங்கம் பிரபு கதிரவேலு நடராஜா
கணபதிப்பிள்ளை வேலாயுதம்
சிதம்பரப்பிள்ளை அருணாசலம்
இராமநாதர் குலவீரசிங்கம் கந்தையா சங்கரப்பிள்ளை
ஆசைப்பிள்ளை இராசதுரை க. சிவனேசன்
செல்லையா முத்துலிங்கம் கதிரவேலு கனகசபை
த. நாகராசா கந்தையா முத்தையா
ஆசைப்பிள்ளை சுப்பிரமணியம் கந்தையா முருகையா

திருமதிகள் நாகரத்தினம் அண்ணாமலை
செல்வராணி தேவராசா சரஸ்வதி சுப்பிரமணியம்
பரமேஸ்வரி கிருஸ்ணர் பு. குமாரசாமி

பண்ணாகம் சுழிபுரம்

திருவாளர்கள் கனகசபை வாமதேவன்
சின்னத்தம்பி திருநாவுக்கரசு
முத்துக்குமாரசாமி சிதம்பரநாதன்,
இரகுப்பிள்ளை ஆறுமுகம் மாணிக்கம் சிவரத்தினம்
பொன்னம்பலம் கேதீஸ்வரன் குமரய்ய சிவராஜலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகராசா சிவயோகநாதன் க. கிருஸ்ணமூர்த்தி
கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை
சபாபதிப்பிள்ளை தனபாலன் செல்லத்துரை வயித்திலிங்கம்
மாதேவர் விசுவலிங்கம் ஆறுமுகசாமி குமார்சின்னக்குட்டி
கந்தையா பொன்னம்பலம் செல்வரத்தினம் பவளகாந்தன்
துரைசிங்கம் குகராஜ் சுந்தரம்பிள்ளை இராசதுரை

திருமதிகள் தவமணி தியாகராஜா அபிராமி சிவகுமார்
நாகம்மா விசுவலிங்கம் மகாமணி நகுலேஸ்வரன்
செல்வரத்தினம்மா ஆறுமுகம்

செல்வி சறோஜினிதேவி தாமோதரம்பிள்ளை

பனிப்புலம் பண்டத்தரிப்பு

திருவாளர்கள் சபாபதி அழகரத்தினம்
கந்தையா சிவப்பிரகாசம் சின்னகுட்டி கந்தையா
அழகரத்தினம் குலேந்திரன் விசுவலிங்கம் கந்தசாமி
கணபதிப்பிள்ளை கனகரத்தினம் செல்லையா சிவபாதம்
கந்தையா தம்பையா சோமசுந்தரம் மகேந்திரன்

சித்திரமேழி இளவாலை

திருமதி சின்னப்பு காசிப்பிள்ளை
திருவாளர்கள் பொன்னம்பலம் சுப்பிரமணியம்
சதாசிவம் விசுவபுத்திரன் வயிரப்பிள்ளை இராமகிருஸ்ணர்
வயிரப்பிள்ளை நாகலிங்கம்
சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு
சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

பெரிய விளான்

திருமதி. பொன்னையா சிவராசரத்தினம் [பரமேஸ்வரி]

மலேசியா

திருமதி. மகேஸ்வரி இராமசாமி
திரு. புவன் குலசிங்கம்

ஜேர்மனி

திரு. சிவலிங்கம் சிவதுரை
திருமதிகள் சிவமணி ஜெகதீஸ்வரன் சிவபுஸ்பா சுந்தரராஜன்

பிரான்ஸ்

திரு. சிவஞானம் சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைதிருத்தம்

| பக் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| vii | 27 | விளங்குகின்றவரும் | விளங்கியவரும் |
| xii | 34 | உணர்த்தியே | உணர்த்தவே |
| xiv | 30 | ஆவணத்தின் | ஆணவத்தின் |
| xv | 5 | உணர்த்துவதோடன்றி | உணர்த்துவதேயன்றி |
| xvi | 13 | நிற்றல் | நின்றால் |
| xviii | கடைசி | குலசூரி | பிறைசூடி |
| 1 | 7 | காற்றெரியும் | காற்றெறியும் |
| 1 | 23 | தொன்னுல் | தொன்னூல் |
| 3 | 4 | பூவுலகையும் | மூவுலகையும் |
| 16 | 11 | அங்கனுலகு | அங்கணுலகு |
| 16 | 14 | நெடுங்காணில் | நெடுங்கானில் |
| 25 | 16 | கதாயுயத்தை | கதாயுதத்தை |
| 26 | 11 | அழந்தும் | அடித்தும் |
| 26 | 14 | கிங்கரன் | கிங்கரர் |
| 28 | 10 | அவ்வேலையில் | அவ்வேளையில் |
| 30 | 26 | என்றும் | என்னும் |
| 31 | 3 | அரசர் | என்னும் அரசர் |
| 32 | 8 | முகூர்தத்தில் | முகூர்த்தத்தில் |
| 33 | 1 | பிள்ளை | பிள்ளை என |
| 39 | 31 | புலத்திளன் | புலத்தியன் |
| 41 | 6 | சூரியவெளியில் | சூரியவெயிலில் |
| 42 | 20 | திழைத்தாலும் | திளைத்தாலும் |
| 45 | 8 | தொட்டான் | துவட்டான் |
| 48 | 25 | பிரதேவரை | பிரமதேவரை |
| 51 | 5 | நாராயணனுக்கும் | நாராயணனுக்குரிய |
| | | மாயபுரி (ஹரித்துவரி) | மாயாபுரி (ஹரித்துவார்) |
| 51 | 9 | உரித்திரன் | உருத்திரன் |
| 59 | 26 | நகரத்திற்குச் | நரகத்திற்குச் |
| 61 | 24 | சேர்தால் | சேர்த்தால் |
| 65 | 21 | மாறுதவர் | மாறாதவர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 68 | 25 | கூறியாகியுள்ளது | உறுதியாகியுள்ளது |
| 69 | 6 | அரக்கன் | அரசன் |
| 69 | 18 | பல்லமலர் | நல்லமலர் |
| 69 | 19 | நான் | பான் |
| 71 | 13 | ஈசன | ஈசான |
| 72 | 4 | ஆகாயமறையாந்த | ஆகாயமளவுயர்ந்த |
| 79 | 18 | பிரானகுதி | பிராணாகுதி |
| 84 | 13 | பிரம்மாகும் | பிரமம்மாகும் |
| 87 | 6 | னத்தாவராவர் | ணத்தவராவர் |
| 90 | 2 | வாழ்தவர் | வாழ்ந்தவர் |
| 99 | 4 | முன்னேறுபவர் | முன்னேறாதவர் |
| 108 | 26 | பிரதேவர் | பிரமதேவர் |
| 116 | 3 | கடந்தபோது | கடைந்தபோது |
| 127 | 20 | கோமதைந்தான் | கோபமடைந்தான் |
| 130 | 22 | திருமாகடம் | திருமாலிடம் |
| 137 | 4 | எனுடல் | என்னுடல் |
| 142 | 12 | வானாசுரன் | வாணாசுரன் |
| 147 | 26 | மூர்த்தி | முத்தி |
| 154 | 9 | வருனை | வருணை |
| 160 | 27 | தாகத்தாலேயே | தாக்கத்தாலேயே |
| 162 | 21 | ஓங்கவும் | ஏங்கவும் |
| 166 | 16 | துக்கன் | துர்க்கன் |
| 168 | 19 | உலவில் | உலப்பில் |
| 172 | 3 | அதர்வன | அதர்வண |
| 173 | 2 | பரத்துவாரின் | பரத்துவாசரின் |
| 182 | 4 | விநாயகரையும் | விநாயகரையும்-அம்பிகையையும் |
| 189 | 3 | பிரதேவருக்கு | பிரமதேவருக்கு |
| 200 | 18 | மாக்கண்டேயர் | மார்க்கண்டேயர் |
| 217 | 16 | சேகலிங்கம் | கேசலிங்கம் |
| 219 | 9 | கந்தவர்க்கு | தக்கவர்க்கு |
| 219 | 13 | பாடலொரு | பாடல் உள்ள ஒரு |

குறிப்பு:-

இப்புத்தகத்தில் வரும் திலோதானன் என்ற பெயரை திவோதானன் என்று திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பூர்வகாண்டம்


| | பக்கம் |
|---|---|
| நாரதர் விந்த வரையை கண்டமை | 3 |
| தேவர்கள் அகத்தியர் ஆச்சிரமத்தை அடைந்தமை | 8 |
| கற்பிலக்கணம் கூறியமை | 9 |
| அகத்தியர் விந்தமலையை அடைதல் | 13 |
| தீர்த்தமகிமை உரைத்தமை | 17 |
| சப்தபுரியின் சிறப்புரைத்தமை | 19 |
| சிவசன்மாவை யமன் வரவேற்றமை | 23 |
| சிவசன்மா சூரிய உலகம் கண்டமை | 26 |
| சிவசன்மா சுவர்க்கலோகம் கண்டமை | 28 |
| சிவசன்மா அக்கினிலோகம் கண்டமை | 32 |
| நிருதி உலகம் வருணன் உலகம் | 35 |
| வ.யு உலகமும் குபேரன் உலகமும் | 37 |
| ஈசானன் உலகம் சந்திர உலகம் கண்டமை | 40 |
| தாரகை உலகமும் புதன் உலகமும் | 41 |
| சுக்கிரன் உலகு கண்டமை | 42 |
| செவ்வாய், வியாழன், சனி உலகங்களைக் கண்டமை | 44 |
| சப்தரிஷி உலகு கண்டமை | 46 |
| துருவன் தவம்செய்ய புறப்பட்டமை | 47 |
| துருவன் தவம் செய்தமை | 48 |
| சிவசன்மா மகலோகம் முதலிய கண்டமை | 50 |
| அண்டத்தின் அளவும் திருமால் முடிசூட்டியமையும் | 52 |
| சிவசன்மா முத்திஅடைந்த வரலாறு | 53 |
| அகத்தியர் முருகனை அடைந்தமை | 54 |
| மணிகன்னிகையின் சிறப்பு உரைத்தமை | 56 |
| காசியின் சிறப்பு உரைத்தமை | 58 |
| கங்கையில் எலும்பு விழுந்தமை | 59 |
| கங்கையின் ஆயிரம் நாமம் உரைத்தமை | 60 |
| வாரணாசியின் சிறப்புரைத்தமை | 61 |
| வயிரவர் தோன்றியமை | 64 |
| தண்டபாணி தோன்றியமை | 69 |
| காசிப்படம் கண்டமை | 71 |
| இல்லொழுக்கம் கூறியமை | 75 |
| பிரமச்சரியம் கூறியமை | 80 |
| மகளிர் இலக்கணம் உரைத்தமை | 81 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பக்கம் |
|---|---|
| ஆசாரம் கூறியமை | 84 |
| இல்லொழுக்கம் கூறியமை | 90 |
| யோகநிலை உரைத்தமை | 96 |
| காலமறிதல் | 103 |

## இரண்டாவது உத்தரகாண்டம்

| | |
|---|---|
| அவிமுத்தேசன் கதை | 107 |
| திலோதானன் ஆண்டமையும் அவனை விலக்கத் தேவர் கருதியமையும் | 110 |
| காசிச்சிறப்புரைத்தமை | 114 |
| யோகினிகள் காசியை அடைந்தமை | 119 |
| உலோதாதித்தன் கதை | 121 |
| உத்தராதித்தன் கதை | 122 |
| சாம்பாதித்தன் கதை | 124 |
| துருபாதித்தன் கதை | 125 |
| மயூகாதித்தன் கதை | 126 |
| கடோற்காதித்தன் கதை | 127 |
| அருணாதித்தன் கதை முதலியன | 130 |
| பிரமா வேள்வி செய்தமை | 133 |
| சிவகணங்கள் காசியை அடைந்தமை | 134 |
| அலகை தேவனான கதை | 135 |
| கணபதி காசியை அடைந்தமை | 137 |
| கணபதி திலோதானனைக் கண்டமை | 139 |
| விட்டுணு காசியை அடைந்தமை | 140 |
| திலோதானன் முத்தி பெற்றமை | 141 |
| பஞ்சநத வரலாறு | 143 |
| விந்துமாதவன் தோன்றியமை | 145 |
| விந்துமாதவன் தீர்த்த மகிமை உரைத்தமை | 147 |
| விசுவநாதர் காசியை அடைந்தமை | 149 |
| விசுவநாதர் முனிவனை அழைத்தமை | 151 |
| காசிச் சிறப்பை விசுவநாதர் கூறியமை | 152 |
| பராசரலிங்கம் முதலியவற்றின் கதை | 152 |
| சயிலேச்சுரர் முதலிய ஈச்சுரர் கதை | 154 |
| இரத்தினேசன் கதை | 156 |
| கிருத்திவாசேசன் கதை | 160 |
| துர்க்கன் அரசாட்சி | 162 |
| துர்க்கன் படை எழுச்சி | 164 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்


| | |
|---|---|
| துர்க்கன் வதை | 165 |
| வச்சிரபஞ்சர கவசம் உரைத்தமை | 167 |
| ஓங்காரலிங்க வரலாறு | 170 |
| ஓங்காரலிங்கத்தின் சிறப்பு | 173 |
| திரிலோசனலிங்கம் தோன்றியமை | 174 |
| திரிலோசனலிங்க மகிமை | 175 |
| கேதாரலிங்கத்தின் கதை | 177 |
| தருமேச்சுரலிங்கத்தின் கதை | 178 |
| கிளியின் கதை | 179 |
| மனோரதத்திரிதிகை கதை | 181 |
| தூர்த்தமன் கதை | 183 |
| கங்காளகேது வதை | 184 |
| வீரேசன் சிறப்பு | 186 |
| துர்வாசர் வரம் பெற்றமை | 188 |
| விசுவகன்மேசலிங்கம் தோன்றியமை | 189 |
| தக்கன் வேள்வி செய்தமை | 190 |
| தேவி தக்கன் வேள்விச்சாலையை அடைதல் | 193 |
| தக்கன் வேள்வி அழிந்தமை | 195 |
| தக்கன் வதை | 197 |
| பார்வதீசன் கதை | 199 |
| கங்கேசன் வரலாறு | 200 |
| நருமதேசன் வரலாறு | 200 |
| சதீச்சுரன் வரலாறு | 201 |
| அமுதேசன் முதலிய லிங்கங்களின் வரலாறு | 202 |
| வியாசர் கையும் நாவும் இழந்தமை | 204 |
| வியாசர் சாபமிட்டமை | 206 |
| சேத்திரவளமும் தீர்த்தங்களும் | 210 |
| முத்திமண்டபத்தின் கதை | 210 |
| விசுவநாதர் மகிமை | 213 |
| காசியைச் சேவிக்கும் முறை | 214 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசி விசுவநாதப் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# காசி காண்டம்

## விநாயகர் காப்பு

மாற்றரிய தொல்பிறவி மறிகடலின்
இடைப்பட்டுப்
போற்றுறுதன் குரைகழற் தாள்
புணைபற்றிப் கிடந்தோரைச்
சாற்றரிய தனிமுத்தித்
தடங்கரையின் மிசைஉய்ப்பக்
காற்றெறியும் தழைசெவிய
கடாக்களிற்றை வணங்குவாம்.

## சிவபெருமான்

சீர்பூத்த செழுந்தரங்கத் தீம்புனல் மந்
தாகினிதண் தேனார் கொன்றைத்
தார்பூத்த செஞ்சடையில் அணிந்தும்
அதன் மேல்விழைவு தணியா னாகிக்
கார்பூத்த இருவிசும்பில் கங்கைநதி
சூழ்கிடந்த காசி வாழும்
ஏர்பூத்த தனிமுதலின் இணையடிப் பூங்
கமலமலர் ஏத்துவாமே.

## வாழ்த்து

அருமறை முனிவர் வாழ்க
ஆனினம் வாழ்க தெண்ணீர்
விரிதிரை உலகங் காக்கும்
விறல்கெழு வேந்தன் வாழ்க
மருவிய திங்கள் தோறும்
மழைவளம் சுரக்க எங்கோன்
பொருவற மொழிந்த தொன்னுல்
பொற்பொடும் பொலிக மாதோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்புராண வரலாறு

நீற்றழகராகிய சிவபிரான் அருளையும் புண்ணிய வரலாறுகளையும் கூறும் நாவினை உடையவரும் சிவபெருமானைத் தியானிப்பவரும் விபூதி உருத்திராக்கம் விளங்கும் உடம்பினரும் ஆன சூதமகாமுனிவர் நைமிசாரண்யம் என்ற இடத்தை அடைந்தார். நைமிசாரண்யத்தில் இருந்த முனிவர்கள் சூதமுனிவரை உபசரித்து வணங்கினார்கள். பின் அம்முனிவர்கள் சூதரை வணங்கி, பெரியவரே! நீவிர் எங்களுக்காக இப்பொழுது ஸ்காந்த புராணத்திலுள்ள காசிகாண்டம் என்னும் பகுதியினை விரிவாகக் கூறியருள வேண்டும் எனக் கேட்டனர். அப்படிக்கேட்ட நைமிசவன முனிவர்கள் மகிழ சூதமுனிவர் இக் காசிகாண்டத்தைக் கூறியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வ காண்டம்

## நாரதர் விந்த வரையை கண்டமை

தேவமுனிவரான நாரதர் ஒருநாள் நருமதை ஆற்றில் தீர்த்தமாடிச் சிவபெருமானை வணங்கினார். பின் செல்லும்போது விந்தமலையைக் கண்டார். விந்த மலை பூவுலகையும் ஈரடியால் அளக்கவென உயர்ந்த நாராயணனைப்போல் உயர்ந்து விளங்கியது. வளமிக்க விந்தமலை நாரதமுனிவரை வரவேற்று உபசரிக்க ஒரு மனிதனைப்போல் வடிவு எடுத்தது அப்படி வடிவெடுத்த விந்தம் நாரதரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியது. பெரியமலையே வணங்கத்தக்க தவத்தில் சிறந்த நாரத முனிவர் அவ்விந்தனை அன்புடன் அணைத்து ஆசியும் கூறியருளினார். நாரதர் பின்னும் மகிழும்படி விந்தன் பாத்தியம், ஆசமனம், அருக்கியம், என்பன வழங்கி உபசரித்தான். அதனால் நாரதரின் பிரயாணக் களைப்பும் நீங்கியது. அப்போது விந்தன் மகிழ்ச்சியுடன், முனிவரே உம்மை வணங்கியதால் எனது பாவங்கள் நீங்கின. நானும் புனிதன் ஆயினேன். இத்தினமும் எனக்கு நல்லதினம் ஆனது என்றான். அதுகேட்டு நாரதர் பெருமூச்சு விட்டார். அப்போது விந்தன் முனிவர் பெருமானே! உலகில் உள்ள மலைகள் எல்லாவற்றிலும் நானே சிறந்தவன் பூமியை மலைகள் தாங்குகின்றன என்பர். ஆனால் பிறமலைகள் அல்ல நானே பூமியைச் சுமக்கும் ஆற்றல் உள்ளவன். பிறமலைகளால் பூமியைச் சுமக்க இயலாது. மேருமலைகூடத் தன்னிடத்தில் பொன் இருப்பதால் புகழப்படுகின்றதே ஒழிய ஆற்றலில் நானே பெரியவன் உதயகிரி, நீலமலை, ரேவதமலை, பொதியமலை, மந்தரமலை, அண்ணாமலை முதலிய மலைகள் ஒன்றும் எனக்குச் சமானமாக மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விந்தம் கூறக்கேட்ட நாரதமுனிவர் சிவபெருமான் இருக்கும் கயிலை முதலிய எதனையும் பொருட்படுத்தாத இதன் ஆணவம் நல்லது என்று தன் மனதுள் சிரித்தார். பின் விந்தனைநோக்கி, அன்பனே! மகாமேருமலை என்னைப்பார்த்து தானே உலகிலுள்ள மலைகளுக்கெல்லாம் அரசன் என்று கூறியது. உன்னையும் மதிக்காது மேருமலை கூறியதை உனக்குத் தெரிவிக்கவென்றே வந்தேன் அதனால்தான் வந்தவுடன் பெருமூச்சு விட்டேன் என்று கூறிவிட்டு நாரதர் தன் வழியில் சென்றார்.

நாரதர் சென்றபின் விந்தமலை பின்வருமாறு தன் மனதில் நினைப்பதாயிற்று. புலன்களின் விருப்பப்படி மனம் செல்ல வாழ்பவனின் எழிய வாழ்வும் நினைத்த காரியத்தை நிறைவேற்றாதவரின் வாழ்வும் தன் இனத்தவரே இகழ அப்படியான அவமானத்துடன் வாழ்பவரின் வாழ்வும் பெருமையடைய இயலாததன்றோ.

பகைவர் புகழுடனும் செல்வத்துடனும் வாழ்கின்ற போது அவமானத்துடன் உணவைச் சுவைத்து உண்டும் நிம்மதியாக நித்திரை செய்தும் வாழ்வதிலும் பார்க்க இறந்து விடுவது நல்லதல்லவா. மனத்திலே ஒரு கவலை வருமாயின் அறிவு, பசி, அழகு, ஊக்கம், நித்திரை, திறமை, மனமகிழ்வு எல்லாம் கெடும் என அறிஞர் கூறுவரல்லவா. உடலுக்கு ஒரு கொடுநோய் வருமாயின் நீண்டநாள் பழக்கத்தால் அதனைச் சகித்து வாழலாம். ஆனால் மனதில் ஒரு கொடுநோய் வருமாயின் நாள் செல்லச் செல்ல அது அதிகரிக்குமேயன்றி அதனைப் பொறுத்துக்கொண்டு வாழ இயலாதன்றோ. நாரதமுனிவர் எனக்குப் பொய்யான தகவலைக் கூறியிருப்பார் என நினைப்பது அற்பத்தனமாகும் மேருமலை தானே மலைகளுக்கு அரசன் என மதித்து என்னுடன் சண்டையிட நினைக்குமானால், என்னுடைய வலிமை அவ்வளவு சாதாரணமாகிவிடுமோ மேருமலைக்கு உலகில் மதிப்பு உண்டாயிருப்பது அதனைச் சூரியசந்திரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலமாகச் செல்வதாலன்றோ. என்னையும் அவைவல மாகச் செல்லும்படி நானும் உயரமாவேன் என்று விந்தம் தீர்மானித்தது. தீர்மானித்தபடியே மிக உயர மான வடிவத்தைக் கொண்டது. அடுத்தநாள் வழமை போல் சூரியன் உதயமானான். சூரியனின் தேர் விந்த மலையைச் சமீபித்ததும் செல்ல இயலாது தடைப்பட் டது. தேர்ச் சாரதியாகிய அருணனைச் சூரியன் நோக்கி ஏன் தேர் செல்லவில்லை? என்றுகேட்டான். அருணன் சூரியனுக்கு முதலில் தன் வணக்கத்தைச் சொல்லி விட்டு தலைவரே என் கடமையீனத்தால் அல்ல, விந்த மலையின் உயர்வினால் தடை உண்டானது என்று கூறினான்.

சூரியனது பிரயாணம் தடைப்பட்டதனால் உலகின் ஒரு பக்கம் வெளிச்சமாயும் மற்றப்பக்கம் இருளாயும் இருந்தது. தொடர்ந்த வெளிச்சத்தாலும் தொடர்ந்த இருளாலும் எல்லா உயிரினங்களும் துன்புற்றன சூரி யனை மையமாகக் கொண்டு நடைபெறும் வேதநெறிச் சடங்குகளும் தடைப்பட்டன. இதனால் தேவர் நாகர் முனிவர் முதலியோரும் பாதிப்புற்றனர். தேவர் முதலி யோர் தமக்கேற்பட்ட துன்பத்தைத் தெரிவிக்கப் பிரம தேவரிடம் சென்றனர். பிரமதேவரைக் கண்ட தேவர் முனிவர் முதலியோர் பிரமதேவரைப் பலவிதமாகத் துதித்தனர்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில் களுக்குக் காரணமாக விளங்குவது பரமசிவமே என்ற கோட்பாட்டின்படி பரம்பொருளைத் துதிக்கும் முறை யிலே தேவர்கள் பிரமதேவரைத் துதித்தார்கள்.

தேவர்களது துதியை கேட்ட பிரம்மதேவர் இத் துதியால் என்னையோ, திருமாலையோ, சிவபெருமா னையோ தினமும் வணங்கினால் அப்படி வணங்குப வர்க்கு பேரின்பத்தை அருள்புரிவோம் என்று முதலில் கூறினார் பின் அவர்களை நோக்கி சில விடயங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியருளினார். நல்லோர் அச்சத்தையும், கவலையை யும் நீக்கவேண்டும், அரியவேதங்களும், யாகங்களும், சத்தியமும், நீதியும் புனிதமான பொருள்களும் தேவ வடிவுடன் என்னைச் சூழ்ந்து இருக்கின்றன.

ஐம் புலன்களையும் மனம் முதலியவற்றையும் அடக்கியவர்கள், வேதங்களைக் கற்று நீதி நெறியில் வாழ்பவர்கள், தவம் செய்பவர், கற்புடையவர், பசுக் கள் உண்டு மகிழத் தினமும் புல் கொடுப்பவர், விரத மனுட்டிப்பவர், பிறர் மனைவியை விரும்பாதவர், தாய் தந்தையர் பாதங்களில் தினமும் மலர் தூவி வணங்குப வர், வேத ஒழுக்கமுடைய அந்தணரின் பாததீர்த் தத்தை அருந்துபவர், கங்கைக் கரையில் உயிர் விட்ட வர், பிரயாகையில் மாசி மகத்தில் நீராடியவர், சாந்தி ராயன விரதம் அநுட்டிப்பவர், இருமுகப் பசுவை தானம் செய்தவர், (கன்று ஈனும் வேளையில் இருமுக முடையதாய் விளங்குவது இருமுகப் பசு) இறந்தவர் பொருட்டு கயையில் சிராத்தம் புரிந்தவர், மாத உப வாசம் இருப்பவர், காமம் முதலிய குற்றங்களை நீக்கி யவர் ஆகியோர் காசியில் பிறந்து விசுவநாதரைத் தின மும் பணியும் பேறும் பின்னர் முத்தியும் அடையும் பாக்கியசாலிகளாவர்.

ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி வேதநெறியில் வாழும் அந்தணருக்கும் எனக்கும் வித்தியாசமில்லை. அப்படியான அந்தணரிடத்தில் மந்திர சக்திகளையும் பசுக்களிடத்தில் யாகத்திரவியங்களையும் வைத்துள் ளேன். தேவர்களே! பசுவின் பெருமையைக் கூறுகின் றேன் கேளுங்கள். பசுவின் கால்குளம்பிலிருந்து பரவும் தூசியில் தோய்பவர் கங்காநதியில் நீராடிய புண்ணி யத்தைப் பெறுவர். பசுக்களின் கொம்பு நுனியில் புண்ணிய தீர்த்தங்கள் இருக்கும். கொம்புகளின் நடு வில் உமையம்மை இருப்பார். கோசலம் நருமதைத் தீர்த்தம், கோமயம், யமுனைத் தீர்த்தம், பால் கங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தம். சிவபெருமான் திருமால் பிரமதேவர் முதலி யோர் எக்காலமும் பசுவின் உடம்பில் இருப்பர். உல கெங்கும் உள்ள நன்மைகளெல்லாம் தம் உடம்பில் இடம் பெறப்பெற்ற பசுவை வலம்வந்தால் எல்லாத் தேவர்களையும் வலம் வந்த புண்ணியமுண்டாகும். பசுவின் வால் நுனியால் முகத்தையும் உடம்பையும் தடவினால் கொடிய நோய்களும் மூதேவியும் விலக இலட்சுமீகரம் உண்டாகும்.

பசு, முனிவர், வேதம், கற்புடையோர், கொடை யாளிகள், சத்தியம் காப்பவர், தொடர்ந்து தானம் வழங்குபவர் ஆகிய ஏழு பிரிவினருமே அந்தரத்தில் சுழலும் பூமி விழுந்துவிடாது காப்பவர் ஆவார்.

நமது சத்திய உலகிற்கு மேல் வைகுண்ட உலகம் உள்ளது. அதற்குமேல் ஸ்கந்த உலகம். அதற்குமேல் உமையம்மையின் சக்தி உலகம். அதற்குமேல் சிவலோ கம், அதற்குமேல் பசுக்களின் கோலோகம் உள்ளது. வேதம் வல்ல அந்தணருக்குப் பசுக்களைத் தானம் செய்பவர் கோலோகத்தை அடைவர்.

வேதம் பயிலாதவர் அந்தணரல்லர். வேதம், வேதாங்கம், புராணம் என்பன கற்ற அந்தணரே அந் தணர்.

தேவர்களே! விந்தமலையின் பகையுணர்வால் சூரிய சஞ்சாரம் தடைப்பட்டதால் நீங்கள் என்னிடம் வந் திருக்கிறீர்கள். இந்த மலையினால் உண்டான துயரைப் போக்க வல்லவர் அகத்திய மகா முனிவர் ஒருவரே. காசியில் இருக்கும் அவரிடம் நீங்கள் செல்லுங்கள். இவ்வாறு கூறிவிட்டு பிரமதேவர் மறைந்தருளினார். அகத்திய முனிவரை சந்திப்பதற்காகக் காசிக்குச் செல் லும் வாய்ப்பு உண்டாகியுள்ளது என்று அறிந்தவுடன் தேவர்கள் மிக மகிழ்ச்சியடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவர்கள் அகத்தியர் ஆச்சிரமத்தை அடைந்தமை

தேவர்கள் காசியை அடைந்து மணிகன்னிகையில் நீராடினர். அங்குள்ள அந்தணர்க்கு தானங்கள் வழங்கினர். காசித்தலைவராகிய விசுவநாதப் பெருமான் ஆலயத்தை அடைந்து வலம்வந்து வணங்கினர். இவ்வாறு ஐந்து நாட்கள் காசியை அடைந்ததும், மேற்கொள்ள வேண்டிய முறைப்படி தீர்த்தமாடல், வழிபடல், செபம், தியானம், என்பன செய்தலில் செலவிட்டனர் காசியில் இறக்கும் அற்பபிராணியும் சிவபெருமானிடம் உபதேசம் பெற்றுக் கதியடையும் செய்தியை நினைந்து அதிசயப்பட்டார்கள். பின்னர் அகத்திய முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்றார்கள் அகத்தியரின் ஆச்சிரமம் அவரது தவப் பெருமையால் பல அதிசயங்களுடன் விளங்கியது. அங்கு உள்ள மிருகங்கள் பகையின்றி இருந்தன. பாம்பும், கீரியும், புலியும், மானும் அன்புடன் இருந்தன. புலி முதலிய மிருகங்கள் புலால் உண்ணாதிருந்தன. கொக்கு முதலியன மீன் உண்ணாதிருந்தன. இப்படியான ஆச்சிரமத்தில் மிக்க பிரகாசத்துடனும் தூய்மையுடனும் தவச்செல்வரான அகத்திய முனிவர் இருப்பதைத் தேவர்கள் கண்டு மகிழ்ந்தனர். அகத்தியரது ஆச்சிரம முற்றத்தில் அகத்தியரது மனைவியும் கற்பில் சிறந்தவளுமான லோபாமுத்திரையின் அடிச்சுவடு (காலடையாளம்) இருப்பதைக் கண்டு அத்தேவர்கள் மிகுந்த அன்புடன் வணங்கினர். பின்பு தேவர்கள் அகத்தியரைச் சமீபித்து வாழ்க வாழ்க என வாழ்த்தினர். அவர்கள் இருப்பதற்கு ஆசனம் வழங்கியபின் வந்தகாரணம் யாது என்று அகத்தியர் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பிலக்கணம் கூறியமை

அகத்திய முனிவரே! நாம் வந்த காரணத்தைத் தெரிவிக்கிறேன் என்று தேவகுருவான வியாழபகவான் கூறினார். உலகிலுள்ள முனிவர்களுள் உமக்கு ஒப்பானவர் எவருமில்லை. பிரமதேவரே உமக்கு நிகரானவர் சிவபெருமானுடைய பூரண அருளுக்கு உரியவரான உம்மைத் தவிர எமது குறைகளைப் போக்க வல்லவர் யார் இருக்கிறார்கள். உங்களது மனைவி மிகுந்த கற்புடன் இருந்தலினால் உம்மால் நினைத்ததெல்லாவற்றையும் சுலபமாக நிறைவேற்ற முடிகின்றது. கற்பில் சிறந்த அருந்ததி, மேனை, சுநீதி, சாவித்திரி, அனுசூயை ஆகியோரிலும் பார்க்க மிக்க சிறப்புடையவர் லோபாமுத்திரை.

கணவன் உண்டபின் உண்பது, கணவன் உறங்கிய பின் உறங்குவது, கணவன் விழிக்கும் முன்பு விழித்தெழுவது என்பன கற்புடைய பெண்களின் செயல்கள். கற்புடைப் பெண்கள் தம் கணவன் அருகில் இருக்கும் பொழுது தம்மை ஆபரணங்களால் அலங்கரிப்பர்; கணவன் அருகில் இல்லாதபோது தம்மை அலங்கரியாமலும் சுவையான உணவுகளை உண்ணாமலும் இருப்பர். கற்புடையோர் தம் கணவன் கோபித்துப் பேசும் போது எதிர்வார்த்தை கூறார். தாம் கணவனை வெறுக்க மாட்டார். கற்புடையோர் கணவனுடனன்றி தனித்து வீட்டிற்கு வெளியே போகார். தனித்து உலாவும் பெண்களுடன் சேரமாட்டார். வீட்டிற்கு வந்த கணவன் தமக்குச் சொல்லும் கருமத்தை விரைவாக செய்து முடிப்பர். கற்புடைய பெண்கள் தம் கணவன் அனுமதிக்காது கொண்டாட்டங்களை பார்க்கச் செல்லார். விரதம் அநுட்டிக்கார், தீர்த்தமாடார், தேவர்களை வணங்கார். கற்புடைப் பெண்கள் தம் ஆபரணங்களை தம் கணவர்தம் சக்களத்திக்கு கொடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்படையார். தனியாக ஒரு வீட்டில் இருக்கமாட்டார். தம் கணவனின் பெயரை தாம் கூறினால் அவரது வயது குறையுமென்று கூறார். கணவன் நிற்க தாம் இருக்கார். கணவன் உண்ட உணவின் மீதியை மகிழ்வுடன் உண்பர். கணவனின் அனுமதி பெற்று துறவியர், இறந்தவர், நோயாளிகள், ஏவலாளர், குல தெய்வம், பசு ஆகியோருக்கு உணவு வழங்கிய பின்பே கற்புடையோர் உணவு கொள்வர். கணவன் விரும்புவதைக் குறிப்பறிந்து செய்வர். தம் கணவனை குறை கூறும் பெண்களை விலகுவர். கிடைத்த பொருளை பாதுகாப்பர். கணவரின் ஆயுள் விருத்தியின் பொருட்டு முகத்திற்கு மஞ்சள் பூசுவர். கணவன் சொல்வதைப் பேணி நடப்பதே கற்புடைப் பெண்களுக்கு தருமமும், தோத்திரமும், பூசையுமாகும் எனப் பெரியோர் கூறியுள்ளனர். அழகின்றியும், நோய், முதுமை என்பனவற்றுடனும் கணவன் இருந்தாலும் தம் கணவனை குறை கூறாது அன்புடன் வாழ்பவரே கற்பொழுக்கம் உடையவர். கணவன் இறந்தால் தாமும் இறத்தல், கணவன் துன்பமடைந்தால் தாமும் துன்புறுதல், கணவன் மகிழும்போது தாமும் மகிழ்தல் என்பன கற்புடைய பெண்களின் இயல்பாகும் கற்புடையோர் தம் கணவனின் பாததீர்த்தத்தைக் கங்கை எனவும் கணவனை முத்தொழில் புரியும் கடவுளாகவும் மதிப்பர். வீட்டு விலக்கு நாட்கள் எவரது கண்ணிலும் படாது மறைந்து இருப்பதும் நாலாம் நாள் நீராடியதும் கணவன் முகத்தைத் தரிசிப்பதும் கற்பொழுக்கமுடைய பெண்களின் இயல்பாகும். கணவனின் தாய் தந்தையர் முன் வீண் வார்த்தை பேசாதிருப்பதையும் கணவன் அழைத்தவுடன் தாம் செய்யும் கருமத்தை அப்படியே விட்டுவிட்டுச் செல்வதும் கற்புடைப் பெண்கள் தன்மையாகும். இவர்கள் தம் தாய் தந்தையர் தம் குழந்தைகளிலும் பார்க்க கணவனிடத்தே அன்புடையவராயிருப்பர். உரல், உலக்கை, அம்மி, வாயிற்படி என்பவற்றிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தால் செல்வம் குறையுமென்ற கோட்பாட்டைக் கற்புடைப் பெண்கள் பேணி வாழ்வர். கணவன் அனுமதியின்றி விரதம், பூசை என்பன செய்யும் பெண்கள் யம உலகில் துன்புறுவர். கணவனது குற்றங்களை பிறருக்குக் கூறும் பெண்களும் கணவனைக் கோபிக்கும் பெண்களும் நரியாகவும், நாயாகவும் பிறவி எடுத்து வருந்துவர். பிற ஆடவரின் அழகைக்கண்டு மகிழும் பெண்கள் பேயாகப் பிறப்பர். கணவன் பசியுடனிருக்க உண்டு மகிழும் பெண்கள் பன்றியாகப் பிறப்பர்.

கணவன் இறந்தபோது தாமும் இறக்க முயலும் பெண்கள் அசுவமேத யாகம் செய்வதனால் பெறும் பயனை அடைவர். அவ்வாறு இறந்த பெண்கள் தம் கணவன் உயிரை யம தூதுவரிடம் மீட்டு இருவருமாகச் சுவர்க்கத்தை அடைவர்.

கற்புடையோரின் மகிமை சூரியன், சந்திரன், அக்கினி ஆகியோரின் ஒளியையும் மங்கச் செய்யும். ஒரு பெண்ணின் கற்பொழுக்கச் சிறப்பினால் அப்பெண்ணைப் பெற்ற குலத்தவரும் கணவன் குலத்தவரும் சுவர்க்க இன்பத்தை அடைவர். கற்பொழுக்கம் தவறியோர் தன் தாய் தந்தையர் தொடர்பானவரையும், கணவன் தொடர்பானவரையும், தன் பிள்ளைகள் வழிவருவோரையும் நரகம் அடையச் செய்வர்.

கற்பில் சிறந்த பெண்களின் கால்படுமிடம் புண்ணியத் தலங்கள் எல்லாவற்றிலும் மேலான மகிமையுடையதாகும். கங்கை முதலிய தீர்த்தங்கள் தம்மிடத்தில் கற்புடைப் பெண்கள் நீராடினால் தாம் பிறரிடம் பெற்ற பாவங்கள் நீங்கும் என மகிழும். செல்வ மிக்க மாளிகைகள் கூட கற்புடைப் பெண்கள் இல்லாதிருந்தால் பேய்களிருக்கும் காட்டிற்குச் சமனாகும். காற்றும் சூரியனும், சந்திரனும் கற்புடைப் பெண்களை தீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சும். கணவன் இறந்தபின் ஆபரணங்களை ஒழித்து கைம்மை நோன்பு நோற்கும் பெண்களைத் தீண்டுவது சவத்தை தீண்டுவதற்கு சமனாகும் என்பர் கைம்மை நோன்பை மேற்கொண்ட பெண்கள் தவறு செய்தால் தாம் மட்டுமன்றி தம் குலத்தவரும் நரகத்தை அடைவர். கைம்மை நோன்பு மேற்கொள்ளும் பெண்கள் தம் தலைமயிரினை நீக்கவேண்டும். கணவனை இழந்த கற்புடைப் பெண்கள் ஆபரணங்களை விலக்கியும் பகலில் ஒருமுறை மட்டும் உணவு அருந்தியும், வெற்றிலை, பாக்கு முதலியவற்றை விலக்கியும், பாயின்றி மண்மீது உறங்கியும் வாழவேண்டும் இப்படியானவர் வழிபாடு, பூசை முதலியவற்றை மேற்கொள்ளுவதும், இலைவகை, கிழங்குவகைகளை உண்பதும் நன்று. கைம்மை நோன்பை இவ்வாறு மேற்கொள்ளும் பெண்கள் தன் கணவன் சென்ற புண்ணிய உலகத்தை அடைந்து நீண்டகாலம் மகிழ்வுடன் வாழ்வர். இங்கு சொல்லப்பட்ட கற்பொழுக்கச் சிறப்புக்கள் எல்லாமுடைய உலோபமுத்திரையை மனைவியாக உடைய அகத்தியரே! உம்மை அடைந்து நாம் எல்லா நன்மைகளையும் அடைந்தோம் என்று சொல்லி அகத்தியரின் மனைவியைப் புகழ்ந்தார்கள். தேவகுருவான வியாழ பகவானும் தேவர்களும் அகத்தியரையும் உலோபாமுத்திரையையும் வணங்கினர். அகத்திய முனிவரே உம்மால் இயலாத கருமம் எதுவுமில்லை. நாம் விந்தமலையினால் மிகவும் வருந்துகின்றோம். விந்தமலை மேருமலையைப் பகைத்துள்ளது ஆகாயமளவும் உயர்ந்து சூரியன் செல்லாத வண்ணம் தடுத்துள்ளது. விந்தமலையை நீரே அடக்கி எமக்கு வந்த துன்பத்தைப் போக்க வேண்டும். இவ்வாறு தேவர்களுக்காக வியாழபகவான் விண்ணப்பித்தார். அதனைக்கேட்ட அகத்தியர் விந்தமலையின் உயரத்தைக் குறையும்படி செய்கின்றேன். நீவீர் உங்கள் சுவர்க்கத்தை அடையுங்கள் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தியர் விந்தமலையை அடைதல்

தேவர்கள் சென்றபின் அகத்தியர் சிவபெருமானைத் தியானம் செய்தார். பின் தன் மனைவியைப் பார்த்து சிலவார்த்தை கூறினார். "பெண்ணே எல்லா மலைகளின் வலிமையையும் அடக்கியவன் இந்திரன். இந்தமலையின் வலிமையையும் தானே அடக்கிவிட்டால் நான் தொடர்ந்து தவத்தையே செய்யலாம். இந்திரன் அப்படிச் செய்யாது எனக்கு இப்பணியை விட்டிருக்கின்றான். பன்னிரண்டு சூரியர்கள், யமன், அக்கினி, அட்டவசுக்கள், அஸ்வினி, தேவர்கள், பிறதேவர்கள் ஆகியோர் தமது நினைப்பாலேயே உலகங்களை அழிக்க வல்லமை உடையவர்கள். அவர்கள் தாமே இச்செயலை நிறைவேற்றாமல் என்னை இவ்வாறு வேண்டியதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். புகழ்மிக்க காசியில் தொடர்ந்து வசிப்பது அரிது அப்படி வசிப்பதற்கு இடையூறு உண்டாவது இயற்கை என்பர். நானும் காசியில் தொடர்ந்து இருப்பதற்கு முடியாத தன்மை தேவர்களது வேண்டுதலால் உண்டாகியுள்ளது. மெஞ் ஞானியரது அநுபவப் பொருளான காசி விசுவநாதப் பெருமான் திருவுள்ளம் இவ்வாறு விரும்புமானால் தம்மால் அதை மாற்ற இயலாது. ஆனால் காசியை விட்டு வேறிடம் செல்வது நல்லதல்ல. தர்மத்தின் சொந்த வீடான காசியை விட்டுச்சென்றால் திரும்பவும் காசிக்கு வருவது அரிது. முத்தியைக் குறிக்கோளாக இருப்பவர் காசியை விட்டுச் செல்லக்கூடாது. தேவர்களாலும் எளிதில் அடைய இயலாத பெருமையுடையதும் தன்னிடத்திருப்பவரின் பாவங்களைப் போக்குவதுமான காசியில் வசித்தால் எல்லா மேன்மைகளையும் அடையலாம். உலகம் அழியும் காலத்திலும் சிவபெருமானின் சூல நுனியில் அழியாமல் இருக்கும் காசியை விடுத்து வேறு நல்ல இடத்தை அடையலாமென்று கருதுவது அறிவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையே ஆகும். அறியாமை, பேராசை ஆகிய குற்றங்களால் பிறவிக்கடலில் துன்புறுபவருக்கு காசி ஒரு தோணிபோல அமைந்துள்ளது. சிவபெருமானின் திருவருள் துணை செய்யாவிட்டால் அரிய தவங்களாலும் யோக சாதனைகள் மூலமும் காசியை அடைய முடியாது. தவத்தினால் அறம், பொருள், இன்பங்களை அடையலாம். ஆனால் காசியின் துணையால் மட்டுமே முத்தியின்பத்தை அடைய முடியும். வேதசிவாகமங்களெல்லாம் காசியைப் புகழ்ந்து துதிக்கின்றன. இருவினைகளையும் மும்மலங்களையும் கடத்தவர் காசியையே தமக்குரிய இடமாக விரும்புகிறார்கள். இடைகலை, பிங்கலை எனும் நாடிகள் சந்திக்கும் சுழுமுனைபோல் வருணை, அசி எனும் நதிகள் சந்திக்கும் காசி பெருமை மிக்கது என்று சிவபெருமான் புகழ்கிறார். இக் காசியில் யார் இறந்தாலும் உமையம்மை தன் உத்தரியத்தால் வீசி இளைப்பாற்ற சிவபெருமான் பிரணவ உபதேசம் செய்து முத்தியளிப்பர். இக்காசியை விட்டு நீங்க யார்தான் விரும்புவர். தேவர்களுள்ளே சிவபெருமானுக்கு சமமாக இல்லாததுபோல பூவுலகிலும் காசிக்குச் சமமான இடம் வேறில்லை என்று காசியின் பெருமைகளை நினைத்து நினைத்து தன் மனைவிக்கு அகத்தியர் கூறினார்.

சிவபெருமான், அம்பிகை, தண்டபாணி, துண்டி விநாயகர், ஆசாரவிநாயகர், கபர்த்தி விநாயகர், துர்க்காதேவி ஆகிய காசியில் உள்ள மூர்த்திகளை அகத்தியர் மலர்தூவி வணங்கினார். பின்பு அகத்தியர் தேவர்க்கு உதவுவதன் அவசியத்தைப்பற்றி சிந்தித்தார். தேவர் பொருட்டு ததீசி முனிவர் தன் முதுகெலும்பைக் கொடுத்தார் கருடன் திருமாலுக்கு வாகனமானார். மாவலி மூவடி மண் கொடுத்தான். மதுகைபடரும் ஒரு சந்தர்ப்பத்தில் தம் தலையை கொடுத்துள்ளனர். ஆதலால் நானும் உதவி செய்வதற்காக இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியைவிட்டு செல்வது தக்கதேயாகும் என்று எண்ணிய அகத்திய முனிவர் காசியிலுள்ள எல்லாவற்றையும் வலம்வந்து வணங்கிவிட்டு விந்தியமலையை நோக்கிப் புறப்பட்டார். அகத்தியர் வருவதைக் கண்டு விந்தியமலை அச்சமடைந்தது. உடனே அம்மலை ஒரு அந்தண வடிவத்துடன் அகத்திய முனிவரை பணிந்து வணங்கியது. (அப்படி வணங்கியபோது மலையும் பணிவாகக் குறுகிய நிலையை அடைந்தது.) அது கண்ட அகத்திய முனிவர் வித்தனே யான் பொதியமலைக்கு செல்கிறேன் மீண்டும் இவ்விடம் வரும்வரைக்கும் இந்தப்பணிவான தோற்றத்துடன் இருப்பாயாக என்று கூறிவிட்டுச் சென்றார். அகத்தியர் தனக்கு சாபமிடுவாரோ என அஞ்சிய விந்தமலை அப்படிச் சாபமிடாது அகத்தியர் செல்வது கண்டு மன அமைதியடைந்தது. பின் சூரியனும் தன் கடமையை மேற்கொண்டான். உலகம் தன் இயல்பாய் இயங்கியது. அகத்தியர் காசியின் பெருமைகளை மனத்தில் நினைத்தவண்ணம் கொல்லாபுரம் எனும் ஊரிலுள்ள மகாலக்குமி ஆலயத்தை அடைந்து மகாலக்குமியைத் துதித்தார்.

கொழுந்தியிசை அளிமுரலும் தாமரைமென்
பொகுட்டில் உறைகொள்கை போல
மழைஉறழும் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகு மானே
முழுதுலகும் இனிதீன்ற அருட்கொம்பே
கரகமலம் முகழ்ந்து நாளும்
கழிபெருங்கா தலில்தொழுவோர் வினைதீர
அருள் கொழிக்கும் கமலக் கண்ணாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லல்நெடும் புவிஅனைத்தும் பொதுநீங்கித்
தனிபுரக்கும் மன்னர் தாமும்
கல்வியினில் பேரறிவில் கட்டழகில்
நிகரில்லாக் காட்சி யோடும்
வெல்படையில் பகைதுரந்து வெம்சமத்து
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொருட்டுறையும் அணியிளைநின்
அருணோக்கம் அடைந்து ளோரே.

செங்கமலப் பொலந்தாதில் திகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கனுலகு இருள்துரக்கும் அலர்க்கதிராய்
வெண்மதியாய் அமரட்கு ஊட்டும்
பொங்கழலாய் உலகுஅளிக்கும் பூங்கொடியே
நெடுங்காணில் வெற்பில் மண்ணில்
எங்குளைநீ அவன்அன்றோ மல்லல்வளம்
சிறந்தோங்கி இருப்பதம்மா.

இவ்வாறு அகத்தியர் துதித்ததால் மகாலக்குமி மகிழ்ச்சியடைந்தார். அகத்தியரே! உம்மால் சொல்லப் பட்ட இத்துதியினால் யார் என்னைத் துதித்தாலும் அவர் அளவற்ற செல்வத்தைப் பெற்று மகிழ்வர். இத் துதியை எழுதி வீட்டில் வைத்திருந்தாலும் அவ்வீட் டில் வறுமை உண்டாகாது.

அகத்தியரே! உமது கவலையின் தன்மையை யான் அறிகின்றேன். முன்பு ஒருமுறை சிவபெருமானே காசியை விட்டுப் பிரிந்ததால் கவலையடைந்தாரென் றும் என் நாயகனாம் திருமாலின் செயலால் காசியை அடைந்தாரென்றும் நான் அறிவேன். அடுத்து வருவ தான இருபத்தோராவது யுகத்தில் நீ காசியை அடை வாய். காசியின் பெருமைகளையும் வரலாற்றையும் உனக்கு முருகப்பெருமான்உபதேசிப்பர். முத்தமிழையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உனக்கு உபதேசித்தார். முருகப்பெருமானிடம் செல்வாயாக என்று மகாலக்குமி அகத்தியருக்கு அருள் புரிந்தார். அகத்தியரும் முருகப்பெருமானின் திருவடிகளைத் தியானித்தவண்ணம் செல்வராயினர்.

## தீர்த்தமகிமை உரைத்தமை

முருகப்பெருமானின் திருத்தலத்தைக் குறித்துச் செல்லும் வழியில் அகத்தியர் ஸ்ரீசைலம் எனும் மலையைக் கண்டார். அகத்தியர் தன்னுடன் வரும் மனைவியைப் பார்த்து ''பெண்ணே! நாம் காணும் மலை ஸ்ரீசைலம் எனும் பெயருடையது. மிக உயர்ந்ததான இம்மலையிலுள்ள எல்லாப் பொருள்களும் சிவலிங்கமாகவே மதிக்கப்படுவன. இம்மலையை தியானம் செய்தால் பாவங்கள் எல்லாம் நீங்கும் ஆனபடியால் இம்மலையை வலம்செய்து மலர்தூவி வணங்குக'' என்று கூறினார்.

அகத்தியர் கூறக்கேட்ட மனைவியாகிய லோபாமுத்திரை 'பெருமானே! ஸ்ரீசைலமாகிய இம்மலை நீங்கள் கூறுவது போன்ற பெருமையுடனிருக்க நீங்கள் ஏன் காசியையே நினைந்து கவலைப்படுகிறீர்கள்' என்று கேட்டார். அகத்தியர் இவ்வாறு கேட்ட மனைவிக்கு பின்வருமாறு கூறினார். உயிர்களுக்குப் பேரின்பம் தரத்தக்க புண்ணிய தலங்கள் பலவுண்டென முனிவர்கள் கூறியிருக்கின்றனர் பிரயாகை, ஓங்காரம், காலஞ்சரம், அயோத்தி, மதுரை, கோகன்னம், புட்கரம், மகராலயம், துவாரகை, காஞ்சி, வெதிரிகாச்சிரமம், தியம்பகம், கங்காசாகரசங்கமம், குருஷேத்திரம், நைமிசாரண்யம், கங்கை உற்பத்தியாகுமிடம், ஸ்ரீசைலம் முதலிய பல புண்ணிய தலங்கள் இவ்வுலகிலுள்ளன. இவை மட்டுமன்றி பல புண்ணிய நதிகள் தீர்த்தங்களுமுள்ளன இவைமட்டுமன்றி சத்தியம், தானம், சமம், இன்சொல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் முதலியவற்றையும், ஐம்புலன்களையும் அடக்குதல், பொறுமை, உறுதி, எல்லா உயிர்க்கும் இரங்குதல் என்பன மானத தீர்த்தம் எனப்படும். இப்படியான மானத தீர்த்தம் இன்றி புண்ணிய நதிகளில் தீர்த்தமாடுதல் பயன்தராது நல்லறிவில்லாதவர் புனித தீர்த்தத்தில் நீராடுவது கள்ளுள்ள குடத்தை தீர்த்தத்தில் நனைப்பது போலிருக்கும்.

கல்வியின்படி நடத்தல், கடவுள் வழிபாடு, தவம், தானம், தருமம் என்பன செய்தல் முதலியவற்றால் மனதைத் தூய்மையாக்க முயல்பவர் புனித தீர்த்தங்களாடினால் பயன் பெறுவர். இவை மட்டுமன்றி புலன்களை அடக்கி மனத்தை இறைவனில் நிறுத்த வல்லவர் இருக்குமிடமே புனிததலம் என்றும் இவர்கள் பயன்படுத்தும் தீர்த்தமே புனித தீர்த்தம் என்றும் சொல்லப்படுகிறது புண்ணிய தீர்த்தங்களில் விதிப்படி ஆடுபவர். சுவர்க்கத்தையடைவர். பறவை, விலங்கு முதலிய சிறுமையான பிறவியை அடையார் தருமத்தை விரும்பாதவர் இரக்கமில்லாதவர் புண்ணிய பாவம், சுவர்க்கநரகம் என்பன இல்லை என்பவர் வீணாக வாதம் புரிபவர் முதலியோர் புனித தீர்த்தங்களில் நீராடினாலும் அதனால் நன்மையடையார் புனித தீர்த்தங்களில் நீராட வேண்டுமானால் முதல் நாள் உபவாசமாக இருக்கவேண்டும் நீராடுமுன் விநாயகப் பெருமானை வணங்கவேண்டும். புனித தீர்த்தத்தில் நீராடியதும் பூமி, பொன், பசு முதலியவற்றைத் தானம் செய்தல் வேண்டும் அந்தணர்க்கு அன்னதானம் செய்தல் வேண்டும். பிதிரர்களுக்கு தர்ப்பணம் புரிதல் வேண்டும் வேறொருவருக்காக தீர்த்தமாட வேண்டுமென்றால் தருப்பையால் அவரை நினைந்து ஓருருவம் செய்து அதனை நீராட்ட வேண்டும். தனக்காகப் பிறரொருவர் புனித தீர்த்தமாட அனுப்புவர் அவருக்கு வேண்டிய பொருள் கொடுக்க வேண்டும். அப்படிப் பொருள் பெற்று ஒருவர் தீர்த்தமாடினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் கொடுத்தவருக்கு பதினாறில் ஒருபங்கு பயன் கிடைக்கும். புனித தீர்த்தத்தை அடைந்ததும் விரதம் இருக்க வேண்டும். பின்னர் தலைமயிர் முதலியவற்றை வழமைப்படி களைந்து சுத்தனாக வேண்டும் அப்படி சுத்தனாகிய பின் புண்ணிய தீர்த்தத்தில் நீராடினாலே பாவங்கள் நீங்கும். காசி, மாயாபுரி (ஹரித்துவார்) அவந்தி, காஞ்சி, அயோத்தி, துவாரகை மதுரா என்னும் ஏழு தலங்களும் மோட்ச புரிகள் எனப்படும். இவை தவிர கேதாரம் முதலிய பல புண்ணிய தலங் களுமுண்டு இவை முத்தித்தலங்கள் என்று புகழப் பட்டாலும் நேரடியாக இத்தலங்கள் முத்தியை வழங் குவதில்லை காசி எனும் பெருமைமிக்க தலத்தை அடைதற்குஉரிய புண்ணியத்தை இத்தலங்கள் கொடுக்க காசி ஒன்றே முத்தியை வழங்கும். இவ் உண்மை திரு மாலின் கணத்தவரால் சிவசன்மா என்பவருக்கு கூறப் பட்டது அவ்வரலாறு அறியத்தக்கது.

## சப்தபுரியின் சிறப்புரைத்தமை

வடமதுரை எனும் ஊரில் சிவசன்மா என்னும் அந்தணன் இருந்தான். அவன் வேதம் முதலிய சகல கலைகளையும் கற்று மிக்க செல்வந்தனானான் மனைவி பிள்ளைகள் முதலிய எல்லா நலன்களையும் பெற்றுப் புகழோடு வாழ்ந்தான். அவனுக்கு நாளடை வில் முதுமை எய்தியது முதுமையில் நோயும் உண் டானது. அப்போதுதான் தன் வாழ்நாளில் தருமச் செயல்களைச் செய்து உயிர்க்கு உறுதி தேடவில்லையே என்று சிவசன்மா யோசிக்கத் தொடங்கினான். ஊக் கத்துடன் பொருள் தேடினேன், என் கல்விச் சிறப்பால் வாதங்கள் தருங்கங்களில் வெற்றிபெற்றேன். இப்படி யான செயல்களிலேயே என் இளமை முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது. என் இளமைக் காலத்தில் சிவனடியார்க்குத் தொண்டுசெய்து மேன்மையடையாது விட்டேன். திருமாலை மலர்களாலும் துளசியாலும் பூசனை புரியாமல் என் வாழ்நாள் முழுவதும் வீணாகிவிட்டன. விநாயகப் பெருமானையோ, முருகப்பிரானையோ, சூரியனையோ, உமையம்மையையோ பூசை செய்து என் வாழ்நாளை நான் பயனுடையதாக்காமல் விட்டுவிட்டேன். என் செல்வத்தால் ஆலயங்கள் அமைக்காது விட்டுவிட்டேன். வாவி, குளம், கிணறு முதலியன அமைக்கும் புண்ணியத்தையும் நான் செய்தேனில்லை. பிரயாணம் செய்பவர்க்கு ஆதரவாக நிழல் மரம் நடுவதைக்கூட நான் செய்யவில்லை. வெயிலால் வாடியவர்க்கு ஒருவேளை நல்லநீர் கொடுத்தும் உதவாதவனாகியுள்ளேன். நல்ல யாகங்களைச் செய்து தேவர்களது வாழ்த்துதலையும் நான் பெறவில்லை. நல்ல அந்தணர்க்கு உணவு கொடுக்கவில்லை. யாத்திரை செல்வோர்க்கு குடை, செருப்பு முதலியனவும் கொடுக்கவில்லை. பசுவிற்கு ஒரு பிடி அறுகு தானும் கொடுக்கவில்லை. வறிய அந்தணர்க்கு கன்னிகையை பொன் ஆபரணத்துடன் தானம் செய்யவில்லை. தினமும் வேதம் ஓதவேண்டிய என் கடமையையும் மேற்கொள்ளவில்லை. அமாவாசை, வெள்ளிக்கிழமை, திரயோதசியுடன் கூடிய ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் வேப்பமரத்துடன் கூடிய அரசமரத்தை மகிழ்ச்சியுடன் வலம் வந்து என்பாவங்களை போக்கவுமில்லை. ஆலவட்டம், வெற்றிலை பாக்கு, நிறைகுடம், மான்தோல், தீபம் முதலிய பொருள்களை அந்தணருக்கு தானமாக கொடுத்தேன் இல்லை. தண்ணீர்ப்பந்தல் வைத்து வழி நடப்போர்க்கு உதவினேன் இல்லை. இனி யமதூதுவர் கோபத்துடன் என்னை கட்டியிழுத்து செல்லும்போது என்ன செய்ய முடியும்? நான் இப்பிறவியில் செய்த புண்ணியம், பாவம் அல்லது எனது என நான் அன்பு பாராட்டிய மனைவி, பிள்ளைகளும் இவ்வுடலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் தொடர்ந்து வருமோ? இப்பிறப்பில் வாய்ப் பிருந்தும் புண்ணியம் செய்யாததனால் நரகத்துன்பமும் வறுமையும் தானே என்னைத் தொடரப்போகின்றன. இவ்வாறு சிந்தித்த சிவசன்மா இனியேனும் யாத்திரை செய்வது நன்று என்று கருதினான். சப்தபுரிகள் எனப் படும் மோட்சம் நல்கும் ஏழு இடங்களுக்கும் செல்வ தாக சங்கற்பம் செய்தான். விநாயகப்பெருமானை பூசித்துக் கொண்டு வேண்டிய பொருள்களுடன் புறப் பட்டான் முதலில் சிவசன்மா அயோத்தியை அடைந் தான். அங்கு சரயூ நதியில் நீராடிப் பிதிர்க் கடன்கள் நிறைவேற்றினான். பின் அந்தணர்க்கு அன்னதானம் செய்தான். ஐந்து தினங்கள் அயோத்தியில் தங்கி வழிபட்டபின் பிரயாகை எனும் தலத்தை அடைந்தான். பிரயாகையில் உள்ளதும் ஊழிக்காலத்தில் மார்க்கண் டேயர் முதலிய சிரஞ்சீவிகள் தங்குமிடமுமான ஆல மரத்தைத் தரிசித்தான். பின் சிவபெருமானையும், திருமாலையும் தரிசித்து வணங்கினான். பிரயாகை தீர்த்தத்தின் மகிமைகளை அங்குள்ள பெரியோர்கள் வாயிலாகக் கேட்டான். அங்கிருக்கும் திரிவேணி சங் கமம் எனும் இடத்தை அடைந்தான். கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் மூன்று நதிகளும் ஒன்றுகூடும் திரிவேணி சங்கமத்தில் சங்கற்பம் செய்தும் ஒருமாதம் பிரயாகையில் இருந்தும் நீராடிய பின்னர் சிவசன்மா காசியை அடைந்தான் காசியை அடைந்த சிவசன்மா முதலில் காசி முழுவதையும் வணங்கினான். பின்னர் விநாயகப் பெருமானை வணங்கி மணிகன்னிகையில் தீர்த்தமாடினான். கங்கா நதிக்கரையில் உள்ள மகிமை மிக்க ஐந்து துறைகளில் நீராடியபின் பிதிர்க்கடன் முதலியவற்றை நிறைவேற்றினான். பின் காசியில் எழுந்தருளிய விசுவநாதப் பெருமானை வணங்கினான். கங்கா நதியை அருந்தியவர் பின்னர் பிறவித்துன்பத்தை அடையார் என்பதையும் முத்தித்தலங்களில் மிகச் சிறந்தது காசி என்பதையும் அறிந்தான். காசியிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இருக்க ஆசைப்பட்டான். ஆனால் புறப் படும்பொழுது ஏழுதலங்களுக்கும் செல்வதெனச் சங்கற் பம் செய்தது தவறக்கூடாது என்பதற்காக சிவசன்மா காசியிலிருந்து புறப்பட்டு அவந்தியை அடைந்தான். அவந்தி சென்ற சிவசன்மா அங்கும் அயலிலும் உள்ளன வாகிய ஆடகேச்சுரம், தாரகேச்சுரம், மாகாளர் என்னும் ஜோதிர்லிங்கம்களைத் தரிசித்த பின்னர் காஞ்சிபுரத்தை அடைந்தான். அங்கு ஏழுதினங்கள் இருந்து வழிபாடு தானதருமம் என்பன புரிந்தான். சிவசன்மா அங்கிருந்து புறப்பட்டு திருமாலின் சக்கரம் போன்ற பெருமை உடைய துவாரகைக்குச் சென்றான். அங்கிருந்தும் புறப்பட்டு மாயாபுரி எனப்படும் கரித் துவார் என்னும் இடத்தை அடைந்தான். மாயாபுரி, கரித்துவார், கங்காதுவாரம் என்னும் மூன்று பெயரை உடைய பெருமையான அப்பதியில் தங்கியிருக்கும் போது சிவசன்மா விதிப்படி ஏகாதசி விரதத்தை அநுட்டித்தான். பின்னர் சிவசன்மா வெப்பு நோய் உண்டாகி மரணம் அடைந்தான். கரித்துவார் என்னும் அந்தப் புண்ணியத் தலத்தில் மரணம் எய்திய சிறப் பால் சிவசன்மா வைகுண்டத்தை அடையும் பேறு பெற்றான். வைகுண்டத்தில் நாராயனின் கணத்தவரா யிருந்த சீலன், சுசீலன் என்னும் இருவரும் விமானத் துடன் சிவசன்மாவை அடைந்தனர். தேவஅரம்பையர் சாமரை வீசி உபசாரம் செய்து வரவேற்க சிவசன்மா கரித்துவாரிலிருந்து வைகுண்டத்துக்குப் புறப்பட்டான். வைகுண்டம் செல்லும் வழியில் பல உலகங்களைக் கண்டு அவற்றுக்கு எல்லாம் மேலாக உள்ள வைகுண் டத்தை நோக்கிச் சிவசன்மா சென்றான். அப்படி செல்லும்போது தான் காணும் உலகங்களை பற்றி தன்னை அழைத்துச் செல்லும் திருமாலின் கணநாதர் களை கேட்க அவர்கள் அவ்வுலகங்களை பற்றி சிவ சன்மாவுக்கு கூறிக்கொண்டே சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசன்மாவை யமன் வரவேற்றமை

சிவசன்மாவின் வரலாற்றைக் கேட்ட உலோபா முத்திரை அகத்தியரை நோக்கி தலைவரே ஏழு இடங் களும் முத்தியை கொடுக்கவல்ல மோட்சபுரிகள் என் கின்றனர். அப்படியிருக்க அவற்றில் ஒன்றான மாயா புரியில் மரணமடைந்த சிவசன்மா முத்தியை அடையா மல் ஏன் வைகுண்டம் சென்றான். எனக் கேட்டார். ''பெண்ணே! காசி தவிர்ந்த மோட்சபுரிகள் ஆறும் தம் மிடத்தில் இறப்பவர் காசியை அடைந்து இறக்க கார ணமாக விளங்கும். காசியில் இறப்பவரே நேரடியாக மோட்சமடைவர். சிவசன்மா மாயாபுரியில் இறந்த சிறப்பால் முதலில் வைகுண்டத்தை அடைந்து மகிழ்ந்த பின்னர் காசியில் வாழ்ந்து இறந்து முத்தியடைவான்'' என்று அகத்தியர் கூறினார்.

வைகுண்டத்திலிருந்து கணநாதர்களுடன் வந்த விமானத்தில் சிவசன்மா செல்லும்போது முதலில் அலகை உலகத்தைக் (பைசாசபுவனம்) கண்டான். அங்கு உள்ளவர்கள் சிரிப்பை உண்டாக்கும் விநோத மான உடலும், குறைந்த செல்வமும் உடையவராய் இருந்தனர். ஆசாரமில்லாது சிவபூசை முதலியன செய்தவர். இரப்பவர்க்கு முதலில் இல்லை சொல்லி விட்டு பின் பொருள் கொடுத்தவர், தானதருமம் செய்தபின்னர் 'செய்யாமலிருந்தால் பொருளிருக்குமே' என நினைப்பவர் முதலிய குறைபாடுடையவர் இவ் வுலகத்தில் இருந்தார்கள். அடுத்ததாகச் சிவசன்மா குய்ய உலகம் எனும் இடத்தைக் கண்டான். அங்கு வீரமிக்கவர்கள், தாம்பாடுபட்டு தேடிய பொருளை நல்லோர்க்கு உதவியவர் தனித்து உண்ணாது நல்ல உணவுகளை பிறருடன் சேர்ந்து உண்டவர்கள், பிற உயிர்களிற்குத் துன்பம் செய்யாதவர் வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் சிவசன்மா கந்தர்வ உலகத்தைக் கண் டான். கடவுள் வழிபாடு செய்பவர் மகிழத்தக்கதாக இன்னிசை பாடுபவர் யாழ் முதலியன வாசிப்பவர் தம் இசையினால் தேவர்களைத் துதிப்பவர் இசையினால் தேடிய பொருள் கொண்டு தான தர்மம் புரிபவர் சிவசன்னிதானத்தில் தினமும் இசைப்பாடல்களைப்பா டிச் சிவபெருமானுக்குத் தொண்டு புரிபவர் முதலிய புண்ணியசாலிகள் கந்தர்வ உலகில் மகிழ்ந்திருந்தனர். தொடர்ந்து செல்லும் போது சிவசன்மா விஞ்சையர் உலகத்தைக் கண்டான்.

சிவபூசை செய்பவருக்கு உணவு முதலியன வழங்கு பவரும் சங்கீதமுதலிய நல்ல கலைகளைக் கற்பவர்க்கு பொருள், உணவு, வழங்குபவரும் விஞ்சையர் உலகில் சிறப்பாக வாழ்வர்.

தொடர்ந்து செல்லும் சிவசன்மாவை வழியில் யம தர்மராசன் வரவேற்றான். அப்போது யமதர்மராசனை தேவப்பெண்கள் சாமரை முதலியவற்றால் உபசரித்த னர். நீலமலை போன்ற அழகிய பெரிய வடிவத்தை யுடைய தர்மராசன் சிவசன்மாவை அன்புடன் வரவேற் றான். ''சிவசன்மாவே வேதங்களில் நல்ல ஆற்றலுடை யவன் ஆகியுள்ளாய், மேலான புண்ணியமாகிய சப்த புரியாத்திரையை உன்வாழ்வில் மேற்கொண்டுள்ளாய் அதன் பயனாக நீ வைகுண்டம் செல்வது எனக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. வைகுண்டம் செல்பவரைக் காண்பது நன்று என்பதால் உன்னைத் தரிசிக்க இவ் வழியில் வந்தேன். வைகுண்டத்தில் எல்லாச் சிறப்புக் களையும் பெற்று இன்புறுக'' என்று கூறி வாழ்த்திவிட் டுச் சென்றான். அப்போது சிவசன்மா தன்னுடன் வரும் கணநாதர்களைப் பார்த்து பின்வருமாறு கேட்டான். ''நான் இப்போது கண்ட யமன் அழகியதோற்றத்துடன் மிக நல்லவனாக உள்ளான். ஆனால் எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமனைப் பயங்கரமானவன் என்கிறனர். இந்த யமன் வேறு அந்த யமன் வேறா?'' என்று கேட்டான். அப்போது அக்கணநாதர்கள் உண்மையைச் சிவசன்மா விற்கு கூறினார்.

தர்மம், நீதி, பொறுமை, அன்பு, இன்சொல், இரக்கம் என்ற வடிவு கொண்டது போன்ற இவன்தான் உண்மையான யமதர்மராசனாவான். புண்ணிய சாலிகள் முன் இனிய தன்மைகளுடன் இப்படிக் காட்சி கொடுப்பான். பாவிகள் முன் இவனே பயங்கரமான வனாயிருப்பான். பயங்கரமான வாய் பெரியபற்கள் நெருப்புக்களைக் கக்கும் உலக்கை, நெருப்பு சுவாலை போன்று சிவந்த நீண்டமயிர்கள், நெருப்பை கக்குவது போன்ற கண்கள் இடிமுழக்கம் போன்ற சத்தத்தை யுடைய வாய் என்பன உடையவனாய் காட்சியளிப்பான். பாவிகள் அஞ்சும் தோற்றத்துடன் தன் கையில் இரத்தம் தோய்ந்த கதாயுயத்தைச் சுழற்றியவாறு தூதுவர் களுக்கு கட்டளையிடுவான். துன்முகன் விகடபந்திடன் உக்கிரமுகன் முதலிய யம கிங்கரர் பாவிகளை யமவுல கில் தண்டிப்பர்.

பிறர்குற்றங்களை கூறிமகிழ்பவர், பிறர் பெண்களை விரும்பியவர், தமது பொருளை மறைத்து விட்டு வறியவர் போலிருப்பவர், கடவுளையும்,தேவர்களையும் நிந்திப்பவர், ஒருவன் தான தர்மம் செய்யும் போது தடுப்பவர், தேவர்களுக்கும், அந்தணர்களுக்கும், விருந் தினர்க்கும் கொடுக்காது தாம் தேடியவற்றை தாமே அனுபவிப்பர், தம்மை அடுத்திருப்பவர்க்குத் துன்பம் செய்பவர், மதுஅருந்துபவர், மாமிசம் உண்பவர், பொய் பேசுபவர், அந்தணர், முனிவர்போன்றோர் மனம்வருந்த நடப்பவர், சகோதர், மனைவி, பசு ஆகியோர் மனம் வருந்துமாறு செயற்படுபவர். பேசுபவர் தம்மனையரி டம் அன்பு பாராட்டாது பிற பெண்களிடம் அன்பு செய்பவர் சண்டை, சந்தேகம் என்பன உண்டாகும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுபவர், பொய்சொல்லி பணம் சம்பாதிப்பவர், சமுத்திரம், குளம், கிணறு, முதலிய நீர் நிலைகளை அசுத்தப்படுத்துபவர், கருவைச் சிதைப்பவர். தானமாகக் கொடுத்த நல்ல பொருள்களை விலைக்கு விற்பவர். பெரியோர் இருக்குமிடத்தில் பணிவாக இருக்காமல் அவர்களை அவமதிப்பவர், அடிமை, எண்ணெய், நஞ்சு, பஞ்சு முதலிய பொருள்களை விற்பவர், விரதம் இருப்பதாக ஆரம்பித்து இடையில்விடுபவர், தமக்குக்கிடைத்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவர், முதலியோர் நீண்ட காலம் கொடிய வேதனைகளை அனுபவிப்பர்.

அழந்தும், வெட்டியும், நெருப்பினால் சுட்டும் நீர் வற்றிய கிணறு, கொடிய புழுக்கள், அசுத்தப் பொருள்கள் உள்ள கிணறு முதலியவற்றுள் விழுத்துதல் முதலிய தண்டனைகளை அவர்களுக்கு யமகிங்கரன் வழங்குவார்.

பாபத்திற்கு அஞ்சுபவர் நல்லொழுக்கம் தெய்வ விசுவாசம் உடையவர், இரக்கத்துடன் உதவுபவர். யமனை தினமும் துதித்து பாவங்களுக்கு இடம் கொடாமல் வாழ்பவர், தீர்த்தயாத்திரை செய்பவர், புண்ணிய தலங்களை தியானிப்பவர், புலனடக்கம், கொடை, பணிவு, முதலியன உடையவர்களை யமன் துன்புறுத்தான். அவர்களை இனிய தோற்றத்தில் சென்று வாழ்த்தி, அவர்கள் புண்ணிய உலகங்களுக்கு செல்ல விடுவான்

# சிவசன்மா சூரிய உலகம் கண்டமை

யமனுடைய உலகிற்கு அடுத்ததாக தேவ அரம்பையர் வாழும் உலகத்தை சிவசன்மா கண்டான். பாற்கடலை கடைந்த போது வெளிப்பட்ட தேவப்பெண்கள் அவ்வுலகில் இருந்தனர். யாகம் செய்பவர்க்கு நல்லின்பத்தை அவர்கள் வழங்குவர் வீணை வாசித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவதிலும், நடனம் செய்தலிலும் வல்லவர்கள் விருப்பமான பல வடிவங்களை ஒரே நேரத்தில் எடுக்க வல்லவர்கள். தெய்வீக சாஸ்திரங்களிலும் மன்மத சாஸ்திரங்களிலும் அறிவுமிக்கவர்கள் அலம்புசை, மனோகரி உருப்பசி, இமாவதி, மேனகை, கலாவதி, கார்த்திமதி கலாநிதி, சுபானை, முதலிய பேர்களையுடைய அறுபதினாயிரம் பெண்கள் பாற்கடலில் தோன்றினர். இவர்களை அல்லாமல் விரதமிருக்கும் போது அறியாது தவறிழைந்தவர்களும், கற்புடைய வாழ்க்கை நடத்த இயலாது ஒருவன் பலாத்காரம் செய்ய உயிர்விட்ட பெண்களும் இவ் உலகில் உள்ளார்கள். தூய அந்தணனுக்கு கன்னிகாதானம் செய்தவரும் நல்ல இன்பங்களை அனுபவிக்க விரும்பி விரதமிருந்தவரும் இவ்வுலகத்தை அடைந்து மகிழ்வர்

அரம்பையர் உலகிற்கு அடுத்ததாக சிவசன்மா சூரிய உலகத்தைக் கண்டான். சூரியனை சமீபமாக கண்டதும் சிவசன்மா வணங்கினான் சூரியனும் சிவசன்மாவிற்கு நல்லருள் புரிந்தான்.

பூவுலகிற்கு ஆதரவாகவும் வேதவடிவாகவும் விளங்கும் சூரியனை வழிபடுவர் சூரிய உலகத்தை அடைவர் சூரியனை வணங்காதவர் இருள் உலகை அடைந்து வருந்துவர் சூரியனுக்குரிய காயத்திரி மந்திரத்தை தொடர்ந்து ஏழுநாள்கள் செபம் செய்யாத அந்தணர் கீழ் குலத்தில் விழுவர். தினமும் மூன்று வேளையும் காயத்திரியை செபிக்கும் அந்தணர் சூரிய உலகை அடைந்து மகிழ்வர்.

பலவகை சிறப்புக்களை உடைய காயத்திரி மந்திரத்திற்கும் சூரிய பகவானுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. காயத்திரியினால் சூரியனை வழிபடுவர் சூரிய உலகை அடைந்து இன்புறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசம், மூலம், அத்தம், உத்தரம், என்னும், நட்சத்திரங்கள் என்பன ஞாயிற்றுக் கிழமைகளில் பொருந்தும் நாட்கள் சூரிய வழிபாட்டிற்கு மிக விசேடமாகும். பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனைத் தியானித்து மலர்தூவி வழிபடுபவர் நன்மை அடைவர். தைமாசப்பிறப்பு, ஆடிமாசப்பிறப்பு ஆகிய அயனபுண்ணிய காலங்களில் தீர்த்தமாடுதல், அந்தணர்க்கு தானம் வழங்கல் அவசியம். இவை செய்யாதவர் வறுமையால் வருந்துவர். சூரிய கிரணகாலத்தில் நீர்நிலைகள் எல்லாம் கங்கைக்குச் சமமாம். அவ்வேலையில் அந்தணர் பிரமதேவர்க்கு நிகரானவர். எனவே இக்காலத்தில் தவறாது தீர்த்தமாடித் தானங்கள் புரிதல் வேண்டும். சூரிய பகவானை முன்னிட்டு அருக்கியம் கொடுப்போர் அவரின் நாமங்களைச் சொல்லி நல்ல மலர்களால் அருச்சிப்போர் சிவந்தமலர், சந்தனம், முதலியகொண்டு பூசிப்பவர் சூரிய உலகத்தை அடைவர்.

## சிவசன்மா சுவர்க்க லோகம் கண்டமை

சூரிய உலகத்திற்கு அப்பால் சென்றதும் சிவசன்மா சுவர்க்க உலகத்தை கண்டு மகிழ்ந்தான். அங்கு கற்பக மரங்கள் பலவேறு வகையான மலர்கள் மலர்ந்திருந்தன. பிரமதேவனின் தவச்சிறப்பால் படைக்கப்பட்ட சுவர்க்கத்திலே உள்ளவர் விரும்பும் ஆபரணங்களைக் கற்பக மரங்களே கொடுத்தலால் நகை செய்யும் தொழிலாளர் அங்கில்லை. அதே போல வேண்டிய வேண்டிய வண்ணம் உணவு வகைகளைக் காமதேனு என்னும் பசுக்கள் கொடுத்தலால் சமையற்காரர் சமைக்கும் இடமும் அங்கு இல்லை. அங்குள்ள யானைகளெல்லாம் ஐராவத இனத்தைச் சேர்ந்தன. நவரத்தினங்கள் எல்லாம் சிந்தாமணி என்னும் நினைத்ததைக் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவத் தன்மை உடையன. உணவு வகைகள் அமிர் தத்தின் தன்மை உடையன. மரங்கள் எல்லாம் கற்பக மரத்தின் இனங்கள். பெண்கள் எல்லோரும் தேவ அரம்பையர். அங்குள்ள வீதிகள் கூடப் பொன் மய மாயிருக்கும். பசுக்கள் எல்லாம் காமதேனு என்னும் தேவத்தன்மை உடைய பசுக்களே. திக்குப் பாலகர் அனைவரும் வணங்கிக் கொண்டாடும் பெருமையுடைய தேவ இந்திரனே அச் சுவர்க்கத்திறகு அரசனாக விளங் குவான். முப்பத்து முக்கோடி தேவரும் யாக அதிபதி யும், தேவராசனுமான இந்திரனை வணங்கி அவன் அவன் ஆணைப்படி நடப்பர். யுத்தகளத்தில் அஞ்சாது சண்டைபுரிந்து இறக்கு வீரரும். அரிய வேள்விகளைச் செய்விப்பவரும் ஒளிமிக்க சுவர்க்கத்தை அடைவர். தமது நிறைக்குச் சமமான பொன்னைத் தானம் செய்பவர் அசுவமேத யாகம் புரிவர், நீதியுடன் அரசு புரிபவர், முதலியோர் சுவர்க்கத்தை அடைந்து தேவ இன்பங்களை அடைவர்.

இன்பச் சிறப்புக்கள் பல விளங்கும். சுவர்க்க உலகத்தைக் கண்டபின் சிவசன்மா அக்கினி உலகத்தைக் கண்டான் அக்கினி உலகில் தூய இன்ப அனுபவங்கள் பல உண்டு. கணவன் இறந்ததும் நெருப்பில் புகுந்து உயிர் விடும் கற்புமிக்க பெண்கள், தினமும் மூன்று வேளைகளிலும் அக்கினியை வளர்க்கும் அந்தணர், குளிரால் வருந்துபவர்க்கு மருந்து, கம்பளி முதலியன உதவும் தருமசீலர் முதலியவர்கள் அக்கினி உலகத்தை அடைந்து இன்புறுவர்.

அக்கினி தேவனின் பெருமை அளப்பரிது. யாகங் களின் நலனை எல்லாத் தேவர்களும் பெற உதவுவது அக்கினி தேவனே. எவருக்குமில்லாத நெற்றிக் கண் ணாக சிவபெருமானுக்கு விளங்குவதும் அக்கினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனே உலகில் அக்கினியைப் போற்றாதவர்களும் அக்கினியால் நன்மையடையாதவரும் எவருமில்லை. இந்த அக்கினி தேவனின் வரலாறு மிகவும் புனிதமான தாகும்.

முற்காலத்தில் விசுவாநரன் என்னும் ஓர் அந்தணன் இருந்தான். இவன் நல்ல சிவபக்தன். கல்விப் பயிற்சி முடிந்த பின் இல்லறத்தின் மகிமைகளை மதித்து இல்லறத்தில் பிரவேசித்தான். இல்லறத்துக்கு உரிய பெருமை இறந்தவர், வறியவர், துறவியர், முதலியவர்க்கு உபசரித்தலே என்று கண்ட விசுவாநரன் பரோபகாரியாகவும் வேதவிதிப்படியும் இல்லறம் நடத்தினான்.

ஒரு நாள் விசுவாநரனின் மனைவி தன் கணவனை வணங்கி ''தலைவரே! உம்மைத் துணையாகப் பெற்று நான் எல்லாப் பெருமைகளையும் இன்பங்களையும் அடைந்துள்ளேன். நான் சிவபெருமானைப் போன்ற ஒரு குழந்தைக்குத் தாயாகும் தன்மையையும் நீர் அருள வேண்டும்'' எனக் கேட்டாள். இவ்வார்த்தையைக் கேட்ட விசுவாநரர் இப்படியான கருத்து இவள் உள்ளத்தில் தோற்றியதற்குக் காரணம் சிவனருளேயாகும் என மதித்தார். பின் மனைவியைப் பார்த்து ''இனியவளே! நீ விரும்பிய குழந்தைக்காக நான் தவம் செய்து அருள்பெற்று வருகின்றேன்'' எனக் கூறிவிட்டுக் காசியை அடைந்தார்.

அங்குள்ள எண்ணற்ற சிவலிங்க மூர்த்திகளுள் வீரேசலிங்கம் என்றும் மூர்த்தி பிள்ளைப் பேற்றை அருளவல்லது என அறிந்தான். வீரேசலிங்கத்தின் பக்கத்தில் உள்ள பீடத்தில் பிரகடை, விகடை எனும் தேவியர் உள்ளனர், என்றும் அவர்களின் பக்கத்தில் சித்தி விநாயகர் இருக்கின்றார், எனவும் அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானித்தல் முறையாகும். பஞ்சசுரன் எனும் அரசன் பரத்துவாசமுனிவர், ஒரு கின்னரப் பெண், சங்கசூடன் எனும் நாகராசன், ஸசத்திரதன், விடுதரன் அரசர் வசுதத்தன் எனும் வணிகன் முதலியபலர் வீரேசலிங் கத்தைப் பூசித்து நல்லருள் பெற்றதை அறிந்த விசு வாநரன் வீரேசலிங்கத்தை பூசித்து அரிய தவத்தை மேற்கொண்டான்.

ஒருமாதம் பகலில் மட்டும் ஒரு முறை உண்பது, ஒருமாதம் இரவில் மட்டும் ஒரு முறை உண்பது, ஒரு மாதம் யாராவது வலிய உணவு கொடுத்தால் உண் பது, ஒருமாதம் உணவை முற்றாக விடுத்து சிறிதளவு பாலை மட்டும் அருந்துவது, ஒரு மாதம் வெற்றிலை, பாக்கு மட்டும் ஒரு தடவை உண்பது, ஒரு மாதம் ஓரோர் எள்ளுருண்டை மட்டும் உண்பது, ஒருமாதம் பஞ்சகவ்யம் மட்டும் அருந்துவது, ஒரு மாதம் சாந்தி ராயண விரதம் அனுட்டிப்பது, ஒரு மாதம் தருப்பை நுனியில் வடிந்த நீரை அருந்துவது ஒரு மாதம் காற்றை மட்டும் சுவாசிப்பது என்ற நியமத்துடன் எவரும் அதிசயிக்கத்தக்க தவத்தைப் புரிந்தான். இவ் வாறு ஒருவருடம் நிறைவெய்திய போது வீரேசலிங்கப் பெருமான் சடாமுடியினை உடைய தவமுனிவர்போன்று விசுவாநரருக்கு முன் தோன்றினார். அவரைக் கண்ட உடனே மிக மகிழ்ந்த விசுவாநரர் அரிய சிவதோத்தி ரத்தைச் சொல்லித் துதித்தார். அதைக்கேட்ட பெரு மான் "உன்விருப்பத்தை நிறைவு செய்கிறேன் கூறுக" என்றார். அது கேட்ட விசுவாநரமுனிவர் "தேவரீர் அறியாத விடயம் உண்டோ? நீரே அருளவேண்டும்" எனப்பணிந்தார். அதைக்கேட்ட பெருமான், "அன் பனே! கிரகபதி எனும் பெயருடையவனாய் என்னைப் போன்ற ஒரு மகன் உனக்குப் பிறப்பான் நீ கூறிய துதியைத் தினமும் பாராயணம் செய்பவர் நல்ல புத் திரப்பேற்றை அடைவர்" என்று அருளிய பின் அம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் வீரேசலிங்கத்தில் மறைந்தார். விசுவாநரர் தன் வீட்டை அடைந்தார்.

## சிவசன்மா அக்கினிலோகம் கண்டமை

விசுவாநர முனிவர் வீட்டிலே பத்தினியுடன் சேர்ந்து தானதர்மங்கள், யாகம் முதலியன புரிந்து வாழும் நாளில் அவர் பத்தினி கருவுற்றாள். ஒரு நல்ல முகூர்தத்தில் அழகிய பிள்ளையை பெற்றெடுத்தாள். மிகவும் சிறந்த முகூர்த்தத்தில் அக்குழந்தை பிறந்த போது மலர் மழைபோலச் சொரிந்தது. தேவர் முனிவர் முதலியோர் விசுவாநரமுனிவரின் வீட்டையடைந்து வாழ்த்திச் சென்றனர். வேத விதிப்படி பதினோராம் நாள் செய்ய வேண்டிய சடங்குகளை புரிந்த பின்னர் கிரகபதி என்று பெயரிட்டனர். எல்லோரும் நன்கு மகிழத்தக்கதாக அக்குழந்தை வளந்தது. ஐந்து வயதில் உபநயனம் செய்தனர். கிருகபதி ஆசாரியரிடத்தில் வேத முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்று எவரும் புகழத்தக்கவனவனாய் விளங்கினான். அக்காலத்தில் ஒரு நாள் நாரதமுனீவர் விசுவாநரமுனிவரின் இடத்திற்கு சென்றார் அவரின் நல்ல உபசரிப்புக்களை பெற்ற நாரதமுனிவர் அக்குழந்தையையும் முனிவரையும் புகழ்ந்தார். பின்னர் பல உண்மைகளை அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

பெண் தன் கணவனுடன் சேர்ந்து பெற்ற பிள்ளை கணவன் ஆலோசனைப்படி முனிவர் முதலியவரால் பெற்ற பிள்ளை, பிறர் பெற்ற பிள்ளையை பொருள் கொடுத்து ஏற்ற பிள்ளை. உறவினர் பிள்ளையை சுவீகார முறையாக ஏற்கக் கிடைக்தம் பிள்ளை. ஏதாவது காரணம் பற்றி நான் உங்கள் பிள்ளையாயிருக்க விரும்புகிறேன் என வந்தபிள்ளை; மகளின் பிள்ளை, ஆபத்தில் காப்பாற்றப்பட்டதால்பிள்ளையென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவு கொள்ளத்தக்க பிள்ளை ஏழுவகையாக ஒருவ னுக்கு பிள்ளைகள் வரலாம். எத்தகை சிறப்பிருந்தா லும் ஒரு இல்வாழ்வான் பிள்ளை இல்லாதவன் எனின் குறைபாடுடையவராகவே மதிக்கத் தக்கவனாவன். இவ் வாறு பல கருத்துக்களை தெரிவித்த பின்னர் கிருகபதி யின் அங்க லட்சணங்களின் தன்மைகளை எடுத்துக் கூறினார்.

இச்சிறுவனின் உறுப்புக்கள் உரிய இலக்கணங்க ளோடு இருத்தலினாலும் பெருந்தன்மையுடையவனாகக் காணப்படுதலாலும் தெய்வமாக விளங்கும் தன்மை உள்ளது. மிகுந்த செல்வமுடையவனாகவும் இவன் வாழ்வான். இந்திரனைப் போன்ற சிறப்பை அடை வான். எல்லாத் திசையிலுள்ளவரும் புகழும்படி விளங் குவான். இப்படியான இலக்கணச் சிறப்புடைய இச் சிறுவன் தனது பன்னிரண்டாம் வயதில் இடியினால் தாக்கப்படும் தன்மையுள்ளது. அப்படி ஒரு விபத்து நடவா வண்ணம் வேண்டிய செயல்களைப் புரியுங்கள் என்று எச்சரித்து விட்டு நாரதர் சென்றார். விஸ்வாநர முனிவரும், மனைவியும் மிகவும் வேதனையுற்றனர். எமக்கு இப் பிள்ளையை அருளிய சிவபெருமானே காக்க வேண்டுமென நினைத்தனர் எம் தீவினை காரணமாகத் தன் பிள்ளைக்கு இப்படியான நிலை உருவாகின்றது எனப் புலம்பினர். தாய் தந்தையரின் வேதனையைக் கண்ட கிருகபதி அவர்களை வணங்கி னான். நீவீர் கவலையுறாதீர் நான் சிவபெருமானை வணங்கி இந் தீங்கை விலக்கி வருகிறேன் என்று கூறினான். அது கேட்டு அவர்கள் மகிழ்ந்தனர்.

விஸ்வாநரர் கிருகபதியை நோக்கி மகனே! சிவ பெருமான் மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்தரு ளினார். அதேபோல் சுவேதகேது என்பவருக்காகவும் யமனை வென்றிருக்கிறார். நந்தியம் பெருமானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைக் கவரச் சென்ற யமனையும் சிவபெருமான் அழித்திருக்கிறார். தேவர்களும், இந்திரனும் இறவா திருப்பதற்காகச் சிவபெருமான் ஆலகால விடத்தை உண்டிருக்கிறார். கொடிய சலந்தரனை அழிப்பதற்காக தன் காலால் சக்கரப்படையை தோற்று வித்தார். அந்தகாசூரனைத் தன் சூலநுனியில் தாங்கித் தண்டித் தார். மேருவை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் திருமாலை அம்பாகவும் அக்கினியை அம்பின் நுனியா கவும் கொண்டு முப்புரங்களையும் எரித்தருளியிருக்கி றார். எனவே நீ சிவபெருமானை வணங்கி இடியால் உனக்கு வரவிருக்கும் ஆபத்தை விலக்கு எனக் கூறினார்.

கிருகபதியும் தந்தையை வணங்கி அனுமதி பெற்று காசியை அடைந்தான். கிருகபதி காசியில் முறைப்படி கங்காநதியில் நீராடிய பின் விசுவநாதரை போற்றித் துதித்தான். காசியின் பெருமைகளையும் விசுவநாதரின் அற்புதத் தோற்றத்தையும் கண்டு மகிழ்ந்தான். நாரத முனிவர் காரணமாகத்தான் காசியை அடைந்தே னென்று நாரதரை நன்றியுடன் நினைத்து வணங்கி னான். கிருகபதியின் மகிழ்ச்சியுடன் தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை அங்கு பிரதிட்டை புரிந்தான். அவ் லிங்கத்திற்கு ருத்திரம், சமகம் ஆகிய மந்திரங்களை கூறி 108 குடம் கங்கை நீரால் அபிஷேகம் செய்தல் 1008 நிலோற்ப மலர்களால் அர்ச்சித்தல் எனும் நியமத்தை மேற்கொண்டான். இப்படிப் பூசிக்கும் காலத்தில் 6 மாதம் கனிந்த பழத்தையும் 6 மாதம் தானே உதிர்ந்த சருகையும், 6 மாதம் தண்ணீ ரையும், 6 மாதம் காற்றையும் உண்டு கடுமையான விரதத்துடன் இருந்தான். இவ்வாறு 2 வருட முடிவில் நாரதர் கூறிய இடிதாக்கும் நாள் வந்தது. சிவபெரு மான் இந்திரன் போல் வெளிப்பட்டு கிருகபதியே நீ விரும்பும் வரம்யாது எனக்கேட்டார். சிவபெருமானைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிரப் பிற தேவர்களிடம் வரம் பெறமாட்டேனென்று கிருகபதி கூறினான். இந்திரன் தன் வாளால் தாக்க அது இடிபோல் தாக்கிற்று. உடனே கிருபதி மயங்கி வீழ்ந்தான். பின் சிவபெருமான் தன் கோலத்துடன் தோன்றி கிருகபதியின் மயக்கத்தை நீக்கியருளினார். பின் தென்கிழக்கு திசையிலுள்ள அக்கினி உலகிற்கு தலைவனாகும்படி சிவபெருமான் தன் அருமை திருக் கரத்தால் கிருகபதிக்கு முடிசூட்டியருளினார். கிருகபதி யைப்பார்த்து அன்பனே! நீ தாபித்த இச் சிவலிங்கம் இனி அக்கினி இலிங்கம் எனும் பெயருடன் விளங்கும் இதைப் பூசிப்பவர்களுக்கு இடிமுதலியவற்றால் துன்பம் உண்டாகாது என்று அருளினார். கிருகபதி தாய் தந்தையரை அடைந்து சிவனருள் பெற்றதைக் கூறி மகிழ்ந்த பின்பு அக்கினி உலகின் அரசனாய், அக்கினி தேவனாய் விளங்குகின்றான்.

# நிருதி உலகம் வருணன் உலகம்

வேதநெறி பின்பற்றாது வாழும் இழிகுலத்தவர் தமக்குரிய குலதர்மத்தை புறக்கணிக்காது இரக்கம், நீதி முதலிய நற்குணங்களுடன் வாழ்ந்தால் நிருதி திசையெனும் தென்மேற்கு திசையிலுள்ள தெய்வ உலகத்தை அடைந்து மகிழ்வர். இந்த நிருதி உல கிற்கு தலைவனாகவுள்ள தேவனின் வரலாறு பெருமை உடையது.

விந்தமலையின் பக்கத்திலுள்ள காட்டில் பிங்கலாக் கன் என்ற ஒரு வேடன் இருந்தான். அக்காட்டு வழி யில் போகின்ற பிரயாணிகளுக்கும், யாத்திரிகர்களுக் கும் வேண்டிய உதவிகளை அவன் செய்வான். அவ்வழியாக காசியாத்திரை செல்பவருக்கு குடை, செருப்பு முதலியன கொடுத்து உதவுவான். வழியில் அச்சம் உண்டானால் தன் பெயரைச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்குமாறு கூறி அவர்கள் அச்சமின்றிச் செல்லச் செய்வான். யாத்திரை செய்பவருக்கு அச்சத்தை உண் டாக்கும் என எண்ணிக் காட்டிலுள்ள புலி முதலிய மிருகங்களை வேட்டை ஆடுவதன்றி நல்ல மிருகங்களை கொல்லாது வாழ்ந்தான். ஒரு நாள் காசிக்கு யாத்திரை யாகச் செல்லும் அந்தணரை அக்காட்டில் இருந்த வேடர் மறித்து பொருள்களை பறித்தனர். அதுகண்ட யாத்திரியர்கள் பிங்கலாக்கனை அழைத்துக் கூக்குரல் இட்டனர். புலி வேட்டையில் நின்ற பிங்கலாக்கன் உடனே அவ்விடத்திற்கு சென்றான். அங்கு நின்ற வேடர்களைத் துரைத்திவிட்டு யாத்திரிகர் காடுகடக்க உதவினான். இதனால் கோபங்கொண்ட வேடர் பலர் சேர்ந்து பிங்கலாக்கனுடன் சண்டையிட்டனர். பலர் ஒரே நேரத்தில் தாக்கியதால் அச்சண்டையில் பிங்க லாக்கன் இறந்தான். அப்படி இறந்த பிங்கலாக்கனே நிருதி தலைவனாக விளங்குகின்றான்.

மேற்கு திசையில் விளங்கும் தேவ உலகம் வருண உலகமாகும். வேத வல்ல தூய அந்தணர்க்கு நெல் வயல்களைத் தானம் செய்தவர்களும் ஆற்றின் கரை களில் புனித நீராட வசதியாகப் படித்துறை கட்டிய வர்களும், சிறையில் துன்புறுபவர்க்கு உதவி புரிந்த வர்க்கும் கிணறு, குளம் முதலியவற்றை எல்லோருக்கும் பயன்படவென அமைத்தவர்களும், வருண உலகத்தை அடைந்து மகிழ்வர். இப்படியான வருண உலகின் தலை வனாய் இருக்கும் வருண தேவனின் வரலாறும் மகிமை யுடையதாகும்

முற்காலத்தில் சிவதியானம் செய்யும் பிரசாபதி எனும் ஒரு முனிவர் இருந்தார். அவருக்கு சுசிட்டு மான் எனும் பெயருடைய ஒரு மகன் இருந்தான். சுசிட்டுமான் ஒரு நாள் ஆற்றில் நீராடினான் அவனை ஒருமுதலை பிடித்துசென்றது. ஆற்றுநீருடன்முதலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் சமுத்திரத்தை அடைந்தன. சமுத்திரத்திலுள்ள ஒரு தலைவன் அச் சிறுவனின் வரலாற்றை அறிந்து வருணனுக்கு தெரிவித்தான். சிவயோகியின் மகனை முதலை பிடித்ததால் தனக்கும் துன்பம் வரும் என அஞ்சிய வருணன் அச்சிறுவனை கடலில் இருந்த பவளம் முதலியவற்றால் அலங்கரித்து முதலையையும், சிறுவனையும் சிவபெருமானிடத்திற்கு அழைத்துச் சென்றான். சிவபெருமானிடம் எல்லாவற்றையும் கூறி தன்னை மன்னிக்கும்படி வணங்கினான். சிவபெருமாமானும் அப்பிள்ளையை ஏற்றுத் தந்தையாகிய முனிவரிடம் கொடுத்தருளினார்.

சுசிட்டுமான் தந்தையின் தவப்பெருமையையும் வருண உலகின் நலன்களையும் நேரில் கண்டு சிந்தித்தான். 'நானும் நல்ல தவத்தை செய்து வருண உலகின் தலைமையை அடைவேன்' என்று உறுதி கொண்டான். தன் விருப்பத்தை நிறைவேற்றத் தவம்செய்ய அனுமதி தரும்படி தந்தையை வணங்கினான். தந்தையும் அனுமதி வழங்கினார்.

சுசிட்டுமான் காசியை அடைந்தான். அங்கு ஒரு சிவலிங்கத்தை தாபித்து பூசை புரிந்து தவத்தை மேற்கொண்டான். அவனது தூய தவத்திற்கு சிவபெருமான் மகிழ்ந்தார். அவன்முன் வெளிப்பட்டார். சுசிட்டுமான் சிவபெருமானை போற்றி வருண உலகின் அரச உரிமையை அருள வேண்டும் என வேண்டினான். சிவபெருமான் தேவர்கள் காண சுசிட்டுமானுக்கு முடிசூட்டி வருணதேவனாக அவன் விளங்க அருள்புரிந்தார்.

## வாயு உலகமும் குபேரன் உலகமும்

வருண உலகிற்கு அடுத்து விளங்குவது வாயு உலகமாம். வாயு உலகின் தலைவனாக விளங்கும் வாயுதேவன் காசிபமுனிவரின் மகனாவர். இவர் காசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து பதினாயிரம் வருடம் சிவபெருமானைக் குறித்து தவம் செய்தார். தவத்தினை ஏற்றுச் சிவ பெருமான் காட்சி கொடுத்த போது இவர் பலவாறு தோத்திரம் பண்ணி வணங்கினார். 'அன்பனே நீ விரும் பிய வரம் யாது' என்று சிவபெருமான் கேட்டருளினார். உம்மிடத்து மேலான பக்தியே வேண்டும். என வரம் கேட்டார். அதுகேட்ட சிவபெருமான் 'அன்பனே எல்லா உயிருக்கும் அவசியமான காற்றாகி வடமேற்குத் திசை யிலுள்ள தேவ உலகின் தலைவனாக விளங்குக' என அருளினார். 'அன்பனே ! உன்னால் இங்கு பூசிக்கப் பட்ட இச்சிவலிங்கம், வாயுலிங்கம் என்று விளங்குவ தாக இவ்விலிங்கத்தைப் பூசிப்போர் சிவலோகத்தை அடைவர்' எனக்கூறி மறைந்தருளினார். காசியில் பதினாயிரம் வருடம் சிவபூசை, தவம் என்பன புரித்த காசிப்புத்திரன் வாயு உலகின் தேவனாக விளங்குகின் றார்.

காம்பீலி நகரத்தில் தூய்மை மிக்க வேள்விதத்தன் எனும் ஓர் அந்தணன் வாழ்ந்தான். அவனுக்கு குண நிதி என்னும் ஒரு மகன் இருந்தான். இளமையில் கல் வியில் சிறந்து விளங்கிய குணநிதி தீய சேர்க்கையால் சூது முதலிய பழக்கம் உடையவனாயினான். ஆனால் குணநிதியின் தாய் தன் மகனின் தீயபழக்கங்களைத் தந்தை அறியாதபடி மறைத்து வந்தார். இப்படி இருக்கையில் வேள்விதத்தன் தன் மகனுக்குத் திரும ணமும் செய்து வைத்தான். திருமணத்தின் போது பல புத்திமதிகளைத் தாய் மகனுக்குக் கூறினாள். 'மகனே உன் தீய பழக்கங்களை உன் தந்தை அறிந்தால் என் னையும் உன்னையும் விரட்டிவிடுவார். உன் தந்தையின் கல்வி, ஒழுக்கம், புகழ் என்பவற்றுக்கு மாறுபடாது நல்ல வாழ்வை மேற்கொள்க' என்று வற்புறுத்தினாள் ஆனால் குணநிதியோ நாளடைவில் கள்ளுண்ணல், பிறர் மனைவியை விரும்புதல் முதலிய தீய ஒழுக்கங்களை மேற்கொண்டான். ஒருநாள் தாய் நித்திரையாயிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தந்தை பாதுகாப்பாக வைத்திருந்த ஒரு மோதி ரத்தை எடுத்துச் சென்று சூதாடித் தோற்றான்.

சூதிலே வென்றவன் அம் மோதிரத்தை அணிந்து வந்ததைக் கண்ட தந்தை விசாரித்த போது மகனின் தீங்குணங்கள் முழுவதையும் அறிந்து கொண்டான். நல்ல குலத்தின் பெருமையைக் கெடுக்கும் பிள்ளையை விலக்கிவிடுதல் மூலம் குலத்தைக் காத்தல் வேண்டும் என்னும் நீதியின் படி அவ்வந்தணன் தன் ஒழுக்கமற்ற பிள்ளையையும் அப்பிள்ளைக்கு ஆதரவாயிருந்த தன் மனைவியையும் விலக்கித்துரத்தினான்.

தன்னைத் தந்தை துரத்தி விட்டதால் குணநிதி செய்வதறியாது அலைந்து திரிந்தான். ஒருநாள் சிவ ராத்திரி தினத்தில் உணவு கிடைக்காது அலைந்த குணநிதி சிவராத்திரி இரவு கோவிலில் உணவு கிடைக் குமென்று காத்திருந்தான். ஆனால் பூசை செய்த அந் தணர் பின்னிரவில் நித்திரை மயக்கத்திலிருக்கும் போது நிவேதன உணவைக் களவெடுத்துச் சென்றான். இருட் டாயிருந்ததால் மங்கிய விளக்கைத் தூண்டிவிட்டு அவ் வெளிச்சத்தில் பிரசாதத்தை எடுத்துக் கொண்டோடி னான். காவலர் அதைக் கண்டு அவன் தலையை வெட் டினர். சிவராத்திரி தினத்தில் உணவின்றி இருந்ததா லும் சிவபூசையைத் தரிசித்ததாலும் குணநிதி எனும் அக்கொடியவன் பாவங்களின் நீங்கி கலிங்க தேசத்தரச னுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். அப்போது அவனுக் குத் தமன் எனப்பெயரிட்டனர். தமன் நல்லொழுக்க முடன் வாழும் காலத்தில் முற்பிறப்பின் தொடர்பால் சிவபூசை செய்வதுடன் சிவாலயங்களில் விளக்கெரித் தலை நீண்டநாட்கள் மேற்கொண்டான். சிவாலயங்க ளில் விளக்கேற்றிய பெருமையால் தமனன் பின்பு குபேர புரிக்கு அரசனானான். தமனனுக்கு முன் பிரமபுத்திர னான புலத்திளன் மகன் வச்சிரணன் என்பவன் சிவ பூசாமகிமையால் குபேரபுரிக்கு அரசனாயிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமன் குபேரபுரிக்கு அரசனான காலத்தில் காசியை அடைந்து சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்தான். அதனைப்பூசித்து அச்சிவலிங்கத்தின் முன் யோகத்திலிருந்தான். அப்போது சிவபெருமான் காட்சி கொடுத்தார். பின் அப்பெருமான் அருளால் தமன் குபேரனாக விளங்குகின்றான்.

## ஈசானன் உலகம் சந்திர உலகம் கண்டமை.

குபேரபுரிக்குக் கிழக்கில் விளங்குவது ஈசான உலகமாகும். தவமிகுதியினால் சிவபெருமானிடத்தில் அன்புடையவர்களும் பயன்கருதாது சிவவேள்வி செய்பவரும் ஈசான உலகை அடைந்து சிவபெருமானின் வடிவைப் பெற்று இன்புறுவர். பதினொரு உருத்திரர்களே ஈசான உலகை அரசுபுரிகின்றனர். இந்தப்பதினொருபேரும் காசியை அடைந்து சிவலிங்கத்தை அமைத்துப் பூசித்தார்கள். அவ்விலிங்கத்தின் முன் இருந்து அரிய தவத்தைப் புரிந்தார்கள். அவர்களுக்கு சிவபெருமான் காட்சி கொடுத்து நீண்ட ஆயுளையும் ஒளிமிக்க உடம்பையும் தனக்கு உள்ளது போல சடைமுடி அதில் கங்கை, நீலகண்டம் திருநீற்றுப்பூச்சு நெற்றிக்கண், மான் மழு கொன்றை மாலை முதலியவற்றையும் அருளி ஈசான உலகத்தை ஆளும் பதவியையும் வழங்கியுள்ளார்.

ஈசான உலகிற்கு அடுத்து விளங்குவது சந்திரஉலகாகும் அத்திரிமுனிவர் தூய தவம் செய்த போது அவர் உடலில் இருந்து வெளிப்பட்ட இந்திரியம் பிரமதேவனால் ஒரு குழந்தையாக்கப்பட்டது. அக்குழந்தை காசியை அடைந்து சிவலிங்கம் ஸ்தாபித்துப் பூசித்து 100 கற்பகாலம் தவம் செய்தது. தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் வெளிப்பட்டு ஆகாயம், பூமி, பயிர், நீர் என்பனவற்றுக்கு அதி தெய்வமாக விளங்கும் படி அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தார். இவ்வாறு தன் அருள்பெற்ற சந்திரனின் ஒரு தலையைத் தன் முடியில் அணிந்து அச்சந்திரனை மேன்மைப்படுத்தினார். இச்சந்திரன் பின்னரும் அரிய தவங்களைப் புரிந்து சிவபெருமானின் ஒரு கண்ணாக வும் விளங்குகின்றான்.

சந்திரனது கிரணங்களால் சூரியவெளியில் வாடிய பயிர்கள் வாட்டம் நீங்கி வளரும். பெருமைமிக்க சந்தி ரனால் காசியில் அமைக்கப்பட்ட சந்திரலிங்கத்தை பூர ணையும் திங்கட்கிழமையும் ஒன்றான தினத்தில் பூசித் தால் அதிகநன்மை உண்டாகும். இப்படியான சிறப்பு டைய சந்திரன் சந்திர உலகத்தை ஆட்சி புரிந்து கொண்டு பெருமையாக விளங்குகின்றான்.

## தாரகை உலகமும் புதன் உலகமும்

பிரமதேவரின் மகனான தக்கனுக்கு 60 பெண் குழந்தைகளிருந்தனர். அவர்களில் 27 பேர் காசியை அடைந்தனர். அங்கு ஒரு சிவலிங்கத்தைத் தாபித்தனர். அவ்லிங்கத்தின் முன்னாக புருடாயுதம் எனும் விர தத்தை மேற்கொண்டு தவமிருந்தனர். அவர்கள் முன் சிவபெருமான் வெளிப்பட்டார். சிவபெருமானைத் துதித்த அப்பெண்கள் சிவபெருமானுக்கு நிகரான கணவனை வரமாகக் கேட்டனர். சிவபெருமான் அவர் களை நோக்கி பெண்களே! உலகின் இருளைப் போக் குபவனும் 16 கலைகளுள்ளவனுமாகிய சந்திரன் உங்க ளுக்கு கணவனாவன். நீங்களும் ஒளியுடைய நட்சத்தி ரங்களாவீர்கள் விண்ணிலுள்ள நட்சத்திரங்களில் மேன் மையுடன் விளங்குவீர்கள். உங்களுக்குரிய உலகம் சந்தி ரனின் உலகிற்கு மேலே அமையும் என்று அருள் புரிந் தார். இந்த 27 பெண்களும் சிறப்புடன் வைகுவதே தாரகை உலகம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர உலகங்களுக்கு மேல் புதன் உலகு உள்ளது. புதன் சந்திரனது பிள்ளையாகும். சந்திரன் மன்மதனால் தூண்டப்பட்டு வியாழபகவானின் மனைவியை வலிதில் கூடினான். இதனை அறிந்த தேவர்கள் சந்திரனை எதிர்த்தனர். சந்திரன் சிவபெருமானை அடைக்கலமாக அடைந்தான். தன்னை அடைந்தவர்களை மன்னிக்கும் பெரும் கருணை உடைய சிவபிரானிடம் பிரமதேவர் சென்று வணங்கி சந்திரனை அழைத்து வந்தார். சந்திரனையும், தேவர்களையும் சமாதானம் செய்து வியாழபகவானின் மனைவியை வியாழபகவானிடம் சேர்த்து வைத்தார்.

சந்திரனும் வியாழபகவானின் மனைவியான தூய்மைமிக்க தாரையும் கூடியதால் புதன் பிறந்தான். சந்திரனின் அனுமதியுடன் புதன் காசியை அடைந்தான். புதன் காசியில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்தான். அவ்லிங்கத்தின் முன்பாக பதினாயிரம் வருடம் தவம் செய்தான். தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அந்த லிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். புதன் மகிழ்ச்சியுடன் வீழ்ந்து வணங்கி பெருமானே மிக்கசெல்வத்தில் திளைத்தாலும், கொடிய வறுமையில் வருத்தினாலும் உம் திருவடியை மறவாது வணங்கும்படி அருளவேண்டும் எனப் பிரார்த்தித்தான். சிவபெருமான் நட்சத்திர உலகிற்கு மேலிருக்கும் உலகிற்கு உரியவனாகவும் 9 கிரகங்களில் ஒருவனாகவும் புதன் விளங்க அருள் புரிந்தார். புதன் உலகிற்கு அடுத்து விளங்குவது சுக்கிர உலகாகும்.

# சுக்கிரன் உலகு கண்டமை

புதன் உலகிற்கு அடுத்து விளங்குவது சுக்கிரன் உலகாகும். சுக்கிரனுடைய பெருமையும், அவனுக்கு இப்பெயர் வந்தமையும் நல்ல கதையாகும். பிருகு முனிவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கவன் என்னும் பெயர் உண்டானது. பார்க்கவன் காசியை அடைந்து ஒரு சிவலிங்கம் தாபித்து அதன் முன் தவம் மேற்கொண்டான். நீண்டநாள் செய்த தவத்திற்கும் சிவபெருமான் வெளிப்படாதது கண்ட பார்க்கவன் பின்னும் கடிய தவநியமங்களை மேற் கொண்டான். நெய்யினால் உண்டாகும் புகையையே உணவாக கொண்டு சிவபெருமானை தியானித்து ஒரு ஆயிரம் வருடம் கடும் தவம் செய்தான். அதனால் சிவபெருமான் காட்சி கொடுத்தார். 1 கோடி சூரிய உதயம் போன்ற பிரகாசத்துடன் இடபவாகனராய் காட்சி கொடுத்த சிவபெருமான் தனக்குப்பிள்ளையாய் வரும் பேற்றையும் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் சஞ் சீவிமந்திரத்தையும் அருளினார். சிவபெருமான் அரு ளால் அசுரர்க்கு குருவாகவும் வெள்ளி உலகின் தலை வனாகவும் பார்க்கவன் விளங்கினான்.

ஒருமுறை அந்தகாசுரன் என்பவன் தலைமையில் அசுரர்க்கும் தேவர்க்கும் யுத்தம் உண்டானது. அந்த யுத்தத்தில் அசுரர் பலர் இறந்தனர். இதைக்கண்ட அசுரர் தம் குருவாகிய பார்க்கவனிடம் வந்து உதவி செய்யும்படி வேண்டினர். அவரும் போய் தன் மிருத சஞ்சீவி மந்திர மகிமையால் இறந்தவர்களை உயிர் பித்தார். அப்படி உயிர் பெற்றவர் மீண்டும் யுத்தத் தில் சென்று தேவர்களை எதிர்த்தனர். தேவர்கள் கவலையுடன் சென்று நந்தியெம்பிரானிடம் முறையிட் டனர். நந்தியெம்பிரான் சிவபெருமானிடம் தேவர்க ளது கவலையையும் அதன் காரணத்தையும் தெரிவித் தார். உடனே சிவபெருமான் நந்தியை அனுப்பி பார்க்கவனை அழைப்பித்து விழுங்கிவிட்டார். சிவ பெருமானின் வயிற்றுள் சென்ற பார்க்கவன் பல புது மைகளை அங்கு கண்டு மகிழ்ந்தான். அவனால் அசு ரர்க்கு உதவமுடியவில்லை. அசுரரைத் தேவர் வென் றார்கள். நீண்ட காலத்தின் பின் பார்க்கவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் சுக்கிலத்துடன் வெளிவந்தான். அத னால் பார்க்கவனுக்கு சுக்கிரன் என்ற பெயரும் மிக்க ஒளியும் உண்டானது. இச் சுக்கிரன் முன் காசியில் நிறுவிய சிவலிங்கம் பார்க்கவலிங்கம் - சுக்கிரலிங்கம் என்னும் பெயர்களுடன் விளங்குகின்றது.

## செவ்வாய், வியாழன், சனி, உலகங்களைக் கண்டமை

ஒரு சந்தர்ப்பத்தில் சிவபெருமான் உமையம்மையை நீங்கியிருந்தார். அப்போது ஏதோ காரணத்தால் அவர் தவத்தை மேற்கொண்டார். தவத்தின் போது அவர் நெற்றியில் வியர்வை உண்டானது. வியர்வை நிலத்தில் விழுந்ததும் ஒரு குழந்தை ஆகியது. அக்குழந்தையை நிலமகளாம் பூமிதேவி அஃபோடுவளர்த்தாள். வளர்ந்து கல்வியறிவும் எய்தியபின் அக் குழந்தை காசியை அடைந்து அரிய தவத்தை மேற்கொண்டது. தவச் சிறப்பால் அதன் உடலின்றும் அக்கினி உண்டானதால் அக்குழந்தைக்கு அங்காரகன் என்ற பெயர் உண்டா னது. அங்காரகன் தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் சுக்கிரனுலகிற்கு மேலுள்ள உலகத்தையும் கிரகபதவி யையும் அந்த அங்காரனுக்கு அருள் புரிந்தார்.

பிரமபுத்திரரில் அங்கிரா என்பவனுக்கு ஆங்கீரதன் என்னும் பெயருடைய முனிவர் பிள்ளையாகப் பிறந்தார் அவர் காசியில்ஒரு சிவலிங்கம் அமைத்து அரியதவத்தை மேற்கொண்டார். பத்தாயிரம் தேவவருடம் தவம் செய்த ஆங்கிரத முனிவர் முன் சிவபெருமான் தோன்றி னார். மேலான தவத்தைத் மேற் கொண்டபடியால் உன்னை சிவன் என்று எவரும் போற்றுவாராக. உன் னால் பூசிக்கப்பட்ட சிவலிங்கத்தை வணங்குபவர் மலர் கொண்டு அருச்சிப்பவர் விவேகமும் மனத்தெளிவும் நல் லறிவும் பெறுவர். சுவர்க்கத்திலுள்ள தேவர்க்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாக விளங்கும் சிறப்பும் அமைவதாக என்று அருளிச் சிவபெருமானே அந்த அங்கிரதருக்கு முடி சூட்டியருளினார். அப்போது தேவர்கள் எல்லாம் அவரை வணங்கித் தமக்கு குருவாக ஏற்றுக் கொண்டனர். அந்த அங்கிரத முனிவரே வியாழபகவானாவர். அவருக்கு வியாழ உலகத் தலைமையும் அமைந்தது.

காசிபருக்கும் அதிதி என்னும் பெண்ணுக்கும் மகனாகச் சூரியன் பிறந்தான். தொட்டான் என்னும் தேவனின் மகளான கங்கை என்பாளுக்கும் சூரியனுக்கும் அக்கினி சாட்சியாகத் திருமணம் நிகழ்ந்தது. இருவருக்கும் வைச்சுதமனு, யமன் என்னும் இரு ஆண்மக்களும் சூரியநிறமுடைய யமுனை என்னும் பெண்ணும் பிறந்தனர் சூரியனது வெப்பத்திற்கு ஆற்றாத கங்கை தன் நிழலை ஒரு பெண்ணாக செய்து வீட்டில் தனக்குப் பதிலாக இருக்கும் படி செய்துவிட்டு தன் தகப்பனிடம் சென்றாள். தகப்பன் கற்புடையோர் கணவனால் வரும் துன்பத்தைப் பொறுத்து வாழ வேண்டும் என்று பலபுத்திமதிகள் கூறினார். கங்கை கணவனிடம் திரும்பிச் செல்ல அஞ்சி உத்தரகுரு என்னும் இடத்தை அடைந்து சூரியனை நினைத்து தவம் புரிவாளாயினள்.

சூரியனுக்கும் கங்கையின் நிழலில் உண்டான சாயா தேவிக்கும் மூன்று பிள்ளைகள் பிறந்தனர். சாவனிமனு, சனி எனும் இரு ஆண்களும் பத்திரை எனும் பெண்ணுமே அந்த மூன்று பிள்ளைகளுமாவர். தன் பிள்ளைகளிடம் அன்பாயும் மற்ற மூன்று பிள்ளைகளிடத்து அலட்சியமாயும் சாயாதேவி இருந்தாள். யமன் தன்னை அலட்சியம் பண்ணிய தாயைக் கோபித்தான். அவள் யமனின் கால் முறிக என்று சபித்தாள். இதனால் உண்மையை அறிந்த சூரியன் தன் மனைவியைத் தேடிப் போனான். கங்கை தன்னை நோக்கி வருவது சூரியன் தான் என்று அறியாது குதிரை வடிவெடுத்து ஓடினாள். சூரியனும் குதிரை வடிவெடுத்து அவளைத் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கூடி மகிழ்ந்தான். அப்போது மருத்தவர் இருவர் அவர்களுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தனர். சூரியன் தன் இருமனைவியருடனும் பிள்ளைகளுடனும் வாழும் காலத்தில் சனி என்பவன் காசியை அடைந்து சிவலிங்கம் தாபித்து தவம் செய்தான். அவன் தவத்திற்கு இரங்கி வெளிப்பட்ட சிவபெருமான் அருளால் சனீஸ்சரன் கிரகபதவியையும் சனிஉலக அரசையும் பெற்று விளங்குகின்றான். காசியில் விசுவநாதலிங்கத்திற்கு வடக்கில் சனிபகவானால் ஸ்தாபிக்கப்பட்ட சனீஸ்வரலிங்கத்தை பூசிப்பவர் சனி உலகத்தை அடைந்து அங்குள்ள மேலான சிறப்புக்களுடன்வாழ்வர்.

## சப்தரிஷி உலகு கண்டமை

சனிபகவானின் உலகிற்கு அப்பால் விளங்குவது சப்தரிஷிகளின் உலகாகும். மரீசி, அத்திரி, புலகர், புலத்தியர், கிரிது, அங்கிரா, வசிட்டர் எனும் 7 முனிவர்கள் இவ்வுலகத்தை அரசாட்சி கொண்டு விளங்குகின்றனர். சம்பூதி, அனுசூயை, சமை, பிரீதி, சந்ததி, மிருதி, அருந்ததி என்பவர்களே சப்தரிஷிகளின் மனைவியராவர் ஒருமுறை பிரமதேவர் இந்த 7 முனிவர்களையும் நோக்கி உலகதோற்றத்திற்கு உதவும் முறையில் படைத்தல், காத்தல் என்பவற்றிற்கு உதவி புரியுங்கள் என்று கேட்டார். இந்த 7 முனிவர்களும் பிரமதேவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக காசிக்கு சென்று சிவலிங்கத்தை ஸ்தாபித்து தவம் புரிந்தனர். தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் தோன்றி இந்த உலகத்தை உதவி பிரமதேவரின் எண்ணத்தை நிறைவு பெறச் செய்தார். இதனால் இம்முனிவர்களை 7 பிரமாக்கள் என்று அறிஞர் புகழ்வர். இந்த முனிவர்களின் மனைவியரின் ஒழுக்கச், சிறப்பையும் அருந்ததியின் பெருமைகளையும் திருமால், பிரமதேவர், மகாலக்குமி, சரஸ்வதி முதலியோர் விரும்பிப்பாராட்டுவர். 7 முனிவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியில் தாபித்த சிவலிங்கத்தை பூசிப்பவர் எதை விரும்பிலும் அடைவர். அதுமட்டுமன்றி மேலான பிரம உலகத்தையும் அடைந்து மகிழ்வர்.

## துருவன்தவம்செய்ய புறப்பட்டமை

பூமி முழுவதையும் ஒருகாலத்தில் அரசு புரிந்த சுவாயம்புமனு என்பவனுக்கு உத்தானபாதன் என ஒரு மகன் இருந்தான். அவன் சுருதி, சுநீதி எனும் இரு பெண்களைத் திருமணம்செய்தான். சுருதி என்பவருக்கு உத்தமன் என்பவனும் சுநீதி என்பவருக்கு துருவன் என்பவனும் பிள்ளைகளாகப் பிறந்தனர். சுருதியின் மகன் உத்தமன் தந்தையின் மடியில் சிங்காசனத்திலிருக்கும் போது துருவனும் அவ்வாறு இருக்கச் சென்றான். அதனால் சுருதி துருவனை கோபித்து துரத்திவிட்டார். துருவன் தன் தாய் சுநீதியிடம் சென்று முறையிட்டான். அது கேட்ட சுநீதி அவள் முன் செய்த தவத்தால் செல்வாக்குப் பெற்று இவ்வாறு உன்னை பேசியுள்ளான். முன் தவம் இல்லாத நாம் இப்படி துன்புற வேண்டியுள்ளது எனக்கூறினாள். அது கேட்ட துருவன் நான் தவம் செய்து தேவர்களிலும் மேலான நிலையை அடைகிறேன். தவம் செய்ய அனுமதி தாருங்கள் எனக்கேட்டான். 8 வயது கூட நிரம்பாத நீ எவ்வாறு தவம் செய்வாய் உன்னைப் பிரிந்து எவ்வாறு நிம்மதியாய் இருப்பேன் என்று தாய் கூறினாள். தாயை சமாதானப்படுத்திய பின் துருவன் காட்டை அடைந்து தவம் புரிந்தான். அப்போது ஏழு முனிவர்கள் இவனைக் கண்டனர். அவர்களைக் கண்ட துருவன் வணங்கி நின்றான். அம்முனிவர்கள் நீ யார்? ஏன் தவம் புரிகின்றாய்? என்று கேட்டனர். துருவன் தன் வரலாற்றைக் கூறி தன் எண்ணம் நிறைவேற உதவும்படி கூறி வணங்கினான். முனிவர்கள் அவனைப் பார்த்து '' அன்பனே ! ஸ்ரீமந் நாராயண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியைக் குறித்து தவம் புரிந்தால் உன் விருப்பம் நிறைவேறும். பிரமதேவரும் மனு எனும் மன்னனும் நாராயணனைக் குறித்து தவம் செய்து பெருமை பெற்றிருக்கின்றார்கள். அவ்விருவரும் பெற்று பயன டைந்த பன்னிரண்டு எழுத்துக்களையுடைய மந்தி ரத்தை உனக்கு உபதேசிக்கின்றோம். நீ அம்மந்திரத் தால் நாராயணனைக் குறித்து தவம் செய்து மேலான பதவியை அடைவாயாக'' என்று சொல்லி அம்மந்தி ரத்தை உபதேசித்து சென்றனர்.

## துருவன் தவம் செய்தமை

மதுவனம் என்னும் இடத்தை அடைந்து துருவன் தவம் புரிந்தான். தவச்சிறப்பால் அவன் உடலில் ஒளி உண்டாகி எங்கும் பரந்தது. அதைக்கண்டு எல்லோரும் அதிசயித்தனர். இந்திரன் இவன் தவத்தால் தன் பதவிக்கு ஆபத்து வருமோ என அஞ்சினான். துருவன் சிறுவனாதலால் பேய்க் கூட்டத்தைவிட்டு அச்சுறுத்தி அவன் தவத்தைக் குலைக்க நினைத்தான். இந்திரன் தன் பேய்க்கூட்டங்களை ஏவினான். அவை சென்று துருவனை அச்சுறுத்தின அவன் அஞ்சாது தவம் புரிந் தான். ஒருபேய் சுநீதியின் வடிவுடன் சென்று மகனே தவத்தை விட்டு என்னுடன் வருக என்று அழைத்தது. அதற்கும் கலங்காது அவன் தவம் புரிந்தான். பேய்கள் திரும்பிச் சென்று இந்திரனிடம் அவன் தவத்தைக் கலைக்க இயலாது என்று கூறின அதுகேட்ட இந்திரன் அச்சத்துடன் பிரமதேவரிடம் சென்றான் இந்திரன் பிரதேவரை வணங்கி மனுக்குலமைந்தன் எதன் பொருட்டு தவம் செய்கின்றான் எனக் கேட்டான். இந்திரன் அச்சத்தைக் கண்ட பிரமதேவர் இந்திரனே! அச்சிறுவன் தவத்தால் உனக்கு நன்மையே உண்டாகும். தேவர்களிலும் மேலான நிலையைக் குறித்தே அவன் தவம் செய்கிறான். அவன் எண்ணம் நிறைவேறியதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்கு நன்மையும், பெருமையும் உண்டாகும் என்று கூறினார். அது கேட்ட இந்திரன் அச்சம் நீங்கித் தன்னுலகை அடைந்தான். பின் துருவனின் தவத்துக்கிரங்கித் திருமால் அவன் முன் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தருளினார். நாராயணர் துருவனை நோக்கி ' உன் தவத்தால் மகிழ்ந்தேன் நீ விரும்பியதைக்கேள் ' என்றார். மகிழ்ச்சியடைந்த துருவன் அரிய தோத்திரத்தால் நாராயணரைத் துதித்தான். அத்துதிக்கு மகிழ்ந்த திருமால் 'துருவனே நீ மிக மேலான பதவியை விரும்பினை என்பதை நான் அறிவேன். உலகில் மனிதருக்கு அவசியமானது உணவு உணவுக்குரிய நெல் மழையினால் உண்டாகும். மழைக்கு காரணம் சூரியனும் பிற கிரகங்களும் நட்சத்திரங்களுமாம். இக்கிரகங்கள் முதலியன காற்றால் சுழலும் சக்கரம் ஒன்று வடதிசையில் உள்ளது. அதனை இயக்கும் மேலான பதவியைப் பெற்று சிறப்புடன் விளங்குவாயாக உன் தாயுடனே கூடி இப்பதவியில் எவரும் மதிக்கதக்கதாக வாழ்வாயாக. சிவபெருமான் அருளால் இதுவரை நான் இப்பதவியை வகித்தேன்.' என்று அருளிய நாராயணர் துருவனுக்குப் பின்னும் ஒரு செய்தியைக் கூறுகின்றார்.

முற்காலத்தில் சலந்தராசுரனை அழிக்கச் சிவபெருமான் உண்டாக்கிய சக்கரப்படையை நான்பெற விரும்பினேன். அதன் பொருட்டுத்தினமும் ஆயிரம் மலர்களால் சிவனை அருச்சித்தேன். ஒரு நாள் ஒரு மலர் குறைய என் கண் ஒன்றை இழந்து அருச்சித்தேன். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அச்சக்கரத்தை எனக்கு அருளினார். அச்சிவபெருமான் அருளால் பூமி சுவர்க்கம் பாதாளம் எல்லாவற்றையும் காக்கும் கடவுளாக நான் விளங்குகின்றேன். நீயும் என்னிடம் பெற்ற பதவி நிலைக்கும் படி சிவபெருமானை வணங்கி அவர் அருள் பெறுவதவசியம். காசியில் கார்த்திகை மாதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் பெருவிழாவைத் தரிசித்து வணங்க விரும்பிய நான் இப்போது காசிக்கு செல்கின்றேன். நீயும் என்னுடன் வருக என்று கூறி கருட வாகனத்தில் நாராயணர் காசியை நோக்கிச் சென்றார். காசியைக்கண்டதும் கருடனினின்று இறங்கினார். காசியை அடைந்து மணிகன்னிகையில் தீர்த்தமாடி இருவரும் விசுவநாதரை வணங்கினர். பின் திருமால் காசியில் சிவலிங்கம் ஒன்றைத் தாபித்து பூசிக்கும் படி துருவனுக்குக் கூறினார். அப்படியே செய்து வணங்கிய துருவன் முன் சிவபெருமான் வெளிப்பட்டு சிறுவனே நீ இப்பதத்தில் சிறப்புடன் விளங்குக என்றருளி மறைந்தார். சிறுவனாம் துருவன் தாயுடன் அப்பதத்தில் இருக்கின்றான். துருவன் கதை கேட்பவரும் காசியில் துருவன் அமைத்த குண்டத்தில் பிதிர்கடன் செய்பவரும் பாவநீக்கமும் விஷ்ணு பதமும் பெறுவர்.

# சிவசன்மா மகலோகம் முதலிய கண்டமை

துருவமண்டலத்தை அடுத்து விளங்குவது மகலோகமாகும். ஸ்ரீமந் நாராயணரை வணங்குவதில் தம் வாழ்நாளைப் பயன்படுத்தியவர்கள் மகலோகத்தை அடைந்து நீண்ட காலம் இன்புறுவர். மகலோகத்துக்கு அடுத்து விளங்குவது சனலோகமாகும். சனகர் முதலிய முனிவர் சனலோகத்தில் வாழ்வர். அடுத்து விளங்குவது தவலோகமாகும். யோகத்திலிருந்து தம் வாழ்நாளைப் பயனுடையதாக்குபவர் - மாத உபவாசம், பட்சஉபவாசம் சருகு முதலிய உண்ணல் மூச்சை அடக்கி பிரணாயமத்திலிருத்தல் முதலிய முயற்சிகளால் தவம் செய்து மனத்தை அடக்கி உயிரை வலிமையும் ஒளியும் உடையதாகச் செய்பவர் இருக்கும் பெருமை உடையது தவலோகமாகும். தவலோகத்திற்கு அப்பால் விளங்குவது சத்தியலோகம் எனப்படும் பிரமலோகம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசன்மா விஷ்ணுகணத்தவருடன் செல்லும் போது பிரமதேவர் சிவசன்மாவிற்கு காட்சி கொடுத்தார். சிவ சன்மா உடனே பிரமதேவரை வணங்கினார். பிரம தேவர் சிவசன்மாவை வாழ்த்திவிட்டு பின்வருமாறு கூறினார். ஸ்ரீமந்நாராயணனுக்கும்மாயபுரி( ஹரித்துவரி) யில் இறந்த பெருமையால் வைகுண்டம் செல்லும் சிவசன்மாவே உன்னால் எல்லா உலகங்களும் நேரில் அறியப்படுதல் ஆச்சரியமன்று வேதம் வல்லவனே ஆடஹேச உரித்திரன் உறையும் உலகிலும் மேலானது இலாவளிதம் எனும் இடமாகும். இலாவளிதம் எனப் படும். ஏழு தீவுகளில் சம்புத்தீவு ஒன்றாகும். சம்புத்தீவு ஒன்பது கண்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த ஒன்பது கண்டங்களில் ஒன்று பரதகண்டம் எனப்படும். இப்பரத கண்டமே கருமபூமி என்ற பெருமைக்குரியது மற்றைய எட்டு கண்டங்களும் இன்பதுன்பங்களை அனு பவிப்பதற்கு மட்டும் உரியனவாகும். இமயமலையின் தெற்கில் விளங்கும் ஒன்பதாயிரம் யோசனை பரந்த இடம் உள்ளது. இமயத்திற்கும், விந்தத்திற்கும் இடைப்பட்டபகுதி புண்ணியபூமி என்று புகழப்படும். யமுனை நதிக்கும் கங்கைக்கும் இடைப்பட்ட நிலம் அந்தர்வேதி என்று புகழப்படும். இப்படியான புண் ணிய பூமிகளில் குருஷேத்திரம் நைமிஸாரண்யம், பிர யாகை என்பவை சிறப்புடையனவாகும். இவைகளிலும் மிகச்சிறப்புடையது காசியாகும். காசியிலே இறப்பவர் நீ விரும்பும் முத்தியை எளிதில் அடைவர். நீ முத்திய டைய உள்ள சந்தர்ப்பத்தை இந்த விஷ்ணு கணநாதர் உனக்கு கூறுவர் என்றார். விஷ்ணு கணநாதர் சிவ சன்மாவிற்கு அண்டத்தினளவு முதலியவற்றை கூற லானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டத்தின் அளவும் திருமால் முடிசூட்டியமையும்

பூமியின் மேல் விளங்கும் சூரியமண்டலம் இலக்கம் யோசனை விசாலமுடையது. சந்திரமண்டலம், நட்சத்திரமண்டலம் தனித்தனியாக இலக்கம் யோசனை விசாலமானவையாகும் புதன் மண்டலமும் இலக்கம் யோசனை சுக்கிரமண்டலம், செவ்வாய்மண்டலம், வியாழமண்டலம், சனிமண்டலம் என்பன தனித்தனி இரண்டு இலக்கம் யோசனை ஆகும். சப்தரிஷி மண்டலமும் அதன் மேலுள்ள துருவமண்டலம் ஒவ்வொரு இலக்கம் யோசனை. புவலோகம் பதினைந்து இலக்கம் யோசனை சுவலோகம் எண்பத்துஐந்து இலக்கம் யோசனை மகலோகம் - இரண்டு கோடி யோசனை சனலோகம் எட்டு கோடி யோசனை தவலோகம் பன்னிரண்டு கோடி யோசனை சத்தியலோகம் பன்னிரண்டுகோடி யோசனை சத்தியலோகத்தின் மேல் விளங்கும் பிரமபதம் மூன்று கோடி யோசனை அதன் மேலுள்ள சிவலோகம் நாலு கோடி யோசனைகளாகும். இதன் மேலுள்ள அண்டமுகடு ஒருகோடி யோசனையாகும். இதுவரை சொல்லப்பட்ட அளவு ஐம்பது கோடி யோசனையாகும் இந்த அண்டம் முதலியவற்றிற்கு ஆதாரமாக உள்ளவரே காசியிலுள்ள விஸ்வநாதர்.

சிவபெருமான் நாராயணரை அன்புடன் நோக்கி, ''சுத்தாசுத்தமாயை அசுத்தமாயை எனும் இருமாயையிலும் உண்டான சராசரப்பொருள்களில் வியாபித்திருந்து நீயே முத்தொழில்களையும் புரிக இப்படிப் புரிதற்கு வேண்டிய சாமரை, சிங்காசனம், பொன்முடி முதலியவற்றையும் வைகுந்த நகரத்தையும் நாம் உனக்கு உதவுகின்றோம்''. என்று கூறி பல பெருமைகளையுடைய வைகுண்டத்தில் திருமாலுக்குச் சிவபெருமானே முடிசூட்டி அருளினார். பின் ''திருமாலே! உம்மை வணங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்க்கு அறம்,பொருள், இன்பம்,என்பவற்றை அருள்க! என கூறி தேவராலும், அசுரராலும் வெல்ல இயலாத மாயாவல்லபத்தையும் உதவினார். இப்படி அருள் புரிந்துவிட்டு சிவபெருமான் கயிலையை அடைந்தார். நீலவண்ணராகிய திருமால் சிவபெருமானின் திருவடி களைத் தியானித்து வைகுண்டத்தில் விளங்குகின்றார். கற்பக மரங்கள் நிறைந்த தேவர்களுக்கு ஆதரவு செய்தும் அசுரர்களை அடக்கியும் பேராற்றலுடன் திருமால் விளங்குகின்றார். சிவசன்மாவே நீ மாயாபுரி யில் உயிர்விட்ட காரணத்தால் வைகுண்டத்திலுள்ள அரமகளிர் உபசரிக்க நீண்டகாலம் மகிழ்ந்திருப்பாய். பின் பூமியில் பிறந்து காசியை அடைந்து முத்தி அடைவாய் என்றனர்.

## சிவசன்மா முத்தி அடைந்த வரலாறு

சிவசன்மாவே வைகுண்ட வாழ்வு நிறைவெய்திய பின்னர் நீ பூமியில் நந்திவர்த்தனம் எனும் நாட்டில் அரசனாகப் பிறப்பாய். உலகமன்னர் எல்லாம் வணங் கும் தலைமை பெற்று விருத்தகாளன் எனும் பெயரு டன் வாழ்வாய்.அப்படி வாழும்காலத்தில் அனங்கலேகை முதலிய பலரைத் திருமணம் புரிந்து மகிழ்வாய். அப் போது உனக்கு முன்னூறு பிள்ளைகள் பிறப்பர். பிற நாட்டரசர் திறை செலுத்தி வணங்க நீ வாழும் காலத்தில் காசி யாத்திரையால் மீண்ட முனிவர்கள் கங்கையுடன் வந்து உன்னிடம் காசிப் பெருமைகளை எடுத்துரைப்பர். அதைக்கேட்டவுடன் முன் நீ காசியாத் திரை செய்தமை இப்போ நாம் உனக்கு கூறிய உண்மை ஆகியன உன் ஞாபகத்திற்குவரும். உடனே அம்முனி வர்களைக் கௌரவித்து மகனுக்கு முடிசூட்டி அரசுரி மையை வழங்கி விட்டு உமையொருபாகன் உறையும் காசியை அடைவாய். அங்கு பல தானதர்மங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தபின் ஒருசிவாலயம் அமைந்து சிவலிங்கம் தாபித்து பூசிப்பாய். அங்கு ஒரு சிவயோகி வருவார். அவர் உன் வரலாற்றை உன்னிடம் கேட்பார் என் பெயர் விருத்த காலமன்னர். இவள் என் மனைவி. இலிங்கத்தின் பெயரை அறியேன். இவ்வாலயம் என்னால் அமைக்கப்பட்டதே என்று கூறுவாய். உடனே அச்சிவயோகி அவ்வாலயத்தருகில் உன்னால் அமைக்கப்பட்ட குளத்திலிருந்து அருந்த நீர் தரும்படி கேட்பார். நீயும் அன்புடன் வழங்குவாய் அந்நீரை அருந்தியதும் அச்சிவயோகி சிவபெருமானாக மாறி உனதும் உன் மனைவியினதும் வரலாறுகளைத் தெரிவிப்பார். பின் அச்சிவலிங்கத்திற்கு விருத்தகாலேசவரலிங்கம் எனபதே பெயர் என்றும் அவ்விலிங்கத்தை வணங்குபவர் முத்தியடைவர் என்றும் கூறி உன்னையும் உன் மனைவியையும் அந்த லிங்கத்திலே ஐக்கியமடையும்படி செய்து தானும் அந்த லிங்கத்தில் மறைவார். என்று சிவசன்மாவின் எதிர் காலத்தை விஷ்ணுகணநாதர் கூறினார். பின் அந்த முறைப்படியே சிவசன்மா காசியில் முத்தியடைந்தான் என்ற வரலாறு முழுவதையும் அகத்தியர் லோபா முத்திரைக்குக் கூறினார்.

# அகத்தியர் முருகனை அடைந்தமை

அகத்தியர் லோபாமுத்திரையோடு முருகனை அடைந்தமை, முருகனிடம் காசி மகிமை கேட்டமை முதலியவற்றை எனக்கு வியாசர் கூறியபடி உங்களுக்குத் தொடர்ந்து சொல்லுகின்றேன் என சூதர் நைமிச முனிவர்களுக்குத் தொடர்ந்து கூறினார்.

ஸ்ரீ சைலமலையிலிருந்து தன் மனைவியோடு புறப்பட்ட அகத்தியர் முருகப்பெருமான் அருளுடன் எழுந்தருளியுள்ள உலோகிதம் என்னும் மலையை அடைந்தார். அகத்தியர் மலைமீது எழுந்தருளியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலாயுதரராகிய முருகப்பெருமானை மலர் சொரிந்து பூசித்தும் தன் கண்களின் ஆனந்தக் கண்ணீர் பெருக தோத்திரம் பண்ணி அப்பெருமான் திருவடிகளில் தன் தலை பொருந்த வணங்கினார். தவத்தில் சிறந்த அகத்தியரே ! எழுக என்றார் முருகன். பின்னும் அகத்தியரே நீர் விந்தமலையை அடக்கிய வரலாற்றையும் நான் அறிவேன். காசியில் வாழ்பவர் மேனியைத் தீண்டினாலும் நன்மையுன்டாகும். நீர் அங்கிருந்து அரிய தவத்தைப் புரிந்த பெருமை உடையவரல்லவா என்று சொல்லி அம்முனிவரின் முதுகை முருகப்பெருமான் தடவியருளினார். அகத்தியரே ! காசியின் பெருமையே பெருமை மூடாத ஒன்பது துவாரங்கள் உடைய உடம்பில் உயிர் தங்குவதுதான் பெரிய அதிசயமாகுமென்பதை மதித்து காசியில் இருப்பதே சிறப்பாகும். ஐம்புலன்களையும் அடக்கி பலனில் பற்றின்றி யாகங்கள் செய்தல் எட்டுவகையான யோக சாதனைகள் புரிதல். என்பனவற்றிலும் பார்க்க, காசி காசி என்று கூறுபவர் மேலான பேற்றை அடைவர். இவ்வாறு கூறிய முருகப்பெருமான் உமையம்மையாருடன் சிவபெருமான் மகிழ்ந்திருக்கும் காசியை நினைத்துக் கொண்டு அமைதியாக இருந்தார். அப்போது அகத்தியர் முருகப்பெருமானை வணங்கி சிவபெருமான் உமையம்மையாருக்கு காசிப்பெருமைகளைக் கூறும்போது அம்பிகையின் மடியில் இருந்து கேட்டவற்றைக் கூறியருள வேண்டும் என்று கேட்டார். அது கேட்ட முருகப்பெருமான், அகத்தியரே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் முதலாக எண்ணப்படுகின்ற தத்துவங்கள் எல்லாவற்றையும் கடந்த மகாதேவரான சிவபெருமான் மகிழ்வுடன் இருக்கும் அருட்பெருமை மிக்க காசியின் பெருமைகளை ஆயிரம் முகம் உடையவராலும் கூற இயலாது என்றால் ஆறுமுகங்களை மட்டும் உடைய என்னால் எப்படி முழுமையாகக் கூற முடியும். காசிநகரின் தோற்றத்தையும் அதற்கு காசி, மாமயானம், வாரணாசி, உருத்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசம், ஆனந்தகானம் என்னும் பெயர் உண்டானமை யும் மணிகன்னிகை முதலியவற்றின் பெருமைகளையும் கூறுகின்றேன் கேட்பீராக என்று முருகப்பெருமான் கூறத்தொடங்கினார்.

## மணிகன்னிகையின் சிறப்பு உரைத்தமை

சூரிய சந்திரன் கிரகங்கள் பலவான உலகங்கள் பிரமவிட்டுணுக்கள் முக்குணங்கள் விந்து நாதம் ஆகிய எல்லாம் ஒடுங்கியிருந்த காலத்தில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் யான் முதலில் உன்னைத் தோற்று வித்தேன். அப்படி என்னால் தோற்றுவிக்கப்பட்ட நீயும் நானும் நன்கு எழுந்தருளியிருப்பதற்காக முதலில் நான் காசியைப் படைத்தேன் என்று என்னை மடியில் வைத்திருந்த அம்பிகைக்கு சிவபெருமான் கூறினார். உலக அழிவுக்கான சலப்பிரளயம் என்னும் ஊழிக் காலத்தில் எண்ணில்லாத உலகங்கள் அழியும் அப்படி அழியும் போதும் சிவபெருமானும் உமையம்மையாரும் இக் காசியினை விட்டு நீங்காது இருப்பர். அப்படி இருப்பதால் காசிக்கு அவிமுத்தம் என்ற பெயருண்டா னது. ஊழிக்காலத்தில் சிவனும் உமையும் விட்டு நீங்கா தது என்பதே அவிமுத்தம் என்னும் சொல்லின் பொரு ளாகும். வேதங்களை உண்மையென ஏற்றுக் கொள்ளா தவர்க்கு சொல்லக் கூடாத இரகசியம் என்னவென்றால் தன்னிடத்திருப்பவர்க்குத் தினமும் சிவானந்தத்தைக் காசி வழங்குவதால் காசிக்கு ஆனந்தகானம் எனவும் ஒரு பெயர் உண்டு என்பதாகும்.

முதலில் உமையம்மையைத் தோற்றுவித்த பின்னர் சிவபெருமான் ஒரு ஆணைத் தோற்றுவிக்க வேண்டும் என்று கருதினார். இப்படியான எண்ணத்துடன் தனது இடப் பாகத்தைப் பார்த்தார். உடனே ஒரு ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றினார். அவரைச் சிவபெருமான் பார்த்து உனக்கு நாராயணன் என்று பெயர் அமைவதாக நீ உன் சுவாசத்தின் உதவியாலும் வேதத்தின் துணையாலும் அறியவேண்டியவற்றை அறிவாயாக என்று கூறிவிட்டு நாராயணரின் கண்ணுக்குப் புலப்படாத வண்ணம் மறைந்தருளினார். உடனே திருமால் தனது க்சகரப்படையால் அவ்விடத்தில் ஒரு குளம் உண்டாக்கி தன்வியர்வையாலேயே அதனை நிரப்பி அதன் கரையிலிருந்து ஐயாயிரம் வருடம் தவம் புரிந்தார். தவத்துக்கு இரங்கிய சிவபெருமான் உமையம்மையுடன் வெளிப்பட்டுத் திருமாலின் தவத்தை வியந்து தலையசைத்துக் கொண்டு நீ விரும்பும் வரத்தைக் கூறுக என்றார். நாராயணரும் சிவபெருமானது திருவடிகளில் நீங்கா அன்பையே வரமாக யாசித்தார். சிவபெருமான் அவ்வரத்தை வழங்கி விட்டு நாராயணரே உம் தவத்தால் மகிழ்ந்து என் தலையை அசைத்த போது என் காதணியிலுள்ள ஒளிமிக்க ரத்னமணி இக் குளத்தில் வீழ்ந்ததால் இக்குளத்திற்கு மணிகன்னிகை என்னும் பெயர் விளங்குவதாக இதில் நீராடுபவர் முத்திப்பேற்றை அடைவர். நால்வகையான பிறவிகளையும் அடையும் ஜீவராசிகள் இக்குளக்கரையில் உயிர்விடுமாயின் யமனை அடையாது வீடு பேற்றை அடையும். இக் காசியில் இருந்து நூறுயோசனைக்கு அப்பாலிருந்தாலும் காசியின் நினைவுடன் உயிர் விட்டால் இறந்த பின் சுவர்க்க வாழ்வில் இன்புறுவர். சுவர்க்க வாழ்வு நிறைவெய்திய பின் அவர்கள் காசியை அடைந்து முத்தியையும் அடைகுவர். உலகில் வாழ்பவர் தம் வாழ்நாளை பெண்ணாசை முதலியவற்றினால் வீணாக்கினாலும் மரணத்தை சமீபித்த காலத்திலேனும் காசியை அடைந்து உய்தியடைதல் நன்று அப்படியில்லையெனில் அவர் மனிதராகப் பிறந்தும் வீணாணவரேயாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசியின் சிறப்பு உரைத்தமை

முதலாவது யுகத்தில் யோகசாதனையினாலேயே முத்தியடைவர். இரண்டாவது யுகத்தில் அரிய தவத்தை மேற்கொண்டு முத்தியடைவர். மூன்றாவது யுகத்தில் ஞானத்தால் முத்தியடைவர். கலியுகத்தில் அன்புடன் கங்கையில் நீராடுதலால் முத்தியடைவர் அன்போடு சிவலிங்கபூசை செய்தவர். எல்லாத் தேவரையும் பூசித்த பயனை அடைதல் போல் கங்காநதியில் நீராடுபவர் உலகிலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிய பயனைப் பெறுவர். தெய்வீகம் மிக்க கங்கையில் நீராட எண்ணிய அளவிலேயே பாவங்கள் விலகிவிடும். ஆனால் மனஅடக்கமும் தூய்மையும் உடையவராகச் செல்பவரே காசியை அடைந்து கங்கையில் நீராடுதலால் உரிய பேற்றைப் பெறுவர்.

ஒரு கையில் கும்பம் ஏந்தியவராயும் ஒரு கையில் நீரைச் சொரிபவராயும் ஒரு கையில் அபய முத்திரையாகவும் கொண்டு கோடி சந்திரப்பிரகாசம் உடையவராகிய கங்காதேவியை மனதில்தியானித்து அருக்கியம் முதலிய உபசாரங்களைக் கங்காநதியில் புரிதல் வேண்டும் மனத்தெளிவுடன் என்னை (சிவபிரானை)யும் பிரமதேவரையும், திருமாலையும், இமயமலை அரசனையும் பகீரதனையும் சந்தனம் அட்சதை (அரிசி) மலர் முதலியவைகளால் அன்போடு வணங்க வேண்டும். வாழைப் பழம், பயறு, துவரை முதலியவற்றை அந்தணருக்குத் தானமாக வழங்க வேண்டும். மீன், ஆமை, அன்னம் தவளை முதலியவற்றை பொன்னாலேனும் வெள்ளியாலேனும் அரிசிமாவாலேனும் செய்து கங்கையில் விட வேண்டும் இந்த முறைப்படி கங்கையைப் பூசித்தவர் கொடிய பாவங்களில் நீங்கி ஆத்மஞானம் பெற்று பேரின்பமயமான முத்திப் பேற்றையும் எளிதில் அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கையில் எலும்பு வீழ்ந்தமை

இறந்தவரின் எலும்பு கங்கையாற்றில் எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் அவ்வெலும்புக்கு உரியவர் சுவர்க்க இன்பத்தை அனுபவிப்பர். இவ்வாறு சிவபெருமான் கூறக்கேட்ட நாராயணன் இறந்தவர் எலும்பு கங்கையை அடைவதால் அவ் எலும்புக்குரிய வர் இன்புறுவர் என்பதை நன்கு தெளிவுண்டாகும் படி கூற வேண்டும் எனக்கேட்டார். அதற்கு பின்வரும் வரலாற்றை சிவபெருமான் கூறுகின்றார்.

முன்பு கலிங்க தேசத்தில் ஒரு பிராமணன் இருந் தான். அவன் இளமையில் வேதம் முதலியன கற்றிருந் தும் தீயஒழுக்கம் உடையவனாய் இருந்தான். வறுமை மிக்க கைக்கோளன் ஒருவனின் மனைவியிடம் தொடர் புள்ளவனாய் எல்லாத் தீமைகளையும் செய்த அப் பிராமணன் ஒரு நாள் ஒரு காட்டில் நித்திரை செய் தான். அப்போது அவனை ஒரு புலி கொன்று விட்டது இறந்த பிராமணனின் இடது காலை ஒரு வலிய கழுகு உணவுக்காகத் தூக்கிச் சென்றது. ஆகாய வெளியில் அதனைக் கண்ட வேறொரு கழுகு அக்காலைத்தான் பறிக்க முயன்றது. இரு பறவைகளிடையே உண்டான சண்டையில் அக்கால் தவறிக் கங்கையாற்றில் விழுந் தது. யமதூதர் கொடுமைகள் யாவும் செய்த இப்பிரா மணன் கற்பகாலம் ரௌரவ நரகில் துன்புறவேண்டும் என்று தீர்மானித்து அந்நரகில் அவனை வருத்திக் கொண்டிருந்த வேளை கழுகினால் அவனது இடக்கால் கங்கையாற்றில் போடப்பட்டது. உடனே சிவகணங் கள் அவன் இருந்த நகரத்திற்குச் சென்று அவனை விடுவித்து சுவர்க்க உலகில் சேர்த்தார்கள் இவ்வாறு புனிதம் மிக்க கங்கையாற்றங்கரையில் பசுவை அலங் கரித்து அந்தணர்க்குத் தானம் செய்தால அப்பசுவின் உடலில் எத்தனை மயிர் உளதோ அத்தனைகற்பகாலம் இடையூறற்ற இன்பத்தை சுவர்க்கத்தில் அனுபவிப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கங்கையின் ஆயிரம் நாமம் உரைத்தமை

கங்கையில் எலும்பு விழுவதால் உண்டாகும் சிறப்பைக்கேட்ட நாராயணர் சிவபெருமானை நோக்கிப் பெருமானே கங்கையை அடைந்து நீராட வாய்ப்பில்லாதவர் எவ்வாறு கங்கா நதியில் நீராடும் பலனை அடைவது என்று கேட்டார்.

அமுதோதகை அச்சுதை, அனகை, அதுலை, அனந்தை, அபிராமி கமலை, கவுரி, கந்தவதி, கங்கை கரந்தை, கல்யாணி, உமை, யாமளை, ஆனந்தவல்லி, ஏகை, உதாரை, ஓங்காரை, விமலை, தாரை, பராநந்தை வி்பூதி, தேவி, தயாதாரை, கருணை, அகோரை, பராசத்தி, காத்தி, துர்க்கை, நிராலம்பை, வரதை, காமரூபை திரிபதாகை, அபயை, வசுதாரை, பரை, ஈச்சுரவல்லபை சொரூபை, பானுமதி, சூலினி, விசையை, விரதை, அனாதை, நாததவரூபை, மாதா, விபாவரி, சத்தி, விந்தை சீலவதி, ஆசாரை, குணாதீதை, சித்திரரூபை, லாமதேவி, மந்தாகினி, வாணிபத்திரை, லீலாவதி, சாந்தை, பவானி, பகீரதி, நிமலை, முத்தி, அருள்மானினி, வேதமுதல், ஆரியை, காயத்திரி, வேகவதி அம்பிகை ஐந்திரத்துதி, சந்தினி, சானலி, போகவதி, கலாவதி, யோகினி, மாதவி, புண்ணியை, என்பன முதலாக உள்ள கங்கையின் ஆயிரம் நாமங்களையும் வேறு சிந்தனையின்றி கூறி வணங்கினால் பிறவித் துன்பத்தை போக்கும் கங்கைநதியில் நீராடிய புண்ணியம் உண்டாகும் எனக் கூறியருளினார் சிவபெருமான். அவர் பின்னரும் திருமாலைப் பார்த்து கங்கையின் ஆயிரம்நாமங்களையும் எழுதி வீட்டில் வைத்திருத்தால் புகழ்மிக்க பிள்ளைகள் பெரும் பொருள் முதலியன அடைந்து புகழுடன் வாழ்வர் என்று கூறியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரணாசியின் சிறப்புரைத்தலை

தன் மூதாதையர் ஆகிய சகரர் முத்தியடைதற்காக பகீரதன் கங்கையைக் கொணர்ந்ததாலும் மணிகன்னிகை எனும் தீர்த்தம் இருப்பதாலும் காசியின் பெருமை அதிகரித்துள்ளது. நீராடுபவரின் பாவத்தைப் போக்கும் அசி எனும் ஆறு உள்ளது அத்துடன் கங்கா நதி காசியில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்கின்றது. இக்கங்கை காசி எனும் முத்திச் செல்வத்துக்குக் காவலாக உள்ளது. தேகளி எனும் பெயருடைய விநாயகர் காசியின் மேற்கில் காவலாக நியமிக்கப்பட்டுள்ளார். பாவிகள் எக்காரணத்தைக் கொண்டும் காசியை அடைதல் இயலாது. சிவானுக்கிரகம் ஒன்றே காசியை அடைதற்கு அவசியம் சிவனருள் பெறாதவர் காசியை அடைய இயலாது என்னும் உண்மையை உணர்த்தும் வரலாறு ஒன்றை முருகப் பெருமான் அகத்தியருக்குக் கூறினார்.

இராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள சேதுக்கரையில் தனஞ்செயன் எனும் ஒரு வணிகன் வாழ்ந்தான். தாய், தந்தையரை வணங்குதல் நீதி, இரக்கம், புகழ் செல்வம், அழகு முதலிய சிறப்புகளை உடைய அவன் ஒரு விஷ்ணுபக்தன் இவனது தாய் முதுமையுற்று இறந்தாள் தாயின் கடமைகளைச் செய்த தனஞ்செயன் கற்பு நெறி தவறிய தன் தாய் மேன்மையுற என்ன செயலாம் எனச் சிந்தித்தான். தாயின் எலும்பை காசியில் உள்ள கங்கையிற் சேர்தால் அவள் நற்கதி அடைவாள் என்று அப்படிச் செய்ய முனைந்தான். எலும்பையும் சேகரித்துக் கொண்டு வேண்டிய பொருட்களுடன் புறப்பட்டான். நீண்டதூரத்தைப் பல நாள் நடந்து கடந்தான் அவனுக்கு காய்ச்சல் வந்தது தனக்குத் துணையாகக் கூலி கொடுத்து ஒரு வழிப் போக்கனை அமர்த்திக் கொண்டு பிரயாணத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தான் வழியில் காடு இருந்தது. வழிப் போக்கன் தான் சுமக்கும் பொதியில் அதிக பொருள் இருக்கும் என நினைத்து அத்துடன் வணிகனை விட்டு நீங்கினான் அப்பொதியை அவிழ்த்துப் பார்த்தபோது அதில் எலும்பும் சில துணிகளுமே இருந்தன. அவன் துணிகளை எடுத்துக்கொண்டு எலும்பை எறிந்துவிட்டுச் சென்றான். தனஞ்செயன் அவனைத்தேடி எப்படியும் எலும்பைப் பெறவேண்டும் என்று கருதினான். வழிப்போக்கனின் காலடி அடையாளத்தைத் தொடர்ந்து சென்றான். ஒரு வீட்டில் தன் துணிகள் இருப்பதைக் கண்டான். அங்கு சென்ற போது அவ் வழிப்போக்கனின் மனைவி இருந்தாள். அவளிடம் தனஞ்செயன் நடந்தவற்றைக் கூறித் தாயின் எலும்பைத் தந்தால் பொன்தருவதாகத் தெரிவித்தான். அவள் கணவனை அழைத்துக் கூற அவனும் நாணத்துடனே எலும்பைத் தான் எறிந்த இடத்திற்கு தனஞ்செயனுடன் சென்றான். அங்கு சில நாள் முயன்று தேடியும் அவ்வெலும்புகள் கிடைக்கவில்லை. கடைசியில் வணிகன் தான் மட்டும் காசியை அடைந்து கங்கையில் நீராடி வணங்கிவிட்டு தன்னிடத்தை அடைந்தான். எலும்புடன் காசியைச் சமீபித்த பின்னரும் அதனைதேடி அவ்வணிகனால் கங்கையில் சேர்ப்பிக்க முடியவில்லை. இத்தகைய பெருமைமிக்க காசியில் வரணை எனும் ஆறும் அசி எனும் ஆறும் விளங்குதலால் காசிக்கு வாரணாசி எனவும் ஒரு பெயருண்டு இப்படியான காசியில் உள்ள கங்கையில் நீராடுபவர் சிவவடிவம் பெற்றுச் சிவலோகம் எய்துவர். முன்பு ஒரு முறை பிரமதேவர் வைகுண்டம் ஈறான சகல உலகுகளையும் தராசின் ஒரு தட்டிலிட்டு காசியை மட்டும் தராசின் மற்றத்தட்டிலிட்டு நிறுத்தார். அப்போது காசி தாழ்ந்து நிற்கப் பிற உலகுகள் உயர்ந்து பாரமில்லாது காணப்பட்டது. உலர்நிலத்தில் விதைமுளை கொள்ளாமை போல காசியில் இறப்பவர் பிறவியடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார். எப்படியானவராயினும் காசியில் இறப்பவர் சிவபெருமானின் கண்பார்வையில் அகப்படுதலால் முத்தியையே அடைவர். இக்காசியில் வாழ்பவர் உண்மையில் சிவவடிவு உடையவரேயாவர். ஆதலால் காசிக்குப் புவனகோடி என்ற பெயரும் உருத்திரவாசம் என்ற பெயரும் உண்டு. காசியானது தன்னிடத்தே இறப்பவருக்கே முத்தியளிக்கும் என்றிருக்கவும் காசியைவிட்டுச் செல்பவர் உண்மையில் கொடிய பிறவித்துன்பம் மரண வேதனை யமவேதனை என்பவற்றைப்பற்றி அறியாதவர் என்றே சொல்லவேண்டும். காசியில் எல்லாப் பூதங்களும் ஒடுங்குதலால் இது மாமசானம் என்றும் சொல்லப்படும். பூமி நீரிலும், நீர் நெருப்பிலும் ஒடுங்கும் நெருப்பு காற்றிலும் காற்று ஆகாயத்திலும் ஒடுங்கும் ஆகாயம் அகங்காரத்திலும் அகங்காரம் புத்தியில் ஒடுங்கும் புத்திபிரகிருதியில் ஒடுங்கும் பிரகிருதி மயங்கிய புருடனில்ஒடுங்கும் புருடனே உடலில் உள்ளபோது சீவன் என்றும் உயிர் என்றும் சொல்லப்படும்.

பிரமவிட்டுணுக்களின் ஆயுள் முடியும் பிரளயம் பிராகிருத பிரளயம் எனப்படும். அப்பிரளய காலத்தில் உயிர்க்குயிராயிருக்கும் சிவபரம்பொருளால் காசி காக்கப்படும் பரம்பொருள் என்றும் சிவபெருமான் என்றும் குறிக்கப்படும் காசி விசுவநாதப் பெருமானே உயிர்களுக்கு ஆணவத்தைப் போக்கிப் பேரின்பம் வழங்குபவர். அந்தகைய சிவபெருமான்தானே தோற்றுவித்த காசித் தலத்தை பிராகிருத பிரளய காலங்களில் கங்கையுடனே சேர்த்து தன் சூலத்தின் நுனியில் தாங்கிக் காப்பாற்றுவார். ஆனபடியால் கலிகாலத்தின் குற்றமும் யமனின் தண்டனையும் காசியில் உள்ளவர்க்கு இல்லை. இத்தலம் ஒளியுடையதாயும் முத்தித்திருமகள் இருத்தலாலுமே காசி என்னும் பெயரைப் பெற்றது. அகத்தியரே! முன்பு சிவபெருமான் திருமாலுக்கும் அம்பிகைக்கும் கூறியருளிய காசியின் சிறப்புக்களை இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனாகிய நான் உமக்கு அன்புடன் கூறினேன். இவ்வரலாற்றைப் படிப்பவர் கேட்பவர் பேரின்பத்தை அடைவர். அகத்தியரே! இனிக் கேட்க விரும்புவது என்ன என்று முருகப்பெருமான் கேட்டார். அகத்தியர் வயிரவப் பெருமானின் வரலாற்றைக் கூறும்படி கேட்டார்.

## வயிரவர் தோன்றியமை

எல்லா உலகங்களின் சாற்றையும் நுகர்ந்து நீறுபூசி எலும்பணிந்து சூலத்தைச் சுழற்றிக் கொண்டு ஆடும் அழிவற்றவராக விளங்கும் வயிரவக்கடவுள் எப்பொழுதும் என் உயிருக்குயிராக விளங்குகின்றார். வயிரவக் கடவுள் உலகமாயை உயிரை மறைக்க அதனால் உயிர்கள் தன்னை உணராதபடி விளங்குகின்றார். மனம் வாக்கு காயங்களுக்கு எட்டாத வயிரவக்கடவுளின் நிலையை பிரமவிட்டுணுக்களாலும் அறிய இயலாது.

முன்பு ஒரு நாள் மேலான தத்துவப் பொருள் யானே என்று பிரமதேவர் கூற அப்படியில்லை நானே மேலான பொருள் என்று திருமால் கூறினார். இதனால் இருவரும் ஒருவரை ஒருவர் கோபித்து வேதங்களிடம் சென்று எம்மில் யார் மேலான தத்துவப் பொருள் என்று கேட்டனர்.

எல்லாச் செயலுக்கும் காரணராயும் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழிலைச் செய்பவராகிய மேலான தத்துவப் பொருள் சிவபெருமானே என்று இருக்குவேதம் பதில் சொல்லிற்று.

யாகங்களாலும் தவத்தாலும் போற்றப்படுபவரும் வேத காரணராக உள்ளவர் சிவபெருமானே என்று யசுர் வேதம் பதில் சொல்லிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவுலகங்களையும் இயக்குபவரும் யோகியராலும் முனிவராலும் துதிக்கப்படுபவரும் தன்ஒளியால் பிற வற்றை விளக்குபவரும் சிவபெருமானே என்று சாம வேதம் கூறிற்று. பரவசப்பட்டுத் துதிப்பவர்க்குத் தன்னை அறியும் படி உதவுபவர் மேலான தத்துவப் பொருளான கொன்றைப் பூவையணியும் சிவபெரு மானே என்று நாலாவதான அதர்வணவேதம் கூறிற்று. இப்படி நாலு வேதங்களும் தெளிவாகக் கூறவும் பிரமதேவரும் திருமாலும் வேதங்களின் கருத்தைப் பொருட்படுத்தாது இடபத்தை வாகனமாகவும் சடை யையே முடியாகவும் சுடலைச் சாம்பலையே உடற்பூச் சாகவும் நீலகண்டத்தில் அணியும் ஆபாரணமாகப் பாம்பையும் தனக்கு இனியவையாகப் பூதங்களையும் கொண்டு தன் மனைவியை பிரியாதிருக்கும் சிவபெரு மான் தான் எங்கும் நிறைந்தவரென நீங்கள் எப்படிக் கூறுகின்றீர்கள் என்று மறுத்துக் கேட்டனர்.

அப்போது வேதங்களுக்குக் காரணமான குடிலை என்னும் பிரணவம் அவ்விருவர் முன்னும் வெளிப்பட் டது. அது அவர்களை நோக்கி நீவிர் வீண்வார்த்தை கூறுகின்றீர்கள். சிவபெருமான் உமையொடு கூடியிருந் தாலும் தன் தன்மையில் என்றும் மாறதவர் அவர் தோற்றம் உம்முடையது போல படைக்கப்பட் டதன்று அவரது வடிவு திருவருள் மயமானதேயாகும் ஆதலால் நீவிர் அப்பெருமானை வணங்கி நன்மை அடையுங்கள் என்று கூறிற்று. அதன் பின்னரும் பிரம விட்டுணுக்கள் தாமே மேலானபொருள் எனச் செருக் குற்றனர். அப்போது சிவபெருமான் இளம்பிறை, சாடாமுடி, எட்டுத்தோள்கள், உமாபாகம், முக்கண் என்பவற்றுடன் அண்டமுகடுவரை பிரகாசிக்கும் ஒளி யுடன் தோன்றினார். அப்படித் தோன்றவும் பிரம தேவர் கோபத்துடன் நீ என் நெற்றிக்கண்ணிலிருந்தும் தோன்றிய மகனல்லவா? என்று கேட்டார். உடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் கோபமிக்க வயிரவரைத் தோற்றுவித் தருளினார் சிவபெருமான் அவ்வயிரவரை நோக்கி அன்னவாகனராகிய பிரம தேவரது செருக்கினையும் பாற்கடலில் துயிலும் திருமாலின் செருக்கினையும் இல்லாமற் செய்க என்றார். உடனே வயிரவக் கடவுள் பிரமதேவரின் ஐந்தாவது தலையைத் தன் நகத்தால் கிள்ளினார். உடனே திருமால் வயிரவக் கடவுளின் ஆற்றலைக் கண்டு பயந்து சிவபெருமானைத் துதித் தார். பிரமதேவரும் அதுகண்டு தானும் துதித்தார். அப்போது சிவபெருமான் இவர்கள் உயிருக்கு இறுதி வராத வண்ணம் தண்டிக்கும்படி வயிரவருக்கு கூறி அருளினார். அதுகேட்டு வயிரவர் சிறிது கோபம் தணிந்தார். சிவபெருமான் வயிரவரை நோக்கி இந் தப் பிரமனின் தலையோட்டில் பிச்சை ஏற்றுக் கொண்டு பன்னிரண்டு வருடம் எங்கும் உலவுக என்று கூறினார். அப்போது பிரமகத்தி என்னும் பாவம் ஒரு பெண் வடிவில் வயிரவக் கடவுளைத்தொடர்ந்து சென்றது. சிவபெருமான். அப்பிரமகத்தியைநோக்கி "நீ பன்னிரண்டு வருடம் வயிரவக் கடவுளைத் தொடர்க" என்று அருளினார். திருமாலையும் வைகுந்தம் செல்லப்பணித்துவிட்டு சிவபெருமான் மறைந்தருளினார். ஒளியும் வெப்பமும் மிக்க சூலப் படையுடன் சுவர்க்கம், பாதாளம், பூமி, ஆகாயம் ஆகிய எங்கும் பிச்சை ஏற்றுக் கொண்டு தன் கணங் களுடன் உலவும் வயிரவக்கடவுள் திருமாலின் வைகுண்ட உலகிற்குச் சென்றார். உடனே திருமால் மகாலக்குமியுடன் வந்து வயிரவக்கடவுளை வணங்கி னார். உடனே தன்னைப் பிரியாதிருக்கும் மகாலக்குமி யைப் பார்த்து "பெண்ணே! சுத்தசிவதத்துவத்திலே அருளுருக் கொண்டு எழுந்தருளும் சிவன் இங்கு வந்த சிறப்பை கண்டுகொண்டேன. நீயும் அப்பெருமானை தரிசிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறாய். இதற்கு நாம் இருவரும் என்ன தவம் செய்திருப்போமோ தெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை இப்பெருமானின் திருநாமத்தைக் கூறுபவரே பிறவித்துன்பத்தை அடையார். அப்படிப்பட்ட இவருடைய திருவுருவைத் தரிசித்ததால் உண்டாகும் மகிழ்ச்சி எம் மனதில் அடங்காது அதிகரிக்கிறது. வேதங்களால் துதிக்கப்படுபவரும் ஐந்து தொழில்களுக்கு காரணமாக உள்ளவரும் இப்பெருமான் அல்லவா. இனிய மொழிகளைப் பேசும் உமையின் தலைவரான சிவனைத் தரிசித்தும் தேவர்கள் முத்தியை வேண்டிப் பெறாத அரிய சந்தர்ப்பத்தை இழந்து வருந்துகின்றனர். ஆனால் மனிதர்களோ சிவபெருமானைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் பெறும் போது முத்தியைப் பெற்றுவிடுகின்றார்கள். திருமால் தன் கண்ணும் மனமும் மகிழ பலவிதமாக தோத்திரம் செய்தபின் வயிரவசிவனுக்குச் சமீபமாகச் சென்று அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினார். வயிரவக்கடவுளே உம்மைக் கனவில் தரிசிப்பவர்க்குப் பாவம் நீங்கும். என்பது பிரசித்திபெற்றிருக்க உமக்குமட்டும் பிரமன் சிரசைக் கொய்ததினால் பாவமுண்டாகி அது உமது கையில் தங்கியுள்ளது என்பதற்கு காரணம் என்ன? இது உலகினரை மயக்கும் உமது அருள் விளையாடென்றே நான் கருதுகின்றேன். சிவபெருமானாகவே உள்ளவரே முன்பு எனது பன்றியவதாரத்தின் கொம்பைப்பிடுங்கிய போதும், நரசிங்க அவதாரத்தின் தோலை உரித்தபோதும் பிரமனது மண்டை ஓடுகளை அணிந்து கூத்தாடியபோதும் பாவம் உமக்கு ஏற்படாதிருந்ததே அந்தப்பாவங்களுக்காக எவ்வித தீர்வும் தேடாத நீர் இப்போது பிரமன் தலையைக் கொய்ததால் பாவம் வந்தது. அதற்கு தீர்வு வேண்டுமென்றிருப்பது அதிசயமாக உள்ளது. பெருமானே ! ஊழிக்காலத்தில் உலகை அழித்து சூலத்தைச் சுழற்றிக் கொண்டு கூத்தாடுவீரே அப்போதெல்லாம் அது பாவம் என்றும் அதற்குத் தீர்வு வேண்டும் என்றும் நீர்முயல்வதுண்டா ஊழிக்காலத்தில் உம்மால் செய்யப்படும் செயல்களால் உமக்குப் பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாதலும் அதைப் போக்குதலும் இல்லையாயிருக்க இப்போது இப்படி இருப்பது எதனால். இப்படிச் சிந்தித்து ஆராய்வதிலிருந்து உண்மையில் உமக்குப் பாவம் இல்லையென்பதும் எம்மை மேன்மைப்படுத்த இவ்வாறு பிச்சை ஏற்கிறீர் என்றுமே நம்புகின்றேன். இவ்வாறு கூறி நாராயணர் வயிரவக்கடவுளை வணங்குதலும் மகாலக்குமி சிவப்பிரீதி உண்டாம் வண்ணம் பிச்சை இட்டாள்.

அப்போது வயிரவக்கடவுள், துளசிமாலை அணிபவரே நீர் விரும்பிய வரங்களைக் கேட்பீராக என்று கூறியருளினார். வெண்ணெய் வாசனையும் பவளக் கனி போன்ற வாயும் உடைய திருமால் பெருமானே வேதங்கள் துதிக்கும் உம்திருவடிகளை மறவாது தியானிக்கும் பேற்றை அருளுக என வேண்டினார். வயிரவக்கடவுளும் அவ்வரத்தை அருளிவிட்டு காசியை நோக்கிச் சென்றார். முக்கண்களை உடைய வயிரவப்பெருமான் காசியை அடைந்த உடனே அவரைத் தொடர்ந்த பிரமகத்திதோஷம் அவரை விட்டுவிட்டு பாதாளத்தில் சென்று ஒழித்துக் கொண்டது. அவரது கையைவிட்டு நீங்காத அப்பிரமகபாவம் தானாகவே நிலத்தில் விழுந்தது. எல்லா உலகங்கட்கும் வயிரவக்கடவுள் சென்ற போது அவரைத் தொடர்ந்த தோஷம் காசியை அடைந்த அளவிலேயே அவரை விட்டு நீங்கியது என்றால் பதினான்கு உலகிலும் காசிக்கு நிகரான இடம் இல்லை என்பது கூறியாகியுள்ளது. அந்தப்பிரமகபாலம் விழுந்த இடத்தில் வயிரவக்கடவுள் ஒருபுனித தீர்த்தத்தை உண்டாக்கினார். பின் அவ்விடத்திலே எழுந்தருளினார். வயிரவக்கடவுளை உண்மையான அன்புடன் வணங்காதவர் காசியை அடைதலும் காசியில் தங்குதலும் இயலாது. காசியில் வயிரவக்கடவுளை வலம் வந்து வணங்குபவர் கயிலையில் வாழும்பேற்றை அடைவர். தூயவரலாறான இக்கதையைக் கேட்பவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிவைத்திருப்பவரும் ஆராய்ந்து பலதரமும் பாரா யணம் செய்பவரும் சிவபெருமானின் திருவடியில் இன் புற்று வாழ்வர் என்று முருகப்பெருமான் அகத்தியருக்கு உபதேசித்தார்.

## தண்டபாணி தோன்றியமை

கந்தமாதன மலையில் இரத்னபத்திரன் எனும் இயக்க அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் அரிய தவத்தின் பயனாக பூரணபத்திரன் எனும் மகனைப் பெற்றான். பின்னர் கொன்றைமாலை அணியும் கட வுளான சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து மேலான நிலையை அடைந்தான். பூரணபத்திரன் கங்காதரரான சிவபெருமானை வணங்கிக் கொண்டு கணக்குண்டவி என்னும் மனைவியுடன்அரசியற்றினான். பூரணபத்திரனின் தவத்தின் பயனாக அரிகேசன் எனும் மகன் பிறந்தான். அரிகேசன் இளம்பிறை போன்ற குழந்தைப் பருவத்திலேயே சிவபத்தி உடையவனாயி ருந்தான். அரிகேசன் மணலைக் குவித்து ஆலயம் சிவ லிங்கம் என்பன அமைப்பான். புல் முதலியவற்றைப் பல்லமலர் என்று பாவித்து சிவபெருமானை அருச்சிப் நான். நண்பர்களுடன் உரையாடும் போது"சிவநாமத் தையே கூறுவான். அவன் கால்கள் சிவாலயத்தையே வலம் வரும் அவன் கைகள் சிவபெருமானையே பூசித்து வணங்கும் உமாபதியாகிய சிவன் புகழ்களையே அவன் காதுகள் விரும்பும். சிவபெருமானைப் பார்த் தல் கூறுதலையே அவன் கண்களும் நாவும் செய்யும் சிவன் திருவடிகளுக்கே அரிகேசன் தலைபணியும் அரிகேசனை அவன் தந்தை பூரணபத்திரன் ஒருநாள் அழைத்தான். "மகனே நீ பொருளீட்டுதல் முதலிய முயற்சிகளில் ஒருசிறிதும் ஆர்வமின்றி இருப்பது தவறு பைத்தியம் பிடித்தவர் போல் சிவநாமத்தையே கூறுதல் முதலிய முயற்சிகளை ஒதுக்கி நல்ல புத்தியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுக' என்று கூறினான். தந்தையின் வார்த்தை களைக் கேட்ட அரிகேசன் தன் தாய் தந்தையரை விலகி வேறிடம் செல்லத் தீர்மானித்துப் புறப்பட் டான். தந்தையிடத்திலிருந்து புறப்பட்ட அரிகேசன் எங்கு செல்லலாம் என்று யோசித்தான். சிவபெரு மானுக்கு உகந்த காசியே தான் செல்லத்தக்க இடம் என்று தீர்மானித்தான். தீர்மானித்தபடியே நீர்வள மிக்கதும் எருமை முதலிய மிருகங்களும் கூட மகிழ்ச் சியாக வாழ்வதற்கு உரிய இடமுமான காசியை அடைந்தான். அரிகேசன் காசியில் ஒரு அசோக மர நிழலில் இருந்து தவம் செய்தான். ஐம்புலன்களை அடக்கியும் உடம்பு அசையாமலும் அரிகேசன் தவம் புரிந்தான். இச் சிறுவனின் தவத்தைக் கண்டு உமை யம்மை திருவுளம் இரங்கினார். சிவபெருமானும் உமையம்மையும் இடபவாகனத்தில் அரிகேசன் முன் தோன்றினர். சிவபெருமான் அரிகேசன் முதுகில் தடவி அவன் தவத்தைக் கலைத்தருளினார். அரிகேசன் விரை வாக சிவபெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி னான். பார்வதியும் பரமேஸ்வரரும் அச்சிறுவனுக்கு அதிக அருளை வழங்கினர். பேய்க்கணங்கள் துதிக்கும் மேலான ஒரு கதாயுதத்தைச் சிவபெருமான் அரிகேச னுக்கு வழங்கினார். சிவபெருமான் அச்சிறுவனை அன் புடன் நோக்கி 'அன்பனே இந்தக் காசியிலே இறக்கும் புண்ணிய சாலிகளுக்கு இளம்பிறை கங்கையோடு கூடிய சடாமுடி மூன்று கண்கள் நான்கு புயங்கள் பாதி பெண்பாகம் இடபக்கொடி கொன்றைமாலை முதலி வற்றை அருளும் தலைமைப் பதவியை உனக்கு தந் தேன். இப்பணியை நீயே புரிக. அன்பனே! உன் தவத் திற்கு அங்கமாக நீ அமைத்த குளத்தில் நீராடித் தவம் புரிபவர் விரைவில் முத்திப்பேற்றை அடைவர். சம்பிர மன், உற்பிரமன் ஆகியோர் உன்பக்கலில் உன் ஆணை வழி இருக்க தண்டபாணி எனும் பெயருடன் விளங்கு வாயாக' என்று அருளிய பின் சிவபெருமான் கயிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தார். இவ்வரலாற்றைக் கேட்பவர் சுவர்க்கத்தை அடைவர். என்று முருகப்பெருமான் அகத்தியருக்கு உபதேசித்தார்.

## காசிப்படம் கண்டமை

விசாலமான இவ்வுலகம் துன்புறத்தக்கதாக ஒரு காலத்தில் மழைப்பொழிவு இல்லாதிருந்தது. அக்காலத்தில் ஈசானன் என்னும் உருத்திரதேவன் அரிய தவம் செய்ய விரும்பிக் காசியை அடைந்தான். காசியில் சந்திரசேகரான சிவனுக்கு அபிஷேகம் செய்ய ஈசானர் நினைத்தார். அதற்காக தன் சூலாயுதத்தால் ஒரு குளத்தை உண்டாக்கினார். ஆயிரம் துவாரங்களால் நீர்த்துளிகளைச் சிந்தத்தக்க பத்துலட்சம் பொற்குடங்களால் ஈசானர் சிவபெருமானை அபிஷேகம் செய்து பூசித்தார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் ஈசனருக்கு காட்சி கொடுத்தார். விரும்பிய வரங்களைக் கேள் எனப்பணித்தார். நீறுபூத்த நெருப்புப் போல் அழகியவரும் சிவந்த திருமேனியை உடைய சிவபெருமானை ஈசானர் பணிந்து பெருமானே இக்குளத்திற்கும் இனிய பெயரைச் சூட்டியருள வேண்டும் என வேண்டினார். மேருவை வில்லாகக் கொண்ட பெருமானும் அதற்கு சிற்சிவ தீர்த்தம் எனும் பெயரைச் சூட்டியருளினார். சிவபெருமான் பின் ஈசானரை நோக்கி அன்பனே! இதில் நீராடியவர் சிவலோகத்தை எளிதில் அடைவர் என்றருளினார். அன்று முதல் அத்தீர்த்தம் எல்லோராலும் ஞானவாவி என்று அழைக்கப்படுகின்றது. முன்காசியில் தருமசுவாமியெனும் பெயருடைய வேதங்களை அறிந்த ஒரு முனிவர் இருந்தார் அம்முனிவருக்கு அழகுமிக்க ஒரு பெண்குழந்தை பிறந்தாள். இளமைப் பருவமடைந்த அப்பெண்ணானவள் ஞானவாவியில் நீராடியும் அதன் படிகளைக் கழுவியும் அதன்பக்கங்கள் தோரணமாலை முதலியன தொங்கவிட்டும் அவ்வாவியை வணங்கி வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமைச் சிறப்புடைய அப்பெண்ணைப் பலர் மணம் பேசித் தந்தையிடம் சென்றனர். விதிவசத்தால் அப்படி வந்த திருமணங்களுக்கு அவள் உடன்படாதிருந்தாள். ஆகாயமறையாந்த மதிலையுடைய காசியின் அழகைக் கண்டு மகிழவென வித்தியாதர மன்னன் வானவெளியில் வெளிப்பட்டான். மாளிகைகளையும் சோலைகளையும் கண்டுமகிழ்ந்த அவன் கங்கைக்கரையில் விளங்கும் காசியை அடைந்தான். அந்த வித்தியாதரமன்னன் அப்பெண்ணின் அழகை வியந்து விரும்பினான். தன் அளவில் அவள் அழகை வியந்து வியந்து மகிழ்ந்தான். அச்சமயத்தில் அப்பெண் ஞானவாவியில் நீராடிவிட்டு தந்தையின் இடத்தை அடைந்தாள். அவளிடத்தில் மனதைப் பறிகொடுத்த அவன் அவள் அறியாமலே தொடர்ந்து சென்றான். அங்கு அப்பெண் தங்கிய கட்டிலின் பக்கலை அடைந்து அவள் உடனே நல்ல நித்திரை எய்தும்படி ஒருமந்திரத்தை ஓதினான். அவளும் உடனே ஆழ்ந்த நித்திரையானாள். அப்போது அந்த விஞ்சையர் வேந்தன் அவளைக் கட்டிலுடன் தூக்கிக் கொண்டு ஆகாயமார்க்கமாகச் சென்றான். அவ்வாறு செல்லும் வழியில் மின்னல்மாலையன் எனும் பெயரை உடைய ஓர் அரக்கன் கண்டான். வேலாயுதத்துடன் வந்த அவ்வரக்கன் உடனே மிகுந்த கோபத்துடன் விஞ்சையர் வேந்தனை எதிர்த்தான். உயிரை விடுகிறாயா அல்லது இந்தப் பெண்ணை என்னுடன் விடுகிறாயா என்று கூறிக்கொண்டு அரக்கன் வாளை உருவினான். அச்சமயத்தில் அப்பெண் விழிப்படைந்து அசுரனைக்கண்டு பயந்து கதறினாள். வித்தியாதரன் அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு அரக்கனுடன் சண்டை இட்டு அவன் தலையை வெட்டினான். அப்படி இறந்த அரக்கன் தான் இறக்கும் சமயத்தில் ஞானவாவியில் நீராடியவரைக் கண்ட புண்ணியத்தால் தேவவடிவம் பெற்றுச் சுவர்க்கத்தை அடைந்தான். அசுரனது தாக்குதலால் அவ்விஞ்சையனும் இறந்தான். அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய அப்பெண்ணும் உடனே உயிர் விட்டாள். அரக்கனின் சண்டையால் உயிர் விட்ட அந்த விஞ்சையர் மன்னன் மாவியகேது எனும் பெயருடன் மலையகேதுஎனும் மன்னனுக்குமகனாகப்பிறந்தான். பொதிய மலைப்பகுதியில் நிகழ்ந்த சண்டையினால் உயிர்விட்ட அப்பெண் கருடதேசத்தின் அரசனுக்கு மகளாகப் பிறந்து கலாவதி எனும் பெயருடன் வளர்ந்தாள். மாவியகேதுவிற்கும்கலாவதிக்கும்உரியகாலத்தில்முறைப்படி திருமணம் நிகழ்ந்தது இவர் இன்பவாழ்வு வாழ்ந்த காலத்தில் கலாவதிக்கு மூன்று ஆண்குழந்தைகள் பிறந்தனர் மாவியகேது கலாவதியுடனும் மூன்று பிள்ளைகளுடனும் சிறப்பாக வாழ்ந்திருந்தான். ஒருநாள் காசி யாத்திரை செய்து மீண்ட அந்தணர் அரசனுக்கு காசியின் படம் ஒன்றை வழங்கினர். அந்த அந்தணருக்கு காணிக்கை சமர்ப்பித்து வணங்கியபின் அப்படத்தைத் தான் பார்த்து வணங்கி மகிழ்ந்த பின் கலாவதியிடம் சேர்ப்பித்தான். அப்படத்தைப் பெற்ற கலாவதி மிக்க மகிழ்ச்சியடைந்தாள்.

காசிப்படத்தைக் கண்டவுடன் கலாவதிக்கு முற்பிறப்பின் தொடர்பால் காசியின் ஞாபகம் முழுமையாக உண்டானது. அப்படத்தில் ஆலயம் தீர்த்த கட்டடம் முதலியவற்றைத் தோழியருக்குக் காண்பித்து ஞானவாவியையும் காண்பித்தாள். ஞானவாவியின் பட தரிசனத்தால் கலாவதிக்குத் தன் முற்பிறப்பின் ஞாபகம் உண்டானதும் கலாவதி ஞானவாவியின் படத்தைக் கண்டே இப்படியான உணர்வைப் பெற்றனள் எனில் அதில் விதிப்படி நீராடுபவர் பெறும்பயனைக் கூறஇயலுமோ. காசிப்படத்தையும் ஞானவாவியையும் கண்டதினால் கலாவதிக்கு காசியை அடைய வேண்டும் எனும் ஆசை உண்டாகி வளர்வதாயிற்று உடனே கலாவதி தன் கணவனை அடைந்து வணங்கினாள். உலகம் முழுவதையும் தாங்கும் தோள்வலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்த என் நாயகரே! உம்மைக் கணவனாக அடைந்த பின் என் விருப்பம் எல்லாவற்றையும் நன்கு நிறைவேற்றியுள்ளீர். நான் இப்போது விரும்பும் எண்ணத்தை நிறைவேற்ற நீர் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்றாள். மன்னனும் சம்மதித்தான். உடனே கலாவதி என் நாயகரே வளமும் அருளும் மிக்க காசியில் இளம்பிறையைத் தரித்து விளங்கும் சிவபெருமானைத் தரிசிக்க யான் செல்லுதற்கு அனுமதி தரல் வேண்டும் என்று கேட்டு வணங்கினாள் மனைவியின் இனிய கோரிக்கையைக் கேட்ட மாவியகேது தானும் காசி செல்ல எண்ணம் கொண்டான். தனது மகனுக்கு முடிசூட்டினான். மகன் கொடுத்த பெருந்தொகை பொற்காசுகளை எடுத்துக் கொண்டு மனைவியான கலாவதியுடன் காசியை அடைந்தான். கலாவதி கணவனுடன் ஞானவாவியை வணங்கி அதில் நீராடினாள். காசிவிசுவநாதப் பெருமானை மகிழ்ச்சியுடன் வணங்கினாள். மாவியகேதுவும் கலாவதியும் ஞானவாவியின் படிகளில் நவரத்தினங்களைபதித்து அலங்கரித்தார்கள். அந்தணர்க்கு தானங்கள் வழங்கினர். சிவபெருமானை நினைத்து தவம் புரியும் நியமத்துடன் காசியில் வசித்தார்கள். ஒருநாள் சிவபெருமான் மௌனவிரதமுடைய முனிவர் வடிவுடன் இருவர் முன்பும் சென்றருளினார். சிவபெருமான் அவர்களைப் பக்கத்தில் இருத்தி அருட்பார்வை வழங்கிப் பிரணவ உபதேசம் புரிந்தார். பிரணஉபதேசம் பெற்ற உடனே இருவரும் சடாமுடி நெற்றிக் கண் எண் தோள் திருநீற்றொளி மிக்க உடல் என்பன பெற்று பேரின்ப நிலை அடைந்தனர். ஞானவாவியின் பெருமை உணர்த்தும் இவ்வரலாற்றை தூய்மையுடன் கேட்பவர் மேலான நிலையான கதியை அடைவர் என முருகப்பெருமான் அகத்தியருக்குக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லொழுக்கம் கூறியமை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உள்ள நகரம் காசிப்பதியேயாகும். விரதம் தவம் ஞானம் புலனடக்கத்துடன் மேற்கொள்ளும் யோகம் என்பன இல்லாதவர் காசியை அடைதல் இயலாது. கலியுகத்தில் இவற்றை மேற்கொள்வது அரிது ஆகவே கலியுகத்தில்வாழ்பவர் எளிதில் காசியை அடையத்தக்க உபாயம் கூறவேண்டும் என்று அகத்தி யர் முருகப்பிரானிடம் கேட்டார். குற்றங்களைப் போக்கும் தவம் விரதம் என்பன தரும் மேன்மைகளை கலியுகத்தில் ஒழுக்கமே தரும் என்று முருகப்பெரு மான் அருளினார். ஒழுக்கம் பற்றி நன்கு கூறவேண் டும் என அகத்திய முனிவர் கேட்க முருகப்பெருமான் கூறுகிறார்.

ஒழுக்கத்தை உயிராகப்பேண வேண்டிய மனிதரில் ஒழுக்கம் தவறினோர் அவமதிப்பும் நரகமும் அடைவர். உயிருக்கு நன்மை தரும் ஒழுக்கத்தை உடல் சோம்ப லால் பேணாதவர் நடுக்கத்தைத் தரும் நரகில் வருந் துவர். சாதாரணமானவரும் போற்றும்படி செய்கின்ற ஒழுக்கமாவது தருமநெறியேயாகும். உயிர்கட்கு இரங் குதல் பொறுமை பேணல் பொய்மை விலக்கல் இனிய சொற்களைக் கூறல் புலன்களை அடக்குதல் கொலை யைத் தவிர்த்தல் என்பன மேற்கொள்வது மேலான நியமம் எனும் ஒழுக்கமாகும். மன அடக்கம் புனித நீராடல் அருள் நூல்களை ஓதல் விரதங்களை அனுட் டித்தல் உணவை அளவுபடுத்தல் நல்லார் இணக்கம் உடற்சுத்தத்தில் எந்நேரமும் கவனமாயிருத்தல் என் பனவும் நியமம் எனும் ஒழுக்கமேயாம். ஒருவர் இறந்த போது அவருக்குத் துணையாக தந்தை தாய் புதல்வர் நண்பர் ஆகியோர் செல்லார். அப்படி இறந்த பின் உயிர் செல்லும் போது தொடர்ந்து செல்வன அவர் செய்த நல்வினை தீவினைகளேயாம் பிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்புக்களின் போது உறவு செல்வம் முதலிய உதவா என்பது உறுதி. உறவு செல்வம் முதலியவற்றை மறந்து பேரின்பநிலையை அடைதற்கு முயலுதலே துணியத் தக்க உண்மையாகும். பொய் கொலை சினம் பகை முதலியவற்றை ஒதுக்கி வேதம் புகழும் ஒழுக்கத்தை உடையவர்கள் காசியை அடைந்து நன்மை அடைவர்.

அதிகாலையில் நித்திரை விட்டெழுதல் வேண்டும். அப்படி எழுந்தவுடன் விநாயகர், சிவன், உமை, இலக்குமி, திருமால், பிரமதேவர், இந்திரன் முதலிய கடவுளரைத் தியானிக்க வேண்டும். இதே போல கங்கை முதலிய ஆறுகளையும் பாற்கடல் முதலிய சமுத்திரங்களையும் கயிலை முதலிய மலைகளையும் வசிட்டர் முதலிய முனிவர்களையும் அருந்ததிமுதலிய கற்புடையோரையும் ஊர்வசி முதலிய தேவப் பெண்களையும் நினைக்க வேண்டும். இதே போல காசி முதலிய திருத் தலங்களையும் மந்தாரை கற்பகம் முதலிய மரங்களையும் ஐராவதம் முதலிய யானைகளையும் சனகர் முதலிய யோகியரையும் ஆதிசேடன் முதலிய பாம்புகளையும் நினைக்க வேண்டும். இருக்கு முதலிய வேதங்களையும் பிரணவம் முதலிய எழுத்துக்களையும் நாரதர் முதலிய தேவரிஷிகளையும் காமதேனு முதலிய பசுக்களையும் அரிச்சந்திரன் முதலிய அரசர்களையும் ததீசி முதலிய முனிவர்களையும் நினைக்க வேண்டும். காயத்திரி முதலிய மந்திரங்களையும் நல்ல மலர்களை உடைய சோலைகளையும் உச்சை சிரவம் முதலிய குதிரைகளையும் புனித தீர்த்தங்கள் எல்லாவற்றினும் சிறந்த தாய் தந்தையரின் திருவடிகளையும் அதிகாலையில் நினைக்க வேண்டும்.

பின்னர் வீட்டின் வெளிப்புறத்தில் தென்மேற்கில் நானூறு விற் கிடைதூரத்தில் எவருக்கும் இடையூறு அற்ற வண்ணம் மலம் கழிக்கத்தக்க இடத்தை அடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலம் கழிக்க வேண்டும். மலம் கழிக்கும் போது பூணூலைவலச்செவியில் செருகிவிடல் வேண்டும். உத்தரீயத்தால் தலையை மறைக்க வேண்டும். நிலத்தில் மலம் கழிக்கலாது. துரும்பு போலும் ஏதாவது ஒருபொருளை வைத்து மவுனமாயிருந்து கழிக்க வேண்டும். பகலில் வடக்கு நோக்கியும் இரவில் தெற்கு நோக்கியும் மலசலம் கழிக்க வேண்டும். அக்கினி, சூரிய, சந்திரர், ஆறு அந்தணர் முதலியோரை மலசலம் கழிக்கும் போது பார்த்தலாகாது. பின் சுத்தம் செய்யும் போது மண்ணும் நீரும் கொண்டு சுத்தம் செய்தல் வேண்டும். மண்ணின்றி தனி நீரால் சுத்தம் செய்தால் பூரணமான சுத்தம் உண்டாகாது. மலவாயிலை மட்டுமன்றி சலவாயிலையும் சுத்தம் செய்தல் வேண்டும். சுத்தம் செய்தபின் கையையும் தனியே மண்ணும் நீரும் கொண்டு சுத்தம் செய்தல் அவசியம். பாத்திரத்தில் நீர் எடுக்காது நீர் நிலையில் சுத்தி செய்வதாயின் நீருக்கு ஒரு முழம் தூர இருந்து சுத்தம் செய்க. இவ்வாறு சுத்தம் செய்த பின் உத்தரீயத்தினைத் தலையிலிருந்து எடுத்து அரையில் அணிந்த பின் ஆசமனம் செய்தல் வேண்டும். ஆசமனம் செய்யாவிடில் தூய்மை முழுமை ஆகாது. ஆசமனம் செய்யும் போது தலையிலோ தோளிலோ உத்தரீயம் இருத்தலாகாது.

வீதியில் சென்று வந்தாலும் தும்மினாலும் நீராடினாலும் தண்ணீர் முதலியன அருந்தினாலும் உடை உடுத்தினாலும்நற்கருமங்களை ஆரம்பிக்கும்போதும்நித்திரை விட்டெழுந்தவுடனும் தூய்மை யற்றவற்றை தீண்டினாலும் மனைவியை கூடினாலும் ஆசமனம் செய்யாவிடில் தூய்மையடையார். நவமி, அமாவாசை, பூரணை, ஏகாதசி ஞாயிறு ஆகிய நாள்களில் குச்சிகொண்டு பல்விளக்கலாகாது. சருகினாலும் பல்விளக்கலாகாது இந்நாட்களில் நீரினால்பன்னிரு முறை வாய்கொப்பளித்தலே போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா, இலுப்பை, அழிஞ்சில், வன்னி, நாயுருவி, ஈஞ்சு, கொன்றை, குமிழ், வாகை, நறுவிலி, நாரத்தை முதலியமரங்களில் கைச்சிறுவிரல் மொத்தமுடைய நேரான குச்சி எடுத்து பல் துலக்க வேண்டும். பல் துலக்க குச்சி முறிக்கும் மரத்தைப் பார்த்து சந்திரனுக்கு இருப்பிடமாகிய மரமாகிய பெண்ணே எனக்கு ஆயுள் புகழ் செல்வம் உறவு புதல்வர் அழகு திறமை இரக்கம் புனிதம் அருள் நீதி ஞானம் அநுபவம் என்பன கிடைக்கத்தக்கதாக உன் பார்வையை வழங்குக என வணங்கி பல் துலக்கும் குச்சியை முறித்தெடுக்க வேண்டும். இப்படி செய்வதால் சந்திரதேவனின் அருள் கிடைக்கும்.

ஆறு, குளம், கடல் என்னும் நீர் நிலைகளில் இறங்கி நீராடுபவர் அப்படி நீராடத் தொடங்குமுன் தருப்பை எள் சாணம் என்பவற்றோடு மண் கலந்து மந்திரங்களைக் கூறியபடி தலையில் ஒரு முறையும் தொப்பூளில் இரு முறையும் தொப்பூளின் கீழ் ஆறு முறையும் தேய்த்துக் கழுவிக் கொள்ள வேண்டும். ஆற்றிலே நீரோட்டத்திற்கு எதிர்முகமாக நின்றுநீராட வேண்டும். நீராடும் போது உரிய மந்திரங்களைக் கூற வேண்டும். நீராடிய பின் தேவர் முனிவர் பிதிரருக்கு தருப்பணம் செய்துவிட்டுக் கரையேறுக. ஈரம் துவட்டி அரையில் உடுப்பை உடுத்தி உத்தரீயத்தையும் கட்டிய பின் நீறணிந்து பவித்திரம் விரலில் இடுக. பின் காலைச்சந்தியாவந்தனம் புரிக இவ்வாறு சந்தியா வந்தனம் செய்யாவிடில் வேதியர்க்குரிய மகிமை நீங்கும் மறு பிறப்பில் நாயாய்ப் பிறந்தலைவர்.

சந்தியா வந்தனத்தில் நீர்க்கடன் செய்த பின் ஒரு முறை பிராணாயாமம் புரியில் பாவம் தொலையும் பன்னிருமுறை பிராணாயாமம் புரியில் பல நாள் தவம் புரிந்த பயனுண்டாகும். பின் சூரிய உதயம் வரை காயத்திரி தியானம் புரிதல் வேண்டும். பின் காயத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபம் செய்து சூரியனுக்கு அருக்கியம் கொடுத்து வணங்க வேண்டும். பின்னர் தேவர் முனிவர் பிதிரர்க்கு தர்ப்பை நுனி கொண்டு தருப்பணம் புரிக. பின்னவச் சுவதேவம் எனும் யாகச் சடங்கு புரிதல் வேணடும்.

உச்சிவேளையில் கா ய த் தி ரி க் கு தியானம் தர்ப் பணம் முதலிய செய்தல் வேண்டும். பின்பு ஏழைகள் கலைஞர் மாணவர் தருமத்துக்கு இரப்பவர் வேத அறிஞர் பிரமச்சாரிகள் துறவிகள் முதியோர் என்பவ ராய்த் தன்னை அடுத்தவர்க்கு உணவு வழங்கி விட்டு காகம், ஒழுக்கமற்றவர், கீழோர், நாய் தீராப்பிணி யாளர் ஆகியோருக்கு நன்மையுண்டு பண்ணும் மந்தி ரம் ஓத வேண்டும். பின் வீதியில் சென்று பசுவின் பால் கறக்கும் நேரம்வரை வறியவர்களைத்தேடி உணவு வழங்கி விட்டு உணவு உண்ண வேண்டும். கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ இருந்து உண்ண வேண்டும். மூன்று பிடி உணவினால் பலி இட்டபின் ஆபோசனம் என்னும் உணவுக்கு முன் நீர் குடித்தலை நிறைவு செய்து பிரானகுதி பண்ணி முதலில் நெய்யு டனும் பின் இனிப்புடையனவும் பின் பொரிக்கப்பட்ட னவும் உண்க. பின் பழவகைகள் உண்டபின் உத்தரா போசனம் எனப்படும் நீர் குடித்தலைச் செய்க.

நரகிலிருப்பவர் பொருட்டு பெருவிரல் வழி நீர் விழக் கை கழுவுக. பின் கையலம்பி ஆசமனம் செய்து கால் கழுவுக. சனிபகவான் வடவாமுகாக்கினி சமுத்தி ரம் சூரியன் ஆகியோரை உண்டன செமித்தற்காகத் தியானித்து வெற்றிலை அருந்துக. மாலை நேரத்தில் இதிகாச புராணங்களை கேட்க வேண்டும். சூரியன் மறையும் போது மாலைச் சந்தியாவந்தனம் செய்ய வேண்டும். வீடு பசுக்கட்டுமிடம் நதிக்கரை இரு ஆறு கூடுமிடம் ஆலயம் என்பன சந்தியா வந்தனம் செபம் செய்வதற்கு உரிய இடங்களாம். முறையே முதலாவ தில் மற்றது அதிக பயனைத்தரும். இரவு உணவிற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஆசமனம் புரிந்து திருமால் அகத்தியர் முசுகுந்தச் சக்கரவத்தி கபிலமுனி முதலியோரை வணங்க வேண்டும் கருட மந்திரம் செபிக்க வேண்டும். சிவபெருமானைத் துதிக்க வேண்டும். இரவில் நித்திரை செய்யும் போது தலைப்பக்கத்தில் விளக்கு நிறைகுடம் என்பன வைக்க வேண்டும். தன் வீட்டில் கிழக்கிலும் மாமன் வீட்டில் தெற்கிலும் பிற ஊரில் மேற்கிலும் தலைவைத்துப் படுக்க வேண்டும். எச்சந்தப்பத்திலும் வடக்கில் தலை வைத்து படுக்கலாகாது.

## பிரமச்சரியம் கூறியமை

அந்தணரல்லாதார் ஒழுக்கம் கூறப்படுகிறது. பெண் வயிற்றில் கருவளரத் தொடங்கினால் 4ம் மாதத்தில் 4ம் சலனம் (மலர் சூட்டல்) என்னும் சடங்கு புரிதல் வேண்டும். 6ம் மாதத்தில் சீமந்தம் என்னும் சடங்கு புரிதல் வேண்டும். பிள்ளை பிறந்தவுடன் அதன் முகம் பார்த்து கஸ்தூரி பூசி நீராட்டிய பின் தான தருமம் புரிதல் வேண்டும். பின் உரிய மாதத்தில் குலாசாரப் படி குடுமி வைத்தல் வேண்டும். பதினொராம் நாள் பெயர் சூட்டும் சடங்கு புரிக நாலாம் மாதத்தில் சந்தி மிதிக்கச் செய்க. ஆறாம் மாதம் சோறூட்டல் வேண்டும். ஏழாம் வயதில் அந்தணர்க்கும் பதினோராம் வயதில் அரசர்க்கும் பன்னிரண்டாம் வயதில் வணிகர்க்கும் பூணூல் அணியும் சடங்கு புரிய வேண்டும். பூணூல் அணிந்த பின் வேதம் ஓத வேண்டும். வேதம் ஓதியபின் வேத விதியை அநுசரித்தே வாழ வேண்டும். முதல் நாள்சமைத்த உணவையோ கறிவகையையோ உண்ணலாகாது பொதுப் பெண்களை விரும்பலாகாது. தீயோர் உள்ள இடத்திற்குச் செல்லலாகாது. ஆசிரியரைத் தினமும் வணங்க வேண்டும். மாணவப் பருவத்தில் வெற்றிலை பாக்கு உண்ணலாகாது எந்த உயிரையும் வதைத்தலாகாது. மனம் விரும்பும் விடயங்களில் ஈடுபடாது தருமநூல் விதித்தவற்றையே மேற் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இவ்வாறு தமக்கு விதித்தன செய்து விலக்கியன தவிர்த்து வாழ்பவரே மேலான கதியை அடைவர். பிரமச்சாரிக்கு முஞ்சிப்புல்லும் மான் தோலும் அடையாளம். இல்லறத்தார்க்கு யாகம் அடையாளம். வானப்பிரத்தருக்கு மயிர், நகம் வெட்டாமை அடையாளம் துறவியர்க்கு காவியுடையும் மூங்கில் தண்டும் அடையாளமாம். வேதம் கற்பிப்பவர் ஆசிரியர் என்றும் 'பொருள் பெற்றுக் கொண்டு நன்மை தீமைகளைச் சொல்பவர் உபாத்தியாயர் என்றும்' எல்லா வினைகளையும் போக்கும் வல்லமை உடையவர் குரு என்றும் அழைக்கப்படுவர். தந்தையிலும் தாய் மேன்மை மிக்கவள். தாய், மகள், சகோதரி என்னும் உறவு முறையினராக இருப்பினும் இவர்களுடன் ஒரு வீட்டில் தனித்திருத்தலை விலக்க வேண்டும்.

அரசன் மனைவி, குருமனைவி, தமையன் மனைவி மாமன் மனைவி தன்னைப் பெற்றவள் என்னும் ஐவரும் தாய் என்ற மதிப்புக்கு உரியவர் ஆவர்.

சூரியன் உதயமாகும் வரை நித்திரை செய்த பிரமச்சாரி அத்தோசம் நீங்க அன்று உபவாசம் மேற்கொள்ள வேண்டும். இனி இல்லறதருமம் கூறவுள்ளோம் இல்லறதருமத்துக்கு நல்ல மனைவியே ஆதாரம் ஆதலால் பெண்ணின் வடிவு குணம் செயல் பற்றிக் கூறுதும்

## மகளிர் இலக்கணம் உரைத்தமை

தன் கோத்திரத்தில் தோன்றியவர் தீராப்பிணியர் பெண் மட்டும் பிறக்கும் குடும்பத்தவர் அவமானச் செயல் செய்யும் குடும்பத்தவர் நட்சத்திரம் பறவை ஆறு என்பனவற்றின் பெயருடையவர் ஆகியோரைத் திருமணம் செய்தல் ஆகாது. மிருதுவாகப் பேசுபவள் தன்னிலும் இளையவள் கோபமில்லாதவள் அழகிய முகமுடையவள் பலசகோதரருடையவள் ஆகிய இளம்பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்யத்தக்கவள். தன் குலத்தினும் மிகத் தாழ்ந்தவள் மிக உயர்த்தவள் அங்கலட்சணம் சிறிது மில்லாதவள் ஆகியோரை மணந்தால் நல்லறிவு அழியும் நரகத்துன்பமும் வரும். உள்ளங்கால் சிவந்தும் வியர்வையின்றியும் அளவாயும் மிருதுவாயும் சங்கு சக்கர அடையாள உடையதாயும் இருப்பது சிறப்பு.

நடுவிரல் மேல் நோக்கியும் அதிகரேகை உடையதாயும் இருப்பது நன்று பாம்பு, எலி, கழுகு போன்ற ரேகைகள் இருப்பின் வறுமை தீராக்கவலை உண்டாகும் பெருவிரல் அழகாயிருப்பின் செல்வம் சேரும் பெருவிரல் அகலுதல் பருத்தல் மிகநீளல் ஆகா. விரல்கள் மிக நெருங்குதல் தீது. மிகக் குறுகில் மரணம் உண்டாம். விரல் அகலில் செல்வம் நீங்கும். காற்சிறுவிரல் நிலத்தில் பதியாவிடில் தீது நகம் ஒளியும் அழகும் உடையதாயிருப்பின் இன்பம் உண்டாம். தூசி பறக்க நடந்தால் குலம் அழியும்.

இடைப்பகுதி சிறுத்திருந்தால் செல்வம் உண்டாம். பருத்தால துன்பம் மிகும். பூசனிக்காய், நெல் அமைப்பில் வயிறு இருக்குமாயின் அதிக உணவு தேவைப்படும். தொங்கும் வயிறு என்றால் கணவன் மாமன் இறப்பர். மார்பில் மயிர் இருக்குமாயின் காதலன் இறக்கும். மார்பு இரண்டும் பருத்து அடிகனத்து ஒத்தனவாய் அமைந்து விளங்குமானால் நன்று வலமுலை உயர்ந்தால் ஆண்பிள்ளைகளும் இடமுலை உயர்ந்தால் பெண் பிள்ளைகளும் பிறக்கும். கழுத்தின் அடிப்பகுதி எலும்பு தெரியாமல் அழகாயமைந்தால் நன்று. கைகளில் மயிர் இல்லாதிருத்தல் சிறப்பு எலும்பு தெரிவதாயும் மயிருடையதாயும் கைகள் இருப்பின் துன்பம் அதிகரிக்கும். தாமரை மொட்டுப் போல் பெருவிரல் அமையின் நன்று. உள்ளங்கைசிவந்து விரல் இடை வெளியின்றி இருப்பது மிகநன்று. புறங்கை மயிரின்றியும் நரம்பு எலும்பு தெரியாது அமைவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்று. உள்ளங்கை மேடுகளில் நரம்பு அமைவது நன்றன்று உள்ளங்கை மேடுகள் அழகாயும் சிவப்பாயும் அமைவது சிறப்பு ஒளியும் வட்டமும் பொருந்தி தாமரை வாசனையும் உடைய முகமாயின் நன்று. கழுத்து அதிகம் பெருத்தல் தீது. வரிசையாயும் வெண்மையாயும் அழகாயும் பல் அமைவது சிறப்பு. மேல் வாய்ப்பல் உயர்தல் தெற்றுதல் தீது. சிவப்பாயும் மென்மையாயும் நாக்கு அமைவது நன்று. நாக்கு மிகப் பருத்தால் வறுமை உண்டாம்.

பெண்களின் மூக்கெலும்பு உள்வளைவும் சிறிது உயர்வும் பொருந்தி எள்ளுப் பூம் போலும் அமைப்பு உடையதாய் சிறிய துவாரங்களுடன் விளங்குமாயின் எல்லா நலன்களும் பொருந்தும். கருமை நுனிவளைவு இடையில் பள்ளம் மிகப் பருமை என்பன அமையில் தீங்குண்டாம். தேவையின்றிச் சிரித்தல் தீமை தரும். தும்மும் போது இருமுறை மும்முறை மெல்லத் தும்மும் இயல்பு நன்று.

கண்மணியும் இமைகளும் கறுத்தும் பக்கங்கள் வெளுப்பாயும் செவ்வரியுடையதாயும் குவளை மலரின் அமைப்புடையதாயும் அமைதல் நன்று. கண் உயர்தல் வட்டமாதல் யானைக் கண்போலிருத்தல் புறா நிறமாதல் தீமைதரும் புருவமயிர் பருத்து நீண்டு அகன்று இருப்பது தீது. நெற்றியானது மூவிரல் அகலமாய் நரம்பு மயிர் இல்லாது பிறை போன்றதாய் இருத்தல் நன்று. நெற்றியில் சுவத்திகம் போல் ரேகை இருத்தல் நன்று.

கரியமை நூலானது போன்று கன்னப்பகுதிகள் சுருண்டும் நீளமாயும் ஆங்காங்கு நெளிவு உடையதாயும் நுனி பிளப்பின்னியும் தலைமயிர் அமைவது நன்று. நெற்றியிலோ புருவத்திலோ சிவப்பு நிறஅடையாளம் இருப்பது நன்று. மூக்கு நுனியில் உட்பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறு இருப்பதும் நன்று. இம்மறுக்கள் கறுப்பு நிற மாயின் துன்பம் உண்டாம். கை மார்பு உந்தி என்ப வற்றில் வலமான சுழி இருப்பது நன்று. கண், காது நடுவகிர் என்பவற்றில் வலமான சுழி இருத்தல் தீமை தரும் நித்திரையில் பல்கடிப்பவரிடம் பிற சிறப்பான அம்சங்கள் இருந்தாலும் பயனில்லை தீமையே உண் டாகும். அங்கலட்சணம் அமைந்தும் நற்குணம் இல்லை யேல் பயனில்லை.

## ஆசாரம் கூறியமை

பிரமம் தெய்வம் ஆரிடம் பிரசாபத்தியம் ஆசுரம் காந்தவம், இராக்கதம், பசாசம் என எட்டு விதமண முறைகள் உள்ளன. தகுதிமிக்க தூயவருக்கு கன்னியை ஆபரணங்களுடன் கொடுத்தல் பிரம்மாகும். பிரம முறைப்படி நடைபெற்ற திருமணத்தால் பிறக்கும் பிள்ளை இருபத்தொரு தலைமுறையினருக்கு நல்லகதி உண்டாகும்.

யாகம் செய்த அந்தணருக்கு திருமண முறையால் பெண்ணைக் கொடுப்பது தெய்வம் என்னும் மண முறையாகும். இப்படியான திருமணத்தால் பிறக்கும் பிள்ளை பதிநான்கு தலை முறையினருக்கு நல்ல கதி உண்டாக்கும். இருபசுக்களையும் பொருளையும் பெற் றுக் கொண்டு பெண்ணை ஒருவனுக்குக் கொடுப்பது ஆரிடமண முறையாகும். இம் மணமுறையில் பிறக்கும் பிள்ளை ஆறு தலைமுறைக்கு நல்லகதி உண்டாக்கும்.

பெண்ணை அன்புடன் கேட்பவரிடம் பொருள் பெறாது திருமணம் செய்து கொடுப்பது பிரசாபத்திய மணமுறையாகும். இம் மணமுறையால் பிறக்கும் பிள் ளையால் ஆறு தலைமுறையினர் நல்ல கதியடைவர். இந்த நான்கு முறையும் அந்தணர்க்கு உரியன. பெண் ணுக்காகப் பெரும் செல்வத்தைப் பெற்றுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் செய்து வைப்பது ஆரிடமண முறையாகும். கன்னியும் ஆணும் தாமே விரும்பித் திருமணம் செய்தல் காந்தருவமண முறையாம். ஆண் தன் வலிமையால் பெண்ணைக் கவர்ந்து திருமணம் புரிதல் இராக்கத மணமுறையாம். இம்மூன்றும் அரசர்க்கு உரிய மண முறைகள்.

கள்ளத்தனமாகவும் மதுபோதையாலும் நித்திரையிலும் பெண்ணைக் கூடியபின் திருமணம் புரிதல் பைசாச மண முறையாகும். இது சிறப்பற்ற மண முறையாகும்.

தத்தம் குலப்பெண்ணைத் திருமணம் செய்யும் போது பெண்ணின் கைப்பிடிக்க வேண்டும். அந்தணர் அரசப்பெண்ணைத் திருமணம் செய்யும் போது பெண்ணின் கையைப் பிடிக்காது அம்பைப் பிடிக்க வேண்டும் அந்தணரும் அரசரும் வணிகபெண்ணை மணம் செய்யும் போது கலப்பை தராசு என்பவற்றை பிடிக்க வேண்டும். அந்தணர், அரசர், வணிகர் ஆகியோர் வேளாளர் பெண்ணைத் திருமணம் செய்யும் போது பெண்ணின் ஆடை நுனியைப் பிடித்தல் வேண்டும். இவை வேதவிதி என்பர். விதிப்படிமணம் செய்த பெண் நற்குணமுள்ள பிள்ளை பெறுவள். விதிக்கு மாறாக திருமணம் செய்தவள் நற்குணம் இல்லாத பிள்ளை பெறுவள்.

மாதப்பூப்பு எய்திய பின் பிதிர்கடன் செய்த நாளிலும் அமாவாசை முதல்நாள், அமாவாசை, பூரணை அட்டமி, நவமி என்னும் நாள்களிலும் கணவன் மனைவி கூடலாகாது. இப்படி விலக்காத நாள்களிலும் முறையின்றியும் பிறபெண் பொதுப் பெண் ஆகியோரையும் சேர்தல் பாவமாம். பூப்பெய்திய பின்வரும் பதினாறு நாள்களில் முதல் நாலு நாளும் நீக்கினால் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிருநாள்களில் 5-7 முதலிய ஒற்றைநாளில் கருஉண் டாயின் பெண்குழந்தையும் 6-8 முதலிய இரட்டை நாட் களில் கருவுண்டாயின் ஆண்குழந்தையும் பிறக்கும்மூலம் மகம் எனும் நட்சத்திரங்களும் சேர்க்கைக்கு விலக்கப் பட்டவையாம் அமாவாசையிலும் கணவனது நட்சத்தி ரத்திலும் கூடினால் விதவையாவள் பெண் குழந்தை பிறக்கும். பணம் பெற்றுக் கொண்டு திருமணம் நிகழ்ந் தால் அப்படிச் செய்தவர் நரகடைவர். திருமணம் செய்த வீட்டில் பொருள் பெற்றுச் சீவித்தாலும் நர கமே அடைவர். கணவன் கருத்தின்படி அன்புடன் வாழும் பெண் உள்ள வீடு வைகுந்த உலகிலும் சிறப் புடையதாகும். அந்தணர், வியாபாரம், யுத்தம், அரச சேவை செய்தாலும் வேதம் அனுமதிக்காத பெண் ணைத் திருமணம் புரிந்தாலும் வேதம் பயின்று யாகம் முதலிய செய்யாதிருப்பினும் நரகடைவர். அம்மியில் அரைத்தல் நெருப்பில் சமைத்தல் நிலத்தைக்கிண்டுதல் நீரில் சிறுபகுதியை குடத்தில் அள்ளுதல் கத்தி அரி வாள் கொண்டு வெட்டுதல் முதலியவற்றால் உண்டா கும் பாவங்களை ஒருவன் பஞ்சயக்ஞங்கள் செய்வ தால் நீக்கலாம். எனவே இல்லறத்தான் தினமும் பஞ்சயக்ஞம் புரிதல் வேண்டும்.

வேதம் ஓதல் தருப்பணம் செய்தல் ஓமம் செய்தல் பலியிடுதல் விருந்தினருக்கு உதவல் என்பன பஞ்சயக் ஞங்களாம்.

வீட்டுக்கு அதிதியாக ஒருவன் வந்த போது நல்ல வார்த்தை கூறி இயன்ற அளவு உபசாரம் செய்யா விடில் அப்படிச் செய்யாதவனின் நல்லொழுக்கமும் புண்ணியமும் அந்த அதிதியுடன் செல்லும்.

நோயாளர் சிறுவர் கருவுற்றோர் கணவன் வீட்டி லிருந்து வந்த மகள் ஆகியோருக்கு உணவு வழங்கிய பின்னரே அதிதியாய் வந்தோருக்கு உணவு வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை. தேவர், பிதிரர், துறவியர்க்கு வழங்கிய மிச்சம் அமிர்தத்திற்கு நிகராகும். இப்படியானவர்க்கு வழங்காது உண்பது அருவருக்கதக்க செயலாகும். அந்தணர் அரசர் வணிகர் மூன்று வேளையும் வைச்சுவதேவம் எனும் அக்கினி காரியம் செய்யாவிடில் நாலாம் வருணத்தாவராவர். அட்டமி, சஷ்டி, சதுர்த்தசி, அமாவாசை பூரணை ஆகியநாட்களில் மயிர்களைத்தல் கூடாது. காலை மாலை கிரகணம் ஆகிய நேரங்களில் சூரியனை நீரில் பார்க்கலாகாது. தன் நிழலை நீரில் பார்த்தல் ஆடையின்றி நீர்நிலையில் குளித்தல் கன்றிற்கு விடாது பால் கறத்தல் பொய் சொல்லல் என்பன கொடும் பாவங்களாம். கோயில் அந்தணர் துறவிகள் அரசர், கவிஞர், நீர்க்குடம், வெண் கடுகு, தயிர், நெய் சோறு, பசு, உயர்குலத்தோர், அரசமரம் என்பவற்றை வழியில் காணில் வலமாகச் செல்ல வேண்டும்.

மனைவியுடன் ஒருங்கு உண்ணுதல் மனைவி உண்ணும் போது பார்த்தல் என்பன கூடாது. மனைவி உண்ணும் போது பார்த்தால் தருமசிந்தையற்ற பிள்ளை பிறக்கும். பொன்பாத்திரத்தில் உண்பதும் மிக உயர்ந்த ஆசனத்திலிருந்து உண்ணுதலும் விலக்க வேண்டியன. நெருப்பை வாயால் ஊதுதல் கோபத்தால் உயிர்களைக் கொல்லல் காலை மாலையில் நித்திரை செய்தல் யோசனையுடன் உண்ணல் தனித்துப் பிரயாணம் செய்தல் கையால் நீரை அள்ளிக் குடித்தல் வானவில்லை காண்பித்தல் தனியிடத்தில் சோம்பலுடன் நித்திரை செய்தல் நல்ல நித்திரையிலுள்ளவரை எழுப்புதல் மேயும் பசுவைக் கலைத்தல் இரவில் தயிர் மோர் பருகுதல் அதிக உணவு உண்ணல் நாடகம் முதலியவற்றில் அதிகம் ஈடுபடல் பகலில் உறங்கல் காலை வெயிலில் இருத்தல் மயிர் நகம் என்பன கடித்தல் நடந்து கொண்டே மயிர் கோதுதல் பிறர் உண்ட பாத்திரத்தில் உண்ணல் பிறர் அணிந்த ஆடையை அணிதல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுகாட்டுப் புகைபடச் செல்லல் குளித்த பின் கையால் நீரை வழித்தல் தீயபழக்கமுடையோருடன் சேர்தல் உடையின்றி நித்திரை செய்தல். சூதாடுமிடம் செல்லல் உடைந்த பாத்திரத்தில் உண்ணல். காரணமின்றித் தலையையோ கையையோ அசைத்தல் இருந்த ஆசனத்தை காலால் அகற்றல் நகத்தால் நகத்தை உரித்தல் ஒருகையில் உணவை வைத்து மறுகையால் உண்ணல் படுக்கையில் இருந்து நீரருந்தல் செபம் செய்தல் நின்றபடி நீராடுதல் வாசலில்லாத இடத்தால் நுழைதல் முகம், கை, கால் காயுமுன் படுத்தல் செருப்புடன் ஆசமனம் புரிதல் உண்ட கை கழுவாது செல்லல் இரவில் வெற்றிலை உண்ணல் கை கால் முகம் கழுவாது உண்ணல்;

இருகையாலும் தலை சொறிதல் பிறர்மனை விரும்பல் பகைவரிடம் வேலை செய்தல் பொய் கூறல் அநீதி கூறல் சோம்பி இருத்தல் என்பன விலக்கத்தக்கன. அழகு குலம் கல்வியில் சிறந்தோரை இகழ்தல். பசியுடன் உண்ணா திருப்பவரிடம் உண்ணல் கண்டதை விரும்பல் கோபத்தால் பழித்தல் தன்னைப் பாராட்டல் மனிதரைப் பாடுதல் என்பன துன்பத்துக்கு காரணமாம் வேதம் அந்தணர் குரு முனிவர் கற்பினர் ஆகியோரை அலட்சியம் செய்தல் நடப்பவரை வீழ்ந்து வணங்கல் பிறர்குறை கூறல் என்பன விலக்க வேண்டும்.

ஒருவரால் உண்டாக்கப்பட்ட நீர்நிலையில் இருகையளவு மண் எடுத்து வெளியில் போடாது நீராடினால் நாம் செய்த புண்ணியம் முழுவதும் அதை உண்டாக்கியவரை அடையும்.

ஒருவன் ஏற்க மாட்டாத உண்மை; ஒருவனுக்கு துன்பமுண்டாக்கும் உண்மை என்பவற்றைக் கூறாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடலாம். அறிஞருடன் சேர்க நற்குணங்களையே கூறுக. நன்மைகளையே நினைக்குக.

சூது, பொய், உதவி என்பன செய்து பொருள் தேடலாகாது. நெருப்பையும் அந்தணரையும் பசுவையும் எச்சில்கையால் தீண்டலாகாது, தன் வீட்டின் சிரார்த்தநாளில் பிறர் வீட்டுச் சிரார்த்த உணவு உண்ணலாகாது. உணவுப் பாத்திரத்தில் நீரெடுத்து கை கால் கழுவலாகாது. சந்தர்ப்பம் நோக்கி உணவு கொடுப்பவன் பூமி முழுவதையும் தானம் செய்த பயன் அடைவன். தாகத்திற்கு நீர் கொடுத்தவர் மேலான வெள்ளியைத் தானம் செய்த பயன் அடைவர். நெய்த் தீப தானம் செய்தவர் ஒளிமிக்க கண்ணுடையராய் இருப்பர். தம்மிடம் உள்ளவற்றை மகிழ்வுடன் கொடுப்பவர் பிறரிடம் இரக்கும் நிலையை அடையார். அஞ்சியவர்க்கு ஆறுதலும் பாதுகாப்பும் வழங்கியவர் உலகமுழுவதாளும் பேறடைவர். வேதம் பயில உதவியவர் கந்தருவ நிலை அடைவர். தானே செய்த தவத்தைத் தானே கூறினால் தவப்பயன் குறையும். அந்தணரைக்குறை கூறினால் வயது குறையும்.

தேன், பழம், கிழங்கு, விறகு என்பவற்றை இழிந்தோரிடமும் பெற்றுக்கொள்ளலாம். எல்லோரிடமும் அரிசியைத் தானமாகப் பெறுதல் நன்றன்று. இடிவிழும் நாள் மண்மாரி பெய்யும் நாள் புயற்காற்று வீசும் நாள்களிலும் அரசருக்கு துன்பம் உற்ற நாளிலும் அந்தணர் விசேடமாக வேதமோதல் நன்மைதரும். நீர் மேல் பிரயாணம் செய்யும் போதும் மரத்திலேறியிருக்கும் போதும் வாகனத்திலிருக்கும் போதும் நடக்கும் போதும் வேதம் ஓதலாகாது. இப்படியாகச் சொல்லப்பட்ட நியதிகளுடன் வாழ்ந்து தக்க சமயத்தில் பிள்ளையிடம் குடும்பப் பொறுப்புக்களை விட்டு விட்டு சிவத்தியானத்துடன்காட்டை அடைந்து தவம் மேற்கொள்ள வேண்டும். அல்லது காசியை அடைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லொழுக்கம் கூறியமை

காசியை அடைந்தவரும் இல்லொழுக்க நியதியில் தவறாது வாழ்தவரும் முத்தியடைவர் என்று முருகப் பெருமான் கூறியதை அகத்தியர் ஞாபகப்படுத்தி இல் லொழுக்க நியதிகளைக் கூறும்படி கேட்டார்.

பன்றி, ஊர்க்குருவி, அன்னம், கிளி, கோழி, மீன் முதலியவற்றை இல்வாழ்வோர் உண்ணலாகாது. பசுப் பால் ஆட்டின்பால் ஒட்டகப்பால் ஒற்றைக்குளம்புடைய மிருகங்களின் பால் என்பவற்றை இரவிலேயே அருந்த வேண்டும். தயிர், மோர் என்பன பகலில் மட்டுமே அருந்தத்தக்கன யாகத்திலன்றி எப்போதும் ஊன் உண்ணலாகாது. ஊன் உணவை விரும்புபவனும் ஆத ரிப்பவனும் விறபவனும் சமைப்பவனும் கொடிய நர கத்தை அடைவர். இரக்கம் காரணமாக ஊன் உண் ணும் பழக்கத்தை விடுத்தவர் மேலான அசுவமேத யாகம் செய்த பயன் அடைவர். பிற உயிருக்குச் செய்த துன்பம் தமக்கு உண்டாகும் என்பதைஉணர்ந்து எவ்வுயிரையும் தன் உயிர்போல் போறற வேண்டும். கண் முதலிய உறுப்புக்களை தருமத்துக்கு மாறாக செல்லாது தடுக்க வேண்டும். முயற்சியின்றிப் பொருள் வராது பொருளின்றிப் புண்ணியம் செய்ய இயலாது. புண்ணியம் செய்யாது இன்பம் கிடையாது இன்பவாழ்வின் பொருட்டு சோம்பலும் நித்திரையும் இன்றிததருமம் புரிதல் வேண்டும். ஆதலால் முயறசி யில் ஈடுபடல் வேண்டும்.

பெண் பூப்படையுமுன் திருமணம் செய்தலும் கன் னிகாதானம் செய்தலும் சிறப்பு என்று வேதம் புகழும். ஒரு பெண் திருமணத்தின் முன் பூப்படைவதால் அக் கினி தேவன் மகிழ்வான். அவளின் உடலில் ரோமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டானால் சந்திரன் மகிழ்வான். மார்பு வளர்ந்ததும் கின்னரர் மகிழ்வர். இப்படியான தன்மை தோஷமாகும் என்பர். மாதம் தோறும் பூப்படைவதால் பெண்கள் தூய்மையுறுவர்.

பெண்களின் முகம் சிவிகை ஆசனம் தருப்பை யாக பாத்திரங்கள் சூரிய உதயவேளை என்பன புனிதமுடையன என்பர். கன்று ஊட்டிய பின் பெறப்படும் பாலையும் பறவை தின்ற பழத்தையும் வேட்டைநாய் பிடித்த மிருகத்தையும் எச்சில் என்று ஒதுக்க வேண்டியதில்லை குதிரைக்கும் ஆட்டுக்கும் முகம் புனிதமாயிருக்கும். பசுவிற்குப் பின்புறமே புனிதமாயிருக்கும். அந்தணர்க்கு இரு கால்களும் புனிதமாயிருக்கும்.

ஆறு பெருகுவதாலும் வெண்கலம் சாம்பராலும் செம்பு புளியாலும் தூய்மை பெறும். இவ்வாறு தூய்மை பற்றி அறிந்தவர் கூறுவர். கணவனைத் தெய்வமாக மதிப்பவர் உமாதேவியுடன் இருக்கும் பேறடைவர். தந்தை, தாய், சகோதரர் இல்லாத கன்னிப்பெண் தன்குலத்துக்கு ஒத்த குலத்தில் ஒருவனைக் கணவனாகப் பெறமுயலலாம் தன்னிடத்துண்டான கருவையோ கணவனையோ கொன்ற பெண்ணை எவரும் திருமணம் செய்து கொள்ளலாகாது.

கன்னிகையை ஒருவன் பலாத்காரம் செய்தால் அப் பெண்ணை நீராடச் செய்து புதுஆடை வழங்கி நாளுக்கு ஒருவேளை மட்டும் அளவு சாப்பாடு (ஒருகவளம்) வழங்கி வரவேண்டும் இப்படியிருக்கையில் அப்பெண் பூப்புவரப் பெற்றால் பின் அவளைத் தூயவள் என மதித்து ஏற்கலாம். அவள் கருவுற்றால் தூய கன்னி என ஏற்காது பலாத்காரம் செய்தவனுடன் வாழவிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வருணத்தவரில் நாலாம் வருணத்தவர் தமது வருணத்தில் மட்டும் திருமணம் செய்யலாம். பிறவருணத்தவர் தமக்கு கீழுள்ளவருணத்துப் பெண்ணையும் திருமணம் செய்யலாம். குரு, தாய், தந்தை, மனைவி' பிள்ளை, விருந்தினர் இரவும் பகலும் வழிபடுபவர் அதிதி, அக்கினி ஆகிய ஒன்பதின்மரையும் தினமும் அன்புடன் பாதுகாப்பது இல்வாழ்பவனுக்கு முதன்மையான கடமையாகும்.

மதித்தல் இன்சொல் கூறல் அன்புடன் நோக்கல் வருக என்று அழைத்தல் புறப்படும் போது சிறிதுபின் செல்லல் சென்று வருக எனக்கூறல் ஆகிய ஒன்பது முறையாக விருந்தினரை உபசரிக்க வேண்டும்.

ஆசனம் கால் கழுவும் நீர் பொருத்தமான உணவு பாய் தங்க ஏற்றஇடம் அருந்தும் நீர் விளக்கு எண்ணெய் வெற்றிலை பாக்கு என்னும் ஒன்பதாலும் அதிதியரை உபசரிக்க வேண்டும்.

பிறர் மனைவிரும்பல் தகுதிக்கு மாறாக நடத்தல் பொய் கூறல் கோபித்தல் பகை சாதித்தல் வஞ்சனை பொருந்தாமை போலி மாறுபாடு என்பன உடைய சொற்களைக் கூறல் என்னும் ஒன்பதும் கீழ்மக்களின் இயல்பாகும். இல்வாழ்வோர் இவற்றை ஒருபோதும் மேற்கொள்ளலாகாது.

நீராடல் சந்தியாவந்தனம் புரிதல் வேதமோதல் அக்கினிகாரியம் செய்தல் உபநிடத பாராயணம் புரிதல் மலர்தூவி இறைவனை வணங்கல் வைச்சுவதேவம் எனும் அக்கினிகாரியம் புரிதல் அதிதிக்கும் இறந்தவர்க்கும் உபகாரம் புரிதல் என்னும் ஒன்பதும் இல்வாழ்வான் தினமும் மேற்கொள்ள வேண்டியவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம், தன்அவமானம், பெண்சேர்க்கை, சூழ்ச்சி தன்வயதெல்லை, பிறந்தநாள், தன்வீட்டின்குற்றம், தன் செல்வநிலை, மனைவியின் குணங்கள் ஆகிய ஒன்பதை யும் பிறருக்குத் தெரிவிக்கலாகாது.

தான்பட்ட கடன், கடன்தீர்த்தமை பொருள்பெற் றமை பொருள் பெறும் போது கூறியமை தன் மக ளைக் கன்னிகாதானம் செய்தமை தன் நித்திய ஒழுக் கம் தன் இரகசியம் தான் செய்த பாவம் அந்தணரின் நற்குணம் ஆகிய ஒன்பதையும் மறைக்காது கூற வேண்டும்.

சத்தியம், பொறுமை, கொலை இன்மை, புலன டக்கம், தூய்மை, தடையற்ற கொடை, கோபமின்மை களவின்மை, பிறர்வியக்கும்படி இரங்குதல் எனும் ஒன் பதும் சுவர்க்கம் செல்ல அனுப்பப்பட்ட தூது போன் றனவாகும். புறம் கூறுபவர் அற்ப செயல் புரியும் தூதர். நல்ல விடையங்களைக் கேட்காத மருத்துவர் அரியபொருள்களைக் களவெடுப்பர். காமுகர் சொல்ல இயலாப்பாவம் புரிவோர், தீயோர் என்னும் ஒன்பது வகையினருக்கும் காரணமின்றிப் பொருள் கொடுக்கலா காது.

பெருந்தனமையர் நட்பினர் குலஒழுக்கம் பேணுப வர் மிகவறுமையுற்றோர் பாதுகாவலில்லாதவர் தந்தை தாய், குரு, குடும்பத்துக்கும் உதவிபுரிந்தோர் ஆகிய ஒன்பதின்மருக்கும் செய்யும் உதவி கோடிமடங்கு பயன் தரும். மனைவி அடைக்கலப் பொருள் அடைக் கலமாக அடைந்தவன் மனைவியின் ஒழுக்கம் தன் செல்வம் மனைவியின் பொருள் பிள்ளை பிள்ளைக் குரிய பொருள் ஆகியவற்றைப் பிறரிடம் கொடுத்தலா காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன் இருப்ப இளையவன் திருமணம் புரிதல் விசேடயாகம் செய்தல் தீமைக்குக் காரணமாகும். மூத்தவர் ஊமையாய், செவிடாய் இருப்பினும் துறவியானாலும் எங்குள்ளார் என அறியமுடியாத தூரதேசத்திலிருந்தாலும் இளையன் திருமணம் விசேடயாகம் என்பன புரியலாம். துறவு மேற்கொண்டவர் பெண்ணைச் சேர்ந்தால் மிகக்கொடும் துன்பம் அடைவர். நாலாம் வருணத்தவரிடம் சாத்திரம் கற்றவரும் பொருள் பெற்று யாகம் புரிந்தவரும் சிறுமை அடைவர்.

அகப்பையின்றிக் கையால் சோறு படைத்தலும் கையால் சோறுவாங்கி உண்ணலும் குற்றமாம். இரும்புக்கரண்டியால் சோறு படைக்கலாகாது. இரும்புக் கரண்டியால படைத்ததை விரும்பி உண்டவரும் விரலால் பல்துலக்கியவரும் உப்புடன் உணவுண்டவரும் பசுவின் தசையை உண்டவரும பாவத்தை அடைவர்.

கரண்டியின்றிக் கையால் கொடுத்த உப்பு, நெய், நீர், பாலன்னம் இவற்றை உண்டவர் பசுமாமிசம் உண்டபாவத்தை அடைவர். சோறு (உணவு) உண்டபின் வாய் கொப்பளிக்க வேண்டும். வாய் கொப்பளித்தபின் நீரை உண்டவர் பிதிர் தேவரைக் கொன்ற பாவத்தை அடைவர்.

உண்டவர் கையலம்புமுன் நீர் அருந்த வேண்டும் கையலம்பிய பின் நீர் அருந்தல் குற்றம். சீமந்த விழாவில் உண்டாலும் பணம் பெறறுக்கற்பிப்பவர் வீட்டில் உண்டாலும் உண்டாகும் குற்றம் நீங்கச் சாந்திராயண விரதமனுட்டித்தல் அவசியம்.

தீயகனவு கண்டாலும் கீழோரைத் தீண்டினாலும் சத்தி (வாந்தி) எடுத்தாலும் பெண்ணைக் கூட்டினாலும் அபானவாயு விட்டாலும் (மலவாயிலால் காற்று வெளியேறினாலும்) குளிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவியர் யாகம் செய்பவர் பிரமச்சாரியர் ஆகியோருக்கு சனன மரண ஆசௌசங்கள் இல்லை. பகைவரிடத்து உண்ண நேரிட்டால் தென்திசை நோக்கியிருந்து உண்ணவேண்டும். சந்தியிலுள்ள மரத்தையும் பொருள் பெற்று வேதம் கற்பிப்பவனையும் யாகத்திற்கென நடப்பட்ட யூபதம்பத்தையும் சுடுகாட்டில் அடுக்கப்பட்ட விறகையும் தொட்டால் நீராட வேண்டும். யாகம் செய்யும் போதும் ஆலயத்திலும் அந்தணரைக் கால்களில் வீழ்ந்து வணங்கலாகாது.

மாவினால்கோலமிட்ட இடத்தில்இலைபோட்டுஉண வருந்த வேண்டும். அந்தணர்நாற்கோணமாயும் அரசர் முக்கோணமாயும் வணிகர் வட்டமாயும் கோலமிட வேண்டும். 4ம்வருணத்தர் நீர் தெளித்த இடத்தில் இலையிட்டு உண்ணலாம். எவராயினும் கையிலோ தம்மடியிலோ பாத்திரத்தை வைத்து உண்ணலாகாது. கட்டிலிலோ உயர்ந்த ஆசனத்திலோ இருந்து உண்ணலாகாது. பிச்சைப் பாத்திரத்திலும் உண்ணல் ஆகாது அந்தணர் வழங்கும் உணவு அமிர்தமாகவும் அரசர் வழங்கும் உணவு பாலன்னமாகவும் வணிகர் கொடுக்கும் உணவு நல்லுணவாகவும் மதிக்கத்தக்கது.

பொய் சொல்வது தீது என்பதே முடிந்த முடிவாகும். ஆனால் அந்தணர் உயிரைக் காக்க வேண்டியும் பசுவை பாதுகாத்தற்காகவும் பெண்ணின் திருமணத்தை நிறைவேற்றுதற்காகவும் பொய் சொல்லல் ஏற்கத்தக்கது என்பர். ஆணையிட வேண்டிவரும்போது அந்தணர் சத்தியத்தின் மேலும் அரசர் வாள் மேலும் வணிகர் பொன் மேலும் நாலாம் வருணத்தவர் மூன்றின் மேலும் ஆணையிட வேண்டும்.

பசுக்கூட்ட நடுவில் நித்திரை செய்தலும் இரகசியத்தை பகிரங்கப்படுத்தலும் பாவச் செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகும் ஆற்றில் நீந்துபவரும் பெரு நெருப்பில் அஞ்சாது செல்பவரும் உயர்ந்த மரத்திலும் மலையி லும் ஏறுபவரும் பிள்ளையையும் மனைவியையும் விற் பவரும் தமக்கு தாமே யமன் ஆவர்.

அரசர் அரசகுமாரர் சாஸ்திரம் வல்ல அந்தணர் ஆகியோர் தமது குடுமியை வெட்ட வேண்டிய சந்தர்ப் பம் வரும் போது வெட்டுதற்குப் பதிலாகப் பொன் கொடுத்து குடுமியை வைத்திருக்கலாம். தாலியை இழக்காத பெண் தன் மயிரை வெட்ட வேண்டிய சந் தர்ப்பம் வந்தால் இரண்டு விரல் நீளமான மயிரை மட்டும் வெட்டினால் போதும். தன் ஒழுக்கத்தை விட் டவன் தனக்கே தான் யமனாவன் வேதம் கல்லாதவன் முத்தியடையமாட்டான். தினமும் புலனடக்கம் உடை யவனும் உண்மை பேசுபவனும் தன்னையறிந்தவனும் நல்லொழுக்கத்தை அறிந்தவனும் இல்லறநெறியைமேற் கொண்டவனும் முத்திப்பேற்றை இயல்பாக அடைவர்.

## யோகநிலை உரைத்தமை

முதுமைக்கு அடையாளமான நரைதிரை உண்டா னவரும் புத்திரப்பேற்றை அடைந்தவரும் இல்லறத்தை நிறைவு செய்து காட்டுக்குச் செல்ல வேண்டும். செல் லும் போது மனைவியையும் அக்கினி காரியத்திற்கு உரிய அக்கினியையும் கொண்டு செல்லலாம். மனை வியை புத்திரனிடம் விட்டுவிட்டுச் செல்லலாம். காட் டில் வாழும் போது காய், கிழங்கு முதலியவற்றையே உணவாகக் கொள்ளவேண்டும். இல்லறத்தில் மேற் கொள்ளப்படும் ஐவகை யாகங்களையும் புரிதல் வேண் டும். வானப்பிரஸ்த வாழ்வை மேற் கொண்டவர் மயிர் நகம் என்பவற்றை வெட்டலாகாது. தங்கவெனக் காட் டில் அமைத்த வீட்டில் பகலில் இருக்கலாகாது. காட் டில் உலாவுதல் சிந்தித்தல் வேண்டும். சூரியன் மறைந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வீட்டை அடைந்து துறவியர்க்கு உதவி மலை நெல், மாவால் அக்கினியை வழிபட வேண்டும். தேன், மது, புலால், முருங்கைக்காய் முதலியவற்றையும் நாட்டில் விளைபவற்றையும் விலக்கவேண்டும். அன்றன்று காட்டில் சேகரிக்கும் நெல்லையே உணவுக்குப் பயன் படுத்தவேண்டும். நெல்லைப் பல்லால் கொறித்து மாவாக்கி உண்ணலாம். அல்லது கல்லின் மேல் வைத்துக் கல்லால் நொருக்கி மாவாக்கலாம் உரல் முதலியன பயன்படுத்தலாகாது. அன்றன்று நெல் சேகரிக்க இயலாவிடில் ஒருமாதம் ஆறுமாதம் ஒருவருடத்துக்கு உரியதை மட்டும் சேகரிக்கலாம் இவற்றுக்கதிகம் சேகரிக்கலாகாது. ஆனால் இரவில் மட்டும் உணவருந்தல் முறையாகும். அல்லது ஒரு நாள் விட்டு ஒரு நாள் அருந்தலும் நன்று. இவர்கள் 4, 5 நாளுக்கு கொரு முறை அல்லது 30 நாளுக் கொருமுறை உண்ணும் ஒழுக்கத்தைக் சிறப்பானது என்று வேதம் புகழ்கிறது. வானப்பிரஸ்தர் சாந்திராயண விரதம் அநுட்டித்தல் இலை தளிர் உண்ணல் என்பன மேற்கொள்ளலாம். இவர்கள் தேவர்கடன் பிதிர் கடன் நிறைவேற்ற வேண்டும் அக்கினியைத் தன் உயிருடன் ஐக்கியப் படுத்திக் கொண்டு காட்டில் உலவுதலும் வானப் பிரஸ்த்த முறையாகும்.

பிதிரர், தேவர், முனிவர் கடனாகிய முக்கடனையும் நிறைவேற்றிய பின்பு அன்றி துறவியாதல் கூடாது. வயதின் நாலாம் பகுதியில் நாலாவதான சன்னியாச ஆச்சிரமத்தை அநுட்டிக்க வேண்டும். சன்னியாசியாக ஒரே இடத்தில் தங்கலாகாது. எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டும். இடைவிடாது தியாயனம் செய்தல் தூய்மை பேணல் தனித்திருத்தல் தனித்து உண்ணல் நான் எனது என்னும் எண்ணம் இன்றி மரநிழலில் இருத்தல் மழை காலமாகிய நான்கு மாதத்திலும் ஏதாவது ஒரு நகரில் தங்கல் புழுக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென் முளைகளையும் மிதியாதிருத்தல் நகம் மயிர் என்பன நீக்கல் தண்டைக் கைவிடாது பேணல் கோப மின்றி இருத்தல் என்பன சன்னியாசிக்கு உரிய ஒழுக்கங்களாம் சன்னியாசிகள் மண் பாத்திரம் மரப்பாத்திரம் சுரைக்குடுவை என்பவற்றையே பயன்படுத்த வேண்டும். கல்மாவாலான காவி தோய்த்த உடையையே உடுத்தல் வேண்டும். பகலில் ஒரு முறை மட்டுமே உண்ண வேண்டும். இல்லறத்தோர் தம் வீட்டுக் கடமைகளை நிறைவேற்றிய பின்னரே சன்னியாசிகள் பிச்சைக்குச் செல்ல வேண்டும். சன்னியாசிகள் அளவாக உணவு உண்ணல் அன்றி பசிதீர உண்ணலாகாது.

தாயின் கருவில் அடையும் துன்பத்தையும் உலக வாழ்வில் உள்ள துன்பத்தையும் முதுமைத்துன்பத்தையும் இறப்புத் துன்பத்தையும் யமவேதனையும் நினைத்து பார்த்து முத்தியடைய முயலுதல் எல்லோர்க்கும் உரிய பொறுப்பாகும். உடம்பு முதலியன அழியும் என்பதையும் ஆன்மா அழிவுறாது என்பதையும் ஆன்மா முத்திக்கு உரியது என்பதையும் எல்லோரும் உணர்தல் வேண்டும் முத்தியடையத் தூண்டும் சிறப்புடைய வேதம் முதலிய தூய நூல்களைக் கற்றுச் சிந்தித்துச் செயற்படவேண்டும.

முத்தியின்பத்தைப் பற்றியும் முத்தியடையும் சாதனைபற்றியும் நூல்களைக் கற்றுச் சிந்தித்து அட்டாங்க யோகம் முதலிய பயின்று அன்பைப் பெருக்கினால் அன்றி முத்திப்பேறு கிட்டாது.

உலக இன்பமே முத்தியென்பவரும் மனம் உயிரில் அடங்குதல் முத்தியென்பவரும் பிராணன், அபானன் முதலிய வாயுக்கள் ஒடுங்குதல் முத்தியென்பவரும் எனப் பல கொள்கை உடையவர் உளர். ஆனால் உயிர் இறைவனுடன் சேருதலே உண்மையான மேலான முத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கரணங்களை அகக்கரணத்துள் அடக்கி அகக் கரணத்துள் மேலான மனத்தை ஆன்மாவில் ஒடுக்கி ஆன்மாவைப் பரம்பொருளிடத்தில் கூட்டுதலே யோக முறையாகும். இப்படியான யோகத்தில் முன்னேறுபவர் பரம்பொருளைக் காணமாட்டார். பிராணனை அடக் காது மனத்தை அடக்க முடியாது மனத்தை அடக் காது உண்மையை உணர இயலாது.

ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் தாரனை, தியானம், சமாதி என்னும் ஆறும் சடங்க யோகம் எனப்படும். இவற்றுள் ஆசனம் என்பது பத் மாசனம் முதல் பலவாக உள்ளன. இப்படியான பல ஆசனங்களுள் சித்தாசனம் என்பது யோக முயற்சிக் குச் சிறந்ததாம்.

வலது தொடையில் இடதுகாலை வைத்து இடது தொடையில் வலது காலை வைத்து இரண்டு கைகளை யும் மாற்றிக் காற்பெருவிரல்களைப் பிடித்து இருத் தல் பத்மாசனம் எனப்படும்.

இப்படியான ஆசனங்களைப் பழகித் தமக்குப் பொருத்துவதை அவரவர் தெரிந்து கொள்ள வேண் டும். நீர்ப்பெருக்கி, சாம்பல், கரி, உமி, கொசு முத லிய உள்ள இடங்களும் எளிதில் செல்ல இயலாத காடு போன்றவனவும் யோகசாதனைக்கு விலக்கப்பட்ட இடங்களாகும்.

நல்ல வாசனையும் புனிதமும் உள்ள இடத்தில் யோக சாதனையை மேற்கொள்ள வேண்டும். அள வான உணவு உறக்கம் உடையவராயும் உடற்களைப்பு இல்லாதவராயும் உள்ளவரே யோகசாதனையில் ஈடு படலாம்.

நிமிர்ந்து இருந்து கழுத்தை வளையாது வாய்மூடி கண்களை முழுவதும் மூடாது ஏனைய புலன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச் செல்லாது அடக்கி நாநுனியை உண்ணாக்கில் பொருந்தச் செய்து இரு பல் வரிசையும் ஒன்றையொன்று முட்டாத படியாக இருந்து ரேசித்தல், பூரித்தல், கும் பித்தல் என்னும் மூன்று வகையாக பிராணாயாமம் புரிதல் வேண்டும். புருவமத்தியில் பார்வையும் உள்ளே பிராணன் அடங்கிய நிலையும் மனம் அலையாது சுழ லாது நிலைபெற்ற தன்மையும் பொருந்திய வேளை யில் யமபயம் உண்டாக மாட்டாது என்று வேதம் கூறும்.

கண்ணிமைக்கும் நேரம் ஒரு மாத்திரை காலமாகும் இப்படிப் பன்னிரு மாத்திரை கொண்டது. அசனபச் செப காலமாகும் இச் செப கால அளவே பிராணா யாமத்தில் மூச்சை அடக்கும் கால அளவாகும் இந்த அளவை இரட்டிப்பது மத்திமம் என்றும் மூன்று மடங் காக்குவது உத்தமம் என்றும் யோகம் வல்லோர் கூறுவர்.

பிராணாயாமத்தை ஆரம்பிக்கும் போது வியர்வை உண்டாகும். தொடர்ந்து செய்ய நடுக்கம் உண்டாகும் பின்பும் தொடரின் ஒருவகை வேதனை உணர்வு உண் டாகும் அப்போதும் விடாது தொடர இம் மூன்று மாறுபாடும் இல்லாத தன்மைவரும்

தொடர்ந்து பிராணாயாமத்தைப் பயின்று வரில் ஆகாய வழியாக உடலுடன் செல்லும் ஆற்றல் கை கூடும். ஆனால் பிராணாயாமத்தை விரைவாகப் புரிந் தால் நோயுண்டாகும். பிராணாயாமம் செய்வோர் நாடி சுத்தி என்னும் சாதனையும் சேர்த்துச் செய் தால் நோயுண்டாகாது. அது மட்டுமன்றி ஆகாய மார்க்கமாகச் செல்லுதலை விருப்பம் போலக் கட்டுப் படுத்தவும் வல்லவராவர். இரு நாசிகளாலும் மாறி மூச்சை இழுத்தல் விடுதல் புரிந்து பிராணாயாமம் புரி தலால் நாடிசுத்தி உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணாயாமப் பயிற்சி செய்வதால் மூச்சை உள் அடக்கும் ஆற்றல் அதிகரிக்கும். மூச்சை உள்ளடக்கி வைக்கும் ஆற்றலால் நோயின்மை செமிபாடு சூட்சும ஒலிகளைக் கேட்கும் வல்லமை என்பன உண்டாகும்.

பிராணாயாமப் பயிற்சியின் விளைவாக பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் நிலைகளை முறையே அடையலாம். அப்படி அடைதலால் பரம் பொருளைக் காணுதலும் பிறவா நிலையை அடைதலும் கைகூடும்.

ஐந்து இந்திரியங்களை நினைத்தபோது அடக்கி வைத்திருத்தலே பிரத்தியாகாரமாகும். இந்திரியங்களை அடக்குவதால் சந்திரனிடத்துப் பெருகும் அமிர்தம் உடலில் பொருந்தி இன்பம்உண்டாக்கும்.

தலை கீழாக நின்று பிராணாயாமம் செய்யும் முறையை மரபாக அறிந்து மேற் கொண்டால் நரை திரை உண்டாகாது. நாக்கை மடித்துப் பிராணனை அடக்கும் முறை கைவந்து ஆறு மாதம் மேற் கொண்டாலும் நரை திரை உண்டாகாது. ஆறு மாதத்திற்கு மேலும் இப்படிச் செய்தால் கவிதாசக்தி உண்டாகும். (இக்கவிதாசத்தி சாதாரணமான கவிபுனையும் ஆற்றல் அன்று) மூன்று வருடம் தொடர்ந்து இச்சாதனையைப் புரிந்தால் உடல் அமிர்தமாகும். கொடிய பாம்பு கடித்தாலும் விடவேகம் செயற்படாது. இப்படியான நிலை தாரணை என்றும் சொல்லப்படும்.

பஞ்ச பூதங்களை முறைப்படி தியானித்து பூத தாரணை நிலையை அடைந்தால் பலவித ஆற்றல்கள் உண்டாகும். மனம் உயிரில் ஒடுங்கும்படி செய்வது தியானம் ஆகும். இத்தியானம், சகுணத்தியானம், நிர்க்குணதியானம் என இருவகைப்படும். நிர்க்குண தியானத்தின் உயர் நிலையே சமாதி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து நாழிகை அளவு தாரணைக் காலம் என்றும் ஆறு நாழிகை அளவு தியானக்காலம் என்றும் பன்னி ரண்டு நாள் அளவு சமாதிக் காலம் என்றும் சொல்லப் படுகிறது. மனமும் ஆன்மாவும் கலத்தல் சமாதிஎன்றும் பிராணன் மனத்தில் அடங்கல் சமாதி என்றும் இரு விதமாகக் கூறுபவர் உளர். சீவான்மாவையும் பரமான் மாவையும்கலக்கச்செய்யும் சமாதி நிலை எய்துபவருக்கு நோய்நெருப்புநீர், ஆயுதம் என்பன துன்பம் செய்யா இப்படியானசமாதி நிலை அடைந்தோர் பாலும்பாலும் கலப்பதுபோல் பரம் பொருளுடன் கலந்திருப்பர்.

மகாமுத்திரை, நாபோமுத்திரை, சலந்தரமுத் திரை, மூலபந்தம் என்னும் சிறந்த யோகசாதனை முறைகள் உள்ளன. இவற்றை தவறின்றிப் பயின்றால் அதிசயிக்கத்தக்க சித்திகள் கிடைக்கும். மூச்சுக்காற்றை இழுத்தல் விடுதல்களுடன் செபிக்கத்தக்க அசபாமந்திர செபத்தை மூச்சுடன் செபித்தால் ஒரு நாளுக்கு 2600 முறை செபிக்கலாம் இப்படிச் செபிப்பதாலும் மேலான சித்திகள் கிடைக்கும்.

எல்லாக்கலைகளையும் அறிதல் எல்லா உலகப் பெண்களாலும் விரும்பப்படுதல் எங்கும் செல்லுதல் அணுப்போலவும் மலைபோலவும் வடிவு கொள்ளுதல் தன்னுடல் ஒளியும் நறுமணமும் உடையதாகப் பெறு தல் சகலமொழிகளையும் அறிதல் உலகம் முழுவதை யும் சுமத்தல் பிறஉடலில் பிரவேசித்தல் தான் இருக் குமிடத்திலிருந்தே எங்கும் நடப்பதை அறிதல் எங்கும் உள்ள ஓசைகளை நன்கு உணர்தல் என்பன யோக சாதனைகளால் கிடைக்கத்தக்க சித்திகளாகும். இச்சித் திகளை முத்திக்குத் தடையென்று அறிந்து சிவபெரு மானின் திருவடிகளையே விரும்புவர் முத்திப்பேற்றை அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சாதனைகளில் முயன்று முத்தியடைதல் மனிதப் பிறப்பிற்குப் பொருத்தமான மேலான குறிக் கோளாகும். இப்படியான யோக முயற்சிகளில் ஈடு படும் ஊக்கமில்லாதவர் தூய கங்காநதியால் குழப் பெற்ற காசியை அடைந்தால் முத்தியடையலாம்.

## காலமறிதல்

காசியில் சென்று தங்கியிருந்து மரணமடைவதால் முத்தியடைதல் எளிது. இப்படிக் காசியை அடைய எண்ணுபவர் தமக்கு மரணம் எப்போ வரவுள்ளது என்று அறிவது எப்படி என்று அகத்தியர் முருகப் பெருமானைக் கேட்டார். அகத்தியருக்கு முருகப்பெரு மான் மரணகாலம் அறியும் முறையினைக்கூறுகின்றார்.

ஒருவனுக்கு நாள் முழுவதும் வலது மூக்கு வழிச் சுவாசம் சென்றால் மூன்று வருடத்தில் உயிர் பிரியும். வலது மூக்குவழி இரண்டு நாள் தொடர்ந்து செல்லு மானால் இரண்டு வருடத்தில் மரணம் உண்டாகும். வலது மூக்குவழியாக மூன்று நாள் தொடர்ந்து சுவா சம் செல்லுமானால் ஒருவருடத்தில் மரணம் வரும். இருமூக்குகளாலும் மாறிமாறி ஒரே அளவு நேரம் சுவாசம் செல்லுதல் பத்து நாள் தொடருமானால் ஆறு மாதத்தில் உயிர் பிரியும். சுவாசம் மூக்கால் செல்லாது வாயால் மட்டும் செல்லுமானால் மூன்று நாளில் உயிர் போகும். இப்படியாக நிச்சயிக்கும் தன்மை சுவாசத்தை அவதானிக்கும் இயல்புடைய அறிஞர்க்கு இயலும்.

சூரியன் தெற்கு நோக்கிச் செல்வது போலத் தெரிந்தாலும் இலக்கினத்தில் சந்திரனும் ஏழாம் இடத்தில் சூரியனும் கோசார ரீதியாக நிற்கும் நிலை உண்டானாலும் நண்பகலில் சூரியனைச் சுற்றிக் கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் தெரிந்தாலும் மூன்று வருடத்தில் இறப்பர். வியர்வை சிறுநீர் மலம் என்பன வழக்கத்திற்கு மாறாகக் குறைந்தால் ஒருவருடத்தில் இறப்பர் கரியயானை மதப்பெருக்குடன் நிற்பதுபோல ஆகாயத்தில் கண்டால் ஆறுமாதத்தில் இறப்பர்.

தனது நிழல் அசைவது போல் தெரிந்தால் மரணம் வெகுவிரைவில் என உறுதிசெய்யவேண்டும். வெயிலில் வானவில் நிறம் தெரியத்தக்கதாக வாய் நீரைக் கொப்பளிக்கையீல் நிறங்கள் தெரியாவிடில் ஆறு மாதத்தில் மரணம் நேரிடும் ஐந்து வகையான நிறங்களும் ஆறுவகையான சுவைகளும் மாறுபாடாக உணர வந்தால் ஆறுமாதத்தில் மரணம் என அறியவேண்டும்

அருந்ததி நட்சத்திரம் துருவநட்சத்திரம் தன்மூக்கு நுனி புருவ நடு கடைக்கண்கள் முதலியன கண்ணுக்குத் தெரியாவிடில் சில தினங்களில் மரணம் நேரிடும்.

நாக்கு மிடறு என்பன ஈரப்பற்றின்றிக் காயுமானால் ஆறுமாதத்தில் உயிர் பிரியும். நாக்கு பல்லு மேல்வாய் என்பவற்றின் எச்சில் கறுப்பாகுமானால் ஆறுமாதத்தில் உயிர் பிரியும் இறந்த பச்சோந்தி தலையில் விழுந்தால் சிலநாளில் மரணம் நேரிடும். நீராடும் போது மார்பு, கை, கால், வயிறு என்பன நனையாது இருக்குமானால் மூன்று மாதத்தில் இறப்பர் சேற்றுக் காலை நிலத்தில் பதிக்கும் போது காலடையாளம் முழுமையாகப் பதியாது குறைபடுமானால் விரைவில் இறப்பர். ஆற்று நீரிலோ கண்ணாடியிலோ தன்னைப் பார்க்கும் போது தலை தெரியாவிட்டால் ஒரு மாதத்தில் இறப்பர்.

இயல்புக்கு மாறாகப் புத்திமாறாட்டம் உண்டானாலும் இரவில் வானவில் தெரிந்தாலும் சந்திரன் இரட்டையாகத் தெரிந்தாலும் பகலில் நட்சத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டு இரவில் காணப்படாதிருந்தாலும் விரைவில் இறப்பர். நான்கு திசைகளிலும் வானவில் தெரிந்தாலும், பகலில் மரத்திலும் மலையிலும் பேய் கூத்தாடுவது போலத் தெரிந்தாலும் இப்படிக் காண்பவர் ஒரு மாதத்தில் இறப்பர்.

கையால் காதை மூடும்போது இரைச்சல் ஓசை கேளாவிடினும் உடம்பில் தழும்புகள் தோன்றி வேதனை உண்டாக்கினாலும் இயல்பாக மெலிந்தவர் திடீரெனப் பருமனானாலும் ஒரு மாதத்தில் இறப்பர். தனது நிழல் தென்பக்கமாகத் தெரிந்தாலும் விரைவில் இறப்பர்.

பேய், பூதம், நரி, கழுதை, அவுணர், இராக்கதர், காகம், பருந்து, குரங்கு, செந்நாய் என்பவற்றில் ஏறிச்செல்வதுபோலவோ இவை தன்னைக் கடித்துத் தின்பதுபோலவோ கனவு கண்டால் ஒரு வருடத்தில் இறப்பர். சிவந்த மலர், சிவந்த சந்தனம், என்பவற்றைத் தமது உடம்பில் அணிவதாக கனவு கண்டால் எட்டு மாதத்தில் இறப்பர். இவற்றைப் பிறரிடம் வாங்குவதாகக் கனவுகண்டாலும் விரைவில் இறப்பர். எண்ணெய் தேய்த்து முழுகுவதாகவும் மயிர் வெட்டுவதாகவும் கழுதையில் ஏறுவதாகவும் தம்மை ஒருவர் தெற்குத் திசைக்கு அழைத்துச் செல்வதாகவும் இறந்தவர் தம்மீது ஏறுவதாகவும் புல்லைச் சுமப்பது போலவும் கனவு கண்டால் ஒரு மாதத்தில் இறப்பர்.

கரிய குறிய பெண் தன்னை அணைப்பது போலவும், கரிய துணி உடுத்தி இரும்புலக்கை ஏந்தியவன் தன்னைத்தேடி வருவதுபோலவும் கனவு கண்டால் ஒரு மாதத்தில் இறப்பர். குரங்கில் ஏறிக்கொண்டு கிழக்கு நோக்கிச் செல்வதாகக் கனவு கண்டால் பதினைந்து நாளில் இறப்பர். வழக்கமாக அன்புடன் உதவி செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர் மறுத்தாலும் வழக்கமாக உதவி செய்யாதவர் வலிந்து உதவினாலும் விரைவில் இறப்பர்.


இவைபோல மரணகாலம் அறிய உதவும் நிமித்தங்கள் இன்னும் பல உள. இப்படியான நிமித்தங்கள் வாயிலாகத் தம் மரணகாலத்தை அறிவோர் தாம் வாழ்ந்தது போதும் என்னும் திருப்தியுடன் தாம் இறுக்கவேண்டிய கடன் முதலியவற்றை இறுத்தும் தாம் பிழை புரிந்தோரிடம் மன்னிப்பும் வேண்டியபின் காசியை அடைந்து சிவத்தியானத்துடன் வாழ வேண்டும். இப்படி வாழ்பவர் மனிதப் பிறவியால் அடையத்தக்க பெரும்பயனை அடையும் முறையில் பேரா இன்பப் பெரும்பேறாகிய முத்தியை அடைவர்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# இரண்டாவது உத்தரகாண்டம்

## அவிமுத்தேசன் கதை

அளவில்லாத நாட்கள் யோகம் புரிந்தால் தான் ஞானம் கிடைக்கும். அப்படியான ஞானத்தால்தான் முத்தி கிடைக்கும். ஆனால் காசியை அடைந்தால் எளிதில் முத்தி கிடைக்கும், ஆகையால் காசியில் விளங்கும் சிவபெருமானின் வரலாற்றைக் கூறவேண்டும் என அகத்திய முனிவர் முருகப்பெருமானைக் கேட்டார். முருகப்பெருமான் அவிமுத்தேசன் எனும் திருப்பெயரை உடைய காசி சிவபெருமானைப் பற்றிக் கூறத்தொடங்கினார்.

காசியினை விட்டு நீங்காது இருப்பதே யோகம் செய்வது போலாகும். அங்கு சிவபெருமானைக் குறித்து மலர் தூவி வழிபடுதலே அரிய தானம் புரிவது போலாகும். ஞான ஒளி மிக்க முத்திமண்டபத்தில் தங்கியிருப்பது தியானம் செய்வது போலாகும்.

நீண்டகாலம் பஞ்சாக்கினி மத்தியில் அரிய தவ முயற்சியை மேற்கொள்வதால் உண்டாகும் தகுதி காசியில் இருந்து சிவராத்திரி ஏகாதசி போன்ற தினங்களில் உபவாசம் மேற்கொள்வதால் கிடைக்கும். அகத்தியரே ! நீர் காசியைப் பிரிந்து வருந்துவது போல சிவபெருமான் காசியைப் பிரிந்து வருந்திய வரலாற்றைக் கூறுகின்றேன் என்று முருகப்பெருமான் சொல்லத் தொடங்கினார்.

மிகப்பழங் காலத்தில் பூமிமுழுவதையும் சுவாயம்பு மனு என்பவன் அரசு புரிந்தான். அவன் இறந்து போக அரசனில்லாது அறுபது வருடம் உலகம் காடாகியது. யாகம் முதலிய நற்கருமங்கள் குறைந்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் துன்பம் மிகுந்தது. உலகிற்கு அரசன் ஒருவன் அவசியம் என்று பிரமதேவர் கருதினார். அப்போது தூய மனுவம்சத்தில் தோன்றிய ரிபுஞ்சயன் எனும் அரசன் உலக ஆசையின்றி காசியில் இருந்து தவம் செய்வதைக் கண்டார். பிரமதேவர் ரிபுஞ்சயனிடம் சென்றார். ரிபுஞ்சயனே நீயே இவ்வுலகம் முழுவதை ஆட்சி புரிய வேண்டும். உனக்கு மனைவியாக ஆதி சேடன் அனங்கமோகினி என்னும் தன் மகளை உத வுவான் உனக்கு வேண்டிய நவரத்தினக் குவியல் களையும் சந்தனம் மலர்கள் முதலியவற்றை தேவர்கள் உதவுவர், உனக்கு திவோதானன் என்னும் சிறப்புப் பெயரும் அமையும் என்று பிரமதேவர் கூறினார்.

ரிபுஞ்சய மன்னன் பிரமதேவரே யான் கேட்கும் ஒரு வரத்தை நீர் உதவினால் உலகை ஆளும் பொறுப்பை உம் விருப்பத்திற்காக நான் ஏற்றுக்கொள் கின்றேன் என்றான். நீ கேட்கும் வரத்தைத் தரு வேன் என்று பிரமதேவர் தெரிவித்தார்

தேவர், விஞ்சையர், இயக்கர், கந்திருவர், நாகர் முதலிய தேவச் சாதியார் எவரும் இந்தக் காசிநகரில் இருந்து நீங்கியபின் இக் காசியை நான் இருந்து அரசு புரிதற்கு உரிய இடமாகத் தரவேண்டும் என்று ரிபுஞ் சயன் கேட்டான். பிரமதேவரும் அதற்கு இணங்கி னார்.

தேவர் முதலியோர் காசியைவிட்டுத் தத்தம் இடங் களுக்கும் சென்றுவிட வேண்டும் என அறிவித்துவிட்டுச் சிவபெருமானிடம் பிரதேவர் சென்றார்.

காசியின் பெருமைமிகு சிவாலயத்தை அடைந்த பிரமதேவர் விசுவநாதப் பெருமானை வணங்கினார். உடனே விசுவநாத லிங்கத்தினின்றும் வெளிப்பட்டுச் சிவபெருமான் காட்சி கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானே! மகா மேருமலையானது உங்களைக் குறித்து அரிய தவம் செய்துகொண்டிருக்கின்றது. காசியில் இருப்பதுபோல தன்னிடத்து நீங்கள் மகிழ்ச்சியுடன் எழுந்தருளி இருக்கவேண்டும் என்பதே மகா மேருமலையின் விருப்பமாகும். அப்படியான விருப்பத்தை நிறைவுசெய்ய இப்பொழுது நீங்கள் புறப்பட்டருள வேண்டும் என்று பிரமதேவர் முறையிட்டார். உடனே சிவபெருமான் மகாமேரு மலைக்கு அருள்புரிதற்காக இடபாரூடராய் தேவர்கள் சிவபூதகணங்கள் சூழக் காசியிலிருந்தும் புறப்பட்டார். சிவபெருமான் தன் தவத்துக்கு இரங்கி வெளிப்பட்டதைக் கண்ட மேருமலை உடனே எழுந்து மலர்தூவிப் பணிந்தது. மேருமலையின் தோத்திரத்தைக் கேட்ட சிவபெருமான் மேருவே நீ விரும்பியவற்றைக் கூறுக என்றருளினார். சிவபெருமானே என்மனத்தில் உள்ளதை நீரே அறியமாட்டீரோ. கங்காநதி சூழ்ந்த காசிப்பதியில் பெருமையுடன் இருப்பதுபோல என்னிடத்திலும் நீர் பொலிவுடனும் அருட்பெருக்குடனும் இருந்தருள வேண்டும் என்பதே என் விருப்பம் என்று மேருமலை கூறி வணங்கியது. சிவபெருமான் மேருவின் விருப்பத்தை நிறைவு செய்ய அப்படியே தங்கியருளினார். அப்போது பிரமதேவர் சிவபெருமானை வணங்கினார். பெருமானே! உமது அருளினால் யான் இவ்வுலகம் முழுவதையும் படைத்தேன். அரசரில்லாததினால் மழையின்றி உலகம் துன்புற்றது ரிபுஞ்சயன் என்னும் மன்னனை அரசாளும்படி பணித்தேன். அவன் தான் காசியில் இருந்து ஆட்சிபுரிய வேண்டும் என்றும் அதற்காக தேவர்கள் எவரும் காசியில் இருத்தலாகாது என்றும் வேண்டியுள்ளான். அரசன் வேண்டிய வரத்தை எனக்கு அருள்புரிய வேண்டும் என்று பிரமதேவர் கேட்டார்.

அப்போது சிவபெருமான் பிரமதேவரைப் பார்த்து பிரமதேவரே மேருமலைக்கு அருள்புரியும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான் இங்கேயே இருப்பேன். தேவர்களும் தம் உலகில் இருக்கும்படி கட்டளையிடுகின்றேன் என்று திருவாய் மலர்ந்து கூறினார்.

இப்படியருளிய சிவபெருமான் காசியைவிட்டு நீங்காமல் இருப்பதை எவரும் அறியாத வண்ணம் இரகசியமான ஒரு இலிங்க வடிவுடன் காசியில் இருந்தார். இதனால் காசிக்கு அவிமுத்தம் என்ற பெயருண்டாயிற்று. (அவிமுத்தம் என்றால் எக்காலமும் நீங்காதது என்று கருத்தாகும்.) இத்தகைய காசியில் திலோதானன் ஆட்சியின் பின்பு திருமால் முதலிய தேவரனைவரும் பல லிங்கங்களை ஸ்தாபித்து வணங்கியுள்ளார்கள். அவ்வாறு காசியில் விளங்கும் சிவலிங்கங்களின் திருப்பெயர்களைத் தினமும் கூறுபவர் காசியில் இறப்பவர் அடையும் பெரும் பேற்றை அடைவர்.

# திலோதானன் ஆண்டமையும் அவனை விலக்கத் தேவர் கருதியமையும்

தேவர்கள் அனைவரும் காசியை விட்டுச் சென்றபின் ரிபுஞ்சயன் திலோதானன் என்னும் பெயருடன் ஆட்சி புரிந்தான். காசியே திலோதானனின் தலைநகரமாய் விளங்கியது. பெருமையுடன் ஆட்சிபுரியும் போது திலோதானன் தன்னை எதிர்த்தவர் மனம் வாடச் செய்யும் சூரியன்போல விளங்கினான். தன்னை மதித்து நாடிச் செல்பவர்க்கு பூரண சந்திரன்போல் இன்பமுண்டாக்கினான். பகைத்து எதிர்ப்பவர்க்கு யமன் போல இருந்தான். பகைவரின் பட்டாளமாகிய காட்டிற்கு நெருப்புப்போல விளங்கினான். எத்தகையவரும் விரும்புகின்ற அரிய பொருள்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் சிறப்பால் குபேரனைப்போல இருந்தான். வாள் யுத்தம் செய்யும்போது சங்காரக் கடவுளாகிய உருத்திரமூர்த்தி போல் விளங்கினான். புய வலிமை யிலே திருமாலைப்போல் இருந்தான். அறுபத்துநாலு கலைகளிலும் திலோதானனின் மேலானவர் இல்லாத தால் நாகர் கந்தருவர் முதலியோர் மனிதவடிவுடன் வந்து அவனுக்கு தொண்டு செய்தனர்.

இவ்வாறு திலோதானன் பெருமையுடன் அரசு புரி யும்போது ஆதிசேடன் தன் மகளான அழகில் சிறந்த அனங்கமோகினியைத் திருமணம் செய்து கொடுத்தான். திலோதானன் அழகும் குணமும் மிக்க வேறுபல கன் னிகைகளையும் திருமணம் செய்து கொண்டான். மகிழ்ச்சி நிறைந்த வாழ்வில் திலோதானன் பல பிள் ளைகளைப் பெற்று இன்புற்றான். அவன் ஆட்சியில் மக்களது கடமைகளுக்கு இடையூறில்லாமல் மாதம் மும்மாரி பொழிந்தது. திலோதானன் ஆட்சியின்போது அவன் நாட்டில் வாழ்ந்த பெண்கள் ஒவ்வொருவரும் கற்பில் அருந்ததிபோல் சிறப்புற்றிருந்தனர். கற்பில் லாத பெண்கள் ஒருவர்கூட இருக்கவில்லை.

திலோதானன் ஆட்சியில் வேத அறிவும் வேத ஒழுக்கமும் இல்லாத அந்தணர் ஒருவரும் இருக்க வில்லை. திலோதானன் ஆட்சிக்குட்பட்ட வணிகர் ஒவ்வொருவரும் உலகம் முழுவதும் வாங்கும் செல்வச் செழிப்புடையவராய் இருந்தபோதும் பணிவிலும் மிக் கவராய் விளங்கினர். வேளாளருள்ளும் தம் கடமையை விட்டு தவறிழைப்பவர் ஒருவருமிருக்கவில்லை.

அந்த நாட்டில் செல்வச் செழிப்பில் மிக்கவராகவே அனைவரும் இருந்தனர். வறியவரோ ஒழுக்கமற்ற வரோ ஒருவருமில்லை. பிள்ளைப்பேறற்றவர் எவரும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மைப் பெற்றதாய் தந்தையரை தினமும் அன்புடன் வணங்காதவர் அந்த நாட்டில் இருக்கவில்லை. சூதாடுபவர் குருவார்த்தையை மீறுபவர் பிறர்பொருளைக் கவர்பவர் ஒருவரும் அங்கில்லை.

திலோதானன் அரசுபுரியும் நாட்டில் மழையின்றிப் பயிர் வாடியதில்லை. நோயால் வருந்துபவரும் இளமையில் இறப்பவரும் அவமானத்துக்குரிய செயல் செய்பவரும் அந்நாட்டில் இல்லை

திலோதானன் நாட்டில் வேதங்கற்ற அந்தணர் தவம் புரியும் அந்தணரை வணங்குவர். தவம் புரியும் அந்தணர் ஐம்பொறிகளையும் நன்கு அடக்கிய பெரியோரை வணங்குவர் அப்பெரியோர் ஞானியரை வணங்குவர். ஞானியர் திருநீற்றை நன்கு பூசும் முனிவரை வணங்குவர்.

இப்படியான சிறப்புக்கள் நிகழத்தக்கதாக திலோதானன் பூவுலகை எண்பதினாயிரம் வருடம் அரசு புரிந்தான். திலோதானனின் தூய்மை, ஆற்றல், தருமம் என்னும் பண்புகள் காரணமாகவே அவன் ஆட்சியில் இப்படியான சிறப்புக்கள் அமைந்தன. அரசரின் தகுதிமிகுதியினால் நாடும் மக்களும் மேன்மையடைவர் என்பதனாலேயே வேந்தனும் ஓங்குக என்றாற்போலும் வாழ்த்துக்கள் உண்டாயின போலும்.

திலோதானனின் சிறப்புக்களைக் கண்டு தேவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். திலோதானன் வாய்ப்பும் சந்தர்ப்பமும் உள்ளபோது மட்டும் இவ்வாறு சிறப்பாக அரசு புரிவானா அல்லது வசதிக் குறைவு நெருக்கடி என்பன உண்டானாலும் சிறப்புடன் அரசு புரிவானா என்பதை அறிய விரும்பினர். தேவர்கள் தம் குருவான வியாழபகவானிடம் சென்று திலோதானன் அரச தருமத்தில் தவறிழைப்பானா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படித் தவறிழைப்பானாயின் அவனை அரச பதவி யிலிருந்து விலக்க வேண்டும். தவறிழைக்காது சிறப் பாக அரசு புரிவானாயின் திலோதானனுக்கு மேலான பதவியை வழங்க வேண்டும் என்ற கருத்தைத் தெரி வித்தனர்.

வியாழ பகவானும் திலோதான மன்னன் அரச தருமம் தவறாமை மட்டுமன்றி தவ முயற்சியிலும் ஊக்கமுடையவனாயிருப்பதை ஆராய்ந்தறிந்து வியப்புற் றார். தேவகுருவான வியாழபகவான் அக்கினி பக வானை அழைத்து திலோதானன் நாட்டில் யாகம் முதலிய சகல முயற்சிகளும் தடைப்படும்படியாக விலகி யிருக்கும்படி கூறினார். அக்கினிதேவனும் பூமியில் உள்ள அக்கினி தத்துவம் முழுவதையும் தன்னிடத்து ஒடுங்கும்படி செய்தான்

திலோதனனின் அரண்மனைச் சமையற்காரர் சமைப்பதற்கு அக்கினி உண்டாகாமையைக் கண்டார் கள். அக்கினியின் உதவியின்றிச் செய்யத்தக்க உணவு களைச் செய்து வைத்துவிட்டு அவர்கள் அரசனுக்கு நிகழ்ந்ததைத் தெரிவித்தனர். உடனே அரசன் ஏன் அக்கினி உண்டாகவில்லை என்பதைத் தன் தவக் கண்ணால் ஆராய்ந்து பார்த்தான். தன் அரண்மனை யில் மட்டுமன்றித் தன் ஆட்சியின் எல்லா இடங்களி லும் தேவர்களின் சூழ்ச்சியால் அக்கினி இல்லாமற் போனதை அவன் அறிந்து கொண்டான்.

இப்படியான வேளையில் நாட்டு மக்கள் அனை வரும் தம் குறையைத் தெரிவிக்க அரசனிடம் சென் றனர். சென்ற மக்கள் அரண்மனை வாயிற் காவலரை நோக்கி வேள்வி முதல் சமையல்வரை எக் கருமத்துக் கும் அக்கினி கிடைக்கவில்லை, உண்டாகவில்லை என் பதை அரசனுக்குத் தெரிவிக்க வந்தோம் என்று கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். காவலரும் அதனை அரசனிடம் தெரிவித்து அனு மதி பெற்று மக்களை அரசனிடம் செல்லவிடுத்தனர்.

மக்கள் அரசன் முன்னிலையை அடைந்ததும் அர சனை வணங்கினர். உடனே அரசன் மக்களைப் பார்த்து நீங்கள் ஏன் வந்துள்ளீர்கள் என்பதை யான் அறிகின்றேன். உங்கள் துன்பத்தின் காரணத்தையும் நான் அறிந்துவிட்டேன். தேவர்களின் சூழ்ச்சியாலேயே அக்கினி தன் தத்துவங்களைத் தன்னிடம் ஒடுக்கி பூமி யில் அக்கினி உணடாகாது செய்துள்ளனர்.

இப்போ அக்கினி கிடைக்காமையையிட்டு நீங்கள் அஞ்ச வேண்டாம், கவலைப்பட வேண்டாம். அக்கினி தேவன் மட்டுமல்ல வாயுதேவன், வருணதேவன், சூரிய சந்திரர் ஆகிய தேவர் பலரும் பூமியில் நீங்கினாலும் நான் உங்களைக் காப்பாற்றுவேன். என் தவ ஆற்ற லால் உங்கள் அனைவருக்கும் அக்கினியும் பிறவும் கிடைக்கத்தக்கதாக நானே அக்கினியாகவும் பிறவுமாக மாறி உதவுவேன் நீங்கள் கவலையைவிட்டுச் செல் லுங்கள் என்றுகூறி அவர்களை அனுப்பி வைத்தான். பின்னர் அக்கினியாகவும் பிறதேவர்களின் தன்மையாக வும் தானே மக்களுக்கு உதவினான். திலோதானனின் தவப்பெருமையும் தவமுயற்சியைச் சிறக்கச் செய்யும் காசித்தல மகிமையும் தேவர்களின் சூழ்ச்சியால் வெளிப் பட்டன.

## காசிச்சிறப்புரைத்தமை

சிவபெருமான் மகா மேருமலையை அடைந்தபின் அந்தமலை அடைந்த பெருமைகளையும் வளப்பத்தை யும் கூறும்படி முருகப்பெருமானிடம் அகத்தியமுனிவர் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருமலையில் வாழும் பன்றி உண்டாக்கிய கிடங்குகளை அங்கு உதிரும் மலரிதழ்களும், மகரந்தப் பொடிகளும் நிரப்பும். ஆண் சிங்கங்களும், பெண் சிங்கங்களும் உணவுக்குச் குறையில்லாதனவாய் மகிழ்ச்சியுடன் குகைகளில் நித்திரை செய்யும்.

மலைச்சாரல் அருவிகளின் பக்கத்தில் எருமைக் கன்றுகள் பால் குடிக்கத் தாய் எருமைகள் அச்சமின்றி நித்திரை செய்யும். தேன் கூடுகள் சிதைதலினால் தேன் பெருகிக் கலந்த சுனைகளில் யானைகள் மகிழ்வுடன் நீராடும் யானை முத்துக்கள் சிதறிக் காந்தட் பூக்களில் இருக்கும் காட்சி சிவந்த கைகளை உடைய பார்வதிதேவியார் கழங்கு விளையாடுவதற்காக வெள்ளை முத்துமணிகளைக் கையிலெடுத்து வைத்திருப்பது போலிருக்கும்.

மலைச்சாரலில் உள்ள மண்டபங்களில் தேவ அரம்பையரும் தேவரும் வந்து விளையாடுவதால் அம்மண்டபங்களில் தேவலோக மலர் உதிர்ந்திருந்து மணம் பரப்பும். மேருமலை வாசிகளாகிய பெண்கள் மலை முகடுகளில் ஏறி சுவர்க்க உலக மரங்களில் பூப்பறிப்பர். ஆனால் தேவ உலகப் பெண்கள் மேருமலையில் இறங்கி வந்து அங்குள்ள மலர்களைக் கொய்வர். அருவி பெருகும் ஓசையினைத் தாலாட்டு என்று நம்பிச் சிங்கக் குட்டிகள் நித்திரை செய்யும். தேன் கூடுகளுக்கும் சந்திரனுக்கும் வித்தியாசம் தெரியாது குறப்பெண்கள் சந்தேகமடைவர்.

மேருமலையில் பெருகும் அருவிகள் மூங்கில் முத்துக்களையும், நாகரத்தினங்களையும், யானைத் தந்தத்திலுண்டாகும் முத்துக்களையும் வாரியெடுத்துக் கொண்டு பெருகும். சந்திரனது பிறை முனையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்த்தப்பட்ட தேன்வதையை எடுத்துக்கொண்டு ஆளி என்னும் மிருகம் மலை இடுக்குகளில் பதுங்கும்.

தேவர்கள் பாற்கடலைக் கடந்தபோது மத்தாக விளங்கியது மேருமலையாகும் இம்மலை பாற்கடலில் இருந்து தன் முயற்சியால் எடுக்கப்பட்ட பூரண சந்திரன், சங்கநிதி, பதுமநிதி, மகாலக்குமி, கற்பகம், சிந்தாமணி, தேவாமிர்தம், தேவப் பெண்கள் என்பவற்றில் ஒன்றைக்கூடத் தான் வைத்திருக்க வேண்டும் என்று ஆசைப்படாமல் கொடுத்திருக்கிறது. இப் பொருள்களிலும் சிறப்பான பொருள்கள் தன்னிடம் இருப்பதே அப்படிச் செய்ததிற்குக் காரணமென்று தெரிகிறது எனவே மேருமலையிடத்திலுள்ள செல்வப் பொருள்களின் பெருமையை சுலபமாகக் கூற இயலாது என அறிக.

மேருச் சாரலில் தினைகாக்கும் பெண்கள் தம் அழகிய கவண்களில் முத்துக்களையே கற்களாகப் பயன் படுத்திக் கிளிகளைத் துரத்துவர், அப் பெண்களின் முகங்களைச் சந்திரன் எனநம்பி அங்குள்ள ஆம்பல் மொட்டுக்கள் மலரும்.

மேருவில் வாழும் ஆண் யானை கருவுற்ற தன் பெண் யானைக்குக் கற்பக மரக்கிளைகளை முறித்துக் கொடுக்கும். நாகரத்தினத்தை ஆண் குரங்கு கையில் வைத்திருக்க பெண் குரங்கு நெருப்பை அது வைத்திருக்கிறது என அஞ்சும் வீட்டு முற்றங்களில் காய வைத்திருக்கும் தினைகளைக் கிளிகள் கவராதிருக்க அங்குள்ள பெண்கள் பாடுவர். அப்பாடலின் இசையினால் அங்குள்ள மரங்கள் நன்கு துளிர்க்கும், அங்கு வரும் மழை முகில்களைத் தமக்கு எதிரான யானை என்று கருதி ஆண் யானைகள் எதிர்த்துப் பிளிறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பூசிய சந்தனத்தில் மொய்த்த தேனீக் கள் கற்பக மரங்களில் உள்ள மலர்களில் மொய்த்து அந்த மலர்களைச் சந்தன வாசமுண்டாகும்படி செய் யும்.

மேருமலையில் தங்கியிருந்து வீணை வாசிக்கும் கின்னரருக்கு உதவியாகச் சுருதி மீட்டுவதுபோல அரு விகள் ஒலிக்கும். மலைச்சிகரத்தின் ஒரு பக்கத்தில் வெண்முகிலும் மற்றப் பக்கத்தில் மழை முகிலும் தங்கி யிருப்பது சிவபெருமானின் அழகிய தோற்றத்தை நினைக்கச் செய்யும். அங்குள்ள பளிங்குப் பாறைகளில் முயல்கள் படுத்திருப்பதால் அவை சந்திரனைப்போல இருக்கும்.

முத்துக்களைச் சுமந்து கொண்டும் அகில் மரங் களை முறிப்பதால் பெரிய சத்தத்தை உண்டாக்கிக் கொண்டும் மேருமலையில் அருவிகள் செல்லும் காட்சி இராவணன் பெயர்த்ததால் அசைந்த கயிலை மலையை மேருமலை பரிகாசம் பண்ணிச் சிரிப்பது போலிருக்கும்.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னும் தன்மையை பலவகை ரத்தினங்கள் மேருமலையில் காட்சியளிப்பதை ஒவியமாக்கியதோ என்று மேருமலையில் இரத்தினங் களைக் கண்டவர்கள் கருதுவர்.

பகலிலே மேருமலையிலுள்ள சூரியகாந்தக் கற்களி லிருந்து நெருப்புண்டாகும். அதேபோல இரவிலே சந் திரகாந்தக் கற்களிலிருந்து நீர் பெருகும். இக் காட்சி பகலில் நெருப்பின் நடுவில் நின்றும் இரவில் நீரின் நடுவில் நின்றும் மேருமலை தவம் செய்கின்றதோ என்று நினைக்கத்தக்கதாக இருக்கும். மிக உயர்ந்த மலைப்பகுதியில் உள்ள நீர்ச்சுனைகளுக்கு பக்கமாகச் சூரியன் சஞ்சரிக்கும் காட்சி அங்குள்ள சுனைகளில் உள்ள தாமரை மொட்டுக்களைச் சூரியனே தன்கையி னால் மலரச் செய்வது போலிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேருமலையின் மேற்குப் பகுதியில் சூரியன் மறையும்போது கிழக்கில் சந்திரன் உதயமாகும். காட்சி பெரிய யானையின் இரு பக்கங்களிலும் மணிகள் கட்டப்பட்டுத் தொங்குவது போலிருக்கும். அம்மலையில் காணப்படும் பெரிய வட்டமான தேன்கூடு வாள்வீரர் கையிலுள்ள கேடகம் போலிருக்கும். அது மேருமலை தனது பகைவனாகிய இந்திரனுடன் வாட்போர் செய்யப் புறப்பட்டது போலிருக்கும்.

இப்படியான சிறப்புக்கள் மிக்க மலையில் இருந்த போதும் சிவபெருமான் காசியை நினைத்து கவலைப் பட்டார்; அப்படிப்பட்டது காசியின் மகிமை.

மேருமலையில் இருந்த சிவபெருமான் காசியை நினைத்து கவலைகொள்ள அவர் உடல் வெப்பமானது, அந்த வெப்ப மிகுதியால் அவர் உடலில் பூசிய சந்தனம்தான் இன்றுவரை சாம்பராகி உள்ளது போலும். சிவபெருமான் அணிந்திருந்த தாமரை மாலை வாடிச் சுருங்கிப் பாம்புபோல அமைந்திருக்க வேண்டும். அது பின் சிவபெருமானின் பார்வையால் உயிருள்ள பாம்பாகி விட்டதுபோலும். சிவபெருமான் காசியைப் பிரிந்ததால் உண்டாகிய துன்பம் என்னும் நெருப்பை அணைக்கவென தான் சந்திரனையும், கங்கையையும் தலையில் வைத்திருப்பார் போலும். சிவபெருமானே காசியைப் பிரிந்து துன்புற்றார் என்றால் உலகில் யார் தான் பிரிவுத் துன்பத்துக்குத் தப்ப முடியும்.

கொடிய நஞ்சைக் கண்டத்திலே அடக்கும் ஆற்றல் உடைய சிவபெருமான் காசியைப் பிரிந்ததால் உண்டான துயரத்தை அடக்க இயலாதவரானார். உலகில் உள்ள சகலரதும் மயக்கத்தை நீக்கவல்ல ஞான சொரூபியாகிய சிவபெருமானே காசியைப் பிரிந்து மயங்கினார் எனில் காசியின் பெருமையை அளவிட முடியுமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கன் மகளைப் பிரிந்த துன்பம் மலையரசன் மகளால் நீங்கியது. ஆனால் காசியைப் பிரிந்த துன்பம் நீங்க வேறு வழியில்லை. காசியை அடைதலே ஒருவழி என்று சிவபெருமான் கூறினார். ''காசி காசி'' என்று திரும்பத் திரும்பச் சிவபெருமான் கூறியபடி இருந்தார்.

விருப்பு வெறுப்பு என்னும் உயிர்க் குணங்களற்ற பரமபதியாகிய சிவபெருமான் சாதாரண உயிர்களைப் போல துன்பப்படுவதற்கு என்ன காரணம் என்று உமையம்மையார் சிவபெருமானிடம் கேட்டார். சிவபெருமான் உமையைப் பார்த்து பெண்ணே! '' காசித் தலத்தைப் பிரிந்ததனால் நான் துன்பப்படுகின்றேன்.'' என்று கூறினார் அதைக் கேட்டவுடன் உமையம்மையின் மனமும் காசியை நினைத்து ஏங்கத்தொடங்கியது. உமையம்மையார் சிவபெருமானை நோக்கித் தலைவரே ''பெருமைமிக்க காசிப்பதியில் இருவரும் சென்று தங்குவதற்குரியசெயலைப் புரிந்தருளும்'' என வேண்டினார்.

திலோதானனை அரசு செய்யும்படி கூறியபோது காசியில் தேவரனைவரும் விலகவேண்டும் என அவன் கேட்ட வரத்தை வழங்கினோம். அவன் அரச தருமத்தில் தவறினால் ஒழிய அவனைக் காசியிலிருந்து விலக்க இயலாது என்று சிவபெருமான் அம்பிகைக்குக் கூறினார். பின் சிவபெருமான் யோகினிகளைப் பார்த்து நீவிர் திலோதானன் அரச நெறியை விட்டு விலகி அதனால் அவன் காசியை நீங்கும்படி செய்யுங்கள் என்று கூறியருளினார்.

## யோகினிகள் காசியை அடைந்தமை

யோகினிகள் அனைவரும் காசியை அடைந்தனர். காசியின் சிறப்புக்களைக் கண்டு வியப்புற்றனர். தம் இயல்பான உருவங்களை விட்டு வேறுவேறு வடிவங்களை எடுத்துக்கொண்டு காசியுள் பிரவேசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களது மனத்தையும் மயங்கச் செய்யும் அழகுடன் ஒரு யோகினி சென்றாள். அழகிய ஓவியம் போன்றவளாய்க் கடை வீதியில் மாலைவிற்கும் பெண் போல ஒரு யோகினி சென்றாள். சாத்திரம் சொல்லும் குறப்பெண்போல ஒரு யோகினி சென்றாள். வேதம் வல்ல அந்தணர்முன் சென்று உங்கள் மனைவி தூய கற்பில்லாதவள் நானே தூய்மையும் கற்பும் உடையவள் என்னை மனைவியாக ஏற்றுக்கொள்ளும் என்று ஒரு யோகினி சென்றாள். அளவற்ற வித்தைகள் கற்றுள்ளேன். மலடியரும் பிள்ளைபெறச் செய்யவல்ல மருந்து என்னிடம் உண்டு என்று கூறிக்கொண்டு ஒரு யோகினி சென்றாள். நான் முன்பு என் இரசவாத வலிமையினால் கயிலையை வெள்ளிமலையாக்கியவள் இன்று உங்கள் பொருட்டு வித்தைகள் செய்கின்றேன் என்று கூறிக்கொண்டு ஒரு யோகினி சென்றாள். நெருப்பு, நீர், காற்று என்பவற்றை அடக்குவேன். ஆகாயத்தில் தங்குவேன். இரவையும் பகலையும் மாற்றுவேன் என்று ஒரு யோகினி சொல்லினாள். தேவ உலகினர் என்னைத் திருமணம் செய்ய ஆசைப்பட்டனர். பூவுலகிற்கு அவர்கள் வந்தால் திருமணம் செய்வதாகக் கூறியுள்ளேன் என்று ஒரு யோகினி கூறினாள். அரசர்களின் ஆயுதங்களைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் எனக்குண்டு. இத் திறமையைப் பயில விரும்பும் தகுதியுள்ளவருக்குக் கற்பிக்கிறேன் என்றாள் ஒரு யோகினி. உடலைக் கண்ணுக்குத் தெரியாது மறைப்பேன் அணுப்போலவும், மலைபோலவும் ஆவேன் என்றாள் ஒரு யோகினி. புதைபொருள்களை மைபோட்டுக் காண்பிப்பேன் என்றாள் ஒருத்தி. முக்கால நிகழ்வுகளையும் கூறுவேன் என அரச மாதர் இடங்களுக்குச் சென்று ஒரு யோகினி கூறினாள்.

சூதாட்டத்தில் வல்லவரிருந்தால் என்னோடு போட்டியிட வருக என்றாள் ஒரு யோகினி. கல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசியத்தக்கதாக அமிர்தம்போல் பாடிக்கொண்டு ஒரு யோகினி அந்தணர் இருக்குமிடம் சென்றாள்.

இவ்வாறு சென்ற யோகினிகள் தம் ஆற்றலால் காசியில் உள்ளவர்களிடம் ஒரு மாற்றமும் செய்ய இயலவில்லை. அவர்கள் சிவபெருமானிடம் திரும்பிச் செல்ல அஞ்சி காசியிலேயே தவத்தை மேற்கொண்டனர்.

## உலோகாதித்தன் கதை

யோகினிகள் திரும்பி வராததை அறிந்த சிவபெருமான் காசிக்குச் சென்று அம் மன்னனின் ஆற்றலைக் குறைக்கும்படி சூரிய தேவனுக்குக் கூறினார். காசிக்குச் சென்ற சூரியன் அரிய பொருள்களைப் பிச்சையாகக் கேட்க அங்குள்ளவர் கொடாவிட்டால் அதனால் அரசனுக்குப் பழியுண்டாகும் என்று கருதினான். உடனே வறியவனைப் போன்று வீடும்தோறும் போய் அரிய பொருள்களைப் பிச்சையாகக் கேட்டான். அதை அவர்கள் அன்புடன் கொடுத்தனர். அதனால் சூரியன் மிகவும் நாணமடைந்தான். யார் எதைக் கேட்டாலும் தருவேன் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள் எனச் சூரியன் வீடுதோறும் சென்றான் ஒருவரும் தன்னிடம் எதையும் கேட்காமை கண்டு வருந்தினான். பாம் பாட்டுபவர் போலவும், முனிவர்கள் போலவும் சென்று காசி மக்களை மயக்கலாம் என்று சூரியன் பல முயற்சிகளைச் செய்தான். சாஸ்திரங்களின் நுட்பமான கருத்துக்களைக் கூறியும், இரும்பைப் பொன்னாக்கும் ரசவாதிபோலச் சென்றும் அங்குள்ளவர்களை மயக்க முயன்றான். தூய முனிவர் போலவும் திறமைமிக்க அரசர் போலவும் சென்று அங்குள்ளவர்களின் ஒழுக்கங்களை மாற்ற முயன்றான். வணிகரைப் போலவும் மணப்பெண் போலவும் மாப்பிள்ளை போலவும் வேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலும் அந்தணச் சிறுவர் போலவும் சூரியன் காசியில் உலவி அரசநீதியைத் தவறும்படி செய்ய முயன்றான். இப்படியான முயற்சிகள் மூலம் மூன்று வருடங்கள் முயற்சி செய்தும் சூரியதேவனால் திலோதானனை அரசநீதியில் தவறும்படி செய்ய இயலவில்லை.

சிவபெருமானின் கட்டளையை நிறைவேற்றாது காசியிலிருந்து எவ்வாறு செல்வது என்றும் சிவபெருமான் கோபித்தால் அழியவேண்டுமே என்றும் சூரியன் அஞ்சினான். சிவபெருமானின் கட்டளையை நிறைவேற்றாத பாவம் தீர காசியில் இருந்தே தவம்செய்ய வேண்டும் என நினைத்தான். நவரத்தினத்தை விட்டுப் பிச்சைப் பாத்திரத்தை எடுப்பது போன்றதே காசியை விட்டுப் பிறஇடம் செல்ல நினைப்பது. சூரியன் காசியிலே தங்கியிருக்க ஆசைப்பட்டதனால்உலோதாதித்தன் எனும் பெயர் உண்டானது. இது தவிர உத்தராதித்தன், சாம்பாதித்தன், துருபாதித்தன் மயூகாதித்தன், கடோற்காதித்தன், அருணாதித்தன், விருத்தாதித்தன், கேசலாதித்தன், விமலாதித்தன், கங்காதித்தன், யமாதித்தன் ஆகிய பெயர்களும் சூரியனுக்கு உண்டு.

## உத்தராதித்தன் கதை

வளம் மிக்க காசிநகரத்தின் வடபகுதியில் உத்தராதித்த மூர்த்தியின் கோயில் விளங்குகின்றது. எவரும் புகழும் பண்புகளை உடைய விரதன் எனும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அந்த அந்தணன் சுபவிரதை என்னும் கன்னியைத் திருமணம் செய்தான். அவர்களுக்கு மூலநட்சத்திரத்தில் சுலக்கணை எனும் பெயருடைய பெண்பிள்ளை பிறந்தது. இளம்பிறை போல அப்பிள்ளை வளரும் நாளில் தந்தையாகிய விரதன் இறந்தான். உடனே விரதனின் மனைவியும் நெருப்பிலே வீழ்ந்து உயிர் விட்டாள். இவர்களுக்கு ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை இல்லாததினால் சுலக்கணையே இறுதிச்சடங்கு களை நிறைவேற்றிவிட்டு உத்தராதித்தன் பக்கலில் இருந்து தவம் செய்தாள் ஏழுலக்கங்களிலும் உள்ள வர் வியக்கத்தக்க தவத்தை சுலக்கணை மேற் கொண் டிருந்தாள். சுலக்கணை தவம் செய்யும் போது ஒரு ஆடு தினமும் அவளை வலம் வந்து அவளையே வியந்து பார்த்து வந்தது. ஒரு நாள் சிவபெருமான் உமையுடன் சுலக்கணைக்குக் காட்சி கொடுத்தார். அப் போது உமையம்மையார் தவம் செய்யும் இப்பெண் எனக்குச் சாமரை இரட்டும் தோழியாக இருக்கும் படி அருள வேண்டும் எனக் கேட்டாள். அப்போது சிவ பெருமான் சுலக்கணையை நோக்கி என்ன வரங்கள் வேண்டும் என்று கேட்டருளினார். சுலக்கணை சிவ பெருமானை துதித்து இறைவனே! எனக்கு நல்லவரங் கள் அருளுமுன் இந்த ஆட்டுக்கும் நல்லருள் புரிய வேண்டும் என்று வேண்டினாள்.

அப்போது சிவபெருமான் சுலக்கணையை நோக்கிப் பெண்ணே! நீ இப்போதே உமையம்மைக்குத் தோழி யாக விளங்கும் நிலையை அடைவாயாக. உன்னால் அன்பு செய்யப்பட்ட இந்த ஆடு காசி அரசனுக்கு மக ளாகப் பிறந்து இன்பங்களை அனுபவித்த பின் உனக் கும் தோழியாகும் நிலையை அடையும் என்று அருள் புரிந்தார்.

உத்தராதித்தன் சமீபமாக இருந்து தவம் செய் தமையால் சுலக்கணையின் தவம் சிறப்புற்றது என்பதும் அந்த இடத்தின் மகிமை காரணமாகவும் அப் பெண் ணின் தவமகிமை காரணமாகவும் அங்கு சென்ற ஆடும் நல்லகதி பெற்ற தென்பதும் இக்கதையால் உரைப்படு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பாதித்தன் கதை

கண்ணபிரான் துவாரகையில் அரசாளும் நாளில் ஒரு நாள் நாரதமுனிவர் அங்கு சென்றார். கண்ணனுடைய புதல்வர் அனைவரும் நாரதமுனிவரைப் பணிந்தனர். ஆனால் சாம்பன் என்ற கண்ணனின் மகன் மட்டும் தன் அழகின் செருக்கால் நாரதமுனிவரை வணங்காதிருந்தான். நாரதமுனிவர் அரண்மனைக்குள் சென்றதும் கண்ணபிரான் தக்க உபசாரங்களை புரிந்தார். பின் இருவரும் உரையாடினர். அப்போது நாரதர் கண்ணா! உலகில் அழகுமிக்க ஆண்களிடம் பெண்கள் மனம் ஈடுபடும். தாயாயினும் சரி பிள்ளையாயினும் சரி சகோதரராயினும் சரி அழகுமிக்கோரிடம் பெண்கள் மனம் செல்லும் உன்மகன் சாம்பன் அழகில் சிறந்த மன்மதன் போலிருக்கிறான். ஆதலால் சாம்பன் அந்தப்புரத்தில் தனித்துப் பழகுவதைத் தவிர்த்து நடப்பது அவசியம் என்று கூறிச் சென்றார். பின்னர் சிலநாள்கள் கழித்து ஒரு நாள் நாரதர் கண்ணனிடம் சென்றார். நாரதர் சென்ற நேரம் கண்ணன் தன் மனைவியுடன் தனித்திருக்கும் நேரமாயிருந்தது. நாரதர் சாம்பனை அழைத்து தான் வந்திருப்பதைக் கண்ணனுக்குத் தெரிவிக்கும் படி கூறினார். அப்படியான நேரத்தில் செல்வது தந்தையின் கோபத்திற்குத் தன்னை ஆளாக்கும் என்று சாம்பன் அஞ்சினான். ஆனால் சென்று முனிவர் வரவைத் தெரிவிக்கா விட்டால் முனிவரின் சாபத்திற்கு ஆளாக வேண்டுமே எனப் பயந்தவண்ணம் கண்ணன் இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

சாம்பன் கண்ணனுக்குச் சமீபமாகச் சென்று கொண்டிருக்கும் போது நாரதரும் கண்ணனை நோக்கிச் சென்றார் கண்ணனிடம் தன் அறிவிப்பு இல்லாமலே நாரதர் செல்வதால் தான் சென்று தெரிவிக்கத் தேவையில்லை எனக் கண்ட சாம்பன் தன்வரவைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட தந்தையை வணங்கி விட்டுத் திரும்பிச் சென்றான் கண்ணன் நாரதரை வரவேற்று உபசரித்தார்.

நாரதர் அப்போது கண்ணனைப் பார்த்து, கண்ணா அன்று நான் உனக்குக் கூறிய புத்திமதியை அலட்சியம் பண்ணிவிட்டாய்போலும்இப்போபார்இங்கு வந்த சாம்பனைக் கண்டதால் இப்பெண்கள் மனம் விகாரப்பட்டுள்ளது என்று கூறினார் உடனே கண்ணன் சாம்பனை அழைத்தார் சாம்பனே !பொருத்தமில்லாத சந்தர்ப்பத்தில் அந்தப்புரம் வந்தகுற்றத்திற்காக நீ குட்டநோயினால் பீடிக்கப்படுக என்று சாபமிட்டார். உடனே சாம்பன் கண்ணனை வணங்கி தந்தையே இந்தச் சாபத்திலிருந்து விடுபடத்தக்க உபாயத்தைக் கூறியருள வேண்டும். என்று கேட்டான்.

மகனே! நீ காசியை அடைந்து சூரியனை வழிபட்டால் இந்நோய் நீங்கும் எனக் கூறியருளினார். காசியிலே தன்னை வழிபட்ட சாம்பனுக்கு சூரியபகவான் விரைவில் அருள் புரிந்தார். சாம்பனுக்கு அருள்புரிந்ததால் சூரியனுக்கு சாம்பாதித்தன் எனும் பெயர் உண்டாயிற்று.

## துருபாதித்தன் கதை

சிவபெருமான் கருணையால் பாண்டு மன்னனுக்கு பஞ்சபாண்டவர் பிள்ளையாகப் பிறந்தனர். பாண்டவர்க்குத் துணையாக நாராயணர் தேவகினமந்தனாக அவதரித்தார். தருமர் முதலிய பாண்டவர் திரௌபதியைத் திருமணம் செய்து வாழ்ந்த காலத்தில் பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் சூது நிகழ்ந்தது. பாண்டவர் சூதில் தோல்வியுற்று திரௌபதியுடன் காட்டுக்குச் சென்றனர். அப்படிச் சென்றபோது, பாண்டவரும் திரௌபதியும் காசியை அடைந்தனர் காசியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த திரௌபதி சூரியனைக் குறித்து அரிய தவத்தைச் செய்தாள். தவத்தால் மகிழ்ந்த சூரியன் பாண்டவருக்கும் அவர்களை அடுத்தவர்க்கும் பசித்துன்பம் உண்டாகாத வண்ணம் எடுக்க எடுக்கக் குறையாத உணவுப்பாத்திரத்தை திரௌபதிக்கு வழங்கியருளினார் இவ்வாறு திரௌபதிக்கு அருளியதால் சூரியனுக்கு துருபாதித்தன் என்னும் பெயருண்டாயிற்று துருபாதித்தன் என்றால் திரௌபதிக்கு அருளிய சூரியன் என்பது பொருளாகும்.

# மயூகாதித்தன் கதை

சூரியபகவான் திருவையாறு எனும் தலத்தில் சிவபெருமானைக் குறித்து தவம் செய்தார். நூறாயிரம் ஆண்டு மேலான தவத்தைச் செய்ததால் சூரியன் உடலில் இருந்து ஒளியும் வெப்பமும் மிகுந்து பரவலாயிற்று. இதனால் தேவர் முதலியோர் ஆகாயவழியாகச் செல்ல இயலவில்லை. இதைக் கண்ட சிவபெருமான் சூரியன் முன் தோன்றினார். பொறிகளை அடக்கிய தவத்தில் நிலைத்ததினால் சிவபெருமான் காட்சி கொடுத்ததைச் சூரியன் அறியாமல் இருந்தான். அது கண்ட சிவபெருமான் தன் கைகளால் சூரியனைத் தடவியருளினார், கண் விழித்த சூரியனைச் சிவபெருமான் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். எத்தகைய வரத்தையும்கேளாமலேசூரியன் இனியதோத்திரங்களால் சிவபெருமானைத் துதித்தான். அத்துதியால் மகிழ்ந்தார் சிவபெருமான். சூரியனே தேவர்களனைவரும் உன்னை வியக்கும்படி எனது ஒரு கண்ணாக விளங்குவாயாக என்றருளிவிட்டு சிவபெருமான் மறைந்தருளினார். தன் தவஒளி உலகெங்கும் நிறையும் படி தவம் செய்த காரணத்தால் சூரியனுக்கு மயூகாதித்தன் என்று பெயருண்டாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடோற்காதித்தன் கதை

தக்களின் பெண்பிள்ளைகளாகிய விநதை கத்துரு என்பவரைக் காசிபமுனிவர் திருமணம் செய்தார். இரு பெண்களும் ஒரு நாள் மலர் கொய்யப் பூஞ் சோலைக்குச் சென்றனர். அப்போது இந்திரன் குதிரையின் நிறம் என்ன? சரியான நிறத்தைச் சொல்பவர்க்கு மற்றவர் அடிமையாவோம் என்று கத்துரு கூறினாள். இதற்கு விநதை சம்மதித்தாள் விநதை இந்திரன் குதிரையின் நிறம் வெள்ளை என்று கூறினாள். கத்துரு அக்குதிரையின் நிறம் கறுப்பே என்று கூறினாள் மற்றநாள் காலையில் இருவரும் சென்று குதிரையைப் பார்த்து யார் கூறியது சரி எனத் தீர்மானிக்க முடிவு செய்தனர்.

பின்னர் கத்துரு தன் பிள்ளைகளாகிய பாம்புகளை அழைத்து நீவிர் உங்கள் விஷத்தினால் இந்திரன் குதிரை நாளைக் காலை கறுப்பாக மாறியிருக்கும்படி செய்ய வேண்டும் என்று கூறினாள். பாம்புகள் தாயைப் பார்த்து அம்மாவே! நீர் கூறியபடி செய்வது தகுதியற்ற செயல் அப்படிச் செய்ய எம் மனம் அச்சமடைகின்றது என்று கூறின. அது கேட்ட கத்துரு கோபமதைந்தாள். தன் பிள்ளைகளாகிய பாம்புகளைப் பார்த்து நீங்கள் கருடப்பக்ஷிக்கு உணவாவீர்கள் என்று சாபமிட்டாள். இதைக் கேட்ட பல பாம்புகள் பாதாள உலகில் சென்று மறைந்தன சில பாம்புகள் அக்குதிரையிடம் சென்று தம் விடத்தினால் அதைக் கருநிறமாகச் செய்தன.

அடுத்த நாள் சூரிய உதயமான பின்னர் இரு பெண்களும் குதிரையைப் பார்க்க ஆகாய வழியாகச் சென்றனர். அப்போது வெயில் வெப்பத்திற்கு அஞ்சிய இருவரும் சூரியனைப் பார்த்து கடோற்கம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர் இவர்கள் இப்படிக் கூறியதால் சூரியனுக்கு கடோற்காதபன் எனும் பெயர் உண்டானது. பின்னர் இருவரும் சென்று பார்த்த போது குதிரை கறுப்பு நிறமாகக் காணப்பட்டது. அதைக் கண்ட விநதை இனி நான் உன் அடிமையாய் இருப்பேன் என்று கூறினாள் விநதை பின்னர் தினமும் அதிகாலை முதல் மாலை வரை கத்துருவின் வேலைகளைச் செய்து வந்தாள். இந்த விநதைக்கு கருடன் என்ற மகன் இருந்தான். பறவை அரசனாகிய கருடன் தாயைப் பார்த்து தாயே! தினமும் அதிகாலை எங்கு செல்கிறீர் மாலை வரை வீடு திரும்புவதில்லை மிகவும் கவலையுடன் நீர் காணப்படுவதற்கு காரணம் என்ன? என்று கேட்டான் தாய் நடந்தவைகளைத் தெரிவித்தாள்.

தேவர்க்கு அரிய பொருளாயினும் கொடுத்து உம் அடிமைத் தன்மை நீக்குதற்கு நான் முயல்வேன் கத்துருவின் பிள்ளைகளிடம் சென்று எப்பொருள் வேண்டும் எனக் கேட்டு வருக என்றார் விநதையுப் பாம்புகளிடம் சென்று என் அடிமை தன்மை நீங்க எப்பொருள் தரவேண்டும் எனக் கேட்டாள். பாம்புகள் விநதையைப் பார்த்து தேவாமிர்தம் தந்தால் அடிமைத் தன்மையிலிருந்து நீங்கச் சம்மதிப்போம் என்றன. விநதை கருடனிடம் பாம்புகள் கூறியதைத் தெரிவித்தாள். அம்மாவே! நான் விரைவில் தேவாமிர்தத்தை எடுத்து வருவேன். புறப்படுமுன் என் பெரும் பசி நீங்க நிறைய உணவும் வேண்டும் என்று கேட்டான்.

தாய் மகனைப் பார்த்து கருடனே பவளம் விளையும் சமுத்திரக் கரையில் கொடிய வேடர் பலர் உள்ளனர் அவர்களனைவரையும் சென்று உண்க. ஆனால் அவ் வேடர்களுடன் வேதம் ஓதும் ஒரு அந்தணனும் இருக்கிறான். அவனை உண்ணலாகாது விழுங்கும் போது தொண்டையில் அவன் வரும் போது வெப்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். உடனே அப்பிராமணனை மட்டும் உமிழ்ந்து விட்டு வேடர் முழுவரையும் உண்டு பசி நீக்கிச் செல்க என்றாள். கருடனும் அப்படியே உண்டு விட்டு வேக மாகப் பறந்து சென்றான். அவனது வலிமையைக் கண்டு மலைகள் சூறைக்காற்றுகள் எல்லாம் அஞ்சின கருடனின் நோக்கத்தைக் கண்டு தேவர்கள தேவேந்தி ரன் தலைமையில் எதிர்த்துச் சண்டையிட்டனர் தன் இறகுகளினாலும், கால்களாலும், மூக்கினாலும் எதிர்த்து கருடன் தேவர்களை வென்றான்.

பின் கருடன் அமிர்தம் உள்ள இடத்துக்குச் சென்றபோது அது மிகுந்த காவலுடன் இருந்தது. கருடன் சிவபெருமானைத் தியானித்து அணுவிலும் சிறிய வடிவத்தை எடுத்து உள் நுழைந்து காவல் யந்திரத்தை அப்புறப்படுத்தினான். பின்னர் அமிர்த கலசத்தை எடுத்துப் புறப்பட்டான். உடனே தேவர் கள் கவலையுடன் சென்று பாற்கடலில் துயிலும் திரு மாலிடம் முறையிட்டனர். தேவர்களுக்கு ஆறுதல் கூறியபின் திருமால் கருடனிடம் சென்றார். கருடனை யுத்தத்தால் வெல்வதிலும் பார்க்க சூழ்ச்சியால் வெல் வதே எளிது என்று திருமால் தீர்மானித்தார். கரு டனே இந்திரனை வென்ற உன் ஆற்றலை நான் மிக மதிக்கிறேன். உனக்கு யான் வரம் தருவேன் கேட்பா யாக என்று கூறினார். தேவர்கள்மீது கோபத்துடன் சென்ற கருடன் எனக்கு நீ ஒரு வரமும் தரத் தேவை யில்லை. நான் உனக்கு இரு வரம் தருவேன் கேட்குக என்றான் உடனே திருமால் உன்னிடம் இரண்டு வரம் வேண்டுவது எனக்கு மகிழ்ச்சியே. ஒரு வரத்தால் எனக்கு வாகனமாதல் வேண்டும். மற்ற வரத்தால் பாம்புகள் அமிர்தம் உண்ணாது தடுத்தல் வேண்டும் என்று கேட்டார். இரண்டு வரங்களுக்கும் கருடன் சம்மதித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அமிர்தத்தைக் கொடுத்துக் கருடன் தாயின் அடிமைத் தனத்தைப் போக்கினான். உடனே பாம்புகள் அமிர்தத்தை உண்ண விரும்பின கருடன் பாம்புகளை நோக்கி அமிர்தத்தை தூய்மையுடன் இருந்து உண்ண வேண்டும். இப்போது இவ்வமிர் தத்தைத் தருப்பைமீது வைத்துவிட்டுச் செல்கின்றேன். நீங்கள் நீராடியபின் வந்து உண்ணுங்கள் என்று கூறி னான். அப்படியே பாம்புகள் நீராடச் சென்றன. உடனே நாராயணர் அமிர்தத்தை எடுத்துச் சென்று தேவர்களிடம் கொடுத்தார். பின் சென்ற பாம்புகள் அமிர்தத்தைக் காணாது அமிர்தம் இருந்த தருப்பை யினை நக்கின. அதனால் பாம்புகளின் நாக்கு இரு பிளவுடையனவாகின.

அடிமைநீங்கிய தாயுடன் கருடன் காசியை அடைந் தான் ஆதிசேடனை மாலைபோலணிந்து கொண்டு கருடன் காசியில் சிவலிங்கபூசை செய்தான் நீண்ட காலம் செய்த சிவபூசைக்கு மகிழ்ந்த சிவபெருமான் காட்சி கொடுத்தார். கருடன் விரும்பிய வரங்களை வழங்கினார் கருடனே திருமால் என்னிடம் மிகுந்த அன்புடையவர் அவருக்கு வாகனமாக இரு என்று கூறினார் சிவபக்தருக்கு வாகனமாதலில் நிறைந்த விருப்பமுடையவனாய் கருடன் திருமாகடம் சென்றான்.

## அருணாதித்தன் கதை முதலியன

காசிபன் மனைவியாகிய கத்துரு தன் கணவன் அருளால் நூறு பிள்ளைகளைப் பெற்றாள். விநதை கணவன் அருளால் மூன்று பிள்ளைகளைப் பெற்றாள் விநதைக்குப் பிறந்த மூன்று முட்டைகளில் ஒன்றிலிருந்து கூகை எனப்படும் கோட்டான் பிறந்தது. மூத்ததாத லினால் கூகையை பறவைகளுக்கு அரசன் என நியமித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். ஆனால் பகலில் அதற்கு கண் தெரியாதென்ப தாலும், அதன் குரல் இனிமையற்றது என்பதாலும் அதனை அரசனாக்க வேண்டாம் என்று பற வைகள் மறுப்புத் தெரிவித்தன. கூகையின் தன்மை யால் கவலை கொண்ட விநதை தனது மற்ற இரண்டு முட்டைகளில் ஒன்றை உடைத்தாள். அதன் அரையின் கீழுள்ள கால்கள் வளர்ச்சியடையாதிருந்தன. முழு வளர்ச்சியடையமுன் உடைத்ததிற்காக கோபமுற்ற அருணன் என்னும் அப்பிள்ளை தாயைக் கோபித்தது. இப்படிச் செய்ததிற்காக அடிமையாயிருக்க வேண்டும் என்றான். அடுதத முட்டை பூரண வளர்ச்சியடைந்த பின் பிறந்து தாயின் அடிமையை நீக்கும் என்றும் சொல்லிவிட்டு அருணன் காசிக்குச் சென்றான்.

அருணன் காசியிலே சூரியதேவனைக் குறித்து அரிய தவத்தைச் செய்தான். அதனால் மகிழ்ந்த சூரி யன் காட்சி கொடுத்து தனது தேரைச் செலுத்தும் சாரதியாயிருக்கும் வரத்தை வழங்கினான். இவ்வாறு அருணனுக்கு அருள் புரிந்ததால் சூரியனுக்கு அருணா தித்தன் எனும் பெயர் உண்டாயிற்று.

பெருமை மிக்க காசியிலே வேதம் பயின்ற முதிய அந்தணன் சூரியனைக் குறித்து தவம் செய்தான். தவத்திற்கு மகிழ்ந்த சூரியன் வெளிப்பட்டான். சூரி யனைத் துதித்த அந்தணன் தனக்கு இளமை வேண்டும் என வரம் கேட்டான். சூரியன் அருளால் அந்த அந் தணன் இளமையடைந்தான். இவ்வாறு விருத்த அந் தணனுக்கு அருள் புரிந்ததினால் சூரியனுக்கு விருத் தாதித்தன் எனும் பெயர் அமைந்தது.

கண்ணபிரான் ஒருமுறை காசியில் சிவபெருமானை அன்புடன் தியானித்து தவம் புரிந்தார். ஆகாய மார்க்கமாகச் செல்லும் சூரியன் அதனைக்கண்டு ஆச் சரியமடைந்தான். உடனே சூரியன் கண்ணபிரானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையை அடைந்தான். சூரியன் கண்ணபிரானை வணங்கினான். கண்ணபிரானே! பிரமதேவரைதோற்று வித்த பெருமை உடைய நீர் கடவுளல்லவா. நீர் பரம் பொருளல்லவா. இப்பொழுது நீர் ஏன் தவம் புரிகின்றீர் என்று கேட்டான். உடனே கண்ணபிரான் சூரியனே உலகின் இருளைப் போக்கும் தன்மையுடைய நீ மனத்தில் இருளுடன் விளங்குகின்றாய் போலும். உலகில் எல்லோருக்கும் மேலானவர் சிவபெருமானே அல்லவா. நாம் எல்லோரும் சிவபெருமானைத் தொழுது அவர் அருளாலே சிறப்புப் பெற்றுள்ளோம். சிவபெருமானை வணங்குபவர் மட்டுமே அறியாமையிலிருந்து விடுபடுவர். சிவபூசை செய்பவர் கால்தூசு படுபவருக்கும் தீவினை நீங்குமல்லவா சிவநாமத்தை செபிப்பவர் பிறவித்துன்பம் அடையார். ஆதலால் சூரியனே நீயும் இக் காசியிலே சிவலிங்கம் தாபித்துப் பூசிப்பாயாக என்று கூறினார். கண்ணபிரானாகிய கேசவமூர்த்தியிடம் உபதேசம் பெற்று காசியிலே சிவ பூசை செய்து மேன்மையடைந்ததினால் சூரியனுக்கு கேசவாதித்தன் என்றும் ஒரு பெயருண்டானது.

முற்காலத்தில் விமலன் எனும் பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் காசியை அடைந்து சூரியனைக் குறித்து தவம் செய்தான். தவத்தினால் மகிழ்ந்த சூரியன் விமலன் முன் தோன்றினான். விமலன் சூரியனை வணங்கி தன் மரபில் ஒருவருக்கும் குட்டநோய் வரலாகாது என்று வரம் கேட்டான். அப்படியே வரம் கொடுத்ததுடன் சூரியன் அவ் விமலனுக்கு மிக்க செல்வத்தையும் அருளினான். விமலனுக்கு மட்டுமன்றி அவன் மரபினருக்கும் விசேட அருள் புரிந்ததினால் சூரியனுக்கு விமலாதித்தன் என்னும் பெயருண்டானது.

கங்கையைப் பூமிக்குக் கொண்டுவரும் பொருட்டு பகீரதன் மிக்க தவத்தைச் செய்தான். அப்படித் தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பகிரதன் தவம்பலித்து கங்கையை பூமிக்கு அழைத்துவரப் பகீரதனுக்கு விசேட அருள் புரிந்ததால் சூரியனுக்கு கங்காதவன் என்னும் பெயருண்டானது.

ஒருமுறை யமதர்மராசன் காசியிலே ஒரு சூரிய விக்கிரகத்தை அமைத்து தவம் புரிந்தான். அத் தவத்தால் மகிழ்ந்து சூரியன் யமனுக்கு காட்சி கொடுத்து கேட்டவரமும் வழங்கினான். இவ்வாறு யமனுக்கு அருள் புரிந்ததினால் சூரியனுக்கு யமாதவன் என்றும் ஒரு பெயர் அமைந்தது.

## பிரமா வேள்வி செய்தமை

யோகினிகளையும் சூரியனையும் காசிக்கு அனுப்பியும் அவர்கள் வெற்றியுடன் திரும்பாமையால் பின்னர் பிரமதேவரை சிவபெருமான் அனுப்பினார். பிரமதேவர் மகிழ்வுடன் திலோதானன் அரசவையை அடைந்தார். முதுமையின் அழகுமிக்க அந்தணவடிவுடன் பிரமதேவர் திலோதானன் முன்னிலையை அடைந்து ஆசி கூறினார். தூய அந்தண முதியவரைக் கண்டதும் திலோதானன் அன்புடன் எழுந்து வணங்கி உபசரித்தான். ( அரிய செயலைக் கேட்டால் நிறைவேற்ற இயலாத குற்றம் அரசனுக்கு உண்டாகும் என்ற நோக்கத்துடன் ) அரசே ! உன் துணையினால் அசுவமேத யாகம் செய்ய விரும்பி இங்கு வந்தேன் என்று பிரமதேவர் கூறினார். திலோதானன் மகிழ்வுடன் பிரமதேவர் பத்து அசுவமேத யாகம் செய்ய வேண்டிய பொருள்களையும் பிற உதவிகளையும் வழங்கினான். பத்து அசுவமேத யாகங்களையும் நன்கு செய்தபின் யாக முடிவாக நீராடுதலையும் முடித்துவிட்டு தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தையும் பிரமதேவர் பிரதிஷ்டை செய்தார். அந்த லிங்கத்துக்கு பிரமேசலிங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் என்று பெயர். தன் முயற்சியால் திலோதானன் குற்றப்படாததைக் கண்ட பிரமதேவர் வேறு காரணங்களால் திலோதானன் தவறிழைப்பானோ என்று அவதானித்துக் கொண்டிருந்தார். தான் செய்த முயற்சிகளால் திலோதானனைக் குற்றஞ்சாட்ட இயலாத பிரமதேவர் சிவபெருமானிடம் திரும்பிச் செல்ல இயலாது காசியிலேயே சிவபூசை செய்து கொண்டு தங்கியிருந்தார்

## சிவகணங்கள் காசியை அடைந்தமை

பிரமதேவர் திரும்பாது காசியிலே இருந்ததினால் சிவபெருமான் சிவகணங்களை அனுப்பினார்.

பிரசங்கு கன்னன், நந்திசோமன். விறல் கன்னன், நந்திசேனன், மகோதரன், பிங்கலன், குக்குடன், காளன், குண்டோதரன், பஞ்சாக்கன், இயல்வாணன், மயூகன், கோகன்னன், திலகன்னன், தூலகன்னன், சுகன் சாகன், வீரபத்திரன், வீராதன், பார்பூதி, கபர்த்தி, சதுமுகன், நாசாடி, சுமுகன், கேமமாலி, காலசிங்கன், துருமன், கிராதன் ஆகிய சிவகணத்தினர் திலோதானனைக் குற்றப்படுத்திக் காசியிலிருந்து அகற்றிவிட்டு சிவபெருமான் காசியை அடையச் செய்வதற்காகக் காசியை அடைந்தனர்.

சிவகணங்கள் தம் மாயா வல்லபத்தால் பல வடிவங்களை எடுத்துக் கொண்டு திலோதானன் அரசநீதியில் தவறும்படி செய்ய முயன்றனர். தருமநெறி தவறாமை மேன்மைமிக்க காசியில் இருத்தல் ஆகிய தன்மைகளால் திலோதானன் தவறில்லாதவனாகவே இருந்தான். சிவபெருமான் இட்ட கட்டளையை நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்ற இயலாததினால் தமக்குப் பெரும் பாவம் உண் டானதாகச் தமக்கு வந்த பாவம் தீர சிவபூசை செய் வதே ஒரு வழி என்று சிவகணத்தவர் தீர்மானித் தார்கள்.

யாவராயினும் சிவபூசை செய்தால் அவர் எப்படிப் பட்ட பாவம் செய்திருந்தாலும் அப்பாவங்கள் நீங்கும். விரதம், தவம், யாகம், தானம் முதலிய புண்ணியச் செயல்கள் எல்லாவற்றிலும் சிறந்தது சிவபூசை செய் தலேயாகும். சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தை அருந்துவதனாலேயே பாவங்கள் நீங்கும். சிவலிங்க அபிஷேக தீர்த்தத்தைப் புரோட் சிப்பதால் கங்காஸ்நானபயன் கிடைக்கும். இப்படி எல் லாம் சிவபூசையின் மகிமைகளைச் சிந்தித்த சிவகணத் தவர்கள் காசியிலே சிவலிங்கங்களைத் தம் தம் பெய ரால் ஸ்தாபித்து சிவபூசை செய்து கொண்டிருந்தார் கள். சிவகணங்களால் தாபிக்கப்பட்ட சிவலிங்கங்க ளைத் தரிசித்தல் பூசித்தல் மேலான புண்ணியமாகும்.

## அலகை தேவனான கதை

கவர்த்தி என்னும் சிவகணநாதன் காசியில் பிர திட்டை செய்த சிவலிங்கத்தின் பெயர் கவர்த்தீசன் என்பதாகும். அதன் பக்கத்தில் அக்கணநாதர் விமலோ தகவாவி எனும் தீர்த்தத்தையும் அமைத்திருந்தார்.

இரண்டாம் யுகத்தில் வால்மீகி எனும் அந்தணன் கவர்த்தீசலிங்கத்தைப் பூசித்து தவம் மேற்கொண்டி ருந்தார். ஒருநாள் அந்த அந்தணர் முன்பு ஒரு பேய் தோன்றியது. பேயைக் கண்ட அந்தணர் நீ யார்? ஏன் பேய் நிலையை அடைந்தாய் என்று கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதாவாரி ஆற்றங்கரையில் பிரதிட்டானம் என்னும் ஒரு நகர் உண்டு. அங்கு ஒரு அந்தணனாக நான் இருந்தேன். அங்கு புனித நீராட வந்தவர்களிடம் நான் வறியவன் எனப் பொய் சொல்லிப் பொருள் வாங்கியதால் எனக்கு இப் பேய் வடிவு வந்தது. பேய் வடிவு வந்ததால் பசியும், நோயும் துன்புறுத்த ஒரு பாலைவனக் காட்டில் மிக்க துன்பத்துடன் இருந்தேன். ஆடையும் இல்லாததால் வெயில், மழை, காற்று என்பவற்றால் மிகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்படியிருக்கும் காலத்தில் ஒரு நாள் தினமும் காலையில் நீராடி சந்தியாவந்தனம் முதலிய செய்யாத அந்தணன் ஒருவன் நான் தங்கியிருந்த காட்டு வழியில் வந்தான். நான் சுகமனுபவிக்கப் பொருத்தமானவன் இவனே என்று கண்டு கொண்டேன். உடனே அவன் உடலிலே நான் பிரவேசித்தேன். அவனுடன் தங்கியிருக்கும் நாளில் அப்பிராமணன் ஒரு வணிகனுடன் கூடி காசிக்கு வந்தான். அவனுடன் காசியை அடையும் தகுதியின்மையால் அவனைவிட்டு நீங்கினேன். காசியாத்திரை செய்த வேறொரு அந்தணன் கங்கை நீரைக் காவடியாக எடுத்துக்கொண்டு காசியிலிருந்து புறப்பட்டான். காசியைவிட்டு நீங்கிச் செல்லும் குற்றம் அவனிடம் இருந்ததால் அவனைப் பிடித்து உண்ணலாம் என்று அவனுக்குக் கிட்டவாகச் சென்றேன். என்னைக் கண்ட உடனே அவன் சிவசிவ என்று கூறினான். அப்படிக் கூறியதைக் கேட்டதால் என் பாவங்கள் நீங்கின. பாவம் நீங்கிய நிலையில் இப்போ நான் உம் சமீபத்துக்கு காசி எல்லையுள் நான் வந்துள்ளேன். பெருமை மிக்க நீவிர் என் பேய் வடிவைப் போக்கியருள வேண்டும் என்று கூறி அந்தப் பேய் கபர்த்தீசலிங்கத்தை வணங்குகின்ற வான்மீகி எனும் அந்தணரை வணங்கியது. அதுகேட்ட அந்த அந்தணர் பேயினைப் பார்த்து இங்குள்ள விமலோதக வாவியில் நீராடினால் நன்மையடைவாய் என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய்நிலையில்இருப்பவர் புனித தீர்த்தங்களில்இறங் கலாகாது என்று வயிரவக் கடவுள் ஆணையிட்டிருக்கி றார். ஆதலால் நீரூக்குக்கிட்டச் செல்ல இயலாதபடி எனுடல் நடுங்குகிறது என்று அப்பேய் கூறியது. அது கேட்ட அந்தணர் அப் பேய்க்குத் திருநீறு கொடுத் தார். திருநீற்றை வாங்கி உடல் முழுவதும் அணிந்த உடனே அப்புனித தீர்த்தத்தில் இறங்கும் தகுதி அப் பேய்க்கு உண்டானது. அது அந்த வாவியில் இறங்கி நீராடியதும் அப் பேய்வடிவம் நீங்கித் தேவவடிவம் உண்டானது. உடனே அத்தேவன் அந்த முனிவரை வணங்கி விட்டு அங்கு வந்த விமானத்திலேறி தேவ உலகத்தை அடைந்தான். அன்று முதல் அத் தீர்த்தத் திற்கு அலகைத் தீர்த்தம் என்ற பெயர் அமைந்தது.

## கணபதி காசியை அடைந்தமை

திலோதானனைக் காசியிலிருந்து விலக்குதற்கு என சிவபெருமான் பின்னர் விநாயகக் கடவுளை அனுப்பி னார். சோதிடம், சகுணம் முதலியவற்றின் பயனைக் கூறுகின்ற முதிய அந்தணனைப் போன்று விநாயகக் கடவுள் காசிக்குச் சென்றார். பகலில் இவ்வாறு குறி சொல்வதுடன் இரவில் ஒவ்வொருவருக்கும் கனவுகள் உண்டாகும்படி செய்தார். பின்னர் நேற்றிரவு கண்ட கனவால் துன்பங்கள் வரவுள்ளன என்றுகூறி எல்லோ ரும் கலங்கும்படி செய்வார். சேற்றில் குளிப்பது போல வும், நீரில் அழுந்துவது போலவும் கனவு கண்டதி னால் அரசனாலும் இடி முதலியவற்றாலும் துன்பம் உண்டாகும் என்று கூறுவார்.

மொட்டையடித்துக் காவியுடுத்தியவரைக் கனவில் கண்டதினால் துன்பம் உறுதி என்பார். சூரியன் சந் திரனை வீழ்த்துவது போலவும், ஒருவன் தலைமயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைப் பிடித்து இழுத்துச் செல்வது போலவும் கனவு கண்டதினால் துன்பம் மிகும் என்றும் உறவினருடன் சேர்ந்து அழிவீர் என்று கூறுவார்.

வீட்டில் கட்டப்பட்ட கொடி விழுவதாகக் கனவு கண்டதனால் இந்த நகரத்தைவிட்டு நீங்கவேண்டி வரும் எனவும், இவ்வூரைக் கடல் சூழ்வது போலக் கனவு கண்டதினால் இந்த நகரத்தில் வாழ்வோர் ஒரு மாதத்தில் பெரும் துன்பமடைவர் என்றும் கூறுவார்.

ஆடையின்றியும், கூந்தல் அவிழ்ந்து உள்ள பெண் அழுவது போலக் கண்ட கனவு இக் காசியை விட்டுச் செல்லவேண்டியுள்ளதே என்று இலக்குமி புலம்புவதைக் குறிக்கும் என்பார். ஆலயமுடி விழுவதுபோலக் கனவு கண்டதால் இம் மக்களுக்கு அச்சமுண்டாகும் என்பார். கனவுப் பலன் சொல்வதன்றி சோதிடம் சொல்லும் முறையில் பல கிரகங்கள் சேர்வதால் உயிரழிவு உண்டாகும் என்பார்.

சப்தரிஷி மண்டலம் எனும் நட்சத்திரக் கூட்டத்தில் நுழைவது போல வால்வெள்ளி காணப்படுவதால் காசி அரசனுக்கு துன்பம் வரும் என்று கூறுவார், பூமி நடுக்கம் உண்டாவதாலும் அரசர்களுக்கு கேடுண்டாகும் என்று கூறுவார். எரிகொள்ளி வானிலிருந்து விழுவதால் எல்லா உயிர்களுக்கும் துன்பமுண்டாகும் என்பார். காலையில் கூகை கிழக்கு நோக்கி அலறுவது பெரும் கேட்டுக்கு அடையாளம் என்பார்.

இவ்வாறு பலவிதமாகக் காசி மக்களுக்கு அச்சமுண்டாகும்படி பிள்ளையார் செய்ய மக்கள் பலர் காசியை விட்டுச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி திலோதானனைக் கண்டமை

பிள்ளையார் பின்னர் திலோதானனின் அரண் மனைக்குச் சென்றார். மிக முதிய அந்தண வடிவத் துடன் சென்ற பிள்ளையார் அந்தப்புரத்திலுள்ள இராணிமாருக்கு ஆருடம், சோதிடம், கைரேகைப் பலன் என்பன கூறினார்.

ஒரு அரசியை நோக்கி உன் நூறு பிள்ளைகளில் மூத்தவன் யுத்தத்திலே வல்லவன் ஒரு முறை குதிரை யினின்றும் விழுந்தான் அல்லவா என்பார்.

ஒரு அரசியை நோக்கி நேற்று அரசன் அணிந்தி ருந்த முத்துமாலையை நீ கவனித்துப் பார்த்ததும் உடனே அதை அன்புடன் உனக்கே தந்துவிட்டானல் லவா எனபார்.

ஒரு அரசியை நோக்கி அரசன் என்றும் உன்னி டம் விசேட அன்புடன் இருக்கிறான் என்பார். இவ் வாறு அரசியர் மகிழ்வும் திருப்தியும் அடையும்படி கூறியதால் அந்த அரசியருள் தலைமைமிக்க லீலாவதி பிள்ளையார் ஆகிய அந்தண முதியவரைப்பற்றி அரச னிடம் பாராட்டிக் கூறினாள்.

அந்த அந்தணரைத் தன்னிடம் அழைக்கும்படி அரசன் லீலாவதியிடம் கூறினான். லீலாவதியும் அந்த முதிய அந்தணரை அரசன் முன்னிலைக்கு அழைத்துச் சென்றாள்.

திலோதானன் முதிய அந்தணருக்கு முறைப்படி வணக்கம் புரிந்தான். பின்னர் அரசன் அந்தணரைப் பார்த்துப் பெரியவரே! தூய முதிய அந்தணர் பாதங் களில் வணங்குவதைச் சிறந்த கடமையாகக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ள எனக்குச் சில நாள்களாக அரசபதவியை விட்டு விட வேண்டும் என்று ஒரு எண்ணம் உண்டாகின்றது. இவ்வெண்ணம் பற்றி நீர் கருத்துத் தெரிவிக்க வேண் டும் என்று கேட்டான்.

அறிவு, கொடை, புகழ், வீரம், பொறுமை, தலைமை, உபகாரம், ஆற்றல், செல்வம், கல்வி, கோபமின்மை முதலிய சிறப்புக்களில் மிக்க அரசனே! உனது உள்ளம் மிகவும் தூய்மை உடையது. இன் றையிலிருந்து எட்டு நாட்களுக்குள்ளே கிழக்குத் திசை யிலிருந்து ஒரு அந்தணன் வருவான். அந்த அந்தணன் உனக்கு வேண்டிய விடயங்கள் எல்லாவற்றையும் கரு ணையுடன் கூறுவான் என்றார். திலோதானனின் ஆன்மா சிவபெருமானுடன் ஐக்கியப்படும் தகுதியை அடைவதாகுக என்ற எண்ணத்துடன் பிள்ளையார் காசியில் தங்கியிருந்தார்.

## விட்டுணு காசியை அடைந்தமை

மேருமலையில் இருந்த சிவபெருமான் திருமாலைப் பார்த்து காசிக்குச் சென்று திலோதானன் அரசை மாற்றுவதற்கான செயலை மேற்கொள்ளும்படி கூறி னார். நாராயணர் சிவபெருமானை வணங்கி பெரு மானே! உம்மைத்தியானிப்பவர் விரும்பும் கருமங்கள் எளிதில் நிறைவுறும் என்பர். அப்படியிருக்க நீரேவிய வேலையை நிறைவேற்றுதல் எளிதாகவே இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு புறப்பட்டார்.

ஸ்ரீமத்நாராயணர் இலக்குமி தேவியுடன் கருட வாகனத்தில் ஏறிக் காசியை அடைந்தார். காசியை அடைந்த உடனே எல்லையில் விளங்கிய தெளிந்த நீரை உடைய ஒருகுளத்தில் தன் கால்களைக் கழுவி னார். அன்றுமுதல் அற்குளத்திற்குப் பாதோதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தம் என்னும் பெயர் அமைந்தது அத் தீர்த்தத்தின் அருகில் தன் வடிவம் ஒன்றைத் தானே அமைத்துப் பூசை செய்தார். அம் மூர்த்திக்கு ஆதிகேசவ மூர்த்தி என்னும் பெயர் அமைந்தது. பின்னர் திருமால் ஒரு புத்த குருவின் வடிவத்தை மேற்கொண்டார். கருடன் புண்ணியகீர்த்தி என்னும் பெயருடைய சீடரானார். இலக்குமி கவுந்தி எனும் பெயருடைய புத்தமதப் பெண் துறவி போலானார்.

இம் மூவரும் காசிநகருள் சென்று குருடர்க்கு கண் கொடுத்தல், முதியவரை இளையவராக்குதல் முதலிய வித்தைகளால் மக்கள் தம்மை நன்கு மதிக்கும்படி மருட்டினார்கள்.

திருமால் புத்த குருவடிவில் காசிநகரெங்கும் சென்று கடவுள் இல்லை தவம், விரதம் செய்வது வீண், யாகம் செய்வது கொலை செய்தலேயாகும் என்பன போன்ற புத்தசமயக் கருத்துக்களைப் பிரசாரம் செய்து மக்கள் அறிவினைக் கெடுத்தார்.

புத்த பெண்துறவி வடிவில் சென்ற இலக்குமியும் பெண்களிடம் சென்று அவர்களும் ஒழுக்கம் மாறுபடும்படி பிரசாரம் செய்தாள். இப்படியான செயல்களால் மக்கள் தவறிழைக்க அதனால் அரசனின் செல்வமும் ஆயுளும் குறைந்தன. திலோதானனும் எட்டுநாளின் பின் வரக்கூடிய அந்தண முதியவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

## திலோதானன் முத்தி பெற்றமை

விநாயகப் பெருமான் முதிய அந்தண வடிவுடன் சென்று குறிப்பிட்ட தினத்தில் திருமால் அந்தண வடிவுடன் திலோதானன் முன்னிலையை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே திலோதானன் அந்த அந்தணரை வணங்கி பின்வருமாறு கூறினான்.

அந்தணரே ! நீர் நாராயணமூர்த்தியே என்று என் அறிவால் உணருகின்றேன். என் விடயத்தில் பல தேவர் மாறுவேடத்தில் இங்கு வந்துள்ளார்கள். நான் எண்பதினாயிரம் வருடம் சிறப்புடன் உலகை ஆண்டிருக்கிறேன். ஆனால் அநுபவித்ததை அநுபவித்ததன்றி வேறு சிறப்பை நான் அறியவில்லை. நுணுகிப் பார்த்தால் அட்டமாசித்திகள்கூட ஆணவத்தை வளர்ப்பது தான் மிச்சம். திருமாலே எனக்கு உம் திருவடிகளில் உண்மையான பக்தியை அருளவேண்டும்.

மாபலி வானாசுரன் முதலிய பல அசுரர்கள் தேவர்களுக்கு மாறான செயல்களைச் செய்து துன்பத்தையே அடைந்திருக்கிறார்கள், தேவர்கள் விருப்பத்துக்கு மாறாக நடந்து கொண்டதால் உண்டான பாவத்திலிருந்து விடுபட அருள்புரிவீராக என வேண்டினான்.

நீதி நெறியுடன் உலகாண்ட தூய அரசனான திலோதானனுக்கு பிறருக்குப் போதித்தது போன்ற வேத விரோதமான கருத்துக்களைக் கூறலாகாது எனத் திருமால் நினைத்தார். பின் திலோதானனுக்குப் பரம்பொருளின் தத்துவங்களை உபதேசம் செய்தார். உபதேசம் செய்தபின்னர் அரசனே ! கங்கைக் கரையில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டால் இன்னும் ஏழு நாளில் சிவகணங்கள் பொன் விமானத்தில் வந்து மேலான கதியை உதவும் என்று கூறிவிட்டு திருமால் காசியிலுள்ள பஞ்சநதிக்கரை எனும் இடத்தினை அடைந்தார்.

திலோதானன் தனது மகனான சயன் என்பானுக்கு முடி சூட்டிவிட்டுத் தன் பெயரால் சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபட்டான். திருமால் கூறியபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் நாள் சிவகணங்கள் பொன் விமானத்தில் வந்தன. அப்போது திலோதானனின் உடம்பு முக்கண், நீலகண்டம், இளம்பிறை. சங்கக்குழை, மான்மழு முதலியன உடைய சிவ உடம்பாய் மாறியது. சிவகணங்கள் திலோதானனைக் கயிலைக்கு அழைத்துச் சென்றன. பிரம விட்டுணு முதலிய தேவர்கள் போற்ற திலோதானன் கயிலையில் சிவானந்தப் பெருவாழ்வினை அடைந்தான்.

## பஞ்சநத வரலாறு

பிருகு முனிவரின் மருகனான வேதசிரசு எனும் அந்தணன் ஐந்து புலன்களையும் அடக்கி அரிய தவத்தைச் செய்தான். ஒரு நாள் அவன் தவம் செய்யும் இடத்துக்கு சசி எனும் பெயருடைய அழகிய தேவப் பெண் சென்றாள். அவளைக் கண்டதும் தவம் செய்யும் வேதசிரசு எனும் அந்தணனின் மனம் மாறுபட்டது.

வேதசிரசின் மனமாற்றத்தைக் கண்ட அப்பெண் அஞ்சி நடுங்கியபடி தனியே இருந்து தவம் செய்யும் இடத்துக்கு வந்து என் பிழையைப் பொறுக்க வேண்டும் என்று சொல்லி வணங்கினாள். வேதசிரசு அவளைப் பார்த்து பெண்ணே! அஞ்சாதே உன்னைக் கண்டதால் என்னிடம் வெளிப்பட்ட தாதுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பணிவாகக் கூறினான். அவளும் அதனை ஏற்றாள். அப்படி ஏற்றதனால் அவளிடம் ஒரு பெண் குழந்தை உண்டானது. அக் குழந்தையை அத் தவச்சாலையிலேயே விட்டுவிட்டு அவள் தேவலோகத்திற்குச் சென்றுவிட்டாள்.

குழந்தை அங்கே தனியே கிடந்து அழுதது. அதைக் கண்ட வேதசிரசு பெண்மானின் பாலைக் கொடுத்து அக் குழந்தையை வளர்த்தெடுத்தான். பின்னர் அக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு எட்டுவயதானபோது அவன் அப்பிள்ளையைப் பார்த்து பெண்ணே உனக்கு மணப்பருவம் பொருந்தியுள்ளது. எப்படிப்பட்டவனை நீ திருமணம் செய்ய விரும்புகின்றாய் என்று கேட்டான். நற்குணங்களும், தருமசிந்தையும் மிக்க ஒருவனையே நான் திருமணம் செய்ய விரும்புகிறேன் என அவள் கூறினாள். அதுகேட்ட வேதசிரசு பெண்ணே! அப்படிப்பட்ட ஒருவனைக் கணவனாய் அடைவதாயின் தவத்தினால் தான் அடையலாம் என்று கூறினான்.

உடனே அப்பெண் பிரமதேவரைக் குறித்து தவம் செய்தாள். ஒருநாள் அவள்முன் பிரமதேவர் வெளிப்பட்டு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். உலகில் உள்ள புனிதமான பொருள்களுள்ளே மிகப் புனிதமான பொருளாக நான் விளங்க வேண்டும் என்று அவள் கேட்டாள். அப்படியே ஆவாய் என்று அருளிவிட்டுப் பிரமதேவர் மறைந்தார்.

தவத்தை முடித்துக் கொண்டு தந்தையிடம் செல்லும் வழியில் அவள் ஒரு சோலையை அடைந்தாள். அங்கே நின்ற நற்பண்புகள் மிக்க தருமன் என்பவன் அவளைக் கண்டு மிகவும் விரும்பினான்., பெண்ணே! எனது நல்ல தவத்தின் பயனாகவே இங்கு நீ வந்துள்ளாய் எனக்கு மனைவியாவாயாக என்று அவன் கேட்டான். உடனே அப்பெண் தருமனைப் பார்த்து அன்பரே! என் தந்தையாகிய முனிவரின் சம்மதத்துடனேயே நாம் திருமணம் செய்ய வேண்டும் என்றாள்.

பெண்ணே! இருவரும் தம் விருப்பத்துடனேயே செய்யும் கந்தருவ விவாக முறைப்படி இப்போதே திருமணம் செய்து கொள்வோம என்று கூறி அவளின் சமீபமாக அவன் சென்றான். உடனே அவள் அச்சத்துடன் '' நீவிர் ஒரு நதியாக மாறுவீராக! '' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாபமிட்டாள். அது கேட்ட தருமனும் பெண்ணே! இரக்கமற்ற மனதுடைய நீயும் ஓர் கற்பாறையாக மாறுக என்று சாபமிட்டான். உடனே மிகுந்த அச்சத்துடன் அவள் தந்தையை அடைந்தாள்,

நிகழ்ந்தவற்றை அறிந்த அவள் தந்தை மகளே! நீ ஒரு சந்திரகாந்தக் கற்பாறையாக மாறினால் சந்திர ஒளியில் அப்பாறையிலிருந்து நீர் பெருகும். அந்த நீர்ப் பெருக்கு ஆறாகி உன்னால் சாபம்பெற்ற தருமனாம் ஆறுடன் கலந்து செல்லும் நிலை உண்டாகும் என்று கூறினார். அதன்பின் இருவரும் விரும்பும்போது உங்கள் இயல்பான வடிவத்தைப் பெறுவீர்கள் என்றும் கூறினார். அப்படியே நிகழ்ந்தது.

ஒருமுறை சூரியன் தவம் செய்தபோது அவன் கிரணங்களுடன் வியர்வையும் உண்டாகி நதியாய்ப் பெருகியது. அது கிரணநதி எனப் பெயர் பெறும். தருமநதி தூதபாலை எனும் சந்திரகாந்தக் கல்லில் பெருகும் நதி. கிரணை நதி கங்கை, யமுனை எனும் ஐந்து நதிகள் சேர்ந்து பஞ்சநதம் உண்டாகியது. இதில் நீராடினால் ஐம்பூதங்களாலான பிறவி எடுத்து துன்புறும் தன்மை நீங்க முத்தி கிட்டும்.

## விந்துமாதவன் தோன்றியமை

பஞ்சநதம் எனும் வாவிக் கரையில் நாராயண மூர்த்தி விக்கிரக வடிவில் எழுந்தருளியுள்ளார், பல சூரியப் பிரகாசமுடைய கவுத்துவம் எனும் மணியை அணிந்த இந்த மூர்த்தியை அக்கினிவிந்து எனும் அந்தணன் தவம் செய்து வழிபட்டான். கண்ணா, கோவிந்தா என்பது முதலிய நாமங்களைக் கூறியும் தோத்திரங்கள் புரிந்தும் வழிபட்ட அந்த அந்தணர் முன் நாராயணர் வெளிப்பட்டு என்ன வரம் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கேட்டருளினார். அந்த அந்தணன் பெருமானே! நான் வழிபட்ட இம் மூர்த்திக்கு விந்துமாதவன் எனப் பெயர் வழங்க வேண்டும் எனக் கேட்டான் அப்படியே அருளிய நாராயணர் அந்த அந்தணனைப் பார்த்து பின்வருமாறு கூறியருளினார்.

கார்த்திகை மாதத்தில் அதிகாலையில் பஞ்சநத வாவியில் தீர்த்தமாடுபவர் இயமதூதரால் துன்புறார். கார்த்திகை மாதத்தில் உணவை ஒழித்து விரதமாக இருக்க வேண்டும். இல்லையேல் ஒரு பொழுது மட்டும் காய்கனி அருந்தலாம். வெண்கலப் பாத்திரத்தில் சமைத்த சோற்றை உண்ணலாகாது. கார்த்திகை மாதம் முழுவதும் எண்ணெய், தேன் முதலியவற்றை விலக்குதலும், இலை தளிர் என்பவற்றை மட்டும் அருந்துதலும் நல்லது. எக்காரணத்தையிட்டும் கார்த் திகை மாதத்தில் புலால் உண்ணலாகாது.

கார்த்திகை மாதத்தில் வெண்கலப் பாத்திரத்தில் நெய்விட்டுத் தானம் செய்தல், அந்தணர்க்கு அன்ன தானம் செய்தல், எள்ளு, பவுண், பூசனி, உழுந்து என்பன தானம் செய்தல் என்பவற்றால் சுவர்க்க வாழ்வு எளிதில் கிடைக்கும்

கார்த்திகை மாதத்தில் ஆலயத்தில் நெய்விளக்கு வைத்தாலும், அந்தணர்க்கு நெய்விளக்கு தானம் செய் தாலும் அறிவு மிகும். கார்த்திகை ஏகாதசியில் விரத மிருந்து நெய்விளக்கேற்றி நித்திரை விழித்து வணங் கினால் பிரமாவின் ஆயுள் அளவு காலம் வைகுண்ட வாழ்வு பெறலாம்.

பஞ்சநதக் கரையில் இருக்கும் விஷ்ணுமூர்த்திக்கு கிரேத திரேத துவாபர கலியுகங்களில் முறையே ஆதி மாதவன், அனந்த மாதவன், திருமாதவன், விந்து மாதவன் எனும் பெயர்கள் வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவரே என்னை வணங்கி அருள்பெற்றுச் சிறந்தவர் என்ற கர்வத்தால் யாராவது சிவபெருமானை வணங்காது இருந்தால் அவர்கள் நரகத்தையே அடைவர்.

## விந்துமாதவன் தீர்த்த மகிமை உரைத்தமை

அக்கினி விந்து முனிவரே பாதோதக வாவிக் கரையில் நான் சங்கமேச்வரலிங்கத்தை வழிபட்டேன். அவ்விடத்தில் எனக்கு ஆதிகேசவன் என்று பெயர். ஆதி கேசவன் முதல் பிரயாகை மாதவன் வரை காசியிலே இருபத்துமூன்று மாதவ மூர்த்திகள் உள்ளன.

மணிகன்னிகை என்னும் தீர்த்தத்துக்கு ஒரு தேவதை வடிவம் உண்டு. இடதுகையில் மாதுளம் பழம் வலதுகையில் நீரோற்பல மலரும் கொண்டு இரு கைகளைக் கூப்பி வணங்கிக்கொண்டு நெற்றிக் கண்ணும் விளங்க வெண்ணிற ஆடை புனைந்து பன்னிரு வயதுடைய பெண் தேவதை வடிவாக மணிகன்னிகையைத் தியானித்து வணங்குபவர் பிறவித் துன்பத்தையே போக்கவல்லவராவர். இத்தோற்றத்தை பொன்னால் அமைத்து வணங்குவர் இத்தெய்வ மந்திரத்தை மூன்று இலக்கம் தடவை செபம் செய்தவர் அறியாமையாகிய ஆணவம் நீங்க முத்தியடைவர்.

மணிகன்னிகைத் தீர்த்தத்திற்கு மேற்கில் பாசுபதக் குண்டு என்னும் தீர்த்தம் உளது. இதில் நீராடி பசுபதீசனை வணங்குபவர் பாசுபதயோகம் செய்தலை எளிதில் பெறுவர். அதன் வடக்கில் உருத்திரவாசம் எனும் தீர்த்தம் உளது. இதில் நீராடியவர் நல்வாழ்வு அடைவர். மூர்த்திதீர்த்தம் என்பதில் நீராடி முத்திலிங்கத்தைப் பணிபவர் முத்தியடைவர். அதன் மேற்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிமுத்தம் எனும் தீர்த்தம் உளது. அதில் நீராடி அதன் பக்கத்திலிருக்கும் அவிமுத்தலிங்கத்தைப் பணி பவர் இடையறா இன்பம் பெறுவர். அதன் பக்கத்தில் தாரக தீர்த்தம் உளது. அதன் பக்கத்தில் தாரக லிங்கம் உளது. தாரக தீர்த்தத்தில் நீராடி தாரக லிங்கத்தை வணங்குபவர் தாரக வேதத்தை உபதேச முறையாகப் பெறுவர். அதன் பக்கத்திலுள்ள கந்த வாவியில் நீராடி முருகப்பெருமானை வணங்குபவர் பிறவித்துன்பம் நீங்கப் பெறுவர்.

துண்டிவாவி எனும் தீர்த்தத்தில் நீராடி துண்டி விநாயகரைப் பணிபவர் தம்மனத்தில் விரும்பியவற்றை அடைவர் காசியில் உள்ள பவானி தீர்த்தத்தில் நீராடிப் பவானி அம்பிகையை வணங்குபவர் அந்த அம்பிகையின் அருள் பெறுவர். அங்குள்ள ஞானவாவி யில் நீராடி ஞானேசலிங்கத்தை வழிபடுபவர் மரண சமயத்தில் ஞானம் பெறுவர். காசிவிசுவநாதர் ஆல யத்தின் தெற்கில் உள்ளது மாதவ தீர்த்தமாகும். அதில் நீராடி என்னை (மாதவனை) வணங்கினால் வைகுண்டத்தை அடையலாம். அங்கே பிதாமக தீர்த் தம் உள்ளது. அதில் நீராடி பிதாமகலிங்கத்தினை வணங்கில் சிவனருள் கிடைக்கும். பகீரத தீர்த்தத்தில் நீராடி பகீரதலிங்கத்தை வணங்கினால் தேவராவர். அங்குள்ள மார்க்கண்ட தீர்த்தத்தில் நீராடி மார்க் கண்ட லிங்கத்தை வணங்குபவர் யமனால் துன்புறார்.

இப்படியான பல தீர்த்தங்கள் காசியில் உள்ளன வைகுண்டமாதவர், வீரமாதவர், காலமாதவர், தசா வதார மூர்த்திகள் எனப்பல திருமால் வடிவங்கள் காசி எங்கும் உள்ளன.

ஐந்நூறு நாராயணமூர்த்திகள் முப்பது கூர்மா வதார மூர்த்திகள் பத்து மச்சஅவதார மூர்த்திகள் நூற்றெண்பது கோபாலகிருஷ்ண மூர்த்திகள் ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமணமூர்த்திகள், முப்பது பரசுராம மூர்த்திகள், நூற்றொரு இராமமூர்த்திகள், ஒரு துளவணி பெருமாள், அறுநூறாயிரம் சிவகணத்தவர் ஆகியோர் காசியைக் காவல் புரிவர்.

இவ்வாறு அக்கினிவிந்துவிற்கு நாராயணர் கூறிக் கொண்டிருந்தார் அப்படியிருக்கும் பொழுது கருடன் சமீபித்து சிவபெருமான் காசிக்கு வந்துகொண்டிருக்கிறார். என்றும் அவரைக்காண வரும்படியும் அழைத்தார்.

## விசுவநாதர் காசியை அடைந்தமை

சிவபெருமானை வரவேற்கும் முறையில் திருமால் பஞ்சநதக் கரையில் " நின்று துதித்தார். அப்போது விநாயகப்பெருமான் பிரமதேவர் சிவகணங்கள் யோகினிகள் முதலியோர் திருமாலைச் சூழநின்று சிவபெருமானை வரவேற்றனர், சிவபெருமான் அவர்களை அடைந்தவுடன் விநாயகப் பெருமானைத் தன்மடியில் இருக்கச்செய்து அன்புடன் அணைத்துக் கொண்டார். பிரமதேவரும் திருமாலும் சிவபெருமானின் வலமும் இடமுமாக நின்றனர். சிவகணங்கள் சிவபெருமானைச் சூழ நின்றார்கள். அப்போது பிரமதேவர் சிவபிரானை வணங்கி பெருமானே திலோதானன் குற்றம் புரியாததால் அவனைக் காசியிலிருந்து நீக்கி உம் கட்டளைளை நிறைவேற்றாத குற்றம் தீர இக்காசியில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்தேன் என்னை மன்னித்தருள வேண்டும் என்று கூறியபடி சிவபிரானை மலர்களால் அர்ச்சித்தார். சிவபெருமானும் அஞ்சவேண்டாம் என்று அருள்புரிந்தார். பின்னர் சிவபெருமான் திருமாலுக்கும் பேரருள் புரிந்தார்.

அப்போது கோலோகத்திலிருந்து சுனந்தை, சுமனசை, சுசிலை, சுரபி, பத்திரை என்னும் பசுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியை அடைந்து பாலைப் பொழிந்தன. காசியிலுள்ள நீர்நிலைகளுக்கும் பாலின் சுவையும் வாசனையும் உண்டாயின. அப் பாற் பெருக்கால் அங்கே ஒரு குளமும் உண்டானது. அக்குளத்திற்கு கபிலதீர்த்தம் என்று சிவபெருமான் பெயரிட்டருளினார். உடனே தேவர்கள் அதில் நீராடித் தருப்பணம் முதலியன செய்து மகிழ்ந்தனர். அப்போது அவ்விடத்திற்கு பல பெயர்களை உடைய பிதிர் தேவர்கள் வந்து சேர்ந்தார்கள். அந்தப்பிதிரர்கள் சிவபெருமானை வணங்கி சிவபெருமானே இக்குளத்தில் நீராடுபவரின் தொடர்புடைய பிதிரர்கள் மேலான நிலையை அடையும் வண்ணம் அருளவேண்டும் என்று விண்ணப்பித்தனர். அப்படியே சிவபெருமான் அருள்புரிந்தார். அப்பொழுது நந்தியெம்பிரான் சிவபெருமானை வணங்கி சிவபெருமான் ஏறிச்செல்வதற்கு ஒருதேர் வந்து நிற்கின்றது என்று தெரிவித்தார். சிவபெருமானின் அருட்கரத்தைத் திருமால் தாங்கிவர பிரமனும் இந்திரனும் சாமரை அசைத்துவர சிவகணங்கள் தோத்திரம் கூறிவர ஆகாய துந்துபிகள் முழங்கின. அப்பொழுது அத்தேரில் சிவபெருமான் ஏறியருளினார்.

விநாயககணத்தர் ஏழுகோடி, வயிரவகணத்தர் ஒரு கோடி, ஒன்பது கோடி நீலிகள், எட்டுக்கோடி முருக கணத்தர், ஒன்றரைக்கோடி இயக்கர், ஒருகோடி கின்னரர், நாகலோகப்பாம்புகள் மூன்றுகோடி, முப்பத்து முக்கோடி தேவர்கள், எண்பத்தாறாயிரம் துறவற முனிவர், எண்பத்தாறாயிரம் இல்லற முனிவர், ஒரு கோடியே இருபதினாயிரம் சிவகணத்தவர். எண்பதினாயிரம் யாழ் வல்லுநர், அறுபதினாயிரம் கூத்தியர், இரண்டு இலட்சத்துப் பதினாயிரம் விஞ்சையர், எட்டு லட்சம் காமதேனுக்கள், ஆறு லட்சம் காருடப் பெண்கள், தேவநகரங்கள், சமுத்திரங்கள், திசையானைகள் நதிகள் என்பவற்றின் அதிதேவதைகள் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கி, துதித்து வர கங்கா நதியால் சூழப்பெற்ற சிறப்பை உடைய காசியைச் சிவபெருமான் அடைந்தார்.

இக் கதையைக் கேட்டவர் யம உலகை அடையார் திருமாலும் அறியாச் சிவனடியை அடைவர்.

## விசுவநாதர் முனிவனை அழைத்தமை

விசுநாதப் பெருமான் நந்திதேவரை அழைத்தார். நந்தியே! நாம் காசியை விட்டுச் சென்றது முதல் இன்றுவரை சைகிடமுனிவர் என்பவர் யோகத்தில் இருக்கின்றார். அவரை அழைத்து வருக என்று கூறியருளினார். அம்முனிவரிருக்கும் இடத்துக்கு நந்தியெம் பெருமான் சென்றார். தாமரை மலரால் அவர் உடலைத் தடவி யோகத்திலிருந்து நீங்கச் செய்தார். யோகத்தினின்றும் நீங்கிய சைகிட முனிவரைப் பார்த்து சிவபெருமான் அழைப்பதாக நந்திதேவர் கூறினார். உடனே அம்முனிவர் புறப்பட்டு சிவசன்னிதானத்தை அடைந்து அம்மையையும் அப்பனையும் வணங்கினார். அந்தண குலத்தில் வந்த முனிவரே நீர் கேட்கும் வரத்தை இப்பொழுது அருள்வோம் என்று சிவபெருமான் கூறியருளினார். அம் முனிவர் சிவபத்தியையே வரமாகக் கேட்டார். சிவபூசை செய்ததன்றி உண்ணா நியமம் பூண்ட நீர் விரும்பிய வரத்தை அருளினோம். அதுவன்றி யோகாசாரியன் என்ற தலைமையையும் சீவன்முத்தியையும் அருளினோம். முனிவரே உம்மால் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கத்தை மூன்று வருடம் பூசிப்பவர் யோக சித்திகளை அடையும்படி இவ்விலிங்கத்தில் பிரதியட்சமாக இருப்போம் என்னும் பலவரங்களைச் சிவபெருமான் அந்த முனிவர்க்கு அருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசிச் சிறப்பை விசுவநாதர் கூறியமை

வருணை, அசி என்னும் ஆறுகள் சேரும் இடம் முதல் சங்கமேச்சுர இலிங்கம் உள்ள இடம் வரையான காசியின் எல்லா இடங்களிலும் இருந்த முனிவர்கள் சிவபெருமானிடம் சென்றார்கள்.

முனிவர்களே ! மகிழ்ச்சியுடன் தவவாழ்வு மேற் கொண்டீர்களோ எனச் சிவபெருமான் கேட்டார். முனிவர்கள் சிவபெருமான் திருவடிகளில் தம் தலை பொருந்த வணங்கியபின் பெருமானே! காசியில் உள்ள சிறு துகள் காற்றிலே சென்று ஒருவர்மீது பட்டால் அவர் சிவகணத்தவராவர் என்னில் இங்கு வாழும் எமக்கு இன்பமேயன்றித் துன்பமும் வருமோ என்ற னர். சிவபெருமான் அம் முனிவர்களைப் பார்த்து காசிவாசிகளே! நீவிர் உமது விருப்பத்தைத் தெரிவி யுங்கள். அவ்வண்ணமே அருள்புரிவோம் என்றார். பெருமானே! இந்த உடலுடன் இருக்குமளவும் காசி யிலே வாழவும் நாம் பிரதிட்டை செய்த சிவலிங்கங் களில் நீர் சாந்நித்தியராய் இருக்கவும் அருள வேண்டும் என்றனர். பதினெண்ணாயிரத்து எண்ணூற்று அறுபத் தைந்து முனிவர்க்கும் அப்படியே அருளிய பெருமான் உமையுடன் மறைந்தருளினார்.

## பராசரலிங்கம்முதலியவற்றின்கதை

பிருகு, நாராயணர், மார்க்கண்டர், பாண்டவர், பராசரர், மதங்கர், அருணர், கபாலி, மருத்துவர், குலாவர், காலவர், வச்சராதீதர் முதலிய முனிவர்க ளால் தாபிக்கப்பட்ட ஐயாயிரம் சிவலிங்கங்கட்கு மத்தி யில் உள்ள சேட்டேசலிங்க வரலாற்றைக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையம்மை தன் இடை வருந்த சிலம்பு இசைக்கப் பந்து விளையாடினார். விருவன், உற்பலன் என்னும் கொடிய அசுரர் சிவகணவேடத்துடன் அம்பிகை விளையாடுமிடம் சென்றனர். அசுரர் வரவைச் சிவ பெருமான் தன் பார்வைக் குறிப்பால் அம்பிகைக்கு உணர்த்தினார். உடனே அம்பாள் பந்தை எறிந்து அவ்வசுரரை அழித்தாள். அசுரர்களை அழித்த அப் பந்து கந்துகேசுர லிங்கம் எனும் பெயருடன் அமைந்தது. அவ்விடத்தில் நிகழ்ந்த ஒரு வரலாறு இதுவாகும்.

பிரகலாதனுக்கு மாமனாக துந்துமி எனும் அசுரன் இருந்தான். அவனால் தேவர்களைப் போரில் வெல்ல இயலவில்லை. தேவர்களுக்கு வலியும் புகழும் அந்தணரது அக்கினி காரியத்தாலேயே உண்டாகின்றன. எனவே அக்கினி காரியம் செய்யும் அந்தணரை அழித்தால் தேவரை வெல்லலாம் என்று அவ்வசுரன் கருதினான்.

தூய்மை மிக்க அந்தணரும், அந்தண முனிவரும் காசியில் இருப்பதால் காசியில் உள்ள அந்தணரைக் கொல்லவேண்டும் என்று கருதினான். துந்துபி தண்ணீரில் மறைந்திருந்தும், சோலைகளில் ஒளித்திருந்தும் அந்தணரைக் கொன்றான் ஊருக்குள்ளே அதிதிபோல் சென்று அந்தணரைக் கொல்வான். ஒரு சிவராத்திரி தினத்தில் சிவபெருமானை வணங்கும் அந்தணரைக் கொல்லும் பொருட்டு அந்த அசுரன் சென்றான் அப்போது சிவலிங்கத்தின் நடுவில் சிவபெருமான் வெளிப்பட்டு அவ்வசுரனை அழித்தார். அப்போது முனிவர்கள் அனைவரும் சிவபெருமான் திருவடிகளில் மலர் தூவி வணங்கிப் பெருமானே! இவ் லிங்கத்தில் எப்போதும் பிரசன்னராக இருக்க வேண்டும் என வேண்ட அப்படியே என்று சிவபெருமான் அருள் புரிந்தார். சேட்டேச லிங்கத்துக்கு அன்று முதல் வியாக்கிரேச லிங்கம் எனும் பெயரும் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சயிலேச்சுரர் முதலிய ஈச்சுரர் கதை

சேட்டேச லிங்கத்தின் தெற்கில் தேவப் பெண்கள் வழிபடும் சிவலிங்கம் ஒன்றுண்டு. அதன் பக்கலில் நீர் நிரம்பிய குளம் ஒன்றுண்டு. அதில் நீராடுபவரின் மனவிருப்பம் நிறைவேறும். அவ்விடத்தில் வாசீசுர லிங்கம், கபாலி லிங்கம், வயிரவ லிங்கம், பிதாமகேச லிங்கம், காற்கோகட லிங்கம், இடபேச லிங்கம், குமா ரீசலிங்கம், கங்காதரேச லிங்கம், கந்தருவேச லிங்கம் என்னும் அருட்பெருமை மிக்க லிங்கங்களுண்டு. வரு ணைக் கரையில் முண்டேசம், குண்டேசம் என இரு சிவலிங்கங்களுண்டு. இவ்விரு லிங்கங்களும் காசிக்குப் புகழ் மிகும்படி விளங்குகின்றன. அவ்விலிங்கங்கள் உள்ள இடத்தில் நிகழ்ந்த வரலாறு ஒன்றுண்டு.

ஒருநாள் மலையரசன் மனைவி தன் கணவனைப் பார்த்து : தலைவரே! பிச்சை எடுத்துண்டு சுடுகாட் டில் வாழும் சிவபெருமானுக்கு எம மகளைத் திரு மணம் செய்து கொடுத்தாய. எம்மகள் எவ்வாறு வாழ்கின்றாள் எனபதை அறிந்து கூறவேண்டும் என் றாள். இதைக் கேட்ட மலையரசன் இரததினக் குவி யல்களையும், பொற் குவியல்களையும், பட்டாடை களையும் எடுத்துக்கொண்டு காசியை அடைந்தான்.

காசியில் இறந்தவர்கள் சிவவடிவம்பெற்று விமான மேறிக் கையிலை செல்வதையும், அங்கு வாழ்பவர்கள் சிவகணங்களாயுள்ளமையையும் அங்குள்ள நீர் நிலை களில் நீராடுபவர் ஊர்வசி போன்ற பெண்களாயிருப் பதையும் அங்குள்ள வீதிகளில் முத்துக்களும், மாணிக் கங்களும் சிதறிக் கிடப்பதையும், அங்குள்ள மரங்கள் கற்பகமாகவும், பசுக்கள் காமதேனுக்களாகவும் உள் ளதையும் மலையரசன் கண்டான்.

கங்கையில் நீராடிக் கங்கா தீர்த்தத்தைக் காவடி யாக எடுத்து வருபவனைப் பார்த்து இமயமலையர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன் இக் காசிக்கு அரசன் யார் என்று கேட்டான். மன்னனே! உமாபதியாகிய சிவபெருமானே இக்காசிக்கு வேந்தன் என்பதை அறியாயோ என்று அவன் கேட்டான்.

இதைக் கேட்டு இமயராசன் மகிழ்ந்தான். பிரம விட்டுணுகளுக்கு மேலானவராக உள்ள சிவபெருமானுக்கு நான் எப்படி இப் பொருள்களை வழங்குவது என்று எண்ணினான். தேவதச்சனை அழைத்து தான் கொணர்ந்த பொருளால் இரவோடிரவாக ஒரு ஆலயமும், மண்டபமும் அமைப்பித்தான். அங்கு தன் பெயரையும் எழுதி வைத்து அவ்வாலயத்தில் பாவ சயிலம் எனும் பெயருடன் மேலானதொரு சிவலிங்கத்தையும் தாபித்தான். அந்த ஆலயத்தில் தான் கொணர்ந்த செல்வங்களைக் குவித்து வைத்துவிட்டு மலையரசன் எவரும் தன்னைக் காணாதபடி விடியு முன் பஞ்சநதத்தில் நீராடி வணங்கிச் சென்றுவிட்டான்.

சூரிய உதயத்தின்பின் புதிதான அந்த ஆலயத்தைக் கண்ட குண்டன், முண்டன் என்போர் சிவ பெருமான் முன்சென்று வணங்கினர் பெருமானே! இக் காசியில் புதிதாக ஒரு அழகிய ஆலயம் காணப்படுகின்றது. அதையார் அமைத்தனர் என்பதை அறியோம் என்று அக் காவலர் கூறினர்.

எல்லாம் அறியும் சிவபெருமான் ஒன்று மறியாதவர் போல அவ்வாலயத்தைப் பார்க்க உமையுடன் தேரேறிச் சென்றார். அழகிய ஆலயத்தையும் மாணிக்க மணியால் அமைக்கப்பட்ட அழகிய சிவலிங்கத்தையும் கண்ட அம்பிகை இதை யார் அமைத்தார் என்று பெருமானைக் கேட்டார். அங்கு எழுதியிருப்பதைக் காண்பித்து அம்பிகையே இதை உன் தந்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தார் என்று கூறினார். அதைக் கேட்ட அம்பாள் நாம் இவ்வாலயத்திலிருந்து எல்லோருக்கும் பேரின்பம் வழங்குவோம் என்று கூறினார். இருவரும் அவ்விலிங்கத்தில் பிரசன்னராய் இருந்தனர்.

## இரத்தினேசன் கதை

பார்வதிதேவி சிவபெருமானை நோக்கி பெருமானே! இந்த அழகிய இலிங்கத்தின் வரலாற்றையும் ஆலயத் தோற்றத்தையும் கூறியருள வேண்டும் எனக் கேட்டாள். சிவபெருமான் கூறலானார்.

உன் தந்தை உன்பொருட்டுக் கொணர்ந்த மாணிக்கங்களைக் குவித்து வைத்தான். அவன் தவச்சிறப்பால் அவை இந்த இலிங்கமாயமைந்தன. அப்படியே கொணர்ந்த பொன் முதலியவற்றால் தேவதச்சனைக் கொண்டு உன் தந்தை இந்த ஆலயத்தை அமைப்பித்தான். இரத்தினங்களால் இவ்லிங்கம் அமைந்துள்ளதாயினும் இவ்விடத்தில் முன்னமே ஒரு சிவலிங்கம் இருந்தது. அதன் பெயர் இரத்தினேசலிங்கம் என்பதேயாகும்.

கலாவதி என்னும் பெயருடைய நடனமாது ஒருத்தி இருந்தாள் ஒரு சிவராத்திரியில் அவள் இந்த லிங்கத்தின் முன் விதிப்படி நடனமாடினாள். அதன் பயனாக அவள் கந்தருவ அரசனுக்கு மகளாகப் பிறந்தாள். அவளுக்கு இரத்தினவல்லி என்று பெயரிட்டனர். அவள் நடனக் கலையில் தேர்ச்சி பெற்றாள். அவளுக்கு சந்திரலேகை, அனங்கலேகை, சித்திரலேகை என மூன்று தோழியர் இருந்தனர். தோழியருடன் கூடி இரத்தினவல்லி சரஸ்வதியை வழிபட்டு எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி உடையவளானாள். தன்முற்பிறப்பின் தொடர்பால் இரத்தினவல்லி தினமும் இச்சிவலிங்கத்தின்முன் நடனமாடும் நியமத்தை மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். அப்படி நடனமாடாது உண்பதில்லை என்ற நியதி உடையவளானாள். ஒருநாள் அவள்முன் தோன்றி பெண்ணே! உன் பெயருடைய ஒரு அரசன் கனவில் உன்னைத் திருமணம் செய்வான். அவனே உன் கணவனாக ஆவன் என்று அருளினோம். அவள் தன் தோழியருக்கு நான் அருளியதைக் கூற அவரும் அவள் தவத்தின் சிறப்பைப் புகழ்ந்தார்கள். அன்றிரவு அவள் நித்திரை செய்தபோது இரத்தினசூடன் எனும் அரச குமாரன் அவள் கனவில் தோன்றிக் கந்தருவ முறைப்படி திருமணம் செய்தான். இருவரும் இன்புற்றனர். கனவென்றறியாது இரத்தினவல்லி அவனுடன் கூடிமகிழ்ந்தாள். பின்னர் விழிப்படைந்து நிகழ்ந்தது கனவென அறிந்து அவனைப் பிரிந்ததற்காக மிகவும் வருந்தினாள்.

பின்னர் இரத்தினவல்லி வழக்கம்போல தோழியருடன் காசியை அடைந்து இரத்தினேசலிங்கத்தின் முன் தம் வழிபாடுகளை நிறைவேற்றினாள் பின்நான்கு பெண்களும் அங்குள்ள ஒருசோலையில் தங்கியிருந்தனர் அப்போது அங்குள்ள வாவியில் ஆண்யானை பெண் யானையைத் தனது துதிக்கையால் நீராட்டக் கண்டனர் உடனே இரத்தினவல்லி தன் கணவனை நினைத்து கவலைமிக்கவளாய் மயங்கினாள். தோழியர் அவள் நிலைகண்டு துன்புற்றனர். பின்மிக்க வேதனையுடனேயே சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்த கங்கா தீர்த்தத்தை அவள் முகத்தில் தெளித்தனர். உடனே அவள் மயக்கம் நீங்கியெழுந்தாள் பின் தோழியர்க்கு அவள் தன் கனவைக் கூறினாள். நான் கனவில் கண்ட நாயகனை அடைய உபாயம் செய்யாவிடின் பிரிவுத் துயரால் நான் இறந்து விடுவேன் எனக்கூறி அழுதாள். இவள் துயர்தீர என்ன செய்யலாம் என்று மூன்று தோழியரும் ஆலோசித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ள அரசகுமாரரின் படங்களை வரைந்து காட்டினால் இவள் கனவில் கண்டவனைக் காட்டக் கூடும் என்று கருதினர். இந்திரன் முதலிய தேவஅரசர் படங்களை சந்திரலேகை வரைந்து காண்பித்தாள். பூவுலகமன்னர் படங்களை அனங்கலேகை வரைந்து காண்பித்தாள். பாதாளஉலக அரசர் படங்களை சித்திரலேகை வரைந்து காண்பித்தாள். சித்திரலேகை வரைந்த பாதாளலோக அரசகுமாரனான இரத்தின சூடன் படத்தைக் கண்டதும் இரத்தினவல்லி மகிழ்ச்சி அடைந்தாள்.

இரத்தினசூடன் படத்தை இரத்தினவல்லிமகிழ்ந்து பார்த்தது கண்ட தோழியர் சிவனருளால் இவர் சேர்க்கை உண்டாகும் என்று கூறி அவளை அழைத்துச் சென்றனர் செல்லும் வழியில் சுவா என்னும் கொடிய அரக்கன் நாலு பெண்களையும் தூக்கிக் கொண்டு பறந்து சென்றான் அப்பெண்கள் 'இரத்தின லிங்கேசனே அடைக்கலம்' என்று கதறிக்கொண்டு சென்றனர் அக்கதறல் ஒலி கேட்ட அவ்வழியால் சென்ற இரத்தினசூடன் அந்த அசுரனை எதிர்த்தான். இருவருக்கும் யுத்தம் மூண்டது அசுரன் வீசிய கதாயுதத்தை இரத்தினசூடன் அழித்தான் அம்பினால் அசுரன் எதிர்த்தான் இரத்தினசூடன் அம்பையும் வில்லையும் அழித்து அவ்வசுரனைக் கொன்றான். பின்னர் அப்பெண்களைப் பார்த்து நீவிர்யார்? அசுரனுக்கு அஞ்சியபோது இரத்தினேசப்பெருமான் நாமத்தைக் கூறியதன் காரணம் என்ன என்று கேட்டான்.

அப்போது அனங்கலேகை என்னும் தோழி அவனை நோக்கி அழகிற் சிறந்த அரசகுமாரனே வசுபூதி என்னும் கந்தருவ அரசன்மகள் இவள். இவள் பெயர் இரத்தினவல்லி. நாங்கள் இவள் ஏவல் செய்யும் தோழியர் என்று கூறினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சித்திரலேகை அவனைப் பார்த்து அரசகுமா ரனே! வசுபூதி மன்னனின் அனுமதியுடன் நாம் காசி யில் இரத்தினேசலிங்கத்தை வழிபடும் வழக்கம் உடை யவர்கள் ஒருநாள் இவள் முன் சிவபெருமான் வெளிப் பட்டு பெண்ணே உன்பெயருடைய இளவரசன் கனவில் வருவான். பின் உன்னைத்திருமணம் புரிவான் என்று அருளினார். அவ்வாறு கனவில் ஒருவனைக் கண்டு இவள் காதல் வசப்பட்டாள் பின்யாம் வரைந்தபடங் களில் நாகர் உலக அரசகுமாரனின் படத்தையே தன் காதலன் படம் என்று காட்டினாள். அந்த அரச குமாரனின் எண்ணத்துடன் காசியிலிருந்து இவளுடன் வரும்போது இவ்வசுரன் எமைப்பிடித்துச் சென்றாள் என்றாள்.

இத்துன்பத்திலிருந்து எம்மைக்காத்த அரசகுமா ரனே உன் குலம் ஊர் பெயர் என்பவற்றைக் கூறுக என்று சந்திரலேகை கேட்டாள். என்பெயர் முதலிய வற்றைப் பின் தெரிவிப்பேன் இப்போது நீவிர் இக் குளத்தில் நீராடினால் இரத்தினேசலிங்கத்தைத் தரி சிக்கலாம் என்றான். அவர்கள் அப்படி நீராடி எல் லோரும் காசி இரத்தினேசலிங்க முன் தோன்றினர். அவர்கள் அதிசயத்துடன் அங்கு நின்ற வேளை நாரத முனிவரால் வசுபூதி மன்னன் அங்கு சென்றான். அவன் மகளையும் தோழியரையும் அன்புடன் விசாரித்தான். தோழியர் நிகழ்ந்தவற்றைக் கூறினர். கேட்டு மகிழ்ந்த மன்னன் அந்தஇராசகுமாரனைப் பார்த்து அவனைப் பற்றிக் கேட்டான்.

இரத்தினசூடன் தனக்கு கனவில் இரத்தினேச லிங்கப்பெருமான் அருள் புரிந்தது போலவே தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் நடைபெறுவது கண்டு மகிழ்ந்தவனாய் வசுபூதி மன்னனுக்குப் பதில் கூறினான் அரசனே நான் பாதாள உலகில் உள்ள சங்கசூடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் அரசனின் மகன் என் பெயர் இரத்தினசூடன் என்பதாகும் என்றான்.

வகபூதி இரத்தினேசலிங்கப்பெருமான் முன்பாகவே தன்மகளை அவனுக்குக் கன்னிகாதானம் செய்தான் பின் எல்லோரும் கந்தர்வ உலகுசென்றனர். அங்கு நல்ல முகூர்த்தத்தில் அக்கினி சாட்சியாக இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. அனங்கலேகை, சித்திர லேகை, சந்திரலேகை ஆகியோரின் தந்தையரும் இரத்தினசூடனுக்கே தம்மகள்களை மணமுறையாகக் கொடுத்தனர் பின்னர் வகபூதி தன் மருமகனுக்கு யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை முதலியனவும் அளவற்ற பொன்னும் கொடுத்தான். இரத்தின சூடன் தன்மனைவியர் நால்வருடனும் தன் உலகத்தை அடைந்து நீண்டகாலம் மகிழ்வுடன் வாழ்ந்து சிவபெருமான் திருவடிப்பேற்றையும் அடைந்தனர். இவ்வரலாற்றைக் கூறிய சிவபெருமான் உமையே நீ இங்கு அழைத்தலிங்கம் அம்பிகேசன் என்னும் பெயருடன் உள்ளது என்று காண்பித்தார்.

## கிருத்திவாகேசன் கதை

சிவபெருமான் உமைக்கு இரத்தினேசலிங்கத்தின் கதைகள் கூறிக்கொண்டிருந்த போது தேவர்கள் அலறும் சத்தம் கேட்டது. மகிடாசூரனின் மகனான பெரும் தோற்றமுடைய கயாசூரனுக்கு அஞ்சியே தேவர்கள் ஓலமிட்டார்கள். மழை மேகங்களைத் துளைக்கும் கொம்புகளும் ஒன்பதாயிரம் யோசனை உயரமான உடலும் உடையவன் கயாசுரன் அவனது மூச்சுக் காற்றால் திக்குயானைகள் சருகு போல பறக்கும் அவனது மூச்சின் தாகத்தாலேயே கடலில் அலை முதன்முதல் தோன்றியிருக்க வேண்டும். அவன் முடி தாக்கியதால் உண்டான வடுவின் தோற்றமே சந்திரனில் உள்ள களங்கம் மேருமலையை வெகுஅலட்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

மாகத் தூக்கி வைத்துக் கொண்டு இதுவோ சிவன் வில்லு என்று பரிகசிப்பான் ஆதிசேடனால் மலைகளைக் கட்டுவான் அவன் நடக்கும் அதிர்வு தாங்க மாட்டாது பூமி பாதாள உலகில் தாழும் இவனுக்குத் தப்பி ஓட எல்லாத்திசைகளையும் ஒரே நேரத்தில் பார்க்க வென்று தான் பிரமன் நாலு திசைக்கும் நாலுமுகம் வைத்திருக்கிறான். போலும் நாராணயர் அஞ்சி ஓடத்தக்கதாகக் துரத்தி கொண்டு புறப்பட்ட கயாசுரன் சிவனும் உமையும் இருக்குமிடத்தை அடைந்தான். தேவர்க்கு அபயம் கொடுத்த சிவபெருமான் தன்சூலத்தின் நுனியால் அவனைக்குத்தி உயர்த்திப் பிடித்தார். உலகம் முழுவதிற்கும் நிழல் செய்யும் குடைபோல் சூலத்தின் மீதிருந்த கயாசுரன் சிவபெருமானைத் துதித்தான். துதிக்கு மகிழ்ந்த சிவபெருமான் என்ன வரம் வேண்டும் எனக்கேட்டார். கயாசுரன் தன்தோலைச் சிவபெருமான் அணிய வேண்டும் எனவும் தசை முதலியன ஒரு சிவலிங்கமாக அமைய வேண்டும் எனவும் வரம் கேட்டான். அப்படியே சிவபெருமான் அருள்புரிந்தார். அவன் உடலில் உண்டான சிவலிங்கமே கிருத்திவாசேகசம் என விளங்குகின்றது.

காசியில் அவ்வசுரன் காலினால் உண்டான நீர் நிலையே சூலபாடணம் எனும் தீர்த்தமாக அமைந்தது கிருத்திவாகேசப் பெருமானுக்குத் திருவிழாச் செய்தனர். அப்போது இட்ட பலி உணவை உண்ண கழுகு, காகம் முதலிய பறவைகள் வந்தன கழுகு முதலிய வலிய பறவைகள் காகம் முதல்யவற்றைத் துரத்த அவை அஞ்சி அந்தவாவியில் விழுந்தன. விழுந்தவை அத்தீர்த்த மகிமையால் அன்னப்பறவைகளாக மாறின. அக்காரணத்தால் அந்தவாவிக்கு அன்ன வாவி எனும் பெயருண்டானது. அதன் பக்கத்தில் காத்திகாயனேசம் முதல் சிவனேசம் வரையான ஆயிரககணக்கான சிவலிங்கங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கன் அரசாட்சி

காசியில் உள்ள ஆலயத்தில் சிவபெருமான் முன்னர் நந்தியம் பிரான் சென்று வணங்கி மூவுலகிலும் அருள்மிகு சிவலிங்கங்கள் அனைத்தையும் இங்கு கொணர்ந்து சேர்த்தேன் எனக்கூறினார் அதுகேட்ட சிவபெருமான் ஒன்பது கோடி துர்க்கைகளையும் கொணர்க என்றார். அப்படியே நந்திதேவர் கொணர்ந்தார்.

காசியில் உள்ள சொற்பனேசுவரி பீடத்தின் மேற்கில் விளங்கும் துர்க்கையின் வரலாற்றைக் கூறும்படி அகத்தியர் கேட்க முருகப்பெருமான் கூறினார்.

கொடுமையும் வலிமையும் மிக்கவனாக துர்க்கன் எனும் அசுரன் இருந்தான் அவன் இந்திரன் முதலிய திக்குப்பாலகர் செல்வம் முழுவதையும் கவாந்து அவர்களை வலி கெடச்செய்தான். பிரமதேவரும் திருமாலும் தன்னைக் காணவந்து காத்திருக்கும் படியான வலிமையும் தலைமையும் உடையவனாக அவன் இருந்தான். சூரியன் துர்க்கனுக்கு அஞ்சி வெப்பமில்லாத ஒளியைப் பரப்பினான் துர்க்கனுக்கு அஞ்சி அவன் விரும்பும் போது மேகங்கள் மழைபெய்யும் தருமம் தலை குனியவும் யாகங்கள் இல்லாது ஒழியவும வஞ்சமும் பொய்யும் வளரவும் சத்தியமும் ஈகையும் ஓங்கவும் கலிபுருடன் மகிழவும் ஏழு உலகையும் துர்க்கன் ஆண்டான். சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் துர்கனிடம் தேவர் இயக்கர் கந்திருவர் முதலியோர் தோல்வியுற்றனர்

தேவர்களும் பிரமனும், திருமாலும் துர்க்கனின் கொடுமையைத் தெரிவிக்க சிவபெருமானிடம் சென்றனர். நந்தி தேவர் அனுமதிப்படி இவர்கள் காசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் முன்னிலையை அடைந்தனர். காசிவிசுவநாதரிடம் தேவர்கள் துர்க்கனின் கொடுமைகளை முறையிட்டனர். தேவர்க்கு அபயமளித்த சிவபெருமான் உமையம்மையைப் பார்த்து இத்தேவர்க்கு துர்க்கனால் உண்டான துன்பத்தை நீக்குக என்றார். உமையம்மை காளராத்திரியை துர்க்கனிடம் தூதாக அனுப்பினாள் இந்திரன் முதலிய தேவர்கள் பதவிகளை அவரவரிடம் கொடுத்து உயிர்வாழ எண்ணுகின்றயா அல்லது போரில் உறவினருடன் இறக்கப்போகிறாயா எனக்கேட்டு வரும்படி காளராத்தியியிடம் அம்பிகை கூறியிருந்தார். காளராத்திரி காசியில் இருந்து புறப்பட்டு துர்க்கன் அரண்மனையை அடைந்தாள். அவன் சென்று அசுரனே நீ தேவர் பதங்களைக் கொடுத்து உயிர்வாழ எண்ணுகிறாயா உறவினருடன் இறக்க எண்ணுகிறாயா என்று கேட்டாள்.

அப்போது அவ்வசுரன் காளராத்திரியின் திருமேனி அழகைக் கண்டு வியந்தான் துர்க்கன் தன்பக்கலிலுள்ளவர்களை நோக்கி இதுவரை இவள் போல் அழகியை நான் கண்டதில்லை இவளைப் பிடியுங்கள் என்றான் அவர்கள் அவளைப்பிடிக்கச் செல்லுதலும் காளராத்திரி தன் கண்சிவக்கும் படியான கோபத்துடன் அவர்களை நோக்க அவர்கள் சாம்பராயினர். அப்போது துர்க்கன் அசுரப்படைத் தலைவர்களாகிய சுரேந்திர தபனன் மகப்பகையன் மிருகாக்கன் தேவகம்பன் முதலியோரைப் பார்த்து காளராத்திரியைப் பிடிக்கும்படி ஏவினான். அவர்கள் செல்லக் காளராத்திரி பெருமூச்சால் உரப்பினாள். உடனே அவர்கள் விழுந்தார்கள். இது கண்ட துர்க்கன் தன்மெய்க் காவலரை நோக்கி தன் சேனைமுழுவதையும் கொணர்க என்றான் உடனே படைகள் திரண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கன் படை எழுச்சி

ஆயிரம் கோடி சேனாதி பதிகள் நூற்றறுபது கோடிதேர் கோடியானை அற்புதம் என்றும் அளவு கொண்ட குதிரை அளவு கூறமுடியாத படைவீர என எல்லாம் புறப்பட்டன இப்படிப் புறப்படுகையில் காளராத்திரி அம்பிகையிடம் சென்று துர்க்கன் படையெழுச்சியைக் கூறினாள் தொடர்ந்து சென்ற துர்க்கன் அம்பிகை சிறப்பாக வீற்றிருத்தலைக் கண்டான் கண்டதும் தன் சேனாபதிகளை நோக்கி இவளை உயிருடன் பிடித்துத் தருபவர்க்கு தேவச் செல்வங்ளைச் சன்மானமாகத் தருவேன் என்று கூறினான் சேனாதிபதிகள் துர்க்கனைப்பார்த்து அரசே திருமாலே உனக்கு அஞ்சி இறந்தவன் போல் நித்திரை செய்கின்றார் இந்திரச்செல்வம் முழுவதும் உம் பொருட்டு எம்மால் கவரப்பட்டு விட்டது வருணன் வாயு அக்கினி இயமன் முதலியோர் உமது ஏவல் செய்பவராய் இருக்கின்றனர். சிவபெருமானின் எருது முதுமையானது என்பதால் அலட்சியம் பண்ணி அதை உம்பொருட்டு நாம் பிடித்துவரவில்லை உம் விருப்பத்தை நிறைவேற்றுவது எமக்குப் பொருத்தமானதே என்று சம்மதித்தார்கள் நட்சத்திரம் உதிரும்படி சங்கை ஊதிக்கொண்டும் அண்டம் பிளக்க முரசடித்துக் கொண்டும் ஆரவாரத்துடன் அம்பிகையை எதிர்த்துப் புறப்பட்டனர். ஊழிக்காலத்தில் சமுத்திரம் பெருகுவது போல அவுணப்படை சென்றது.

அவுணப்படையைக் கண்ட அம்பிகை தன் உடலில் இருந்து பல சக்திகளைத் தோற்றுவித்து சண்டைக்கு அனுப்பினாள் அச்சக்திகள் விரைவாக அவுணப்படைகளை வென்றன தன்படை அழிந்ததைக் கண்டதுர்க்கன் கோபத்துடன் சண்டையிடத் தேர்மீது ஏறினான். ஆரவாரம் மிக்க தேரில் சென்ற துர்க்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல் எழு வச்சிரம் இரும்புலக்கை அம்பு வாள் கதை கப்பணம் சூலம் முதலிய ஆயுதங்களை அளவில்லா எண்ணிக்கையில் ஒரேசமயத்தில் ஏவினான் அம்பிகை தன் வில்லால் அவற்றை விலக்கினாள்.

உடனே துர்க்கன் தேவர்கள் அஞ்சி ஓடும்படியான ஒரு வேலாயுதத்தை விடுத்தான் அதை அம்பிகை தன் வாளாள் வீணாக்கினாள். துர்க்கன் ஒருகொடிய சக்கரத்தை விடுத்தான் தன் கதாயுதத்தால் அம்பிகை அசுரனின் சக்கரத்தைச் சிதறினாள். உடனே துர்க்கன் இதை உன்னால் தடுக்க இயலாது எனக்கூறிக் கொண்டு ஒருவலிய அம்பைச் செலுத்தினான். அதை தன் அம்பொன்றால் அம்பிகை விலக்கினாள். உடனே வலிமை மிக்க ஒரு சூலாயுதத்தை அவுணன் விடுத்தான் இடியேறுகளை உமிழ்ந்து வந்த துர்க்கனின் சூலத்தை அம்பிகை தன் சூலத்தால் விலக்கினாள். பின் கதாயுதத்தால் அம்பிகை எதிர்த்த அளவில் துர்க்கன் கதை துகளானது. உடனே அம்பிகை தன் பாதத்தால் துர்க்கனை உதைக்க அவன் மயங்கி வீழ்ந்தான். உடனே அம்பிகை தனது சத்தியை ஏவ அது சென்று துர்க்கனுடைய நால்வகைப் படைகளையும் அரைக் கணத்தில் அழித்தது.

## துர்க்கன் வதை

மயக்கம் நீங்கி எழுந்த துர்க்கன் தன் படைமுழுவதும் அழிந்ததைக் கண்டான். நேருக்கு நேர் யுத்தம் செய்வது இயலாது எனக் கண்ட அவன் மாயையால் ஆகாயத்தில் மறைந்து நின்று அம்புகளை மழைபோல் சொரிந்தான் அவன் ஏவிய அம்புகளை அம்பிகைதன் அம்புகளால் விலக்க அவுணன் நூறு கோடி மலைகளைப் பிடுங்கி ஏறிந்து எதிர்த்தான். அம்பிகை மலைகளைத்தன் அம்புகளால் அழித்தாள். கோபத்தினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாயிதழ்களைக் கடித்த துர்க்கன் வில்லைப் பிடித்தபடி ஒருயானையாகச் சென்றான். காதுகளால் காற்றை உண்டாக்கியும் மதத்தை சொரிந்தும் யானை வடிவுடன் வந்த துர்க்கனின் துதிக்கையை அம்பிகை வாளால் வெட்டினாள் உடனே துர்க்கன் பெரிய எருமை வடிவுடன் வந்தான் தன் சூலாயுதத்தால் அம்பிகை அவன் எருமை வடிவை அழித்தாள். துர்க்கன் உடனே ஆயிரம் தலைகளை உடைய பெரிய வடிவுடன் அம்பிகையை எதிர்த்தான். ஆயிரம் கைகளிலும் ஆயிரம் படைக்கலன்களை ஏந்தி எதிர்த்த துர்க்கன் இறக்கும்படி ஆகாய வெளி நின்றவாறு ஒரு அம்பை விடுத்தாள்.

துர்க்கன் இறந்ததைக் கண்டு திருமால் முதலிய தேவர்கள் எல்லோரும் சகல உலகிற்கும் அன்னையான அம்பிகையை துதிப்பாராயினர்.

துக்கனை கொலைசெய்த காரணத்தால் அம்பிகைக்குத் துர்க்கை என்று பெயருண்டானது. துர்க்கையை செவ்வாய்க்கிழமையிலும் சதுர்த்தியிலும் புரட்டாதி மாத அட்டமி நவமித் திதிகளிலும் வணங்கினால் துன்பங்கள் நீங்கப்பெற்று உலகமுழுதாளும் செல்வம் பெறுவர்.

ஆயிரம் கண்ணி ஆயிரமுகத்தி ஆயிரம் கையள் குதிரை வாகனி, அயோமுகி, தொனிஙக சலாசனி விச்சுலை கவுரி என்னும் நவசத்திகளும் காசியை எப்பொழுதும் காவல்புரிவர் எட்டுவயிரவர் அறுபத்தினாங்கு கூளிகள் அளவில்லாத பூதங்கள் ஆகியோரும் காசியைக் காவல் புரிகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வச்சிரபஞ்சர கவசம் உரைத்தமை

அங்கையிற் கரகம் தாங்கும் பிரமாணி அருளினோடும்
துங்கமென்சென்னி காக்க வயிணவிதுகளிலாகம்
எங்கணும் காக்க செய்யவேந்தெழில் உருத்திராணி
தங்குமெண்டிசையு மன்பு தழைத்திட வினிதுகாக்க.

கொன்னுனைக் சூலிசென்னி மயிரினைக் குறித்துக்காக்க
மன்னுவெண்பிறை தாம்சென்னி வயங்கொளி நெற்றி
காக்க
பண்மயிர்ப் புருவநாளும் பரிவொடு முமையாள்காக்க
என்னையாண் முக்கணீசன்இறைவிகண்இணைகள்காக்க

வயமிகு இமயவல்லி மூக்கினை மகிழ்ந்துகாக்க
செயையொடும் விசயைமேல் கீழிதழினைச் சிறந்துகாக்க
அயிலுடைச்சுருதி நூயஅம்செவி காக்க தண்ணென்
பயின்மலர் உறையும் செல்வி பல்லினை உவந்துகாக்க.

சண்டிமென் கபோலங் காக்கதவளநாண் மலரின்வைகும்
ஒண்டொடி நன்நாக்காக்க விசயை மங்களை
மற்றெறால்லாக்
கண்கவர் நாடிகாக்க காத்தியாயினி எஞ்ஞான்றும்
முண்டகமலரில் தூயமுகத்தினைச் சிறந்துகாக்க.

காளமுண்டிருண்ட நீலகண்டிமென் கழுத்துக்காக்க
கோளில் பூதாரசத்தி அவர்புறம்காக்க கூர்மி
நீள்ஒளிச்சந்திகாக்க வயிந்திரி நெறியினோடும்
தோளினைக்காக்க பத்மைதுணை மலரங்கைகாக்க.

கமலைகைவிரல்கள் காக்க விரசை கைஉகிர்கள்காக்க
திமிரமுண்டொளிரும் வெய்யோன் மண்டலத்துறையுஞ்
செல்வி
எமதிருவாகு மூலங்காக்க வானவர் களேத்த
அமிர்தவ கரிசைநாளு மகன்மணி மார்பங்காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரித்திசை இதயங்காக்க தயித்தியர்ச் செகுப்போள்மிக்க
கருத்தொடு முலைகள்காக்க சகத்தினி விறைமை
பூண்டோள்
திருத்தகு வயிறுகாக்க திகழ்தரு பாகதி தன்னுள்ளத்
தருத்தியின் உந்திகாக்க வசைவளர் முதுகுகாக்க.

கருதரு விகடைகாக்க கடிதடம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனம்காக்க குகாரணி குய்யம் காக்க
அருள்தரவரும் அபாயகந்தினி அபானம்காக்க
தெருளுடை விபுலையென்றும்சிறப்புடைக் குறங்கு காக்க

வளிதைமென் முழந்தாள்காக்க வியற்சபை கணைக்கால்
காக்க
களிதரு கோரைவாய்ந்த பரட்டினைக் காக்கமிக்க
அணிகொள் பாதலத்தில் செல்வோள் அணிகெழு புறந்
தாள்காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்தி உக்கிரி உவந்துகாக்க.

தலத்துறை மடந்தை உள்ளம்கால் இணைகாக்க
தண்ணென்
மலர்த்திரு மனையைக்காக்க வயங்கு கேத்திரதை ஓங்கி
உலபில் கேத்திரங்கள் காக்க பிரிகரை ஒழிவறாது
நலத்தகு மக்கடம்மை நன்குறக்காக்க வன்றே.

உயர்சகுதனி எஞ்ஞான்றும் ஒளிவறுமாயுள் காக்க
மயர்வறு சீர்த்தியாவும் மாதேவிகாக்க மிக்க
செயிர்அறு தருமம்யாவும் தனுத்திரி சிறந்துகாக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி இனிதுகாக்க

சற்கதிப் பிரதை நல்லோர்ரியை பினைத் தயாவில்
காக்க
விற்கொடும் போரினிரில் வெளியினில் வனத்திற்சூதில்
இற்புறமதனி லோங்கு சர்வாணி காக்க வென்னாப்
பொற்றகு மலர்கள் தூவிப்புங்கவர் ஏத்தினாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளிர் புனரயும் செய்ய அடிமலர் இறைஞ்சிஏத்தும்
இந்திரன் முதலினோரை எழுகஎன நோக்கிநீவிர்
சிந்தை உற்றுறைத்த வச்சிரபஞ்சரம் செபிக்கில்ஆகும்
வெந்திடக்கனற்றும் தீயவெப்பு நோய் ஒழியுமன்றே.

இனிதின் இக்கவசந்தன்னை எட்டுரு முறையின்ஓதி
புனிதநீர் அருந்தில் உந்தி பொருந்து நோயனைத்தும் தீரும்
கனையிருள் கங்குல்போதில் கவசம் நன்கோதியேகில்
துனைவுறு குறுந்தாட்பூதம் பேயிவை தொடர்ந்திடாவால்.

பொறையுயர்த்திடாது நோயில் புலம்புவோர்க்கு இனிதுநீவிர்
அறையும் இக்கவசம்தன்னை அருகிருந்து ஓதில்தூய
நறிய தண்புனலை ஓதீ அளித்திடில் நவைஇயலாத
சிறுவரைவிரைவின் மிக்க சிறப்பொடுமுயிர்ப்பர்மாதோ

களிறுவீழ்ஞாட்பில் கூறும்கவசம் ஓர்ந்தினிதின் ஓதின்
ஒளிறுவேல் பகைவர்தானை உடைந்துவெந் கொடுத்து நீங்கும்
வெளிறில் இக்கவசம் ஓதிமென்புனல் அளிக்கில் தீஞ்சொல்
தளர் நடைப்புதல்வர்க் கென்றும் உறுபிணிசார்ந்திடாதாம்

இனையநல் கவசம் தன்னை யாரெடுத்தியம் புகின்றார்
அனையவர் தமை என்னோடும் சக்திகள் அளிக்கும் என்னா
புனைகுழை அமரர் வேட்டநல்வரமளிந்துப் பொங்கு
கனைஇருள் பிழம்பு சீய்க்கும் தன்னுழைக் கரந்து போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்காரலிங்க வரலாறு

காசியில் துர்க்கை இருக்கும் இடத்திற்குச் சமீப மாக விரசைபீடம் திருலோசனலிங்கம் பப்பில தீர்த் தம் என்பன உண்டு. இவை மட்டுமன்றி அரசர் சித் தர் முதலியோரால் அமைக்கப்பட்ட எண்ணில்லாத சிவலிங்கங்கள் உள்ளன.

ஓங்காரலிங்கம், திரிலோசனலிங்கம், மாதேவலிங் கம், கிருத்திவாசலிங்கம், இரத்தினேசலிங்கம், சந்திரே சலிங்கம், அவிமுத்தேசலிங்கம், தருமேசலிங்கம், காமேச லிங்கம், விசுவகன்மேசலிங்கம், மணிகன்னிகேசலிங்கம் கேதாரலிங்கம், விசுவநாதலிங்கம், வீரேசலிங்கம் என் னும் பதின்னான்கும் உள்ளமையால் காசிமுத்தித்தலம் என்னும் பெருமையுடன் விளங்குகின்றது.

ஞானேசலிங்கம், அமுர்தேசலிங்கம், இலாங்கேசலிங் கம், தண்டீசலிங்கம், மகேசலிங்கம், சொர்க்கத்து வாரேசலிங்கம், தாரகேசலிங்கம், தாரேசலிங்கம், நந்தி கேசலிங்கம், அருணேசலிங்கம், சோதிரூபலிங்கம், விருத் தகாளேசலிங்கம், பிரமேசலிங்கம், விருட்சேசலிங்கம், முத்தித்துவாரேசலிங்கம் ஆகிய பதினான்கு சிவலிங்கங் களும் காசிக்கு இருதயமாக விளங்குகின்றன என்பர்.

சுரமகேச்சுரலிங்கம், ஈசானலிங்கம், புரோக்கலிங் கம், வியாக்கிரேசலிங்கம், இரணியகருப்பேசலிங்கம் சேட்டலிங்கம், உபசாந்தலிங்கம், உக்கிரேசலிங்கம் சம்புகலிங்கம், நிவாசலிங்கம், சயிலேசலிங்கம்; நாகலிங் கம், ஈசலிங்கம், மத்திமகேச்லிங்கம், என்னும் பதினான் கும் காசிக்கு தத்துவமாக விளங்குகின்றன எனச் சிவ பெருமான் அம்பிகைக்கு உபதேசித்தார் இதைக்கேட்ட அம்பிகை சிவபெருமானை வணங்கி சிவலிங்கங்களின் பெருமைகளைத் தனித்தனி கூறியருள்க எனக் கேட் டார். சிவபெருமான் ஓங்காரலிங்கத்தின் வரலாற்றைக் கூறலானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு பிரமதேவர் காசியிலே அரியதவம் செய்தார் நூறு யுகங்கள் இடைவிடாத யோகத்திலிருந்த பிரம தேவரின் உள்ளத்தில் பிரகாசம் மிக்க ஒளி தோன்றியது அவ்வொளி பாதாளம் முதலிய ஏழு உலகிலும் பரந்து நிறைந்த போது பெரியஓசை உண்டானது.

பிரமதேவர் தன் யோகத்தை விட்டு அந்தஒலியை அவதானித்த போது அது திருமால் வடிவாயும் இருக்கு வேதத்தொடக்கமாயும் சாத்துவிக மயமாயும் அகரம் எனும் எழுத்தாயும் முதலில் காணப்பட்டது.

பின்னர் இராசதகுணமாயும் யசுர்வேத காரண மாயும் வேறொரு பிரமவடிவாயும் ஆதிசக்தியான உமை போன்ற தாயும் உகரம் என்னும் எழுத்துப் போலவும் காணப்பட்டது. பின்னர் சாமவேத காரணமாயும் தவத்திற்கு தலைமை உடையதாயும் சிவபெருமான் வடிவுபோன்றதாயும் தாமதகுணமாயும் மகரம் என்னும் எழுத்துப்போலவும் அவ்வொலி காணப்பட்டது. பின்னர் எங்கும் நிறைந்த சத்தப் பிரமமாயும் பேரின்ப மயமாயும் தூயஒளியை உண்டுபண்ணும் பெருவடிவ மாயும் உள்ள நாதத்தத்துவமாக அது பிரமனுக்குக் காணப்பட்டது. எல்லாச்செயல்களுக்கும் காரணமாயும் எங்கும் நிறைந்ததாயும் பரம்பொருளாயும் அழகுடன் வெளிப்படும் விந்துவடிவாக அது பின்னர் பிரமதேவ னுக்குக் காணப்பட்டது.

இவ்வாறு ஐந்தும் ஒன்றாக விளங்கும் பிரணவ ஒலியைப் பிரமதேவர் போற்றி வணங்கினார். உலகம் முழுவதையும் காப்பாற்றும் காரணத்தால் அவ்வொலி ஓம் எனப்பட்டது. சீவராசிகளை இருவினைக்கடலிலி ருந்து கடப்பிக்கும் காரணத்தால் அவ்வொலி தாரகம் என்னும் பெயரைப் பெற்றது. இவ்வாறான பெயர்க ளால் அவ்வொலியைப் பிரமதேவர் துதித்தார். ஓங்கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாயும் ஒலியாயும் எழுத்துக்கள் தோன்றும் இடமாயும் உயிர்களைத் தாங்குவதாயும் சதாசிவமாயும் அதர்வனவேதமாகியும் அழிவற்றவராயும் மேலான பிரமப்பொருளாயும் மிகுதியான நற்குணக்குவியலாகியும் உலகங்களைத் தோற்றுவித்த மேலானவராயும் நிற்பவரே சிறியது பெரியது உருவற்றது அறிவுடையது வேதங்களால் சுட்டப்படுவது இளமை உடையது முதுமைஉடையது உதாத்தம் அநுதாத்தம் சுவதிதம் எனும் உச்சரிப்புக்களை உடையது நடத்தல் இருத்தல் எனும் தன்மைகளை உடையவராயும் நீலகண்டராயும் உயிர்களுக்குப் பற்றுக்கோடானவராயும் உள்ளவரே என்றும் பிரமதேவர் துதித்தார். இதுபோலப் பலவிதமாக மீண்டும் மீண்டும் துதிக்கும் பிரமதேவர் முன்பாக அவர் பூசித்த லிங்கத்தினின்றும் சிவபெருமான் வெளிப்பட்டுக் காட்சி கொடுத்தார். விரும்பியவற்றைக் கேட்பாயாக என்று அருள்புரிந்தார்.

பிரமதேவர் சிவபிரான் முன் வீழ்ந்து வணங்கி பெருமானே சிறியேன் தீவினைகளிலிருந்து எக்காலமும் விடுபடும்படி எக்காலமும் இச்சிவலிங்கத்தில் பிரசன்னராய் இருக்க வேண்டும் என்றார்.

பிரமனே! நாம் அப்படியே செய்வோம் இச் சிவலிங்கமும் ஓங்காரலிங்கம் என்னும் பெயருடன் விளங்குவதாக உனக்கு உலகம் முழுவதையும் படைக்கும் ஆற்றலும் பிதாமகன் எனும் பெயரும் விளங்க அருளினோம். கங்காநதி இச்சிவலிங்கத்திற்குப் பக்கமாகச் செல்லும் போது மச்சோதரி எனும் பெயருடன் விளங்கும் மச்சோதரியில் நீராடுபவர் அடையும் நன்மையும் அப்படி நீராடி ஓங்காரலிங்கத்தை வழிபடுபவர் அடையும் சிறப்புக்களையும் எவரும் சொல்லுதல் இயலாது என்று அருள்புரிந்து விட்டு சிவபெருமான் அவ்லிங்கத்தில் மறைந்தருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்காரலிங்கத்தின் சிறப்பு

பதுமகற்பத்தில் தமனன் என்னும் ஓர் அந்தணன் இருந்தான். இவன் பரத்துவாரின் மகன் உபநயனம் பெற்றபின் மேலான கல்விகற்று நல்லுணர்வை அடைந்தான். அதன் பயனாக இல்வாழ்க்கை முத்திப்பேற்றுக்கு தடை என எண்ணினான். தவச்சாலையை அடைந்தும் தீர்த்தங்கள் ஆடியும் உலகை வலம் வந்தும் தக்க குருவைப் பெறாது வருந்தினான். தமனன் ஒரு நாள் அலந்தி என்னும் ஆற்றங்கரையை அடைந்தான்.

அங்கு நின்ற பொழுது அமரர்கண்டம் எனும் தீர்த்தக் கரையில் உயர்ந்து விளங்கும் ஓங்காரேசன் கோவிலைக் கண்டான். உடனே மகிழ்ச்சியுடன் அவ்விடத்தை அடைந்தான். அங்கே திரிபுண்டரமும் உருத்திராக்கமும் விளங்க அணிந்த சிவாகம உணர்வு மிக்க குரு ஒருவரைக் கண்டான். கரகமுனிவர் என்னும் பெயருடைய அக்குருவை உடனே தமனர் வணங்கினார். நீ யார்? என்று முனிவர் கேட்டார்.

முனிவர் பெருமானே தமனன் என்பது என் பெயர் வேதம்பயின்று மேலான சித்தியை விரும்பினேன் அரிய மருந்துகளை உண்டும் பல இடங்களுக்கு யாத்திரை செய்தும் என் எண்ணம் நிறைவேறவில்லை பல குகைகளில் இருந்து யோகசாதனைகள் மேற்கொண்டும் என் விருப்பம் நிறைவேறவில்லை. அரிய பாசுபதவிரதத்தை மேற்கொண்ட உமது திருவடிகளில் வணங்கும் என் விருப்பத்தை நீரே நிறைவேற்றியருள வேண்டும் என்றான்.

தமனருக்கு கரகமுனிவர் கூறுகின்றார் தூயமானவனே தீவினைக்கு நெருப்புப் போலவும் பிறவிக்கடலை வற்றச்செய்யும் வடவர் முகாக்கினி போலவும் விளங்குவது காசிநகரமாகும். காசியில் சிவபிரான் பிரசன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயிருக்கும் ஓங்காரலிங்கம் உள்ளது அதனை வணங்கி னால் எவரும் அரிய சித்திகளை அடையலாம். காசி யில் உள்ள ஓங்காரேசுவரர் ஆலயத்தில் ஒரு தவளை இருந்தது. அது அங்கு நின்மாலியப் பொருளை உண்டும் ஆலயத்தை வலம் செய்தும் வாழ்ந்தது. சிவ நின்மானி யம் அருந்திய குற்றத்தால் காசியில் மாலை கட்டும் தொழிலாளியின் மகளாய் குயில் முகத்துடன் அத் தவளை பிறந்தது. அவள் இசையிலும் நடனத்திலும் தேர்ச்சி பெற்று ஓங்காரப் பெருமான் முன்பாடி ஆடி வந்தாள். அவள் ஒருநாள் ஓங்கார லிங்கத்தில் ஐக்கிய மாகிப் பேரின்பநிலை அடைந்ததை நான் நேரே கண் டேன். அப்படியான ஓங்காரலிங்கப் பெருமானை வணங் கில் எளிதில் முத்தியடையலாம் என்று கூறிய கரகமுனி வர் தமனனொடும் காசியை அடைந்து ஓங்காரலிங்க முன்னிலையை அடைந்தார். இருவரும் ஓங்காரலிங் கத்தை வணங்கி அதில் ஐக்கியமாகும் பேற்றை அடைந்தனர்.

## திரிலோசனலிங்கம் தோன்றியமை

ஓங்காரலிங்க ஆலயத்தின் முன்னர் விரசாபீடம் என்னும் சத்திபீடம் உளது அதன் மகிமை காரண மாக கங்கை, யமுனை, சரஸ்வதி என்னும் நதிதேவ தைகள் தினமும் அப்பீடத்தை வணங்குவர் விரசா பீடத்தருகில் பிப்பில தீர்த்தம் உளது. அப்பிப்பிலதீர்த் தத்தருகில் ஒரு சிவலிங்கம் உளது. உமையம்மைக்கு மூன்று கண்கள் அமையும்படி அருளிய காரணத்தால் அச்சிவலிங்கத்திற்கு திரிலோசனலிங்கம் என்று பெயர் அமைந்தது. இத்திரிலோசலிங்கத்தைப் போன்ற சிறப் புடைய ஈசானலிங்கம், வீட்டுமலிங்கம், அசுவத்தமா லிங்கம் வாலகில்யலிங்கம் என்பன ஓங்காரலிங்கத்தைச் சூழ்ந்து விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிலோசனலிங்க மகிமை

இராசேந்திர கற்பத்தில் திரிலோசனலிங்க ஆலயத்தின்முன் உள்ள கோபுரத்தில் ஒருபுறா தன்பேட்டுப் புறாவுடன் வசித்தது இருபுறாக்களும் தம் இறக்கைகளால் ஆலயக்கோபுரத் தூசிகளைப் போக்கியும் ஆலயபூசையினையும் ஆலயத்திற்கு வரும் முனிவர்களையும் தரிசனம் செய்தும் ஆலயத்தை வலம் வந்தும் வாழ்ந்தன.

ஒரு நாள் ஒரு பருந்து இப்புறாக்களைக் கண்டு தனக்கு உணவாக்க எண்ணியது. இதை அறிந்த பெண் புறா அச்சமடைந்தது ஆனால் ஆண்புறாவோ தனக்கு பருந்தை எதிர்த்துச் சண்டையிடும் ஆற்றல் உண்டு என்று வீரமாக இருந்தது. பின் அவற்றைப் பிடிக்க பருந்து வந்த போது ஆண்புறா படீனம், வியாடிகம், பட்டிகம், கரண்டை, தடாதி, வங்குசம், கீசனிம், சண்டீனம், முட்டினம் என்னும் மண்டலங்களான எட்டுவகையான பறவைச் சண்டை வேகப்பயிற்சியால் சண்டை இட்டது. கடைசியில் பருந்து ஆண்புறாவைத் தன் கால்களால் பிடித்துக் கொண்டு பறந்தது. அப்போது பெண்புறா பறந்து பறந்து பருந்தின் காற்சவ்வுகளில் கொத்தி துன்புறுத்தியது அதனால் வருந்திய பருந்து அப்புறாவைப் போட்டு விட்டுச் சென்றது. இவ்வாறு பருந்தால் விடப்பட்ட புறாக்கள் அச்சமயம் அயோத்தியை அடைந்திருந்தன. அயோத்தியில் சில காலம் வாழ்ந்தபின் அவ்விரு புறாக்களும் மரணமடைந்தன. அயோத்தியில் இறந்த புண்ணியத்தால் அந்த ஆண் புறா கந்தருவ அரசனான மந்தாரதாமனுக்கு மகனாய்ப் பிறந்தது. அக் கந்தருவ அரசகுமாரன் பெயர் பரிமளாலயன் என்பதாகும் இறந்த பெண்புறா நாகலோக அரசனான இரத்தினதீபனுக்கு மகளாகப் பிறந்தது. அதன் பெயர் இரத்தினாவல்லி என்பதாகும். இருவரும் முற்பிறப்பின் காரணமாக சிவபக்தி உடையவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் விளங்கினர். இரத்தினாவல்லி தோழியருடன் காசியை அடைந்து ஓங்காரலிங்கத்தை அன்புடன் வழி பட்டும்; ஆலயத்தில் கோலமிட்டும், திருவிளக்கிடல் முதலிய பணிகளைச் செய்தும் வந்தாள். ஒரு வைகாசி மாத திருதிகை நாளில் இரத்தினாவல்லி விரதமிருந் தும், நித்திரை விழித்தும் வழிபட்டதுடன் மறுநாள் அந்தணர்க்கு உணவு முதலியன வழங்கியபின் பாரணை செய்தாள். இவள் வழிபாட்டிற்கு மகிழ்ந்த சிவபெரு மான் உமையம்மையுடன் காட்சி கொடுத்தார். வணங் கிய இரத்தினாவல்லிக்கு முற்பிறப்பின் தன்மையை உணர்த்தி பெண்ணே! நீ கந்தருவ ராசகுமாரனாகிய பரிமளாலயனைத் திருமணம் செய்து செல்வம் மிக்க வாழ்வில் மகிழ்ந்து கடைசியில் காசியை அடைந்து பேரின்பமுறுவீர் என்றார்.

இரத்தினாவல்லியின் தோழியர் இருவரும் பரிமளா லயனையே அடைதற்கு உரியர் என்று அருளிய சிவ பெருமான் அவர்களது முற்பிறப்பு வரலாற்றையும் கூறி யருளினார். தோழியர் இருவரும் இருபிறப்புக்குமுன் சாராயணன் எனும் அந்தணனுக்கு மகள்களாக இருந் தனர். அழகுமிக்க இருவரையும் அவன் ஒரு அந்தண னுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். ஒரு நாள் காட்டு வழியில் செல்லும்போது அவன் பாம்பினால் கடியுண்டிறந்தான். இருவரும் ஆபரணங்களை நீக்கி மயிர் குறைத்து கைமை விரதமனுட்டித்தனர். ஒரு நாள் உணவின் பொருட்டு ஒரு ஆச்சிரமத்திற்கு சென்ற இருவரும் பிட்சை ஏற்பதற்குப் பதிலாக அங் கிருந்த ஒரு வாழையின் பழங்களைப் பறித்து உண்ட னர். இச் செயலால் இவர்கள் காசியில் குரங்காகப் பிறந்து ஒரு குரங்காட்டி கையில் அகப்பட்டுப் பின் இறந்தனர். அவர்கள் இப்போது உன் தோழியராய்ப் பிறந்துள்ளனர். இருவருக்கும் இரு பிறப்புக்குமுன் கண வனாக இருந்தவனே இப்போ பரிமளாலயனாகப் பிறந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளான். ஆதலால் நீவிர் மூவரும் பரிமளாலயனை மணந்து இன்ப வாழ்வில் திளைத்து பின் என் திருவடிப் பேற்றை அடையுங்கள் என்று சிவபெருமான் அருள் புரிந்தார்.

இவ் வரலாற்றை இரத்தினாவல்லி தந்தைக்குத் தெரிவித்தாள். ஒரு நாள் ஓங்காரேசுவரர் திருவிழாவுக்கு வந்த மந்தாரதாமனிடம் இரத்தினதீபன் திருமணம்பேசித் தன்மகளையும் தோழியரையும் பரிமளாலயனுக்குத் திருமணம் செய்து வைத்தான். சிவபெருமான் அருளிய வண்ணம் நீண்டகாலம் செல்வச் சிறப்புடன் இன்பமாய் வாழ்ந்தபின் மூவரும் திரிலோசனலிங்கத்தில் ஐக்கியமாகி பேரின்பப் பெருவாழ்வுற்றனர்.

## கேதாரலிங்கத்தின் கதை

பாவகரம் எனும் தீர்த்தக்குளத்தில் நீராடி கேதாரேசுவரப் பெருமானை வணங்கி ஆலயத்தோடு மலைமுகட்டையும் தரிசிப்பவர் பிறவித்துன்பத்தினின்று விடுபட்டு முத்திப் பேற்றை அடைவர்.

இராசேந்திரகற்பத்தில் இரணியகருப்பன் என்னும் பாசுபதயோகி ஒருவர் இருந்தார். வசிட்டர் முதலிய பல முனிவர் அவரிடத்தில் மாணாக்கராயிருந்து உபதேசம் பெற்று வந்தனர். சிவனடித் தொண்டு செய்தல் விபூதி உருத்திராக்கமணிதல் கங்கையாடல் மவுனமாயிருத்தல் பிச்சை உண்ணல் முதலிய நியமத்துடன் குருவும் சீடரும் வாழ்ந்து வந்தனர். இப்படி இருக்கும் காலத்தில் இரணியகருப்பமுனிவர் சீடர்களோடும் கேதாரத்திற்கு யாத்திரை செய்தார். அப்படிச் செல்கையில் ஆற்றங்கரையிலுள்ள ஒரு குகையில் தங்கியிருந்தனர். பின் கேதாரத்தை அடைந்து நதியில் தீர்த்தமாடிவிட்டு அதன் கரையிலிருந்த போது இரணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பமுனிவரின் ஆவிஉடலைவிட்டுப் பிரிந்தது. உடனே சிவகணங்கள் விமானத்தில் வந்து அவருயிரைக கயிலைக்கு அழைத்துச் சென்றனர். இதனைக் கண்ட வசிட்டர் முதலியோர் கேதாரயாத்திரை கேதாரலிங்கம் என்பவற்றின் மகிமையை பிரத்தியட்சமாகக் கண்டு வியந்தனர்.

பின் கேதாரதரிசனம் முடித்து வழமை போலக் காசியில் இருந்தனர். அப்படி இருக்கும் போது வருடமொருமுறை கேதாரயாத்திரை செய்வதை நியமாகக் கொண்டனர். மிக வயது முதிர்ந்த நிலையில் இருந்த வசிட்டரை தாம் கேதாரம் செல்லும் போது காசியிலேயே தங்கும்படி மற்ற முனிவர்கள் கூறினர். ஆனால் கேதாரம் செல்வதில் வசிட்டர் உறுதியாயிருந்தார். அப்போது அவர் கனவில் சிவபெருமான் வெளிப்பட்டு வசிட்டரே ! நாம் கேதாரத்தில் இருந்து இங்கு வந்து தங்கியுள்ளோம் ஆதலால் நீ கேதாரம் செல்ல வேண்டுவதில்லை என்று அருள்புரிந்தார். வசிட்டர் அப்போது சிவபெருமானை வணங்கி பெருமானே எனக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் இவ்வாறருள வேண்டும் என்றார். அப்படியே இறைவன் கேதாரத்திலுள்ள பாவகரதீர்த்தத்துடன் காசியில் எழுந்தருளினார்.

# தருமேச்சுரலிங்கத்தின் கதை

எருமை வாகனத்தை உடைய யமதருமன் காசியை அடைந்து அரியதவம் மேற்கொண்டான். பனிக்காலத்தில் நீரில் அமிழ்ந்தும் மழை காலத்தில் மழையில் நனைந்தும், வெயில் காலத்தில் நெருப்பின் நடுவில் நின்றும் யமன் தவம் புரிந்தான். யமதருமன் முன் சிவபெருமான் வெளிப்பட்டார். தவத்தால் உடலை வாட்டிய தருமனே எழுக என்றருளினார். சிவபெருமான் யமனைப் பார்த்து சீவராசிகள் அனைத்தும் தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைவழி உன் உலகை அடைந்து உன் அருள் பெற்று நல்ல கதியை அடையட்டும் என்றருளினார். யமனே கொடிய தீவினையை நீண்டகாலம் புரிந்தவரும் உன்னால் ஆக்கப்பட்ட குளத்தில் நீராடி இங்கு உன்னால் அமைக்கப்பட்ட சிவலிங்கத்தை வணங்கினால் முத்தியடைவர் என்றும் கார்த்திகைமாத வளர்பிறை அட்டமியில் விரதமிருந்தும் நித்திரை விட்டும் தருமேசலிங்கத்தைப் பணிபவர் முத்தியடைவர் என்று சிவபெருமான் அருள்புரிந்தார்.

## கிளியின் கதை

சிவபெருமான் யமனுக்கு அருள்புரிந்த பின் தவத்தால் வாடியிருந்த அவனுடலைத் தன் திருக்கரத்தால் தடவினார். உடனே அவனுடல் பொலிவடைந்தது. அப்போது யமன் சிவபெருமானை வணங்கி அங்கு நின்ற கிளியைக் காண்பித்து சிவபெருமானே இக்கிளிகளின் தந்தையை ஒரு பருந்து கொன்றுவிட்டது உடனே இதன் தாய்க் கிளியும் இறந்து விட்டது. அன்று முதல் இக்கிளிகள் என்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றன இவற்றுக்கும் நீர் அருள்புரிய வேண்டும் என பிரார்த்தித்தான் சிவபெருமான் அவற்றை அன்புடன் பார்த்து அரியவரங்களைக் கேட்கும்படி கூறியருளினார்.

கிளிகள் சிவபெருமானைப் பார்த்துக் கூறுகின்றன பெருமானே பறவைப் பிறவியெடுத்தும் உம்மைத் துதிக்கக் கூடிய நிலைக்கான தவம் யாதோ அறியோம் பெருமானே முதலில் நீர் எம்வார்த்தையைக் கேட்டருள வேண்டும். நாம் தருமதேவர் செய்த தவத்தைத் தரிசித்த மகிமையால் எம் முற்பிறப்புக்களை அறியும் இயல்பைப் பெற்றோம். தேவர் உலகில் பிறந்து தேவ அரம்பையருடன் கூடிவாழும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருந்தோம் அசுரர் கந்திருவர் முதலியோராகியும் அன்புடையோராகியும் அன்பற்ற சூழ்ச்சியுடையோராகியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிகளெடுத்துள்ளோம். இப்படியான பிறவிகளைப் பெற்றும் உண்மை அறிவைப் பெற்றும் பேரின்ப வாழ்வடையாது துன்பமேயடைந்தோம் ஆனால் தருமதேவர் செய்த அரியதவத்தைத் தரிசித்தபடியால் வினைகளிலிருந்து நீங்கப்பெற்றோம். நாம் தேவேந்திரச் செல்வத்தையும் விரும்பவில்லை. புனிதம் மிக்க கங்கையின் தொடர்புடைய காசியிலேயே வாழ்ந்து இறக்கும் போதே பிறவிக்கடலைக் கடக்கும் வாய்ப்பை அருள வேண்டும். ஏன் என்றால் பிரமதேவர் காசியில் இறந்தால் முத்தி கிடைக்கும் எனக் கூறியுள்ளார். வேதங்களெல்லாம் காசியைப் புகழ்வதாக வியாசரும் கூறியிருக்கிறார். ரோமசர் முதலிய முனிவரும் முத்திவழங்கும் நகரம் காசியே என்று கூறியுள்ளார்கள். கண்ணபிரானும் இவ்வுண்மையை சூரியபகவானுக்கு உபதேசித்திருக்கிறார். சிவபெருமானே இத்தருமலிங்கத்தைத் தரிசித்த சிறப்பால் முக்காலங்களிலும் அரிஅயன் முனிவர் ஆகியோருக்கு நீவிர் கூறிய காசிபற்றிய உண்மைகள் எமக்கு உணரவருகின்றன. இவ்வாறு கூறிய கிளிகளைப் பார்த்த சிவபெருமான் யமதருமனைப் பார்த்து கூறுகின்றார். மூவுலகையும் அரசாள நாம் காசியில் இருக்கிறோம். ஆனந்தமாகிய கிழக்கில் தோன்றியதே காசிநகரமாகும். பிரமப்பொருளாகிய நாமே இக்காசியில் உருவம் கொண்டு விசுவலிங்கமாக உள்ளோம். காசி ஆலயத்தின் தெற்கில் உள்ள முத்திமண்டபத்தில் நாம் எவ்வேளையும் இருப்போம். இந்த முத்திமண்டபத்திலும் விரசாபீடத்திலும் கிளிகள் வாழ்ந்ததால் இனி சிவலோகத்தை அடைந்து முத்திபெறுதல் உறுதி ஆகும் என்று சிவபெருமான் கூறிய அளவில் கிளிகள் சிவவடிவம் பெற்று கயிலையை அடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோரதத்திரிதிகை கதை

இந்திராணி பல தவங்களைச் செய்த பின்னும் தன் விருப்பம் நிறைவேறாமல் சிவபெருமானை பண்ணிசையால் துதித்தாள். சிவபெருமான் வெளிப்பட்டார் இந்திராணி சிவபெருமானைப் பார்த்து இறைவனே! நான் தேவேந்திரனுக்கு மனைவியாதல் வேண்டும். விரும்பும் போது விரும்பிய அழகிய வடிவங்களை எடுத்தல் வேண்டும். கணவன் இறப்பதால் கைமையடையாமல் கற்பையும் இழக்காமல் கன்னித்தன்மையை அடைதல் வேண்டும் பின்னரும் இந்திரப்பதவிக்கு வருபவருக்கு மனைவியாதல் வேண்டும் என்று வேண்டினாள்.

இப்படிக் கேட்ட இந்திராணியைப் பார்த்து சிவபெருமான் கூறினார் பெண்ணே! இப்படியான எண்ணம் நிறைவேற நீ மனோரதத்திரிதிகை என்னும் விரதத்தை அனுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை முன் மகாலக்குமி, அருந்ததி முதலியோர் அனுட்டித்து நன்மையடைந்திருக்கிறார்கள்.

வரதமுத்திரை, அபயமுத்திரை, செபமாலை, மோதகம் ஆகியவற்றைக் கைகளில் கொண்ட ஆசார் விநாயகமூர்த்தியையும் இருபது திருக்கரங்களையுடைய கவுரியம்பிகையையும் இவ்விரதத்தால் வழிபட வேண்டும். சித்திரை மாதத்தில் வரும் திருதியை திதியில் இவ்விரதமனுட்டித்தல் வேண்டும். அதற்கு முதல்நாளில் இரவில் உணவை விலக்கி இருவரையும் வணங்கல் வேண்டும் விரததினத்தில் அதிகாலை நித்திரை விட்டெழுதல் வேண்டும். அன்று கடம்பு, நாயுருவி, பேரீந்து மாதுளை, அசோகு, அத்தி, நாவல், வெண்பிச்சி ஆகியவற்றுள் ஒன்றால் பல்துலக்கல் வேண்டும். அன்று பகல் உபவாசமாயிருந்து மாலையில் நீராடி வெள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை உடுத்தல் வேண்டும். செஞ்சந்தனம் அகில் கஸ் தூரி மஞ்சள் கலவைச் சந்தனம் மரமஞ்சள் குற்றமற்ற சிந்தூரம் தேவதாரு உரோசனை ஆகியவற்றாலான தனித்தனி சந்தனங்களால் விநாயகரையும் அபிஷேகம் செய்தல் வேண்டும்.

இவைமட்டுமன்றி இருபங்கு குங்குமப்பூ கஸ்தூரி இருபங்கு, சந்தனம் மும்மடங்கு, பச்சைக்கற்பூரம் ஒரு பங்கு ஆகிய கொண்டு செய்யப்படும் இயக்க குழம்பு எனும் சந்தனத்தாலும் அபிஷேகம் செய்தல் வேண்டும் இக்குழம்பு எல்லாக் கடவுளர்க்கும் உகப்பானதாகும்.

பின்னர் அசோகு, பாதிரி, மல்லிகை, அலரி, சண் பகம், கோங்கு, தாழை, தாமரை, நந்தியாவர்த்தம், நீரோற்பலம் முதலிய புதிய மலர்களைத் தூவி அர்ச் சித்தல் வேண்டும். பின்பு சர்க்கரையை உள்ளே வைத் துச் செய்த அடை ஏலம் உழுந்து சேர்த்து நெய்யி னால் செய்த பலகார வகைகள் போன்றவற்றை நிவே தித்தல் வேண்டும். அருக்கியம் முதலிய சகல அங்கங் களுடனும் பூசை புரிந்த பின்னர் இயன்ற தானங்களு டன் உணவும் அந்தணர்க்கு வழங்க வேண்டும். இவ் வாறு மாதந்தோறும் விரதமனுட்டித்த பின் அடுத்த சித்திரைத் திருதியையில் விரத நிறைவை (விரத உத்தி யானத்தைச்) செய்ய வேண்டும்.

மண்டபமமைத்து சாமவேதத்தினால் ஓமம் செய்ய வேண்டும் பின் விரதபலனை அருளும்படி அம்பிகையை யும் விநாயகரையும் தனித்தனி மூன்று முறை பிரார்த் திக்க வேண்டும். பின் விரதத்திற்கு குருவாக இருந்த ஆசாரியனைப் பூசைசெய்ய வேண்டும் அவ்வாசாரிய ருக்கு குடை பாதுகை கண்ணாடி பாற்பசு முதலிய நல்க வேண்டும். அதன் பின்னர் பன்னிரு கன்னியருக் கும் சிறுவருக்கும் எண்ணெய் முழுக்கு புத்தாடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு முதலியன வழங்கியபின் உறவினருடன் உண வருந்தலாகிய பாரணம் பண்ணவேண்டும்.

இப்படியான விரதத்தை அந்தணர் நோற்பில் பல கலை தேர்வர், அரசர் நோற்பில் உலகமுழுதாள்வர் வணிகர் நோற்பில் அளவற்ற வளம் பெறுவர். பின்னவர் ஆற்றில் தம்மனத்தில் விரும்பிய பெறுவர் பெண்கள் கணவரைப் பெறுவர் ஆண்கள் நல்ல மனைவியரை பெறுவர் குடும்பஸ்தர் நற்புதல்வரைப்பெறுவர்.

## தூர்த்தமன் கதை

இந்திரன் விருத்திரா சூரனைக் கொன்ற பழியை நீக்கும் உபாயம் சொல்லும்படி தேவகுருவைக் கேட்டான். காசிக்குச் சென்று தவமியற்றும்படி வியாழ பகவான் கூறினார். இந்திரன் காசியை அடைந்து கங்கையில் நீராடித் தருமேசலிங்கத்தை வணங்கித் தவம் செய்தான். சிவபெருமான் தருமவாவியில் நீராடும்படி இந்திரனுக்குப் பணித்தார். அப்படியே நீராட இந்திரனுக்கு உண்டான பிரககத்திதோஷம் நீங்கியது. இந்திரன் சுவர்க்கத்தை அடைந்து இந்திராணி முனிவர் முதலியோருடன் காசிக்கு வந்தான். அங்கு தன் பெயரால் ஒருலிங்கம் தாபித்தான். இந்திராணியும் தன் பெயரால் ஒரு சிவலிங்கம் தாபித்தாள். அத்திரி முதலான முனிவரும் திக்குப் பாலகரும் தம் தம் பெயரால் சிவலிங்கங்கள் தாபித்தனர்.

விந்தமலைக்குச் சமீபமாக கதம்பசிகரம் என்று ஒரு நாடு உளது. அதனை தமணன் என்பவன் அரசு புரிந்தான். அவன் மகன் பெயர் தூர்த்தமன் என்பது. தூர்த்தமன் முடிசூடியபின் அற்பர் புத்தி கேட்டும் பிறர் மனைவிரும்பியும் சிவவழிபாடு இன்றியும் கொடியவனாய் இருந்தான். தன் குடிகளைக் கொடுமைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி பொருள் திரட்டினான் கற்றவரைத் தண்டித்துக் கல்லாதவரை சன்மானித்தான். தூர்த்தமன் ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். காட்டில் திசை தெரியாதலைந்து காசியின் சமீபமாகச் சென்று சேர்ந்தான். காசியில் கங்காநதியில் பொருந்திய காற்று தூர்த்தமன் இருந்த இடத்தில் வீசியதால் அவனது கொடிய பாவங்கள் நீங்கின அவன் கண்களுக்குத் தருமேசலிங்கத்தின் ஆலயம் தெரிந்தது. பாவம் நீங்கிய நிலையில் அவ்வாலயத்தைத் தூர்த்தமன் வணங்கினான் அவ்வாலயத்திலுள்ள தருமபீடத்தைத் தரிசித்ததினால் தூர்த்தமனுக்கு நல்லறிவு உண்டானது. நல்லறிவு பெற்ற தூர்த்தமன் தன் நாட்டை அடைந்து தன் மகனுக்கு முடிசூட்டினான் பின் அந்தணர்க்கு அளவற்ற தானங்கள் செய்தவனாய்க் காசியை அடைந்தான். அங்கு தருமேசலிங்கத்தை வணங்கிக் கொண்டிருந்து தன் வாழ்நாள் முடிய பேரின்ப நிலையை அடைந்தான்.

## கங்காளகேது வதை

முற்காலத்தில் மித்திரசித்து என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் ஏழு உலகங்களையும் ஆளும் ஆற்றல் உடையவன் அவன் இலக்குமி மணாளரும் காத்தற்கடவுளுமாகிய திருமாலிடம் அன்பு பூண்டவன் மித்திரசித்துவின் நாட்டிலுள்ளவரும் கண்ண மாதவ முகுந்த, கேசவ, அச்சுத எனக் கூறித் திருமாலை வணங்கும் இயல்புடையவர்கள் மித்திரசித்துவின் நாட்டில் ஏகாதசி தினத்தில் பசுக்கன்றுகள்கூடத் தம் தாய் முலை உண்பதில்லை. மித்திரசித்துவும் அவன் நாட்டு மக்களும் தூய்மையுடன் வாழும் காலத்தில் ஒருநாள் அவன் அரண்மனைக்கு நாரத முனிவர் சென்றார். மன்னன் நாரதரை உபசரித்தான். நாரதர் அவனை நோக்கி ஒரு செய்தி கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தருவ அரசன் ஒருவனுக்கு மகளாக மலையகந்தினி என்பவள் இருக்கிறாள். அவளைக் கங்காளகேது என்னும் அவுணன் கவர்ந்து சென்று தன் பாதாள உலகில் சிறை வைத்துள்ளான். நான் ஆடகேசுரனைப் பணிந்து பாடிக்கொண்டு செல்லும்போது அவளிருக்கும் இடத்துக்குச் சென்றேன். மலையகந்தினி என்னிடம் முனிவரே! கந்தமாதனமலையில் மகிழ்ச்சியோடிருந்த போது கங்காளகேது என்னைச் சிறைப்படுத்தியுள்ளான். இவன் கையிலுள்ள சூலாயுதத்தாலேயே இவனைக் கொல்லமுடியும் ஒருமுறை அம்பிகை எனக்கு அருள் புரிகையில் திருமாலிடம் தூயபக்தியுள்ளவன் என்னைத் திருமணம் செய்வான் என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் வந்தால் இவனிடம் இருக்கும் சூலாயுதத்தை நான் எடுத்து கொடுப்பேன் என்று கூறியுள்ளாள். ஆதலால் மித்திரசித்துவே நீ சென்று அவ்வசுரனைக் கொன்று அவளை மணம் செய்க என்றார். அவள் இருக்கும் இடத்திற்கு எவ்வாறு செல்வது என்று மித்திரகேது கேட்டான்.

கடல்வழியாக செல்லும் முறையைக் கூறிய நாரதர் பூரணை நாளில் செல்லும்படி கூறிச்சென்றார். மித்திரகேது அப்படியே சென்று மலையகந்தினியைக் கண்டான். அவள் இவனை அறிந்து அவ்வசுரன் நித்திரை செய்யும் போது அச்சூலாயுதத்தை எடுத்துக் கொடுத்தாள் உடனே அவ்வரசன் சங்காளகேதுவை சண்டைக்கு அழைத்தான் இருவருக்கும் சண்டை உண்டானது. கடும் சண்டையின் பின் அச்சூலத்தால் அசுரன் இறந்தான். அப்போது நாரதர் அங்கு சென்று இருவருக்கும் திருமணம் செய்து அவர்களைக் காசிக்குச் செல்லும்படி பணித்தார். மித்திரசித்துவும் மலையகந்தினியும் காசிக்குச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரேசன் சிறப்பு

மித்திரசித்துவும் மலையகந்தினியும் காசியில் வாழ்ந்தார்கள். ஒருநாள் மலையகந்தினி கணவனை வணங்கி அபீட்டதிருதிகை என்னும் விரதமிருக்க அனுமதி கேட்டாள். அபீட்டதிருதிகை விரதம் எவ்வாறு அனுட்டிப்பது என்று மித்திரசித்து கேட்டான்.

மார்கழி மாதத்து வளர்பிறைக் காலத்து மூன்றாம் திதியில் உணவை ஒழித்து இவ்விரதம் அனுட்டிக்க வேண்டும். நிறைகுடம் வைத்த பின்னர் செப்புக்கிண்ணத்தில் வெண்மையான பச்சரிசியை நிரப்ப வேண்டும் அக்கிண்ணத்தைப் பட்டாடையால் சுற்ற வேண்டும். அதன் மேல் முருகனுக்கு பாலுட்டுவது போன்ற உமையின் வடிவத்தைப் பொன்னால் அமைத்து வைக்க வேண்டும். அந்த அம்பிகையை சந்தனத்தால் அபிஷேகம் செய்து தூபம், தீபம், நிவேதனம் இனிய பழவகை முதலிய கொண்டு பூசிக்க வேண்டும். அன்று இரவு நித்திரை விழிக்க வேண்டும். ஒருமுழ அகல நீளமுடைய ஓமகுண்டத்தில் நெய்யிலாதல், தேனிலாதல் தோய்த்த ஆயிரம் தாமரைப் பூக்களை சாமவேத மந்திரத்தால் ஓமம் செய்தல் வேண்டும்.

கன்று உடைய நான்கு பாற்பசுக்களை பொன்னாலும் தாமரைமலராலும் அலங்கரித்து குருவுக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். சிவபெருமானையும் நன்கு தியானித்து புத்திரவரம் கேட்க வேண்டும். பாலும் சர்க்கரையும் கூட்டி அமைத்த உணவை ஆயிரம் அந்தணர்க்கு ஊட்ட வேண்டும். அந்தணர்க்கு வழங்கியதன் மீதியை பாரணையாக உண்ணவேண்டும். என்று விரத நியமத்தைக் கேட்ட மன்னன்மனைவியுடன் முறைப்படி அபீட்டதிருதிகை விரதத்தை அனுட்டித்தான். விரதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் போது காட்சி கொடுத்த அம்பிகையிடம் பிறந் தவுடன் சுவர்க்கம் சென்று மீளும் ஆற்றலும் அழகும் சிவபக்தியுமுடைய புத்திரன் வேண்டும் என இருவரும் பிரார்த்தித்தனர். அப்படியே அம்பிகை கொடுத்த வரத் தின்படி மலையகந்தினி கருப்பமுற்று மூல நட்சத்திரத் தில் ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தாள்.

சோதிடர் அப்பிள்ளையின் சாதகத்தைக் கணித்து இப்பிள்ளை வீட்டிலிருக்குமானால் தந்தை இறப்பான். என்று பலன் கூறினர். அது கேட்ட தாய் கவலைப் பட்டவளாய் தன் தோழியரை நோக்கி காசியில் உள்ள பஞ்சமுத்திரை எனும் பீடத்திலுள்ள விகடை என் னும் சத்தியிடம் பிள்ளையைச் சேர்ப்பிக்கும்படி கூறி னாள். தோழியரும் உடனே அச்சத்தி விரும்புபவற்றை அர்ப்பணம் செய்து அப்பிள்ளையையும் அங்கு வைத்து மீண்டனர். விகடை அப்பிள்ளையை யோகினிகளிடம் கொடுத்து சுவர்க்கத்திலுள்ள சப்த மாதர்களிடம் அப் பிள்ளை பற்றிக் கேட்டுவரும்படி ஏவினாள். அவர்கள் அப்பிள்ளையுடன் சுவர்க்கம் சென்றனர். அங்கு சப்த மாதர்கள் அப்பிள்ளையைப் பார்த்து அதன் இலக்க ணங்களை அவதானித்து இப்பிள்ளை பூமி முழுவதை யும் ஆளும் அரசனாவன் இவனைப் முன்பிருந்த பீடத் தில் சேர்த்து விடுங்கள் என்றனர். அவர்களும் அப் படியே செய்தனர். அழகில் சிறந்த மன்மதன் போல் அவன் வளர்ந்தான். பின் காசியிலேயே அரியதவத்தை மேற்கொண்டான். அவன் தவத்திற்கிரங்கி சிவபெரு மான் வெளிப்பட்டார் அவன் வணங்கியவாறு பெரு மானே நான் பூசித்த இச்சிவலிங்கத்தில் எக்காலமும் விசேடமாக எழுந்தருளியிருக்க வேண்டும் என்று வேண்டினான்.

இதில் நான் எப்போதும் இருப்பேன் இதன் பெய ரும் வீரேசலிங்கம் என்று எல்லோராலும் வழங்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலான தீர்த்தங்கள் பொருந்திய காசியில் உள்ள சிவலிங்கங்களுள் இது மேலானதாக விளங்கும். அன்பனே! நீ பூமி முழுவதையும் நீண்டகாலம் அரசுபுரிந்த பின்னர் என்னிடத்திலே ஐக்கியமாவாய் என்று அருளினார். சிவபெருமானின் அருள் பெற்ற வீரேசன் காசியில் உள்ள தீர்த்தங்களின் மகிமைகளை உபதேசிக்கும்படி கேட்க சிவபெருமானும் அப்படியே அருள் புரிந்தார்.

## துர்வாசர் வரம் பெற்றமை

ஒருமுறை காசியின் சிறப்பை வியந்தபடி துர்வாச முனிவர் காசியை அடைந்தார். அங்கு ஒரு தீர்த்தத்தையும் ஆலயத்தையும் அமைத்து அரியதவத்தை மேற்கொண்டார். ஆயிரம் தினம் தவம் செய்தும் சிவபெருமான் வெளிப்படாமையால் துர்வாசருக்குக் காசியைச் சபிக்க வேண்டும் எனக் கோபம் உண்டானது. இப்படியான துர்வாசரைத் தண்டிக்க வேண்டும் என்று காசியைக் காவல் புரியும் சிவகணங்கள் கோபத்துடன் தம் கைகளை ஓங்கின உடனே சிவபெருமான் சிவகணங்களைத் தடுத்துவிட்டுச் சிரித்தவாறு அச்சிவலிங்கத்தினின்று வெளிப்பட்டார். அதனால் அந்தலிங்கத்திற்கு நகைலிங்கம் என்று பெயரேற்பட்டது. சிவபெருமான் துர்வாசரை நோக்கி முனிவரே நீர் காசியைக் கோபிக்க வேண்டாம் விரும்பிய வரத்தைக்கேளும் என்றார். துர்வாசர் தான் காசியைக் கோபித்ததற்காக மிகவும் பயந்து பெருமானே இப்படிக் கோபித்ததாலுண்டான குற்றத்தைப் போக்கியருள்க எனவேண்டினார். சிவபெருமான் துர்வாசரே! நீர் அமைத்த இச்சிவலிங்கத்திற்கு காமலிங்கம் என்ற பெயரும் நீர் அமைத்த தீர்த்தத்திற்கு காமமடு என்னும் பெயரும் விளங்குக என்று அருள் புரிந்தார். சனிப்பிரதோஷ தினத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமமடுவில் நீராடித் காமலிங்கத்தைத் தரிசித்தால் சிவபெருமானின் திருவடிப்பேறு எளிதில் கிடைக்கும்.

## விசுவகன்மேசலிங்கம் தோன்றியமை

பிரதேவருக்கு ஒப்பான துவட்டா என்பவரின் பிள்ளை ஒருவன் இருந்தான். இந்திரனின் அறிவும் மிகுந்த சாஸ்திரப் பயிற்சியும் உடைய அவன் ஒரு குருவை அடைந்து கலைபயின்றான். ஒரு நாள் அக்குரு துவட்டாவின் மகனைப் பார்த்து மண்ணால் செய்த தாயும் அழகுடைய தாயும் மழைபனிகளால் துன்ப முண்டாக்காததாயும் சூரியசந்திரரின்றியே ஒளியுடைய தாயும் ஆற்றலுள்ளவர் வியக்கத்தக்கதாயும் உள்ள ஒரு வீடு கட்டுக என்று தன் சீடனைப் பரீட்சிப்பது போல் கூறினார்.

அக்குருவின் மனைவி அவனைப் பார்த்து குளிர் காலத்தில் கணகணப்பாயும் வெப்ப காலத்தில் குளிர்ச்சி யாயும் விளங்கத்தக்க ஒருசட்டை செய்துதருகஎன்றாள்.

நிலத்தில் நடக்கவும் நீரில் மிதக்கவும் சேற்றில் புதையாமலும் பயன்படக்கூடிய ஒரு பாதுகை செய்து தருக என்று குருவின் மகன் கேட்டான்.

கையில் வளையலாயும் அரையில் மேகலையாயும் அணியத்தக்க முத்தணியினையும் நெருப்பின்றிச் சமைக் கக் கூடிய பாத்திரத்தையும் ஒரு மரத்தூணில் விளங் கும் ஒருவீட்டையும் அமைத்துத் தருக என்று அக்குரு வின் மகள் கேட்டாள்.

இவ்வாறு எல்லோராலும் கேட்கப்பட்ட அந்த இளைஞன் எவ்வாறு இவர்கள் விருப்பத்தை நிறைவு செய்வது என்ற கவலையுடன் யோசித்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது ஓர் அந்தண முனிவர் அவன் முன் தோன்றி உன் கவலைகள் காசியை அடைந்து சிவ பெருமானை வணங்கினால் மட்டுமே நீங்கும் என்று கூறினார். அந்த முனிவரோடு கூடி அவ்விளைஞன் காசியை அடைந்தான்.

அங்கு அந்த இளைஞன் கங்கையில் நீராடி ஒரு சிவலிங்கம் அமைதது மலர்தூவி வழிபட்டுத் தவம் செய்தான். அத்தவத்தைக் கண்டு சிவபெருமான் காட்சி கொடுத்து விரும்பிய வரங்களைக் கேட்குக என்றார். அவன் குருவும் மனைவி பிள்ளைகளும் கேட்டவற்றைத் தெரிவித்து எவரும் புகழத்தக்க செயல் களைச் செய்யும் ஆற்றலை அருளவேண்டும் என்று கேட்டான்.

சிவபெருமான் அவ்விளைஞனை நோக்கி பிரம தேவர் போல் எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் ஆற் றலை அருளினோம். உனக்கு விச்சுவகன்மன் என்னும் பெயர் அமைக நீ தாபித்தலிங்கமும் விசுவகன்மேச லிங்கம் என விளங்குக. இச்சிவலிங்கத்தை வழிபடு வோர் தீவினைகள் நீங்குக என்றருளினார்.

## தக்கன் வேள்வி செய்தமை

ஒருமுறை திருமால் பிரமன் முதலிய தேவருடன் தக்கன் கயிலைக்குச் சென்றான். நந்திதேவர் உத்தர வினால் அனைவரும் சிவசன்னிதானத்தை அடைந்த னர். சிவபெருமான் திருமாலுக்கு வார்த்தையினாலும் பிரமனுக்குத் தலையசைப்பினாலும் இந்திரனுக்கு புன் சிரிப்பினாலும் தேவர்களுக்கு அருட்பார்வையாலும் அருள்புரிந்தார். சிவபெருமானை வழிபட்டபின் எல் லோரும் கயிலாயத்திலிருந்து சென்றனர். கயிலாயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து செல்லும் போது தக்கன் தன்னைச் சிவபெருமான் கவுரவிக்கவில்லை என்று நிந்தித்துக் கொண்டு சென்றார்.

நஞ்சை உண்டமை கிழ எருதை வாகனமாக உடையமை யானைத்தோலை உடுத்தமை தலையோட்டில் பிச்சை எடுத்தல் எல்லாம் பழிப்புக்கு உரியன என்றான் தாய் தந்தை உறவு இல்லாமை சுடலையில் கூத்தாடல் நெற்றிக் கண்ணாக நெருப்பை வைத்திருத்தல் புலித்தோல் அணிதல் என்பன இகழத்தக்கன என்றான் குலப்பிறப்பு இன்மை பாம்பை அணிதல் சுடலைப் பொடி பூசுதல் என்பனவும் பழிப்புக்கு உரியன என்றான். சிவபெருமானைப் பிராமணன் என்பதாயின் அவர் பிராமணர் போல் ஆறுதொழில்களைச் செய்வதில்லை என்றும் அரசன் என்னலாமோ எனில் காத்தலுக்குப் பதிலாக அழித்தலையே செய்கிறார் என்றும் வணிகர் என்னலாமோ என்றால் பொருளில்லாதவராய்ப் பிட்சை எடுக்கிறார் என்றும் சூத்திரர் என்னலாமோ என்றால் சூத்திரர் செய்யக்கூடாத வேதம் ஓதுதல்செய்கிறார்என்றும்பழித்தான். பிரம்மச்சாரி என்னலாமோ என்றால் பெண்ணுடன் இருக்கிறார் என்றும் இல்லறத்தவர் என்னலாமோ என்றால் காட்டில் வாழ்கிறார் என்றும் முனிவர் என்னலாமோ என்றால் ஆயுதங்களுடன் இருக்கிறாரே என்றும் பழித்தான் பிரமதேவரின் தலையைக் கிள்ளியதால் நீதியை அறியாதவர் என்றும் பாதிப்பெண்ணாக இருத்தலால் இவரை ஆண் என்றோ பெண் என்றோ அலி என்றோ கூற முடியாது என்றான்.

ஊழிக்காலத்தில் மண்டை ஓடுகளை அணிந்து சுடலையில் ஆடுதலால் புனிதர் என்று கூறஇயலாது என்றான். என்னைக் கண்டதும் எழுந்து மரியாதை செய்யாதிருந்தமை பெரும் குற்றமாகும் என்றும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தேழு பெண்களுள் ஒரு பெண் ஆகிய ரோகி ணியை மட்டும் மதித்துப் பிறரை இகழ்ந்ததிற்காக சந் திரனைத் தண்டித்ததுபோல் தான் சிவபெருமானையும் அவமானப்படுத்தப்போவதாகக் கூறினான்.

சிவபெருமானை அவமதிக்கும் முறையில் ஒரு யாகம் செய்வதற்குத் தக்கன் தீர்மானித்தன். இந்திரன் முதலிய தேவர்க்கும், சந்திரன் காசிபன் முதலிய தன் மருகருக்கும் தான் செய்யவுள்ள யாகத்தில் பங்குபற்ற வருமாறு அழைப்பு அனுப்பினான். அழைப்பைப் பெற் றவர் தம்தம் மனைவி பிள்ளைகளுடன் தக்கனை அடைந்தனர். அனைவரையும் வரவேற்று பட்டுக்கள் பொன்னணி முதலிய வழங்கி உபசரித்தான். பின் இந் திரன் முதலிய தேவர்களுடன் சுவேதத்தீவு என்னும் இடத்தை அடைந்தான். அங்கு சிறப்புடன் இருந்த காத்தற் கடவுளாகிய திருமாலைத் தன் யாகத்திற்கு தலைவராயிருந்து காக்க வருமாறு அழைத்தான். திரு மாலும் தக்கனோடு சென்றார். யாகம் ஆரம்பமா கியது.

யாகத்தைப் பார்க்கும் காரணத்தை முன்னிட்டு தக்கனுக்குப் புத்திசொல்ல ததீசிமுனிவர் தன்னைச் சார்ந்தவர்களுடன் சென்றார். ததீசி முனிவர் சென்ற போது யாகம் வெகு சிறப்பாக ஆரம்பமாகியிருந்தது. கற்பகம் முதலிய தேவமரங்கள் வேண்டிய பொருள் களை வழங்கிக் கொண்டிருந்தன. காமதேனு யாகத் தில் சொரிய வேண்டிய புனித உணவுகளை நிரம்பக் கொடுத்துக் கொண்டிருந்தது. தக்கன் செருக்குடன் தலைமையாக இருந்தான். அவனைச்சூழ அவன் மரு கர்களும் பெண் பிள்ளைகளும் மகிழ்ச்சியுடன் இருந் தனர். ததீசிமுனிவர் இவை அனைத்தையும் பார்த்து விட்டுச் சிவபெருமான் இல்லாததால் இந்த யாகசாலை சுடுகாட்டுக்குச் சமமாயுள்ளது என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குமி மணாளரான திருமால் இருக்கக்கூடியதாக சுடு காடு என்பது பிழை என்றான். தக்கன் சிவபெருமானது சக்திகள் நான்கில் நான்காவதாகத்தான் திருமால் கூறப்படுகின்றார். திருமாலுக்கு மேலாக சிவபெருமானுக்கு மூன்று சக்திகள் சொல்லப்படுகின்றபடியால் திருமாலுச்குச் சிறப்பில்லை. இந்திரன் இந்திரனாக விளங்குவது சிவானுக்கிரகத்தால்தான் யமன் கூட சிவபெருமானுக்கு மாறாக மார்க்கண்டரின் உயிரைக்கவர இயலாது தன் உயிரை இழந்தான்.

கருத்தில்லாத பாடல், பிள்ளைகள் இல்லாத வீடு, இரக்கமற்ற உயிர் வாழ்க்கை, கணவனை இழந்த இளம் பெண், பெண் இல்லாத வீடு, ஆறு இல்லாத ஊர், இரப்பவர்க்குக் கொடாத செல்வம், வேதம் ஓதா அந்தணன், பவித்திரம் அணியாத புனித சடங்கு என்பன போலவே உயிர்க்குயிராயும் உலகிற்குத் தலைவனாகவும் உள்ள சிவபெருமான் இல்லாதவேள்வி வேள்வியாகாது என்று ததீசி முனிவர் கோபத்துடன் கூறினார். பின்னர் ததீசி முனிவர் அங்கிருந்தும் செல்ல தக்கன் யாகத்தைத் தொடர்ந்தான். அப்போது நாரத முனிவர் கயிலையை நோக்கிச் சென்றார்.

## தேவி தக்கன் வேள்விச்சாலையை அடைதல்

நாரதர் சென்றபோது சிவபெருமானும் தேவியும் சூதாடு கருவிகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். நாரதர் அவர்களை வணங்கி தக்கன் வேள்வி செய்வதை விவரமாகக் கூறினார். தக்கன் வேள்வியைப்பற்றிக் கேட்ட தேவி சிவபெருமானை வணங்கி தான் வேள்விச்சாலைக்குச் செல்ல அனுமதி கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை அவமதிக்கும் நோக்குடன் தக்கன் வேள்வி செய்வதாலும், கேட்டை நட்சத்திரமும், நவமி திதியும் சேர்ந்திருப்பது மட்டுமன்றி சனிக்கிழமையும், விதிபாத யோகமும் கூடி இருத்தலாலும் செல்ல வேண்டாம் என்று கூறினார். ஆனால் செல்ல விரும்பிய தேவி பின்னரும் சிவபிரானை வணங்கிவிட்டுப் புறப்பட்டாள். தேவியின் கணங்கள் அவரைச் சேவித்துச் சென்றன. யாகசாலையுள்ளே யாக புரோகிதர் சூழ்ந்திருப்ப பெருமையுடன் தந்தையும் தாயும் இருப்பதைக்கண்டு தேவி அவ்விடம் சென்றாள். தாய் தந்தையரை வணங்கிய அம்பிகை தன் சகோதரிகளையும் அவர்கள் கணவர் களையும் அழைத்து அன்பளிப்புகள் வழங்கி வெகுசிறப் பாகச் செய்யும் இவ் வேள்விக்கு ஏன் என்னையும் என் கணவனையும் அழைக்கவில்லை என்று கேட்டாள்.

மகளே ! உன்னில் தவறில்லை. பிரமவிட்டுணுக் களின் வார்த்தையை நம்பித் தகுதியில்லாத சிவனுக்கு நான் உன்னைத் திருமணத்தால் கொடுத்துவிட்டேன். சுடலைப்பொடி பூசியும், பாம்பை அணிந்தும், நஞ்சை உண்டும், கபாலம் ஏந்தியும், எருதை வாகனமாகக் கொண்டும் சிறுமை உள்ளவனான சிவனைப் பெருமை மிக்க யாகத்திற்கு அழைக்கலாகாது என்றே அழைக் காது விட்டேன் என்று தக்கன் கூறினான்

தக்கன் கூறியதைக் கேட்டவுடனே சிவநிந்தை செய்யும் கொடியவனால் வளர்க்கப்பட்ட உடலோடு இருத்தலாகாது என்று அவ்விடத்திலேயே தன் உடலை உதறிவிட்டு அம்பிகை இமயமலைச்சாரலை அடைந் தாள்.

அவ்வேளையை ஊழிக்காலமோ எனத் தேவர்கள் அஞ்சினர். மக்கள் நடுங்கினர். இடியும் மின்னலும் ஆகாயத்திலிருந்து உதிர்ந்தன. புயல் வீசியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகுகள் தேவர்கள் முடிமீது இருந்தன. யாகாக்கினி அணைந்தது. நெய்யால் தூய்மையாக்கப்பட்ட யாக உணவுகளை நாய்கள் இழுத்துச் சென்றன. சூரியனைப் பார்த்து நாய்கள் ஊளையிட்டன. இப்படியான துர் நிமித்தங்களைக் கண்டு திருமாலும் என்ன நிகழுமோ என அஞ்சினார். ஆனால் தக்கன் இவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாதவனாய் தொடர்ந்து யாகம் செய் யும்படி கூறினான்.

## தக்கன் வேள்வி அழிந்தமை

நாரதமுனிவர் சிவபெருமானிடம் சென்று தக்கன் சிவநிந்தை செய்தமையையும் அம்பிகை தூல உடலை விட்டுச் சூக்கும உடலுடன் இமயத்தை அடைந்ததை யும் கூறினார். அதைக்கேட்ட சிவபெருமான் கோபித் தவராய் நன்று நன்று என்று கூறித் தலையை அசைத் தார்.

அப்போது தன்முடி அண்டமுகட்டை அடையவும் எட்டுத் திசைகளிலும் புயங்கள் பொருந்தவும் தன் கண்களில் தீப்பிழம்புகள் உண்டாகவும் மிக்க கோபத் துடன் வீரபத்திரர் தோன்றினார். வீரபத்திரர் சிவ பெருமானின் திருவடிகளில் வணங்கிப் பெருமானே! நான் இப்போது என்ன செய்ய வேண்டும். உலகம் முழு வதையும் உண்டு அழிக்க வேண்டுமா. வடவாக் கினியை உண்ண வேண்டுமா, மேருவைப் பொடிபடுத்த வேண்டுமா என்று கேட்டார் சிவபெருமான் இப்படி யெல்லாம் செய்ய வேண்டாம். வேதவிரோதமாகத் தக்கன் செய்யும் வேள்வியை அழித்து அவன் தலை யையும் வெட்டுக என்று கூறியருளினார்.

உடனே வீரபத்திரர் தன் மூச்சுக் காற்றிலிருந்து பல வீரர்களைத் தோற்றுவித்தார். தன் எல்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்களிலும்தன் கணத்தவர் சூழ்ந்து பேரிகை பணகம் முதலிய வாத்தியங்கள் முழங்க பூமியும், ஆதிசேடனும் வருந்தத்தக்கதாக புறப்பட்டார். இவர்கள் செல்லும் ஆரவாரத்தைக் கேட்டுத் திருமால் முதலியோர் ஊழிக் காலம் வந்ததோ என நடுங்கினர்.

யாகசாலையை அடைந்ததும் சில வீரர் எங்கும் நெருப்புக்களை கொளுத்தினர். யாக தம்பங்களைச் சிலர் பிடுங்கினர். சிலர் தேவர்களை வதைத்தனர். சிலர் அங்கிருந்த அவி உணவுகளை உண்டனர். அங்குள்ளவர்களை அடித்தும், எறிந்தும் கொன்றனர். சிலர் யாக நெருப்பை அணைத்தனர். சிலருக்கு மூக்கையும் நாவையும் வெட்டினர் அப்போது அங்கு யாகத்தைக் கெடுக்க வந்தவர்களை எதிர்க்க இந்திரன் யுத்தம் செய்ய ஆயத்தமானான். திக்குப்பாலகர் இந்திரனுக்கு உதவியாயினர். சூரியன், வசுக்கள் ஆகியோரும் இந்திரனுடன் சண்டையிட நினைத்தனர். தேவர்கள் வீரபத்திரனின் கணங்கள்மீது ஆயுதங்களை ஏவினர். அதைக்கண்டு வீரபத்திரர் கணங்கள் கைகளைத் தட்டிக் கோபித்தன. அப்போது இந்திரன் தன் குலிசத்தை ஏவினான். அது நந்திதேவரின் கணிச்சியால் அழிந்து சா(ம்)பரானது வில் யுத்தத்திற்கு இந்திரன் முயல வீரபத்திரர் கணத்தவர் அவன் யானையைப் பிடித்து அடித்தனர். உடனே இந்திரன் குயில் வடிவத்துடன் தப்பி ஓட முயன்றான். உடனே வீர பத்திரன் என்னும் கணநாதன் அக்குயிலைப் பிடித்து அதன் இறக்கைகளைப் பிடுங்கிவிட்டார். ஒரு கூளி அக்கினி தேவனின் கன்னத்தில் அடித்தது சண்டன் என்னும் வீரபத்திர கணநாதன் யமனின் எருமைக் கொம்புகளை முறித்து யமனின் முடி துகளாக அடித்தான். மணிமான் என்னும் கணநாதன் குபேரனையும், அட்டவசுக்களையும், அசுவினி தேவரையும் தன் கதையினால் அடித்து வலிகெடச் செய்தான். காளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி, இலக்குமி, சரஸ்வதி ஆகியோரின் மூக்குகளை அரிந்து தண்டித்தான். இந்திராணியின் மார்புகளையும் வெட்டினான். தக்கன் மனைவியின் கூந்தலையும் வெட்டினான். சிலர் அங்கிருந்த முனிவர்களை தூண்களில் கட்டி அடித்தனர். அப்போது சிலர் வீரபத்திரர் முதலியோரைத் தொழுதனர். சிலர் புலம்பிக் கொண்டு நின்றனர். அந்த யாகசாலையில் ஒருவரும் தண்டனைக்குத் தப்பவில்லை.

## தக்கன் வதை

வீரபத்திரர் முன்பாக வந்த படைகள் இவ்வாறு அழிவைச் செய்தபோது வீரபத்திரர் யாகசாலையை அடைந்தார். தக்கனையும் தப்பியுள்ளவர்களையும் பிடித்து வரும்படி அங்கு நின்றவர்களிடம் வீரபத்திரர் கூறினார். தக்கனைத் தேடிச் சென்ற வீரர் யாகத் தலைவன் மான் வடிவுகொண்டோடுவதைக் கண்டு பிடித்து வீரபத்திரரிடம் கொடுத்தனர். இந்திரன் முதலியோர் இறந்துவிட்டனர். திருமால் எங்கோ ஓடி ஒழித்துவிட்டார் என்றனர். வீரபத்திரர் திருமாலைத் தேடிச்சென்று கண்டார். ஆயிரம் பூவில் ஒன்று குறையக் கண்ணை இடந்து பூசித்து சிவபெருமானிடம் சக்கரமும் பிறசெல்வமும் பெற்றவரே இப்போது தக்கனை என்னிடம் விட்டுப் பணியப் போகின்றீரோ? இறக்கப் போகின்றீரோ? எதிர்க்கப் போகின்றீரோ? என்று வீரபத்திரர் கேட்டார். சண்டைக்கு ஆயத்தம் என்று கூறித் திருமால் கருடன்மீது ஏறினார். திருமால் அம்புகளைப் பொழிவது கண்ட வீரபத்திரர் அவுணருடன் சண்டையிடுவதுபோல் எளிதல்ல இச் சண்டை என்று கூறியவாறு ஒரு கதாயுதத்தை சுழற்றி அடித்தார். அந்த அடி தன்மீது படாதபடி விலகிய திருமால் தன் கதையால் வீரபத்திரர் கதையை அடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாக்கினார். பின்னரும் திருமால் அம்புகளைச் செலுத்த வீரபத்திரர் தன் கதையால் அவ்வில்லை அழித்தார். அந்த அடியால் வில்லை வைத்திருந்த திருமாலின் கையும் முறிந்தது பின்னர் திருமால் விடுத்த சக்கராயுதம் ஒளிபரப்பிக்கொண்டு சென்று வீரபத்திரர் மார்பில் ஒரு மாலைபோல் அமர்ந்தது. பின்னர் திருமால் தன் வாளால் எதிர்த்தார். அது கண்டு வீரபத்திரர் கடுமையாக உறுக்க திருமால் அச்சம் கொண்டு வாடி மயங்கி வீழ்ந்தார். அப்போது திருமாலின் தலையை வெட்ட வீரபத்திரர் நினைத்த போது அப்படிச் செய்ய வேண்டாம் என அசரீரிவாக்குத் தடுத்தது. உடனே திருமாலின் தலையை வெட்டும் எண்ணத்தை விடுத்து வீரபத்திரர் அங்கு நின்ற தக்கனைப் பார்த்து உன் யாகம் நிறைவெய்தியதோ வெனப் பரிகாசமாகக் கேட்டுக்கொண்டு தன்கையினால் அடித்த அளவில் தக்கன் தலை முறிந்து பறந்தது. அத் தலையை அங்குள்ள நெருப்பில் எறிந்த வீரபத்திரர் அங்கு நின்ற அனைவரையும் கொன்றபின் ஊழிக் காலத்தில் சிவபெருமான் கூத்தாடுவதுபோல் கூத்தாடினார். பிரமதேவர் அந்தக் கூத்தைக் கண்டு அஞ்சினார். வீரபத்திரர் தொடர்ந்து கூத்தாடினால் உலகம் முழுதும் அழியும் என்று நினைத்தவராய் உடனே கயிலைக்குச் சென்று சிவபெருமானிடம் கூறினார். சிவபெருமான் பிரமதேவருடன் யாகசாலைக்குச் சென்றார். உடனே வீரபத்திரரும் பிறரும் சிவபெருமானை வணங்கினர். சிவபெருமான் இறந்த அனைவரையும் எழும்பும்படி கூறினார். வீரபத்திரர் அனைவரையும் உயிர்ப்பித்தார் தக்கன் தலையின்றி உயிர் பெற்றான். ஒரு ஆட்டுத் தலையை அவனுக்கு வைத்தனர். சிவபெருமானை இகழ்வோர் மிருகமாவர் என்பதுபோல் தக்கன் தோற்றம் இருந்தது. திருமால் முதலிய தேவர்கள் தம்மை மன்னிக்கும்படி சிவபெருமானை வணங்கினர். வணங்கிய தேவர்களுக்கு அருள் புரிந்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் இமயமலையை அடைந்தார். பிரமதேவர் தக்கனைப் பார்த்து நீ சிவனை நிந்தித்தபாவம் தீர காசியில் சிவலிங்கம் அமைத்து வழிபடுக என்று கூறினார். தக்கன் காசியை அடைந்து சிவலிங்கம் அமைத்துப் பூசித்தான். இமயமலையரசன் மகளாகத் தோன்றிய அம்பிகையை திருமணம் செய்தபின் சிவபெருமான் காசியை அடைந்தார். தக்கன் சிவபூசை செய்துகொண்டிருந்ததைக் கண்டு அவன்முன் வெளிப்பட்டு என்னவரம் வேண்டும் என்று கேட்டார்.

துறக்கமீது உறைகினும் நரகில் தோயினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும் நின்னடி
மறக்கொணா நல்வரம் வழங்குவாய் என்றான்.

அப்படியே அருளிய சிவபெருமான் உன் வாழ்நாள் முடிவில் என்பதம் சேர்க என்றும் நீ அமைத்த லிங்கம் உன் பெயரால் எவராலும் வணங்கப்படுக என்றும் அருள் புரிந்தார்.

## பார்வதீசன் கதை

தக்கனுக்கு அருள் செய்த பின்னர் சிவபெருமானை அம்பிகை வணங்கினார். சிவபெருமானே காசியை ஆனந்தகானம் என்று முன்பு கூறியுள்ளீர். ஆனந்தகானம் என்பதன் உண்மையை எனக்கு உணர்த்த வேண்டும் என்று கேட்டாள். சிவபெருமான் அம்பிகையை நோக்கி காசியின் ஐந்து குரோச எல்லையுள் எங்கும் அருள்விளக்கும் உள்ள சிவலிங்கங்கள் விளங்குவதால் அங்கு எள் தூவுதல் ( எள்ளால் பிதிர்க்கடன் செய்தல் ) ஆகாது. இக்கருத்தே காசி முழுவதும் சிவசன்னிதானமாக சிவானந்த நிலையமாதலை உணர்த்தும் என்று கூறினார். அது கேட்ட அம்பிகை மிக்க மகிழ்ச்சியுடன் தானும் ஒரு சிவலிங்கம் அமைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசித்தாள். அச் சிவலிங்கம் பார்வதீசலிங்கம் என்னும் பெயருடன் விளங்குகின்றது. பார்வதீசலிங்கத்தை வழி படுபவர்களை தேவர்களே வணங்குவர்.

## கங்கேசன் வரலாறு

பூமி முழுவதையும் அரசு புரிந்த பகீரதனின் அரிய தவப்பயனால் கங்கை பூமிக்கு வந்தது. பூமிக்கு வந்த கங்கை காசியை அடைந்து மணிகன்னிகை எனும் குளத்தில் கலந்தது. அப்படிக் கலந்தவுடனே காசியின் மகிமையைக் கங்காதேவி அறிந்து கொண்டாள். உடனே கங்காதேவி காசியில் ஒரு சிவலிங்கம் தாபித்துப் பூசித்தாள். அவ்வாறு கங்காதேவியினால் காசியில் பூசிக்கப்பட்ட இலிங்கத்திற்கு கங்கேசலிங்கம் என்பது பெயராகும். இதை மலர் தூவி வழிபடுபவர் பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவர். ஆனால் பாவம் நிறைந்த கலியுகத்தில் அந்த லிங்கம் எல்லோருக்கும் தென்படாது. கங்கேச லிங்கத்தை அரசர் பூசித்தால் உலகமுழுதாள்வர். அந்தணர் முதலிய நால்வருணத்தவரும் கங்கேசலிங்கக் கதையினைக் கேட்பதாலேயே பேறடைவர்.

## நருமதேசன் வரலாறு

ஒருமுறை மாக்கண்டேய முனிவர் சிவபெருமானை வணங்கிப் புண்ணியம் மிக்க ஆறுகள் எவை? என்று கேட்டார். அதற்குச் சிவபெருமான் பின்வருமாறு கூறினார்

கங்கை, சரஸ்வதி, யமுனை, நருமதை ஆகிய நான்குமே புனிதம் மிக்க ஆறுகளாகும். கங்கை இருக்கு வேத வடிவமாகும். யமுனை யசுர்வேத வடிவமாகும். சரஸ்வதிநதி சாமவேத வடிவமாகும், நர்மதைநதி அதர்வண வேதத்தின் வடிவமாகும். இந்த நான்கு நதிகளிலுள்ளும் சிறந்தது கங்கா நதியேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கா நதியின் பெருமையைத் தானும் பெறக்கருதி நருமதை பிரமதேவரைக் குறித்துத் தவம் செய்தது. பிரமதேவர் வெளிப்பட்டபோது நருமதை தன் விருப் பத்தைக் கூறியது. பிரமதேவர் நருமதையை நோக்கி சிவபெருமானுக்கு நிகரான தேவரும் காசிக்கு நிகரான தலமும் திருமாலுக்கு நிகரான புருடோத்தமனும் வேறு இல்லாமைபோலக் கங்கைக்கு நிகராக வேறு ஆறு இருக்க இயலாது என்று கூறினார். இதைக்கேட்ட நருமதை தன் எண்ணம் நிறைவேற வேண்டும் என் பதற்காகக் காசியை அடைந்தது. அங்கே பிப்பில தீர்த் தத்தின் அருகில் ஒரு சிவலிங்கம் தாபித்து தவம் செய் தது. சிவபெருமான் தோன்றினார். நருமதை தன் விருப்பத்தைத் தெரிவித்தது. சிவபெருமான் நரும தையை நோக்கி கங்கையில் ஒருமுறை நீராடினாலும் யமுனையில் ஏழுநாள் நீராடினாலும் சரஸ்வதியில் மூன்று நாள் நீராடினாலும் தீவினை நீங்கும் ஆனால் உன்னை (நருமதையைக்) கண்டவுடனேயே தீவினை நீங்கும்படியான தன்மையையும் உன்னிடத்தில் உள்ள கற்கள் எல்லாம் சிவலிங்கமாகும் தன்மையையும் உன் னால் இங்கு பூசிக்கப்பட்ட இலிங்கம் நருமதேசலிங்கம் என்னும் பெயருடன் விளங்கவும் நருமதேசலிங்கத்தை வழிபடுபவரை யமனும் வணங்கும் தன்மையையும் வர மாக அருளினோம் என்று கூறியருளினார். இவ்வா றாக சிவபெருமானிடம் கேட்டவரலாற்றை மார்க்கண் டேயமுனிவர் சிறந்த முனிவர்களுக்குக் கூறினார்.

## சதீச்சுரன் வரலாறு

ஒரு காலத்தில் காசியிலே பிரமதேவர் அரியதவத் தைப் புரிந்தார். தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் காட்சி கொடுத்தார். பிரமதேவர் சிவபெருமானை வணங்கி என் படைப்புத் தொழில் சிறக்கும் பொருட்டு என் நெற்றியிலே நீங்கள் தோற்றப்பட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் தன் மகனாகிய தக்கனுக்கு மகளாக அம்பிகை தோன்றவேண்டும் என்றும் வரம் கேட்டார். அப்படியே சிவபெருமான் அருள் புரிந்தார். பிரமதேவர் தியானம் செய்தபோது பிரமதேவரின் நெற்றியிலிருந்து அம்பிகை யுடன் கூடியவராக சிவபெருமான் வெளிப்பட்டார். உருத்திரனின் தன்மையுடன் வெளிப்பட்ட அவரைக் கண்ட அளவில் தன் படைப்புத் தொழிலில் ஆணும் பெண்ணுமாக அமையவேண்டும் என்பதையே சிவபெரு மானின் வெளிப்பாடு உணர்த்தியதாகக் கருதி பிரம தேவர் தன் தொழிலைச் சிறப்பாகச் செய்தார்.

பிரமனுக்கு சிவபெருமான் அருளிய வண்ணம் தக் கன் மகளாக அம்பிகை தோன்றினார். அப்படித் தோன்றிய பின் அம்பிகை காசியில் சிவலிங்கம் தாபித்து வழிபட்டாள். அச்சிவலிங்கத்தில் சிவபெருமான் வெளிப் பட்டு பெண்ணே! இச்சிவலிங்கம் உன் பெயரால் சதீச் சுரலிங்கம் என்னும் பெயருடன் விளங்கட்டும் இந்த லிங்கத்தை வழிபடுபவர் மனவிருப்பம் எளிதில் நிறை வேறும் இன்றிலிருந்து எட்டுநாளில் நம் திருமணம் நிகழும் என்று அருள் புரிந்தார். அப்படியே அம்பா ளுக்கும் சுவாமிக்கும் திருமணம் நிகழ்ந்தது.

## அமுதேசன் முதலிய லிங்கங்களின் வரலாறு

முந்திய யுகத்தில் சனாரு என்னும் பெயருடைய ஒரு முனிவர் இருந்தார். அவர் சிவபத்தி மிக்கவர். அவருக்கு உபசம்பனி என்னும் பெயருடைய ஒருமகன் இருந்தார். காட்டுவழியில் சென்றபோது ஒரு பாம்பு கடித்து உபசம்பனி இறந்துவிட்டான். இதைக் கண்ட வர் உபசம்பனியின் உடலை தந்தையிடம் கொண்டு சென்று கொடுத்தனர். முனிவர் தன் மகனின் உட லைக் காசிக்கு எடுத்துச் சென்றார். சுவர்க்கத்துவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் இடத்தில் மகன் உடலை வைத்துவிட்டு நஞ்சினால் இறந்த மகனின் உடலை அக்கினி தேவனிடம் கொடுத்து இறுதிக்கடன் செய்வது தவறல்லவா? இம் மகனுக்கு எவ்வாறு இறுதிக்கடன் செய்வது என்று கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தார். அப்போது நித்திரைவிட்டெழுவது போல் மகன் உயிர்பெற்றெழுந்தான். இதென்ன அதிசயம் என்று பார்த்த பொழுது இறந்த எறும்பொன்றை வேறொரு எறும்பு எடுத்துச் சென்றது அவ்விடத்தை அடைந்ததும் இறந்த எறும்பு உயிர் பெற்றது. இறந்தவர் உயிர்பெறுவது இந்த இட மகிமை போலும் என நினைத்து அவ்விடத்து மண்ணை சனாரு முனிவர் கையில் எடுத்துப் பார்த்தார். அப்போது மண்ணின் கீழ் ஒரு சிவலிங்கம் ஒளியுடன் இருப்பது தெரிந்தது. அதைக்கண்ட முனிவர் அதுவே அமுதேசலிங்கம் என்று கருதினார். அன்றுமுதல் எல்லோரும் அந்த லிங்கத்தை அமுதேசலிங்கம் என்று வணங்கினர். மிகுந்த பாவச்செயலை உடைய கலியுகத்தில் வாழ்பவரின் தூய்மைக் குறைவு காரணமாக கலியுகத்தில் அமுதேசலிங்கம் தோன்றாது.

காசியில் முத்தித்துவாரம் எனும் இடத்தில் கருணேசலிங்கம் என்று ஒரு லிங்கம் உளது. திங்கட்கிழமைகளில் விரதமாக ஒருவேளை மட்டும் உண்ணும் நியமத்துடன் கருணேசலிங்கத்தை வாசனைமிக்க பத்திர புஷ்பங்களால் அருச்சித்துவந்தால் மன விருப்பம் நிறைவேறும். முத்தித்துவாரத்தில் உள்ள முத்தித்துவாரேசலிங்கத்தைத் தொழுபவர் முத்தியடைவர்.

காசியில் உள்ள சொர்க்கத் துவாரேசலிங்கத்தை வழிபடுபவர் சுவர்க்கம் அடைவர். காசியில் சக்கர வாவிக் கரையில் விளங்கும் சோதிரூபேசலிங்கத்தை வழிபடுபவர் ஒளிமயமான உடலைப் பெறுவர். தக்கேசன் முதலியஎட்டும் ஓங்காரேசன் முதலிய பதினான்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலேச்சுரன் முதலிய பதினான்கும் மிகச்சிறப் புடையன என்பர். இத்தகைய இலிங்கங்கள் இருப்ப தாலும் காசிக்கு முத்திநகர் என்றபெயர் விளங்குகின் றது.

## வியாசர் கையும் நாவும் இழந்தமை

வியாச முனிவர் ஒருமுறை சவுனகர் முதலிய நாற் பத்தெண்ணாயிரம் முனிவர் உறையும் நைமிசாரண் யத்திற்கு சென்றார். அங்குள்ள முனிவர்கள் வியாச முனிவரை வரவேற்று உபசாரங்கள் செய்து வணங்கினர் பின் அம்முனிவர்கள் வியாசரை நோக்கி உலகில் சிவ பெருமானுக்கு நிகரான கடவுள் உளரோ என்று கேட் டனர். அப்போது வியாசர் உலகில் நாராயணரே மேலான பிரமப்பொருளாவார் என்று கூறினார். இதைக்கேட்ட முனிவர்கள் வியாசர் கல்விச் செருக் கால் மதிமயங்கிக் கூறுகின்றார் எனக் கருதினர். அவர்கள் வியாசரை நோக்கி நீர் கூறும் இக்கருத்தை காசியில் வந்து கூறமுடியுமா? என்று கேட்டனர். வியாசர் சம்மதித்தார். எல்லோரும் காசியை அடைந் தனர்.

காசியிலே பஞ்சநத தீர்த்தத்தில் தீர்த்தமாடி அதன் கரையில் விளங்கும் நாராயணரைத் துதித்து தன்னைச்சூழப் பாகவதர் நிற்கும்படியாக எட்டுத் திசையில் உள்ளவரும் கேளுங்கள் என்று அழைத்துத் தன் கைகளை உயர்த்திக் கடவுளாவார் ஸ்ரீமந்நாரா யணனே என்று கூறினார்.

உயிர்க்குயிராயும் அருவமாயும் எங்கும் வியாபித் தவராயும் உள்ள சிவபெருமானை மதிக்காது கூறிய பாவத்தால் வியாசரின் கை அசைக்க இயலாமலும் வாய் ஊமையாயும் ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு துன்புறும் வியாசர்முன் பிறர் கண்ணுக்குப் புலப்படாதவண்ணம் திருமால் தோன்றி வியாசனே! அறிவு மயங்கிய பித்தரைப்போல ஏன் என்னைப் பிரமப்பொருள் என்று கூறினை. என்னை ஆண்டருளும் சிவபெருமானை என்ன காரணத்தால் மறந்தாய். சிவன் திருவடியில் என் கண்ணை அர்ப்பணித்ததாலும் வணங்கியதாலும் அல்லவோ சக்கரமும் திருமகளும் வைகுண்ட உலகும் எனக்குக் கிடைத்தன. சிவபெருமான் அருள் இன்றிப் பெருமையுறும் தேவரும் உளரோ? மரப்பாவை ஒருவனால் அசைக்கப்படுவது போலத்தானே நானும் பிரமாவும் படைத்தல் காத்தல் களைச் செய்கின்றோம். சிவனைப் போற்றும் சிவ கணங்கள் அணிவது என்போன்றோரின் மண்டையோடுகள் தானே. அப்படியிருக்க நீ இப்படிக் கூறலாமோ. நீ கூறிய வார்த்தை என் உள்ளத்தை நெருப்புச் சுடுவது போலச் சுட்டதனாலன்றோ இங்கு உடனே வந்துள்ளேன் உன் குற்றம் தீர சிவபெருமானைத் துதிப்பாயாக என்று கூறினார். உடனே வியாசர் சிவபெருமானை என் நாவினால் துதிக்கும் ஆற்றலைத் தருக என்று கண் சாடையால் கேட்டார். உடனே திருமால் சிவநாமத்தை வியாசரின் செவியில் கூறினார். அப்படிக் கூறக்கேட்ட புண்ணியத்தால் வியாசர் ஊமைத் தன்மை நீங்கிப் பேசும் ஆற்றலைப் பெற்றார்.

உடனே பலபாடல்களால் வியாசர் இருதயபூர்வமாக சிவபெருமானைத் துதித்தார். துதியை ஏற்றருளிய சிறப்பால் வியாசரின் கையும் வழங்கியது. பின்னர் வியாசர் துளசி மணிமாலைகளை விலக்கி விபூதி உருத்திராக்கமணிந்து சிவனையும் சிவனடியார் களையும் பணிந்து சிவனருளுக்குப் பாத்திரமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் சாபமிட்டமை

காசியில் சிவலிங்கப் பிரதிட்டை செய்தும் மணி கன்னிகையில் தீர்த்தமாடியும் விசுவநாதரைத் தரிசித்தும் வியாசர் காசியிலே தங்கியிருந்தார். அப்படியிருக்கும் போது முத்திமண்டபத்தில் இருந்த முனிவர்கட்கு வியாசர் காசியின் சிறப்புக்களை உபதேசித்தார்.

காசியை அடைந்த அளவில் சிவனடிப்பேறு உறுதி என்ற கொள்கையால் எவரும் தீய ஒழுக்கங்களை மேற்கொள்ளலாகாது. காசியில் இறந்தால் முத்தி நிட்சயம் என்று தற்கொலை செய்யலாகாது. தற்கொலை செய்பவர் யமதூதரிடமே அகப்படுவர். பிறதலங்களில் கோடி சிவலிங்கம் பிரதிட்டை செய்வதும் காசியில் ஒரு லிங்கம் பிரதிட்டை செய்வதும் சமம். காசியில் உள்ள ஒரு சிவலிங்கத்தை மலர்தூவி வழிபட்டால் சிறந்த தானப்பொருள்களைத் தக்கவர்க்கு வழங்கிய பயனுண்டாகும். காசியில் சிவலிங்கத்தைப் பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்பவர் அசுவமேதையாக பலனை அடைவர். நிவேதனம் செய்தால் வாசபேய யாக பயனுண்டாம். சிவபெருமானுக்கு குடை, கொடி ஆலவட்டம், சங்கு என்பன வழங்குபவர் பூமி முழுவதற்கும் அரசராவர். பூஞ்சோலை குளம் அமைப்பவர் வீட்டில் கற்பகமரம் இருக்கும். பாலபிஷேகம் செய்பவர் பாற்கடலில் வாழ்வர் ஆலயம் அமைப்பவர் கயிலையை அடைவர். பிறதலங்களில் பதினாறு வகைத் தானம் செய்வதிலும் பார்க்க காசியில் உள்ள சிவயோகிக்கு ஒருவேளை உணவு வழங்கல் மேலானது.

விரதங்களைப் பற்றிக் கூறும்படி முனிவர்கள் கேட்க வியாசர் கூறினார். ஒருவேளை மட்டும் பகலில் உண்ணல் இரவில் மட்டும் ஒருவேளை உண்ணல் பிச்சை எடுத்த உணவை ஒருவேளை மட்டும் உண்ணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவை ஒழித்தல் என்பன பாதகிரிச்சின விரதம் எனப்படும். ஆல், தருப்பை, அரசு, அத்தி என்னும் இலைகள் தோய்த்த நீரை ஒருவேளை மட்டும் உண்ணல் பன்ன கிரிச்சினம் எனும் விரதமாகும்.

பிண்ணாக்கு, பால், மோர், நீர், பொரிமா என்பவற்றை நாளுக்கொன்றாக ஒருவேளை உண்டு விரதமாயிருத்தல் அவுமியகிரிச்சினம் எனும் விரதமாகும். மூன்று நாள் ஒவ்வொரு பிடி உணவு கொண்டு மறுநாள் உபவசித்தல் அதிகிரிச்சினம் எனும் விரதமாகும். இருபத்தொருநாள் பால் மட்டும் ஒருவேளை உண்டு விரதமிருத்தல் கிரிச்சினாதி கிரிச்சின விரதம் எனப்படும்.

மூன்று நாள் காலை உண்ணல் மூன்றுநாள் இரவில் உண்ணல் மூன்றுநாள் கிடைத்தால் உண்ணல் மூன்றுநாள் உணவொழித்தல் பிரசாபத்தியகிரிச்சினம் எனும் விரதமாம். பன்னிருநாள் உணவொழித்தல் பார்க்கிருச்சினமாகும். கோசலம், கோமயம், பால், தயிர், நெய், தருப்பை தோய்த்த நீர் என்பவற்றை நாளுக்கொன்றாக உண்டு விரதமிருத்தலை சாந்தன கிரிச்சின விரதமென்பர். சுக்கில பட்சத்தில் ஒரு நாளுக்கு ஒருபிடி குறைத்தும் கிருஷ்ணபட்சத்தில் ஒரு நாளுக்கு ஒரு பிடி அதிகரித்தும் தினமும் மும்முறை நீராடி விரதமிருத்தல் சாந்திராயணவிரதமாகும். சுக்கில பட்சத்தில் நாளொன்றுக்கு ஒரு கவளம் அதிகரித்தும் மற்றப்பட்சத்தில் நாளொன்றுக்கு ஒரு கவளம் குறைத்தும் உண்ணல் செய்தும் இரவில் நான்கு கவளம் உண்பதும் வாலசாந்திராயண விரதமாகும். தினமும் மூன்று கவளம் உண்ணல் அல்லது ஓமசேடம் உண்ணலும் ஒருவகையான சாந்திராயண விரதமாகும். இப்படியான விரதங்களால் வாய்மை, கல்வி ஞானம், உடம்பு, மனம், பூதான்மா, புத்தி என்பன புனிதமாகும். இப்படியான விரதங்களை மேற்கொண்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமானது காசியை அடைந்தாலொழியப் புனித மடையாது. இப்படியான உண்மைகளை உபதேசித்துக் கொண்டு பிட்சை உணவை மேற்கொண்டு வியாசர் தன் சீடர்களுடன் காசியில் தங்கியிருந்தார்.

ஒருநாள் சிவபெருமான் அம்பிகையை நோக்கி இந்த வியாச முனிவரின் அன்புநிலையைச் சோதித் தறிய வேண்டும் ஆதலால் வியாசருக்கு பிட்சை உணவு கிடையாத வண்ணம் தடுத்து விடுக என்று கூறினார். காசியிலுள்ளார்க்கு உணவு கிடைக்கச் செய்யும் அன்ன பூரணி அப்படியே தடுத்தருளினார். மறுநாள் வியாச ருக்கும் சீடருக்கும் பிட்சை கிடைக்கவில்லை. அவர்கள் பசியால் வருந்தினர். அடுத்த நாளும் அவர் களுக்குப் பிட்சை கிடைக்கவில்லை. வியாசர் சீடர்களை நோக்கி இக் காசிக்கு வறுமை முதலிய ஏதாவது குறைபாடு உண்டாகி விட்டது போலும் தெரிந்து வாருங்கள் என்றனுப்பினார். அவர்கள் மீண்டு வந்து செல்வம், கல்வி முதலியவற்றில் காசிக்கு ஒருகுறையும் உண்டாக்கவில்லை என்றனர் பசியால் வருந்திய வியா சர் கோபமுற்றவராய் மூன்று தலைமுறை காலத்திற்கு காசியில் கல்வி செல்வம் போன்றன நீங்குவதாக என்று சாபமிட்டுத்தன் பிட்சாபாத்திரத்தையும் எறிந்து விட்டுப் புறப்பட்டார்.

அப்போது ஒருபெண் வடிவில் அம்பிகை வியாசர் முன் வந்து பெரியவரே! என் கணவர் அத்தி பூசை செய்தன்றி உணவு உண்ணார். ஆதலால் என் வீட் டுக்கு அத்தியாக வந்து உண்ண வேண்டும் என அழைத் தார். அப்போது வியாசர் பெண்ணே! என்னிடம் கல்வி பயிலும் மாணாக்கர் பலர் இருக்கிறார்கள். அவர்களை விடுத்து நான் மட்டும் உண்ணேன் என்றார் எல்லோரும் வந்து மகிழ்ச்சியாக உண்ணலாம் வருக என்றாள் அம்பிகை. வியாசருக்கும் சென்றமாணாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்களுக்கும் அமிர்தத்திற்கு நிகரான உணவை அம்பிகை வழங்கினாள். பின் நல்ல ஆடைகள் சந்தனம் போன்றவற்றையும் வழங்கினாள். அவற்றைப் பெற்றுக் கொண்டு வியாசர் புறப்பட்டபோது சிவபெருமான் ஒரு அந்தணர் போல் தோன்றி அம்பிகையே குடும்பப் பெண்ணுக்குரிய கடமை யாது என்று இம் முனிவரைக் கேட்பாயாக என்று கூறினார். அக்கேள்விக்குப் பதிலாக வியாசமுனிவர் கற்புடைப் பெண்கள் கடமை தம் கணவன் மனதுக்கு உகந்ததைச் செய்தல் என்று கூறினார். அப்போது அம்பிகை பெரியவரே! அப்படியானால் எல்லோருக்கும் பொதுவான தருமம் யாது என்று கேட்டார் கடும் வார்த்தை கூறாமை கோபிக்காமை தானம், தவம், இரக்கம், மனக்கருத்தை மறைக்காமை, பொறாமை இன்மை, பிறஉயிரைத் தன் உயிர்போல் போற்றல் என்பன எல்லோருக்கும் பொதுவான தருமமாகும் என்று வியாசர் கூறினார். இவ்வாறு கூறக்கேட்ட சிவபெருமானாகிய அந்தணர் பெரியவரே! நீர் கூறிய நற்குணங்கள் இன்றி ஒருவர் யாருக்காயினும் சாபமிட்டால் என்ன நிகழும்? என்று கேட்டார் அப்படியான சாபம் சாபமிட்டவரையே சாரும் என்று வியாசர் கூறினார். உடனே சிவபெருமானும் உமையம்மையும் தம்வடிவத்தைக் காண்பித்தனர். அப்போது சிவபெருமான் வியாசரை நோக்கி இக்காசிக்குக் கொடிய சாபமிட்ட நீர் இங்கிருத்தல் தகாது. காசியை விட்டு வேறிடம் செல்லும் என்று கூறினார். வியாசர் சிவனடிகளில் வணங்கித் தன் குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினார். காசி எல்லையில் தங்கியிருந்து அட்டமி. சதுர்த்தசி ஆகிய நாள்களில் காசியை அடைந்து விசுவநாதரைத் தரிக்க சிவபெருமான் அருள் புரிந்தார். கங்கைக்கு மேற்கிலுள்ளதும் வேதாதித்தன் ஆலயத்திற்கு கிழக்கானதும் காசிநகரத்திற்கு தென்கிழக்காகவுள்ளதுமான இடத்தில் வியாசர் தங்கியிருந்து குறிப்பிட்ட நாட்களில் காசிக்குச் செல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேத்திரவளமும் தீர்த்தங்களும்

காசியிலே பிரதானமாக விளங்கும் மகாதேவலிங்கத்தின் நாலாபக்கங்களிலும் எண்ணில்லாத சிவலிங்கங்கள் உள்ளன. காலத்துக்குக் காலம் காசியில் தவம் செய்து சிவபிரான் அருள் பெற்ற தேவர், முனிவர், அரசர் முதலியவர்களால் தாபிக்கப்பட்ட சிவலிங்கங்களும் தீர்த்தங்களும் காசியில் பெருமையுடன் விளங்குகின்றன. கேதாரம், நேபாளம் முதலிய புண்ணிய தலங்களில் விளங்கும் சிவலிங்கங்களின் பெயராலும் பல சிவலிங்கங்கள் காசியில் விளங்குகின்றன. பெயர் சொல்லக்கூடிய சிவலிங்கங்கள் அனேகமாக உள்ளமை போலத் தனித்தனிப் பெயர் சொல்ல இயலாதனவாகவும் பல சிவலிங்கங்கள் உள்ளன. சிவலிங்கங்களாலும் புனித தீர்த்தங்களாலும் நிறைந்து விளங்கும் காசியை சிவலிங்கம் என்று கூறலாம். இக்காசியை மதிப்பவர் விரும்புபவர் போற்றுபவரை நான் என் பிள்ளைகளாக மதிக்கின்றேன் என்று சிவபெருமான் அம்பிகைக்குக் கூறியுள்ளார்.

## முத்திமண்டபத்தின் கதை

மேருமலையில் இருந்து காசியை அடைந்தபின் சிவபெருமான் என்ன செய்தார் என்று அகத்தியர் முருகப்பெருமானிடம் கேட்டார்.

தேவர் முதலியோர் சேவிக்கத் தேரில் காசியை அடைந்த சிவபெருமான் மதில்களும் மாளிகைகளும் நிறைந்த வளம்மிகு காசியில் விளங்கும் முத்திமண்டபத்தை அடைந்தார். முத்திமண்டபத்தில் சிவபெருமான் இருந்தவுடன் பிரமதேவரும் ஏனைய தேவரும் சிவபெருமான் திருவடிகளில் மலர்தூவி வணங்கினர். சப்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதர்கள் ஆலாத்தி எடுத்துப் போற்றினர். அதன்பின் திருமாலுடன் சிவபெருமான் உரையாடினார். திருமாலே காசியை ஆண்ட திலோதானனுக்கு முத்தி வழங்கி நாம் காசியை அடையும்படி செய்த நீரே எம்மிடத்தில் அன்புமிக்கவர் எனக்கு மூவுலகிலுள்ளும் காசியிலே மிகுந்த விருப்பமுண்டு நீர் என்மீது கொண்ட அன்பு காரணமாக உம்மை வணங்குபவர்க்கும் நான் முத்தி வழங்குவேன். உமக்கு விருப்பமான வரத்தைக் கேட்பீராக என்றார். அப்போது திருமால் உம்மையன்றி வேறெவரையும் எப்போதும் விரும்பாத நிலையை அருள்வீர் என்றார். அப்படியே சிவபெருமான் திருமாலுக்கு அருள்புரிந்தார். அப்போது சிவபெருமான் திருமாலை நோக்கி நாம் இப்போதிருக்கும் முத்திமண்டபத்தில் நமக்குள்ள விருப்பம் கயிலையிடத்தும் இல்லை. முத்திமண்டபத்திலிருந்து நம்மைத் தியானிப்பவர் முத்தியடைவர் மணிகன்னிகையில் தீர்த்தமாடி முத்திமண்டபத்திலிருந்து தானம், செபம், தியானம் செய்தல் சிறப்பாகும். மணிகன்னிகையிலும் மேலான தீர்த்தமும் காசியிலும் மேலான நகரமும் முத்திமண்டபத்திலும் மேலான மண்டபமும் மூவுலகிலும் இல்லை. இந்த முத்தி மண்டபத்திற்கு இனிவர இருக்கின்ற துவாபர யுகத்தில் குக்குடமண்டபம் என்று ஒரு பெயர் உண்டாகும். என்று கூறினார். குக்குடமண்டபம் என்னும் பெயருண்டாகும் வரலாற்றைக் கூறும்படி திருமால் கேட்கச் சிவபெருமான் கூறினார்.

மாகநந்தன் என்னும் ஒரு அந்தணன் வேதாகம அறிவில் சிறந்து விளங்குவன். அவன் தன் தந்தை இறந்தபின் கீழோன் ஒருவனுடன் நட்பாவான். அந்த நட்பு மிகுதியினால் அவன் வீட்டில் இருந்து அந்த நண்பன் மனைவியின் கற்பைக் கெடுப்பான் பின் பிறர் பொருள் கவரும் கள்வனாகுவன். திருமாலடியாரோடு சேர்ந்து சைவசமயத்தையும் சிவனடியாரோடு சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ சமயத்தையும் இகழ்வன். பொருள் பெற்றுப் பொய்ச்சாட்சி கூறுவன் இப்படியான செயல்களால் பதிதனாவன்.

ஒருநாள் கீழ்க்குலத்தைச் சேர்ந்த பிறநாட்டவன் தானத்துக்காகப் பெரும் பொருளுடன் காசியை அடைந்தான். சண்டாளனான அவன் மணி கன்னிகையில் நீராடியபின் தன் பொருள்களை அந்தணர்க்குத் தானம் செய்ய விரும்புவான் அவனிடத்து தகுதியான அந்தணர் தானம் பெறவிரும்பார். அவ்வந்தணர் பதிதனான மாகநந்தனிடம் தானம் கொடுக்கலாம் என்று கூற அவன் மாகநந்தனிடம் சென்று தானம் வாங்கும்படி கேட்பான் உன்னிடம் இருக்கும் முழுப்பொருளையும் தானமாகத் தந்தால் தான் ஏற்பேன் என்று மாகநந்தன் கூறுவான் சண்டாளனிடம் தானம் வாங்கியதற்காக எல்லோரும் மாகநந்தனைப் பார்க்கவே வெறுப்பர். தன்னை எல்லோரும் ஒதுக்கியதால் அங்குவாழ இயலாது என்று கண்டு மாகநந்தன் கீகடதேசம் செல்ல எண்ணுவான் அப்படிச் செல்லும்போது வழிப்பறிகள்வருக்கு அஞ்சித் தன் பொருளுடனும் மனைவி பிள்ளைகளுடனும் காட்டில் ஒளிப்பான் காட்டில் வேடுவர் கண்டு அவனையும் மனைவி பிள்ளைகளையும் கொலை செய்து பொருள் கவர்வர். மாகநந்தன் இறக்கும்போது காசியை நினைத்து இறப்பான். மறுபிறப்பில் கீகடதேசத்தில் கோழியாகப் பிறப்பான். அவன் மனைவி பிள்ளைகளும் கோழிகளாய்ப் பிறப்பர். மாகநந்தன் காசியின் நினைவுடன் இறந்த காரணத்தால் தன் முற்பிறவி நினைவுடன் கோழியாக இருப்பான்.

காசியாத்திரை செய்பவருடன் மாகநந்தனாகிய கோழி செல்ல பேட்டுக்கோழி பிள்ளைக்கோழிகளும் செல்லும். இவ்வாறு செல்லும் கோழிகள் காசியில் முத்தி மண்டபத்தை அடைந்ததும் இறக்கும். முத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தில் இறந்ததால் அவை கயிலையை அடையும் அன்றுமுதல் முத்திமண்டபம் குக்குடமண்டபம் என்னும் பெயரைப் பெறும். இக்கதையைக் கேட்டுத் திருமால் மிக மகிழ்ந்தார். பின்னர் திருமால் பிரமன் முதலியோர் சூழ சிவபெருமான் முத்திமண்டபத்திலிருந்த சிங்கார மண்டபத்திற்குச் சென்றார்.

## விசுவநாதர் மகிமை

சிங்கார மணிமண்டபத்தை அடைந்த பின்னர் சிவபெருமான் என்ன செய்தார் என்று கேட்ட அகத்திய முனிவருக்கு முருகப்பெருமான் கூறினார்.

சிவபெருமான் சிங்காரமண்டபத்தை அடைந்ததும் சரஸ்வதி முதலிய தேவப் பெண்கள் வாழ்த்திசைத்தனர். சிவபெருமான் திருமாலை நோக்கி கூறினார். விசுவநாதர் என்னும் பெயருடைய இச்சிவலிங்கம் பிரமமேயாம் அதில் எப்பொழுதும் வெளிப்படையாக இருந்து அன்பர்க்கு முத்தியருள்வோம். நிலவுபோல பிரகாசிக்கும்படி நெற்றியில் திருநீறணிந்து பாகபத விரதத்தை மேற்கொள்பவர் எம் வடிவினரேயாவர். அவரை வணங்குபவர் என்னை ஆயிரம்தடவை வணங்கும் பயனை அடைவர். என்னை நேருக்குநேர் வழிபடத்தக்கதாக நான் வெளிப்படுதல் அருமையாகும். ஆனபடியால் என்னை நேருக்குநேர் வழிபட விரும்புபவர் விசுவநாதலிங்கத்தையே என்னாளும் வழிபட வேண்டும் விசுவநாதலிங்கம் மேன்மையுடையதென்று நினைப்பவரே தீவினை நீங்கப் பெறுவர். விசுவநாதர் முன்சென்று தரிசிப்பவர் சகல தீவினையிலிருந்தும் முற்றாக நீங்கப்பெறுவர். விசுவநாதலிங்கத்தைத் தரிசித்தால் நூறு அசுவமேதயாக பயன் கிடைக்கும். தீண்டினால் ஆயிரம் இராசசூயயாக பயன் கிடைக்கும். அபிஷேகம் செய்தால் கோடி அசுவமேதயாக பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும். சந்தனாபிஷேகம் செய்பவர் தேவ அரம்பையர் போற்றி உபசரிக்கக் கற்பக நிழலில் இருப்பர். விசுவநாதலிங்கத்திற்கு தூபமேற்றுபவர் தேவவடிவைப் பெறுவர். தீபமேற்றுபவர் நட்சத்திரபதமடைவர். கற்பூர தீபமேற்றுபவர் சிவவடிவத்தையே பெறுவர். நிவேதனம் சமர்ப்பிப்பவர் கயிலையை அடைவர். தினமும் விசுவநாதரை மலர்தூவி வணங்குபவரை மூவுலகினரும் போற்றுவர். இவர் திருநாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறி வணங்குபவரை யமதூதர் அணுகமாட்டார். விருப்பத்தோடு தரிசிப்பவர் திக்குப்பாலகர் பதம் அழியும் காலத்திலும் விசுவநாதர் அருள் பெற்றவர் பதம் அழியாது சிவகணநாதராவர் விசுவநாதர் என்று அன்புடன் கூறுபவருக்கு முத்தியளிப்போம். விசுவநாதலிங்கத்துக்கு இணையான சிவலிங்கமும் மணிகன்னிகைக்கு இணையான தீர்த்தமும் காசிக்கு இணையான தலமும் மூவுலகிலும் இல்லை இது முக்காலும் சத்தியமாம்.

இவ்வாறு கூறிய முக்கண்ணராம் சிவன் பிரமவிட்டுணுக்கள் பலகாலும் பணிய அந்த லிங்கத்தில் ஐக்கியமாயினர். பெருமைமிக்க காசியின் மகிமைகளை யாராலும் முழுமையாகக் கூற இயலாது. மிகச் சுருக்மாகவே உனக்குக் கூறியுள்ளோம் என்று முருகப்பெருமான் அகத்தியருக்குக் கூறியருளினார்.

விசுவநாதர் பெருமைகளைக் கூறியவரும் கேட்டவரும் பெரும் செல்வமுடைய அரச சிறப்புக்களால் மகிழ்வர்.

## காசியைச் சேவிக்கும் முறை

காசியைத் தரிசிக்கும் முறையைக் கூறவேண்டும் என்று அகத்தியர் கேட்க முருகப்பெருமான் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுத்த ஆடையுடன் மணிகன்னிகையில் நீராடி தேவர் முனிவர் பிதிரர் கடன்களைச் செய்யவேண்டும் பின்னர் சூரியபகவானாகிய துரோபதிசாதித்தனையும் தண்டாயுதமேந்திய பெருமானையும் மச்சேச்சுரனை யும் வணங்கவேண்டும். பின்னர் துண்டி விநாயகனை ஞான வாவி நீரால் அபிஷேகம் செய்து பூசிக்கவேண்டும். தாரகேசலிங்கத்தையும், மகாகாளலிங்கத்தையும் தண்டபாணியையும் வணங்கவேண்டும்.

விசுவநாதரைச் சென்று வணங்கும் முறை:- ஓங்காரேசரைப் பூசித்து அச்சோநதியில் தீர்த்தமாட வேண்டும். அவ்விடத்தில் தேவமுனி பிதிர் கடன்கள் செய்யவேண்டும் திரிவிட்டபலிங்கம், கிருத்திவாசலிங்கம், இரத்தினேசலிங்கம், சந்திரேசலிங்கம், கேதாரலிங்கம், தருமேசலிங்கம், வீரேசலிங்கம், காமேசலிங்கம், விசுவகன்மேசலிங்கம், மணிகன்னிகேசலிங்கம், அவிமுத்தேசலிங்கம் ஆகியோரைப் பூசித்த பின்னர் விசுவநாதலிங்கத்தைப் பூசித்தல் வேண்டும். இந்தமுறையில் பூசிக்காவிடில் காசியிலிருந்து விரைவில் நீங்க நேரிடும். இப்பதினான்கு லிங்கங்களையும் அபரபக்கத்துப் பதிநான்கு திதிகளிலும் பூசிக்க வேண்டும். இயலாவிடில் பதினான்காவது திதியிலேயே பதினால்வரையும் பூசிக்கலாம். இவைதவிர முதன்மையான எட்டுலிங்கங்கள் உள்ளன. கேத்திரேசலிங்கம், பார்வதீசலிங்கம், பசுபதீசலிங்கம், கங்கேசலிங்கம், நருமதேசலிங்கம், கபர்த்தீசலிங்கம், சதீசலிங்கம், தாரகேச்சுரலிங்கம் என்னும் லிங்கங்களை அட்டமிதோறும் பூசிக்கவேண்டும்.

வருணை எனும் தீர்த்தத்தில் நீராடி சயிலேச்சுரனையும் சங்கமதீர்த்தத்தில் நீராடி சங்கமேசனையும் தலவவாவியில் நீராடி தலவேசனையும் மந்தாகினியில் நீராடி மத்தியமேசனையும் வணங்கவேண்டும். மகாதேவ ஆலய தீர்த்தத்தில் நீராடி மகாதேவலிங்கத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்கிர தீர்த்தத்தில் நீராடி சுக்கிரலிங்கத்தையும் தண்டகாபத்தில் நீராடி வியாக்கிரேசனையும் சவுகை தீர்த்தத்தில் நீராடி சவுகைலிங்கத்தையும் சம்புகலிங்கத்தையும் அபரபக்கப் பிரதமைமுதல் பதினான்கு திதிகளிலும் பூசிக்க வேண்டும் தவறாது வழிபடவேண்டிய பதினொரு லிங்கங்கள் இன்னும் உள்ளன.

அக்கினித்திரம் எனும் தீர்த்தத்தில் நீராடி அக்கினித்திரலிங்கத்தையும், அகிலேசலிங்கத்தையும், பாரபூதேசலிங்கத்தையும், இலாங்கேசலிங்கத்தையும், புராத்தகலிங்கத்தையும், மனப் பிரகாகேசலிங்கத்தையும், பிரிது கேசலிங்கத்தையும், மாதலேசலிங்கத்தையும், திலவனேசலிங்கத்தையும் தரிசித்தும் தியானித்தும் வணங்க வேண்டும்.

இனிக்காசியில் அம்பிகையை வணங்கும் முறை சொல்லப்படுகிறது. சுக்கிலபட்டத் திரிதியையில் கொப்பிரேக தீர்த்தத்தில் நீராடி கலனிக்காளி எனும் அம்பிகையை பூசித்து சேட்ட வாவியல் நீராடி சேட்ட கவுரியையும் ஞானமடுவில் நீராடி சவுபாக்கிய கவுரியையும் சிங்காரகவுரி தீர்த்தத்தில் நீராடி சிங்கார கவுரியையும் விசாலகங்கையில் நீராடி விசாலாட்சியையும் விவிதமடுவில் நீராடி விவித கவுரியையும் பவானி தீர்த்தத்தில் நீராடி பவானி கவுரியையும் விந்து தீர்த்தத்தில் நீராடி மங்கல கவுரியையும் பூசிக்கவேண்டும். இவர்களைச் சதுர்த்தி திதியிலும் பூசிக்க வேண்டும். செவ்வாய்க்கிழமைகளில் வயிரவரை விசேடமாக பூசிக்கவேண்டும்.

புரட்டாதிமாத ஐப்பசிமாத ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனை நன்கு வணங்கவேண்டும் நவமிஅட்டமிகளில் துர்க்கையை வழிபடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசியில் விசுவநாதர் ஆலயத்துள் பூசிக்கும் முறை :-

கங்கையில் நீராடி ஐந்துமுக விநாயகரைப் பூசிக்க வேண்டும். விசுவநாதரைத் துதிக்க வேண்டும். முத்தி மண்டபத்திலிருந்து விசுவநாதரே இன்று உம்மைப் பூசிப்பேன் என் தீவினையைப் போக்கிக் கதியருள வேண்டும் என்று சங்கற்பிக்க வேண்டும். பின்னர் மவுனமாகவே மணிகன்னிகையில் நீராடவேண்டும். மணிகன்னிகையை மலர்தூவி வணங்கவேண்டும்.

கம்பளாச்சுவதலிங்கம், புயங்கேசலிங்கம், பார்வதீசலிங்கம், கங்கேசலிங்கம், லலிதாகவுரி சராசந்தேசலிங்கம், சோமேசலிங்கம், வராகலிங்கம், பிரமேச்சுரலிங்கம், சதீச்சுரலிங்கம், கச்சியபேசலிங்கம், அரிகேசலிங்கம், வைத்தியநாதலிங்கம், துர்வாசேசலிங்கம், கோகன்னேசலிங்கம், ஆடகேசலிங்கம், தடாகேசலிங்கம், கீகடகேசலிங்கம், பாரபூதேசலிங்கம், சித்திரகுப்தேசலிங்கம், சித்திரபூதேசலிங்கம், பசுபதேசலிங்கம், பிதாமகேசலிங்கம், கவசேசலிங்கம், சந்திரேச்சுரலிங்கம், வீரேசலிங்கம், விசுவேசலிங்கம், இலகுத்தேசலிங்கம்.

சிந்தாமணி விநாயகர், சேனா விநாயகர், திரிசந்தேசலிங்கம், விசாவாக்கேசலிங்கம், தருமேசலிங்கம், விச்சுவபாகேசலிங்கம், ஆசாரவிநாயகர், விருத்தாதபேசலிங்கம், சதுர்வக்திரேசலிங்கம், பிராமீசலிங்கம், மனப்பிரகாகேசலிங்கம், ஈசானேசலிங்கம், சண்டிலிங்கம், சண்டீசலிங்கம், பவானிதேவி, சங்கரலிங்கம், துண்டிவிநாயகர், சராசந்தேசலிங்கம், இலாங்கேசலிங்கம், லகுளீசலிங்கம், பாரேசலிங்கம், பாத்திரபேசலிங்கம், பிரதிக்கிரேசலிங்கம், நிட்களங்கலிங்கம், மார்க்கண்டேசலிங்கம், பரிகாசேசலிங்கம், கங்கேசலிங்கம் ஆகிய சிவலிங்கங்களைப் பூசிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஞானவாவியில் நீராடவேண்டும். பின் நந்தி கேசலிங்கம், தாரகேசலிங்கம், மகா காளேசலிங்கம், தண்டபாணி மகேசலிங்கம், முத்தீசலிங்கம், வீரபத்திரேசலிங்கம், பஞ்சமுக விநாயகர் ஆகியோரை வணங்கவேண்டும். பின்னர் விசுவநாதன் சன்னிதானத்தை அடைந்து மவுனத்தை விட்டு வேதமந்திரங்களால் துதித்து இப்படியான காசிவணக்கத்தைச் செய்துள்ளேன் என்று விண்ணப்பிக்குக. பின் முத்தி மண்டபத்தில் அமைதியாக இருக்கவும் இப்படிச் செய்த பின் இருப்பிடத்தை அடைந்தவர் மகிழ்ச்சியுடன் வாழ்வர்.

ஏகாதசி திதியில் மகாதீர்த்தத்தில் நீராடி திருமால் வழிபாட்டை ஊக்கமுடன் செய்பவர் முத்தி வழியில் செல்பவராவர். காசியில் உள்ள குலதம்பத்தை பூரணையிலும் அமாவாசையிலும் துதித்துக் கைகூப்பி வணங்கினால் பேய் முதலியவற்றால் துன்பமுண்டாகாது. காசியில் தங்கியிருக்கும் காலத்தில் வழிபாட்டில் காலம் கழிப்பதன்றி நேரத்தை வீணாக்கலாகாது. நாள்தோறும் இருவேளை கங்கையில் நீராடி விசுவநாதரை வணங்கவேண்டும். காசியில் தங்கியிருக்கும் காலத்தில் கங்கையில் நீராடாமலும் விசுவநாதரை வணங்காமலும் இருப்பவரின் பரம்பரையில் உள்ளவர் கூட சிவனருளைப் பெற இயலாது என்று சாஸ்திரங்கள் கூறும்.

காசியில் இருந்தும் கங்கையில் நீராடாமலும் விசுவநாதரைப் பணியாமலும் இருப்பவர் துன்பமயமான பிறவி என்னும் பாம்பின் வாயில் அகப்பட்டு வருந்துவர்.

காசியில் வாழும்போது தினமும் மணிகன்னிகையிலும் கங்கையிலும் நீராடியும் தீர்த்தங்களில் மூழ்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அங்குள்ள சிவலிங்கங்களையும் விசுவநாதரையும் போற்றுபவர் பேரின்பப் பெருவாழ்வு பெறுவர் என்பது உறுதி உறுதி உறுதி.

ஸ்கந்த புராணத்தில் உள்ள காசிகாண்டம் என்னும் புராணத்தின் பாடல் முழுவதையும் ஒருமுறை கேட்பவர் புனித தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் விதிப்படி நீராடிய பயனைப் பெறுவர். கொலை முதலிய கொடும்பாவங்களிலிருந்து நீங்கி முத்தியடைவர். இப் புராணச் செய்யுள்களை எழுதித் தந்தவர்க்கு தானம் செய்தவர் தானம் செய்த புத்தகத்திலுள்ள ஒவ்வொரு சிறு பகுதிக்கும் அங்கங்களுக்குமாக தனித்தனி பயன் பெறும்முறையில் கயிலையில் வாழ்வர்.

இக்காசி காண்டப் பாடல் ஒரு ஏட்டை தானம் செய்தாலும் புராணத்தானபயன் கிடைக்கும். இதில் உள்ள விடயங்களை விரும்பிக் கேட்பதால் நல்ல புத்திரப் பேறுண்டாகும். இப்புராணத்தைப் பன்னிரு தடவை கேட்டால் நீங்காத பிரமகத்திதோஷமும் நீங்கும். இது சிவபெருமானின் ஆணையாகும்.

அரிய விரதம் தவம் தானம் வேள்வி செய்பவர் அடையும் பயனும் வேதம் முழுவதையும் அறிந்தும் கயையில் பிண்டம் கொடுத்தும் புராணங்கள் முழுவதையும் அறிந்தும் தருமநெறியில் வாழ்ந்தும் அந்தணர்க்கு உணவு கொடுத்தும் எப்போதும் காசியில் வாழ்ந்தும் அடையத்தக்க பயனை இப்புராணத்தை ஒருமுறை கேட்பதால் அடையலாம்.

காசி விசுவநாதப் பெருமானின் பூரண அருளைப் பெற்றவர்க்கேயல்லாது பேரறிஞர்க்கும் இப்புராணத்தைக் கேட்கும் பாக்கியம் பொருந்தாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காசி கண்டத்தின் முழுப்பகுதியை அல்லாமல் அரைவாசியையோ ஒரு கதையையோ ஒரு பாடலையோ உணர்ந்து ஒருவனுக்கு உரைக்கும் மேன்மை உடையவனை குருவென்றும் தெய்வமென்றும் போற்ற வேண்டும். அப்படிக் கூறுபவனுக்கு தேவையானவற்றை வழங்கி மகிழ்வுறச் செய்தால் விசுவநாதரை மகிழ்வித்த பேறு உண்டாகும்.

காசி காண்டத்தை கேட்டறிந்தவர் தீ நெறியில் செல்லார். செல்வத்துடன் நீண்டகாலம் வாழ்வர். இவ்வாறு முருகப்பெருமான் கூறியதாக சூதமுனிவர் நைமிக முனிவர்க்குக் கூறினார்.

அருமறை முனிவர் வாழ்க ஆனினம் வாழ்க தெண்ணீர்
விரிதிரை உலகம் காக்கும் விறல்கெழு வேந்தன் வாழ்க
மருவிய திங்கள் தோறும் மழைவளம் சுரக்க எம்கோன்
பொருளுற மொழிந்த தொன்னூல் பொற் பொடும்
பொலிகமாதோ.

திருச்சிற்றம்பலம்


காசிக்கு வணக்கம்
கங்கைக்கு வணக்கம்
காசி விசுவநாதருக்கு வணக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org